கலைமாமணி விக்கிரமனின்

சரித்திரக் கதைகள்

யாழ் நங்கை
வஞ்சிநகர் வஞ்சி
மங்கலத்தேவன் மகள்

தொகுதி - 2

முன்னுரை

சோழ, சேர, பாண்டிய நாடுகளாகத் தமிழ்நாடு முப்பெரும் வேந்தர்களால் பிரித்து ஆளப்பட்டு வந்தாலும்; தமிழ்நாடு மொழியால், இனத்தால் ஒன்று தான். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று சங்கப் புலவர் பாடியது முதலில் நமக்காகத் தான்.

இந்த வரலாற்றுப் புதினத்தில் பாடினிப் பெண்ணும், பாண்டிய நாட்டு வீரனும் அந்தப் பாடலின் கருத்தை வலியுறுத்துகிறார்கள்.

பல்லவப் பெரு நாடு காவிக்கரை வரை விரிந்து பரந்திருந்த காலத்தில், அபராஜித வர்மன் பல்லவ நாட்டை ஆண்டு கொண்டிருந்த வேளையில் பல்லவ நாட்டின் தெற்று எல்லையில் சில பகுதிகள் பாண்டியர்கள் வசமிருந்தன. அப்போது சோழ நாடு தஞ்சையைச் சுற்றியுள்ள சின்னஞ்சிறு பகுதியை மட்டும் கொண்டிருந்தது. விஜயாலய சோழனும், அவரது மகன் ஆதித்தனும் சோழ நாட்டை விரிவுபடுத்த தக்க தருணத்தை எதிர்நோக்கி யிருந்தனர். இந்த வரலாற்றுப் புதினம் அந்தச் சூழ்நிலையை நிலைக்களமாகக் கொண்டு திகழ்கிறது.

பரந்த உள்ளமுடைய பாடினிப் பெண் பிறந்த மண்ணுக்குத் துரோகம் செய்யாமல், காதலிலும் வெற்றியடைந்ததைக் கற்பனைச் சம்பவங்களாகச் சரித்திரப் பின்னணியுடன் கூறுவதே இந்தப் புதினம்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

- விக்கிரமன்

42979 0/ 55 77349.

யாழ் நங்கை

1

"ஒரு கை முகன் தம்பியே, நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும் நம்பியே கை தொழுவேன் நான்" என்று இனிய குரலில் பாடி முடித்து, கும்பிட்டு எழுந்த பொன்னருவி, யாரோ மெல்ல நகைத்தவாறு கையொலி எழுப்பியது கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். சூலநாதன் நின்றுகொண்டிருந்தான். தலைப் பாகையைப் புதுவிதமாகக் கட்டியிருந்தான். நீண்ட அங்கி முழங்காலை மறைத்தது. அதற்கு மேல் பழுப்பு நிற ஆடை; தோளில் பூக்குடலை; கையில் பூப்பறிக்கும் அலகுகோல் - இவற்றுடன் காட்சியளித்த சூலநாதன், மீண்டும் 'களுக்'கென்று சிரித்தான். அவன் சிரிப்பிலும், பேச்சிலும் பெண்மையின் சாயல் மிளிரும். பொன்னருவி அவனைச் சுட்டெரித்து விடுவது போல் பார்த்து, "எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டாள்.

"எதற்காகக் கை தட்டினேன் என்றும் கேட்டிருக்கலாமே?" என்று திரும்பவும் கேட்ட சூலநாதன், பூக்குடலையைக் கீழே இறக்கி வைத்து, "பொன்னருவி! ஒரு கை முகன் தம்பியே' என்றழைத்தாயே. ஒரு கை முகன் யார் என்று தெரியவில்லை. என்றாலும் உன்னுடைய இனிய குரலுக்குப் பாராட்டுதல் தெரிவிக்க விரும்பினேன். கையொலி எழுப்பினேன்" என்றாள்.

சூலநாதனின் பார்வையும், பேச்சும் பொன்னருவிக்கு எரிச்சலூட்டும். சில வேளைகளில் எல்லாம் தெரிந்தது போல் பேசுவான். ஆனால் இன்று அவன் கேட்டது உண்மையிலேயே அவனுக்கு விளங்கவில்லை என்பதையே புலப்படுத்தியது. பொன்னருவி மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு சூலநாதனை ஆகயத்தில் பறக்க வைத்தது.

"ஆகா, ஆகா, என் பொன்னருவி புன்னகை பூத்தாளே!... என் பொன்னருவி இதழ் விரித்துச் சிரித்தாளே!" என்று கை கொட்டலானான்.

"உம். வழியை விடு. எனக்கு வேலை இருக்கிறது" என்று உடனே முகத்தோற்றத்தை மாற்றிக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர முற்பட்டாள். எதிரே இரு கரங்களையும் நீட்டி சூலநாதன் வழி மறித்து, "ஒரு கை முகன்

என்றால் என்ன? சொன்னால்தான் இங்கிருந்து போகலாம்" என்று பிடிவாதம் பிடித்தான்.

"அப்பா!..." என்று குரல் எழுப்பினாள் பொன்னருவி. அவள் தந்தை வெளித்திண்ணையில் தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"என்ன பொன்னருவி?" என்று அங்கிருந்தே குரல் கொடுத்த கரபத்ரன், மெல்ல எழுந்து உள்ளே வந்தார்.

அவருக்குப் புரிந்துவிட்டது. அவ்வப்போது நடைபெறும் ஊடல் காட்சிதான்! சூலநாதனுக்கும், பொன்னருவிக்கும் இப்படித்தான் அவ்வப்போது ஏதாவது சிறு பிணக்கு ஏற்படும்.

அப்பொழுதெல்லாம், "பொன்னருவி! இப்படி நீ அவனுடன் ஊடினால் நாளைக்கு அவன் மூன்று முடிச்சுப் போட்டபிறகு யார் மத்தியஸ்தம் செய்ய வருவார்கள்?" என்று மீசையை மெல்ல ஒதுக்கியவாறு காவிப் பல் காட்டிச் சிரிப்பார். பொன்னருவி தலைகுனிந்து ஓடிவிடுவாள்.

இன்று அவள் சூலநாதன் தடுத்து நிறுத்திய கரங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு வேகமாகச் செல்லும் ஆக்ரோஷத்தைக் கண்டார் கரபத்ரன்.

"என்னம்மா, என்னம்மா பிணக்கு?" என்று கிழவர் கரபத்ரன் அங்கே சென்றார்.

"ஒன்றுமில்லை!" என்று அசடு வழிந்தான் சூலநாதன்.

"ஒன்றுமில்லையா? ஒரு கை முகன் என்றால் இவருக்கு யார் என்று தெரியவில்லை. அதைச் சொல்லாமல் நான் இங்கிருந்து நகரக் கூடாதாம். இசை ரசனைதான் இல்லை; பொருள் ரசனை கூடவா கிடையாது?" என்று சீறினாள் பொன்னருவி.

"இசை ரசனை இல்லாமலா பாராட்டிக் கரவொலி எழுப்பினேன்?" என்றான் சூலநாதன், முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு.

"உக்கும்" என்று குரலெழுப்பிய பொன்னருவி, "என் குரலினிமையைப் பாராட்டிக் கைதட்டியதாகச் சொல்லிவிட்டு, இப்போது மாற்றுகிறீர்கள்" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு, "ஒரு கை முகன் என்றால் யார் என்று தெரியாமல் சுவாமிமலையில் எவ்வளவு காலமாக இருக்கிறார் என்று கேளுங்கள் அப்பா!" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"சுவாமிமலை முருகனைக் காலா காலமாகத் துதித்துக் கொண்டு நமது முன்னோரும், சூலநாதன் முன்னோரும் இங்குதான் வாழ்ந்து வந்திருக் கிறார்கள். அதிலென்ன சந்தேகம்? எனக்குக் கூடத் தெரியவில்லையே 'ஒரு கை முகன்' என்றால் யார் என்று?" எனக் கூறிய கரபத்ரன் பொன்னருவியை வியப்புடன் நோக்கினார்.

"சுவாமிமலைக்கு அருகே எந்த ஊர் இருக்கிறது?" என்று பொன்னருவி கேட்டாள்.

"எவ்வளவோ தலங்கள் இருக்கின்றன.... திருவலஞ்சுழி இருக்கிறது."

''அங்கே யார் இருக்கிறார்கள்?''

''பிள்ளையார்...''

''பிள்ளையாருக்கு....'' என்று பொன்னருவி சொல்ல முற்பட்டவுடன் சூலநாதனும், கரபத்ரனும், ''ஆமாம், ஆமாம், புரிந்தது; தெரிந்தது... பிள்ளையாருக்குத் தும்பிக்கை! அதைத்தான் சொல்கிறாய் ஒரு கை என்று'' என்று ஒரே குரலில் கூறவும், பொன்னருவி, தன் முகத்தில் எழுந்த கோபத்தை மாற்றிக் கொண்டு, ''அப்பாடா, இவ்வளவு நேரமாயிற்று உங்களுக்கு புரிந்து கொள்ள! நீங்கள் போர்க்களத்திற்குப் போய் என்ன செய்யப் போகிறீர்களோ?'' என்றாள்.

கரபத்ரன் மீசையைத் தடவிக் கொண்டார். ''என்ன பொன்னருவி அப்படிச் சொல்லிவிட்டாய்? இதோ பார், இந்த வடுக்கள் எப்படி ஏற்பட்டவை தெரியுமா?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரியாமல் என்ன? உங்கள் உடலிலே ஏற்பட்ட விழுப்புண்கள் அத்தனையும் தெரியும். இவருக்குத் தெரியுமா? கேளுங்கள். போர்க்களம் என்றால் என்ன? வாளை எடுத்து எந்தக் கரத்தாலே சுழற்றுவது, வேலை எப்படி எறிவது தெரியுமா?'' என்று சூலநாதனைப் பார்த்தவாறு கேட்டாள்.

கரபத்ரன் முகம் கறுத்தது. ''அம்மா பொன்னருவி, உன் துடுக்குப் பேச்சைக் கொஞ்சம் அடக்கிக்கொள். நாளைக்கு உன் கழுத்திலே மூன்று முடிச்சுப் போடப்போகிறவனிடம் சற்று மரியாதையாக நடந்துகொள்ள வேண்டாமோ? இல்லாவிட்டால், கரபத்ரன் மகள் அடங்காப்பிடாரி என்று ஊரெல்லாம் ஏசுவார்கள்'' என்றார்.

முகத்திலடித்தாற்போல் பேசியதைக் கேட்டு பொன்னருவி வருத்தப்படப் போகிறாள் என்று பதறிய சூலநாதன், ''அதில்லை மாமா! பொன்னருவிக்குத் தெரிந்த கதைகள், நாட்டு நடப்புகள் எனக்கு அவ்வளவாகத் தெரியவில்லை தான். நான் என்ன செய்வேன்? எங்கள் தாயார் காடுவெட்டி. நானும் அப்படியே வளர்ந்துவிட்டேன். மாமா! பொன்னருவி சில நாள்களுக்கு முன் கதை கதையாகச் சொன்னாள் - அரிசிலாற்றங்கரையிலே நடந்த போரைப் பற்றி வர்ணித்த வர்ணிப்பு - இருக்கிறதே, அப்பாடா! இப்பொழுது நினைத்தாலும் மெய்சிலிர்க்கின்றது. விஜயாலய சோழ மன்னர் தொண்ணூற்றாறு விழுப்புண்களை உடம்பிலே கொண்டவராம். பாண்டிய மன்னரை ஓட ஓட விரட்டினாராம்!'' என்று சொல்லும் போது அவன் முகத்திலே ஒளி பெருமிதத்தைக் காட்டியது.

''அட, நீ எங்கிருந்து கேட்டுக் கொண்டிருந்தாய்?'' என்று பொன்னருவி வியப்புடன் கேட்டாள்.

''நீ காவிரி ஆற்றங்கரையிலே உன் தோழியிடம் பேசிக் கொண்டிருந்தாய் மிகவும் உற்சாகமாக. விஜயாலய சோழ மன்னர் எப்படியெல்லாம் வாள் எடுத்துச் சுழற்றுவார் என்று நீ அபிநயம் பிடித்துக் காட்டினாய்....''

''அடடா... எல்லாவற்றையும் நீ கேட்டுக் கொண்டிருந்தாயா?'' - பொன்னருவி பரபரப்புடன் கேட்டாள்.

''ஆமாம், சோழநாடு, பாண்டிய நாட்டுக்கு அடிமைப் பட்டிருக்கிற செய்தியைச் சொல்லிக் கொண்டிருந்தாய். ஒரு பக்கம் பல்லவனும், ஒரு பக்கம் பாண்டியனுமாக நாட்டைக் கபளீகரம் செய்திருப்பதை நீ உருக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தாய். அந்தப் பெண் யார், பொன்னருவி?'' என்று கேட்டான் சூலநாதன்.

பொன்னருவி அச்சத்துடன் அவனை நோக்கினாள்.

''பொன்னு! பயப்படாதே. நீ உன் தோழியிடம் மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருந்ததையும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன்!'' என்றான் சூலநாதன்.

பொன்னருவி துள்ளினாள். ''ஐயோ, மறைந்து கேட்பது நியாயமாகுமா? நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை வெளியே சொல்லிவிடாதே!'' குரலில் பயம் தெரியப் பேசினாள்.

''பொன்னருவி என்ன சொல்கிறாள் சூலநாதா? நீ என்ன இரகசியம் பேசிக்கொண்டிருந்தாய்?'' என்று கரபத்ரன் கேட்டார். தனக்குத் தெரியாத இரகசியம், தன் மகளுக்கு என்ன தெரிந்துவிட்டது என்றறிய அவருக்கு ஆவல். சோழநாட்டைப் பொறுத்தவரையில் விஜயாலயன் எந்த முக்கிய செய்தியாயிருந்தாலும் தனக்குச் சொல்லியனுப்புவார் என்ற நம்பிக்கையும், உறுதியும் அவருக்கு.

போர்க்களத்திலே, விஜயாலயனுக்கு உறுதுணையாக இருந்து போரிட்டு விழுப்புண்கள் பெற்றுக் குற்றுயிராய்க் கிடந்து பிழைத்த கரபத்ரனிடம் விஜயாலயனுக்குத் தனிப் பாசமுண்டு. அதை அறிந்து வைத்திருந்த கரபத்ரன் சோழநாட்டிலே, அதிலும் பழையாறை நகரிலே தனக்குத் தனிச் சலுகை உண்டென்ற பெருமையைக் கூறிக் கொள்வார். ஆனால் சமீப காலமாக அவர் தஞ்சைக்குச் செல்வதில்லை.

''அது என்ன அப்போப்பட்ட இரகசியம் எனக்குத் தெரியாமல், பெரிய போர் இரகசியம்?'' என்று கேட்டார் கரபத்ரன்.

''ஆம்; போர் இரகசியம்தான். போர் ஒன்று வரப்போகிறது மாமா!'' என்றான் சூலநாதன்.

''உஸ்'' என்று உதட்டில் விரல் வைத்து, விழியைச் சுழற்றிய பொன்னருவி, ''பார்த்தாயா! இப்போதுதான் சொன்னேன், பரம இரகசியமாகப் பாதுகாக்க வேண்டும் என்று. இப்படி உரக்கப் பேசுகிறாயே!'' என்று பொன்னருவி சூலநாதனைக் கடிந்து கொண்டாள்.

''போரா? எனக்குத் தெரியாமல் போரா?'' என்று சுவாரசிய மில்லாமல் கேட்டார் கரபத்ரன்.

''ஆமாம் அப்பா! ஆமாம். போர் மேகம் திரள்கிறது. பெரிய இடி மின்னலுடன் வரப்போகிறது'' என்றாள் பொன்னருவி.

"ஒரு பெண்ணுக்குத் தெரியுமளவுக்குக் கூட எனக்குச் செய்தி தெரிய வில்லையே? ஒருவேளை நானில்லாதபோது தஞ்சை மாளிகையிலிருந்து அழைப்பு வந்ததோ? சொல்ல மறந்து விட்டார்களோ?" என்று கரபத்ரன் பதற்றத்துடன் கேட்டார்.

"போர் மேகம் தெற்கே திரள்கிறது. பாண்டியர்கள் படை திரட்டு கிறார்கள்" என்றாள் பொன்னருவி.

கரபத்ரன் துள்ளினார், "பாண்டியர்கள் படை திரட்டு கிறார்களா?"

மீண்டும் பொன்னருவி தன் தந்தையை அடக்கியவாறு, "அப்பா! மெல்லப் பேசுங்கள். பேசாமலும் இருப்பது நல்லது. பாண்டிய நாட்டு ஒற்றர்கள் நகரத்தில் ஊடுருவியிருக்கிறார்கள்" என்றாள்.

கரபத்ரன் தன் மகள் பொன்னருவியையே உற்று நோக்கினார். அந்தப் பார்வையில், இவளுக்கு எப்படி ராஜாங்க இரகசியங்கள் தெரிந்திருக்கின்றன என்ற வியப்பு பொங்கி நின்றது. சூலநாதனும் பொன்னருவியை விழுங்கி விடுபவன் போல் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் பேசும் போது அவள் உதடு அசைவதையும், தோள் குலுங்குவதையும், உணர்ச்சி மிகுதியால் பேசும்போது மார்பு விம்மித் தணிவதையும், சொற்களில் ஏற்படும் பாவங்களுக்கு ஏற்ப கரங்கள் அபிநயம் புரிவது போல் வளைவதையும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் போரின் மீதோ, போர்க்களத்தின் மீதோ அக்கறையில்லை. பொன்னருவியினிடம் தான் சுவனமெல்லாம்!

"பொன்னருவி! உனக்கு இவ்வளவு விஷயங்கள் எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

சூலநாதனை ஒரு முறை பார்த்துவிட்டு, தந்தையை நோக்கிச் சற்று மௌனமாயிருந்த மகளின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட கரபத்ரன், "சூலநாதன் என்ன வேற்றாளா பொன்னு, சொல்லு..." என்றார்.

"ஆற்றங்கரையிலே, அந்த மங்கிய வேளையிலே அப்படி என்ன பேச்சு என்று முந்தின நாள் கண்டித்தீர்களே, அன்றுதான் நான் பைரவியுடன் பேசிக்கொண்டிருந்தேன்."

"யார், பாடினிப் பெண் பைரவியுடனா?" என்று கேட்டார் கரபத்ரன். பிறகு அவரே பேசினார்:

"இருக்கும். இருக்கும்; தஞ்சை மாளிகைக்கு பைரவி அடிக்கடி செல்கிறாள். அரசர் விஜயாலயனுக்குப் பாணனையும், பாடினியையும் பண்ணிசைக்கச் சொல்லிக் கேட்பதில் மிகுந்த ஆசை. மாளிகைக்குப் பைரவி போய் வந்துகொண்டிருக்கும்போது அறிந்து கொண்டிருப்பாள். உம், சொல்லு..."

"தஞ்சை மாளிகையிலிருந்து அவள் அறிந்து கொள்ளவில்லை. அந்தச் செய்தி நமது மகாராஜாவுக்கே தெரியுமா என்பது சந்தேகம்!" என்றாள் பொன்னருவி.

கரபத்ரன், "ஹோ, ஹோ" என்று சிரித்தார். "நீ என்ன சொல்கிறாய் பொன்னருவி? புதிர் போடுகிறாயா? பைரவி போர் வரப்போகும் செய்தியை எங்கிருந்து தெரிந்து கொண்டிருப்பாள்?" என்று கேட்டார்.

"அப்பா! பாடினி பைரவிக்கு மாளிகைச் செய்தியிலெல்லாம் அக்கறையே மில்லை. ஆனாலும் செய்தி அவளைத் தேடி வந்திருக்கிறது" என்றாள் பொன்னருவி.

"என்னம்மா சொல்கிறாய்? ஓர் அரசாங்கத்து இரகசியச் செய்தி பைரவியைத் தேடி வருவதாவது?" கரபத்ரன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு கேட்டார்.

"ஆமாம்; இரகசியம் அவளைத் தேடித்தான் வந்தது" என்று கூறிய அவள் பைரவி கூறிய செய்தியைச் சொன்னவுடன் கரபத்ரன் திடுக்கிடவில்லை; மௌனமானார்.

2

பைரவி அழகான பெயர். ஓர் இராகத்தின் பெயர். தேவி பராசக்தியின் பெயர். பைரவி கரிய நிறமுடையவள். என்றாலும், வசீகரமான முகமுடையவள். வண்டு சுற்றியலைவதைப் போன்ற விழிகளும், நகைத்தால் முல்லை மொட்டுப் போன்ற வெண்மை பளிச்சிடும் பற்களும் உடையவள். செழித்த தனங்களைத் தாங்காததால், சற்றே முன்னுக்குச் சாய்ந்து நடப்பதால், பின் அசைவுகள் காண்போரைச் சுண்டி இழுக்கும் வண்ணம் அமைந்தவள்.

கூந்தலை அள்ளிச் செருகி அதில் ஒரே ஒரு மலரைச் குடியிருப்பாள். அது செக்கச் சிவந்திருக்கும் செம்பருத்தியாக, பொன் வண்ணக்கொன்றை மலராக எழில் வண்ணம் வீசி நிற்கும். மார்பகத்தை மறைக்கும் கச்சம், அதற்கு மேல் உடலை ஒட்டிய மேலாடையும், கணுக்கால் வரை ஒட்டி உறவாடும் வெள்ளித் தண்டையும், காதுக் குண்டலமும், யானையின் துதிக்கை போன்று வளைந்த கரங்களுமாக அவள் நடையிலும் எழில் காண்போரை மயங்க வைக்கும். கையில் உள்ள யாழை மீட்டிப் பாடத் தொடங்கினால், வண்டின் ரீங்காரம் போல் ஒரு சமயம் அமையும்; இழுமெனக் கொட்டும் அருவியின் ஒங்காரம் ஒருபோது அமையும். நந்தவனக் குயிலின் இனிய ஓசை கேட்கும்.

அவள் தந்தை கையில் யாழுடன் பண்ணிசைக்கும் பாணனாகத் திகழ்ந்து பலரால் மதிக்கப்பட்டவன். பைரவி விறலியரைப் போல் கூத்தை விரும்ப வில்லை. தந்தையின் யாழைக் கையிலேந்தினாள். தஞ்சை சென்று தந்தை பழகிய இடங்களுக்கெல்லாம் தடையின்றிச் சென்றாள். பார்வைக்குக் குளிர்ந்த தென்றலாகத் தோன்றும் அவளிடம் முறை தவறி நடக்க முயன்றால் தீயாகிவிடுவாள்.

அவள் தந்தையும், தாயும் வீட்டை விட்டு எங்கும் நகர்வதில்லை. ஆற்றங்கரை ஓரமாக உள்ள தோப்பின் நடுவே அவர்கள் குடில்

அமைந்திருக்கிறது. இசைவாணிக்கு ஏற்ற இனிய குழ்நிலை; சிறு திண்ணை; உள்ளே விசாலமான முற்றம்; தாழ்வாரம்; கூடம். மேலே பனை ஓலை வேயப்பட்ட கூரை. கூடத்தில் ஆண்டு முழுமைக்கும் உணவளிக்கும் தானியததை நிரப்பி வைப்பதற்கேற்ற குதிர். அவர்கள் குடும்பம் பரம்பரையாக இசைக்குத் தொண்டு செய்து வாழ்ந்து வந்தது. பைரவி ஒரே மகள். இப்போது ஆண் போல் அவள் வெளியே சென்று பாடி மகிழ்வித்து பொருளீட்ட வேண்டியிருந்தது.

அவளுடைய பிள்ளைப் பிராயத்தினின்று பொன்னருவி இணைபிரியாத தோழி. இசை பயில பைரவி வீட்டிற்குப் பொன்னருவி வருவாள். பொன்னருவியிடம் அவள் தந்தை கரபத்ரன் ஆற்றிய வீரதீர சாகசங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்பாள் பைரவி.

பைரவி யாழை மீட்டி இசையால் செல்வர்களை மகிழ்விக்கச் செல்லும் இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைச் சொல்லச் சொல்லிக் கேட்பாள் பொன்னருவி. ஒரு காலத்தில் காவிரியின் வடகரையும், தென்கரையும் சேர்ந்த பகுதிகள் சோழநாட்டில் இருந்தாலும், இப்போது பாண்டியர்கள் சோழ நாடு முழுவதையும் தமது ஆட்சிக்குட்படுத்திக் கொண்டதால், அந்தப் பகுதி பாண்டிய நாட்டின் வட எல்லையாகத் திகழ்ந்தது. யாழப்பாணரான பைரவியின் தந்தையும், பெரும் வீரரான கரபத்ரனும் பாண்டிய நாட்டின் ஆட்சிக்குட்பட்டுத் தான் வாழ்ந்து வந்தார்கள். பாண்டியர்களின் எல்லைக் காவல் பலமாக அந்தப் பகுதியில் இருந்தது. சற்றுத் தொலைவில் மண்ணியாற்றங்கரையில், பாண்டியர்களின் பெரும் மாளிகை இருந்தது. பாண்டிய மன்னன் வரகுணன் முன்பெல்லாம் அங்கே உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க வந்து தங்குவது வழக்கம். இப்போது பல ஆண்டுகளாக அரிசிலாற்றங்கரையில் பல்லவ மன்னன் நிருபதுங்கனுடன் போர் நடத்தியபிறகு வந்து தங்குவ தில்லை. ஆனால் பாண்டியர்களின் படைகள் பாடி வீடமைத்து மண்ணியாற்றங்கரைப் பகுதியில் தங்கியிருந்தன. பாண்டிய ஒற்றர்கள் ஊர்களிலும், கிராமங்களிலும், ஊடுருவியிருந்தனர். தங்களை ஒற்றர் என்று யாரும் அறியாவண்ணம் அவர்கள் நடந்து கொண்டனர்.

பைரவி பாண்டியர்களின் படைப் பகுதிகளுக்குச் செல்வாள். தஞ்சைக்குச் சென்று விஜயாலய சோழரையும் இசையால் மகிழ்விப்பாள். திருவாரூருக்குச் செல்வாள். திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் பாடிப் போற்றிய தலங்களுக்குச் சென்று பதிகங்களைத் தக்க பண்ணோடு கலந்து யாழை மீட்டி இசைப்பாள்.

ஒரு நாள் விஜயாலய சோழர் தனது மஞ்சத்தில் சாய்ந்தவாறு கடந்த கால சம்பவங்களை நினைத்துக்கொண்டும், வருங்காலக் கனவுகளை எண்ணித் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். அவரால் இப்போது மாளிகையை விட்டு எங்கும் நகர முடியவில்லை. வாழ்க்கையின் இளமை பூத்த நாள்களை யெல்லாம் போர்க்களங்களில் கழித்த விஜயாலயன், பைரவியின் தேவாரப் பதிகத்தில் மெய்மறந்திருந்தார்.

ஆதித்தன் அங்கே வந்தவுடன் பைரவி பாடுவதை நிறுத்தி விட்டாள்.

பாடல் நின்றதும், விஜயாலயன் இமை திறந்தார். எதிரே ஆதித்தன் நின்றுகொண்டிருந்தான். நாளுக்கு நாள் அவன் ஆண்மைப் பொலிவு மிகுந்து கொண்டே வருவதை அவர் கண்டார். இசை நின்றது. ஆனால் எதிரே வீரம் நிறைந்த, பாசம் மிகுந்த ஆதித்தன் நின்றான். இசையும் வீரமும் இரண்டும் சேர அனுபவித்தால் நன்றாக இருக்குமே!

"பாடு! பெண்ணே பாடு! ஏன் நிறுத்தி விட்டாய்?" என்றார் விஜயாலயன்.

ஆதித்தனை எப்போதோ பைரவி பார்த்திருக்கிறாள். சுந்தர வடிவினாக இளவரசன் அங்கு வந்து நின்றபோது நாணம் அவள் குரலை வந்து தடுத்தது. தலையைக் குனிந்து கொண்டிருந்த பைரவியை ஆதித்தனும் பார்த்தான்.

"ஏன் நிறுத்திவிட்டாய் பாடு! பாடு! தந்தை கேட்டு மெய்மறந்திருந்த இசையை என் வருகை தடைப்படுத்தி விட்டதா? நான் வேண்டுமானாலும் சென்றுவிடுகிறேன். ஆனால் எனக்கும் நல்ல இசையைக் கேட்க ஆசை. மறைந்திருந்து வேண்டுமானாலும் கேட்கிறேன்!" என்றான் ஆதித்தன்.

"மகனே, ஆதித்தா! வா, இப்படி அருகே உட்கார். நீ இங்கிருந்து போகாதே. திடீரென்று நீ இங்கே வந்ததால் பைரவி நாண முற்றிருக்கிறாள். பைரவி உன்னை இப்போதுதான் பார்க்கிறாள். பாணனுடைய மகள். பாணன் முதிர்ந்த வயதடைந்துவிட்டான். அவன் பணியை அவன் மகள் ஏற்று விட்டாள். பைரவி நல்ல பெண். சிவபிரான் இவளுக்கு இசை ஞானத்தைப் பூரணமாக அளித்திருக்கிறார்" என்றார் விஜயாலயன்.

விஜயாலயனும், ஆதித்தனும் சேர்ந்தே, "பாடு பைரவி, பாடு!" என்றனர் ஒரே குரலில்.

நாடெல்லாம் சுற்றிய களைப்பு ஆதித்தனுக்கு ஒரு நொடியில் மறைந்து விட்டது.

"தந்தையே! பைரவி இசையைக் கேட்டுக்கொண்டு இங்கேயே தங்கிவிடலாம் என்று தோன்றுகிறது" என்றான் ஆதித்தன்.

விஜயாலயன் புன்முறுவல் பூத்து, "அப்படியென்றால் பைரவியை இப்போதே இந்த இடத்தை விட்டுப் போகச் சொல்லி விடுகிறேன்! இவள் இசையில் அமிழ்ந்து இங்கேயே இருந்துவிட்டால், உன் மற்ற பணிகள் என்ன ஆவது? இசை சுறுசுறுப்பாக இயக்க வேண்டுமே தவிர, ஒருவரை அடிமைப்படுத்தி, இயங்காது கல்லாக்கி விடக் கூடாது" என்றார்.

ஆதித்தனும் தந்தையில் சொல் கேட்டுப் பெரிதாக நகைத்தான். இதழ் விரியாமல் பைரவி நகைப்பதைக் கண்டு அந்த எழில் வடிவில் சொக்கிப் போனான் ஆதித்தன்.

இனிய இசைக்கு ஒரு வடிவம் இருந்தால் அந்த வடிவம் பைரவி போல்தானிருக்குமோ என்று எண்ணினான் அவன்.

பைரவி யாழை மீட்டிப் பாடினாள். யாழினிதா, பைரவி குரலினிதா என்று கண்டுபிடிக்க முடியவில்லை!

ஞானசம்பந்தரின் காந்தாரப் பண் பாடினாள்; சேரமான் பெருமாள் நாயனாரின் பொன் வண்ணத்து அந்தாதி பாடினாள்.

ஆதித்தன் எழுந்துவிட்டான். இசையைவிடக் கடமை உறுத்தியது. 'நேரமாகிறது' என்பதைப் புலப்படுத்த

பைரவி பாடலை நிறுத்தினாள். விஜயாலயனின் கண்சாடை அறிந்து அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

ஆதித்தன், தன் தந்தையிடம் 'மதிப்பு மிகு தந்தை' என்ற மரியாதையோடு பேரரசர் என்ற பெருமதிப்பும், 'மாவீரர்', என்ற பயபக்தியும் கொண்டிருந்தான். 'தந்தையே!' 'அப்பா' என்று அவன் அழைப்பதே குறைந்து விட்டது. 'அரசே', 'மாமன்னரே' என்றே அவன் அழைத்துப் பழகிவிட்டான்.

''மாமன்னரே! நான் இப்போதே நாகப்பட்டினத்திற்குச் செல்கிறேன். குதிரைகள் வாங்குவதற்கான ஓர் ஒப்பந்தத்தை முடிக்க வேண்டும்'' என்றான் ஆதித்தன்.

''நமது படைத் தலைவரை அனுப்பினால் போதாதா?'' என்று கேட்ட விஜயாலயன், ''உன்னுடன் அதிகநேரம் முக்கியப் பிரச்னைகள் பல பேச நினைத்தேன்'' என்றார்.

''தனாதிபதியும் வருகிறார். ஆனால் நானும் இருந்து சற்றுத் திறமையுடன் குதிரை வாங்கும் ஒப்பந்தத்தை முடிக்க வேண்டி இருக்கிறது. குதிரைகள் பாண்டிய நாட்டிற்குச் செல்லவிருக்கின்றன. தொண்டியில் இறங்குவதற்கு மாறாக நாகைக்கு வந்துவிட்டன. ஆயிரம் குதிரைகள்... ஆயிரம் குதிரைகள்'' என்று கூறும்போது, அவனது விழிகள் பெருமையில் அகல விரிந்தன.

''ஆயிரம் குதிரைகளா?'' என்று விஜயாலயன் வியப்புடன் கேட்டார்.

''ஆமாம்; இப்போது எதற்காகப் பாண்டியர் ஏராளமான குதிரைகளை வாங்குகிறார்கள் என்று தெரியவில்லை. எதற்காக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். நம்முடைய படையெடுப்புத் திட்டத்திற்குக் குதிரைப் படை தேவை'' என்றான் ஆதித்தன்.

விஜயாலயன் தன் மகனையே உற்று நோக்கியவாறிருந்தார். மகனின் தோள் வலியை அவர் அறிவார். வாள் வீசும் திறமை அவருக்குத் தெரியும். ஆனால், போர்க்களத் தந்திரமும், எதிரிகளை வெல்லும் புத்தியும் அவனுக்குக் கை வந்துள்ளனவா என்பதை மெல்ல மெல்ல ஆராய்ந்து வந்தார்.

''மகனே, ஆதித்தா! படை திரட்டுவது மிகவும் இரகசியமாக இருக்க வேண்டும். பாண்டியர்கள் தெரிந்து கொண்டாலும் அபராஜித பல்லவன் அறியக் கூடாது'' என்றார் விஜயாலயன்.

''இதுவரையில் நான் படை திரட்டுவதைப் பற்றி எவரிடமும் சொல்லவில்லை. பட்டி தொட்டிகளில், 'நாமிருக்கும் நாடு நமது' எனும்

உணர்ச்சியை ஊட்டி வந்தேன். ''மக்கள் செலுத்தும் திரைப் பணம் காஞ்சிமா நகருக்குச் செலகிறது என்று எடுத்துக் கூறினேன். பழம் பெருமை வாய்ந்த சோழர்குடி அடிமைப்பட்டுக் கிடப்பதா?' என்று அவர்களுக்கு அறிவுறுத்தினேன்'' என்றான் ஆதித்தன்.

''நல்லது மகனே! சென்று வா'' என்று விஜயாலயன் ஆசி கூறி அவனை அனுப்பி வைத்தார்.

ஆதித்தன் போகும் வரை மறைந்து நின்றிருந்த பைரவி அவன் சென்ற பிறகு சிறிது நேரங்கழித்து விஜயாலயன் ஓய்வெடுக்கும் அறைக்குள் நுழைந்தாள்.

''நீ இன்னும் போகவில்லையா, பைரவி?'' என்று விழிகளை மூடியவாறு கேட்டார் விஜயாலயன்.

''போகும் வேகத்தில் பையை மறந்து வைத்துவிட்டேன் பேரரசரே!'' என்று கூறியவாறு, தூணின் ஓரமாக வைக்கப்பட்டிருந்த தொங்கு பையை எடுத்துக்கொண்டு, மாமன்னருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியேறினாள் பைரவி.

''போர் மூளப் போகிறதாம்'' என்று ஒரு முறை சொல்லிக் கொண்டாள் பைரவி. அவள் உடல் நடுங்கிற்று.

அந்தச் செய்தியைத்தான் பொன்னருவியிடம் சொன்னாள், 'பரம ரகசியம்' என்று.

ஆனால், 'பரம இரகசியம்' என்று சொல்லப்பட்ட அந்த இரகசியம், தஞ்சைச் சிறையில் வாடிக்கொண்டிருந்த எயினன் செவிகளிலும் வீழ்ந்தது!

3

மதுரை மாநகரத்து அரண்மனையில் வரகுணபாண்டியன், தனது படைத் தலைவர் நக்கம்புள்ளனுக்காகக் காத்திருந்தார். 'எந்நேரமாயினும் படைத்தலைவருடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்; என்பதற்காகக் காத்திருந்தார் பாண்டியர். இருப்புக் கொள்ளவில்லை. கூண்டில் அடைபட்ட வேங்கை போல உலவிக் கொண்டிருந்தார். இந்நேரத்தில் அவர் திருச்செந்தூரில் முருகபிரான் சந்நிதியில் இருக்கவேண்டியவர். முக்கியமான செய்தி ஒன்றை, ஒற்றர்படைத் தலைவனிடமிருந்து கேட்டறிந்து வருவதாகக் கூறிச் சென்றிருந்தார் நக்கம்புள்ளன்.

நடுநிசியும் தாண்டிவிட்டது. மங்கிய நிலவு வானத்தே மௌனத் தவம் புரிந்து கொண்டிருந்தது. மதுரை உறங்கிற்று. குதிரையின் குளம்படி ஓசை கேட்கும்போதெல்லாம் படைத் தலைவரின் வருகையை ஆவலுடன் மேல்மாடத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் வரகுணன்.

பாதி உறக்கத்தில் விழித்தெழுந்த பறவைகள் படபடவென்று சிறகை அடித்துக்கொண்டு பறந்தன. நந்தவனத்தில் பூத்த புது மலரின் நறுமணம், குளிர்ந்த தென்றலுடன் கலந்து வந்தது.

தொலைவில் குதிரை மீது யாரோ வரும் உருவம் தெரிந்தது; அரவமும் கேட்டது.

நக்கம்புள்ளன் உடலைப் போர்வையால் மறைத்து வந்து கொண்டிருந்தார்.

''உனக்காகத்தான் விழித்துக் கொண்டிருக்கிறேன் புள்ளா!'' என்றார் வரகுணன்.

''சோழநாட்டுப் பழையாறையிலிருந்து இப்போதுதான் செய்தி வந்தது. அதுவரை காத்திருந்தேன்'' என்றார் புள்ளன்.

''நிலைமை எவ்வாறிருக்கிறது, புள்ளா? நம் படை சேகரித்து ஆயத்தமாக வைத்திருக்கும் செய்தி சோழர்களுக்குத் தெரிந்திருக்குமா?'' என்று கேட்டார் வரகுணன்.

''தஞ்சையிலும், பழையாறையிலும் மக்கள் வழக்கம் போல் தான் வாழ்க்கை நடத்துகிறார்களாம். சோழர் ஆண்டாலென்ன, பாண்டியர் ஆண்டாலென்ன என்ற மனப்பான்மையுடன் வாழ்கிறார்கள். விஜயாலயன் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாராம். ஆனால், இளவரசர் ஆதித்தன் ஒரு நாள் கூட, தஞ்சையில் தங்கியிருப்பதில்லை என்ற செய்தி வந்த வண்ணமாயிருக்கிறது'' என்றார் புள்ளன்.

''காஞ்சியில் அபராஜிதன் படையைப் பெருக்குகிறானா?''

''இல்லை, இல்லை. தன் முன்னோர்களைப் போல் கற்கோயில் கள் கட்டுவதாகக் கனவு காண்கிறான்.''

புள்ளனுடைய தந்தையின் பெயர் நக்கன். நக்கன் தோள் வலிமை மிக்கவர். போர்க்களங்களில் எதிரிகளின் படைகளுக்குள் வெகு விரைவில் ஊடுருவிப் பிளந்து முறியடிக்கும் திறமை பெற்றவர். ஆதித்த சோழனைப் பல தடவை போரில் புறங்காட்டி ஓடச் செய்த திறமை படைத்தவர். அவரது வலிமையையும், திறமையையும் பாராட்டி, 'பராந்தகப்பள்ளி வேளான்' என்ற பட்டமும் கொடுத்துக் கௌரவித்தார் வரகுணன். இந்தத் தடவை பதினாயிரக் கணக்கான படைகளுடன் சோழநாட்டிற்குள் படையெடுத்துப் புகுந்து ஒரே மூச்சில் காஞ்சி மாநகர் வரை சென்று பல்லவர்களது நாட்டையும் கைப்பற்றி விட வேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்.

''பராந்தகப் பள்ளி வேளரே! இப்படி வாருங்கள். இரவு நெடுநேரமாகியும் தங்களுக்காகவே ஏன் காத்திருந்தேன் என்று தங்களுக்குத் தெரியுமா? திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்காது தங்கள் தரிசனத்திற்கு ஏன் காத்திருக்கிறேன், தெரியுமா?'' என்று வரகுணன் கேட்டார்.

தனது அடர்ந்த மீசையை மெல்ல ஒதுக்கிவிட்டு, மேல் போர்வையை எடுத்து மடித்துத் தன் மடியில் போட்டுக் கொண்டு, ''திருச்செந்தூர்ப்

பெருமானின் அருள் பூரணமாகப் பெற்ற சக்கரவர்த்தி அவர்களே! தங்களுடைய ஆவலை நான் அறிய மாட்டேனா? சோழநாட்டு நிலவரம் அறிய வேண்டும்; தொண்டிக்கு அனுப்பிய நமது வீரர்கள் என்ன செய்தி கொண்டு வந்தனர் என்பதை அறியவேண்டும் என்பதற்காகத்தானே தாங்கள் காத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் புள்ளன்.

''புள்ளனாரே! மதுரையில் தங்கி இருக்கும் ஒரு கணம் கூட வாழ்நாளில் பெரும் பகுதியை இழப்பது போல் தோற்றமளிக்கிறது. நாளை விடிந்தால் நான் அரியணை ஏறிப் பதினேழு ஆண்டுகள் நிறைவடைகின்றன. குறையின்றி வாழ செந்தில் ஆண்டவன் ஆசி வழங்கியுள்ளார். என்றாலும் என் மூதாதையர் ஆண்டு மகிழ்ந்த தொண்டை நாட்டை என் காலத்திற்குள் மீண்டும் அடையாவிடில் மாறவர்மன் ஸ்ரீமாற ஸ்ரீ வல்லப பாண்டிய மாமன்னரின் மகன் என்ற பெயரைப் பூண்டிருப்பதில எந்தவிதப் பலனுமில்லை. அதனால் ஒவ்வொரு கணத்தையும் முக்கியமாகக் கருத வேண்டும்...'' என்று கூறிச் சற்று நிறுத்திய வரகுணன், ''புள்ளனாரே! தொண்டியில் குதிரைகள் வந்திறங்கிவிட்டனவா?'' என்று கேட்டார்.

புள்ளன் முகம் கறுத்தது. ஏதோ வேதனையை விண்டுரைக்க முடியாது திணறுபவர் போல் மென்று விழுங்கினார்.

''சக்கரவர்த்தி அவர்களே! மற்றொரு முக்கிய செய்தியும் கிடைத்தது. நமது கடற்படையை உடனே ஆயத்தப்படுத்த வேண்டும்'' என்று கூறி நிறுத்தினார் புள்ளன்.

''ஏன், கடற்பகுதி மூலமாக நமக்கு ஏதாவது எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கிறீரா? சோழர்கள் கடற்படையை அமைத்து விட்டனரா'' என்று கேட்டார் வரகுணன்.

''இல்லை, இல்லை. சோழர்கள் தூசிப் படைகளைப் பயன்படுத்தினால் அதுவே பெரிய காரியம். சோழர்களிடமிருந்து நமக்குக் கடற்பகுதிகளில் ஆபத்தில்லை. ஆனால், சோனக வணிகர்களிடமிருந்துதான் தொல்லை ஏற்படும் போல் தோன்றுகிறது. இதுநாள் வரை, நாம் எதிர்பார்த்த குதிரைகளை ஏந்திய கலம் தொண்டியை வந்தடையவில்லை'' என்று புள்ளன் கூறவும், வரகுணன் திடுக்கிட்டு, ''அந்தக் கலத்திற்கு என்ன நேர்ந்தது? இரண்டு திங்களுக்கு முன்பு ஈழத்துத் தென்கரையில் கரை கண்டதாக மீனவர்கள் சொன்னார்களே?'' என்று கேட்டார்.

''ஆம்; அந்தக் கணக்குப்படிப் பார்த்தால் இந்தப் பௌர்ணமி அன்று தொண்டியில் நங்கூரம் பாய்ச்சியிருக்க வேண்டும். கொற்கைக்கும் வந்ததாகத் தெரியவில்லை. அந்தக் கலத்தின் நடமாட்டத்தை உடனே கண்டறிய வேண்டும். அதற்காகத்தான் கடற்படையைக் கொண்டு அந்தக் கலத்தைத் தேட நினைக்கிறேன்'' என்றார் புள்ளன்.

''குதிரைகள் கிடைக்காவிடில் நமது படையெடுப்புத் திட்டம் தள்ளிப் போகுமே!'' என்று கவலை தெரிவித்தார் வரகுண பாண்டியன்.

''கவலைப்படாதீர்கள்; சோழ நாட்டிலிருந்து மிக முக்கியமான செய்தி ஒன்றை எதிர்பார்க்கிறேன். எயினனைச் செய்தியறிய அனுப்பியிருந்தேன். அவனிடமிருந்து செய்தி நாளையோ, மறுநாளோ வந்துவிடும். சோழர்களின் பாசறையிலுள்ள ஊர்களின் படையெடுப்புக்கான நாளைக் குறித்தது போல்தான்'' என்றார் புள்ளன்.

ஆனால், புள்ளன் எதிர்பார்த்தவாறு நடைபெறவில்லை. பாண்டிய நாட்டினின்று சோழ நாட்டிற்குச் சென்ற எயினன் மிக எளிதில் சோழ வீரர்களால் சிறைப்படுத்தப்பட்டான்.

4

''பொன்னருவி! உன்னிடம் மறைக்க எனக்குத் தோன்றுவ தில்லை. தஞ்சை மாளிகையில் நான் கேள்விப்பட்டதை உன் வரையில் மனத்தில் வைத்துக்கொள்'' என்றாள் பைரவி.

''என் தந்தையிடம் கூறாமலிருக்க முடியவில்லை. என் தந்தை உடனே தஞ்சைக்குப் புறப்படத் துடித்தார். அதைவிட என் அத்தை மகன் இருக்கிறானே அவனுக்குப் புதுத் துடிப்பு... '' என்று கூறி மெல்ல நகைத்தாள் பொன்னருவி.

''அடடா... பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கப் போகிறார்கள் என்ற செய்தியை உன் தந்தையிடம் சொல்லி விட்டாயா? அவர் தஞ்சைக்குச் சென்று பைரவி சொன்னதாகச் சொல்லிவிடப் போகிறார்'' என்று பரபரப்புடன் கூறினாள் பைரவி.

''நான் என் தந்தையைத் தடுத்து விட்டேன். என் தந்தையை எங்கும் போக விடுவதில்லை. வயது முதிர்ந்த காலத்தில் போர்க்களம் செல்ல அனுமதிக்கப் போவதில்லை. ஆனால் போர் என்றால் வீட்டிற்கு ஓர் ஆள் செல்ல வேண்டாமா? சோழ நாட்டைக் காப்பது கடமையல்லவா? அதனால் என் அத்தானைச் செல்லுமாறு தூண்டப் போகிறேன். சிறிது தொந்தரவாவது குறையும்'' என்று கூறி நகைத்தாள் பொன்னருவி.

''எனக்கு அனைவரும் சமமே. இந்த யாழை மீட்டியவாறு பாண்டியர் பாசறைக்கும் செல்வேன். சோழ வீரர்கள் நடுவிலும் செல்வேன்'' என்றாள் பைரவி.

''அது எப்படி நியாயமாகும் பைரவி? சோழ வீரர்களுக்கு உற்சாக மூட்டியே நீ பாடவேண்டும். பொன்னி பாயும் சோழ மண், பாண்டியரிடம் இருப்பதா? சோழரின் வீரம் ஓங்க நீ பாட வேண்டும்'' என்றாள் பொன்னருவி.

''பொன்னருவி! எனக்கு இசை ஒன்றே தெய்வம். பாடினிப் பெண்ணுக்கு அரசர் அனைவரும் சமம். நான் போரையே விரும்பவில்லை. அப்படிப் போர் வந்தால் போர்க்களத்திலே, படுகாயமுற்றவர்களைக் காப்பாற்றி, அவர்கள் இரணத்தால் வேதனைப்படாமலிருக்க நான் என் குரலிசையைப் பயன

படுத்துவேன். யாழிசை இனிமையால் அவர்கள் வேதனையை மாற்றுவேன். துன்பப்படும் எவரையும் கண்டால் என் மனம் வேதனைப்படுகிறது'' என்றாள் பைரவி.

''அது நல்ல குணந்தான். என்றாலும் நம் பிறந்த மண்ணைக் காப்பாற்ற நம்மால் இயன்றதைச் செய்யவேண்டாமா?'' என்று பொன்னருவி கேட்டாள்.

அந்தப் பேச்சை அத்துடன் மாற்ற விரும்பிய பைரவி, ''நான் வீட்டிற்குப் போகிறேன். என் தந்தையும், தாயும் எனக்காகக் காத்திருப்பார்கள்'' என்று கூறி விடைபெற்றாள்.

அவள் வீடு சென்று, வீட்டை ஒட்டி ஓடிய காவிரியில் நீராட முயன்றபோது வெள்ளத்தில் மரக்கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு யாரோ மிதந்து வருவது தெரிந்தது. காவிரியின் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு வெள்ளம் சென்றது. சுழலுடன் கூடிய காவிரியின் வெள்ளம் மேலும் அதிகரிக்கும் என்று தோன்றியது. பைரவி தாவி அந்த உருவத்தை இழுத்துக் கரை சேர்த்தாள். அந்த உருவத்திற்கு மெல்ல மூச்சு வந்து கொண்டிருந்தது. அப்பொழுது தான் நீந்திக் கை சோர்ந்த அந்த உருவம் மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு மயக்க மடைந்திருக்க வேண்டும்.

அந்த உருவத்தின் நெற்றியிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

தன் சேலைத் தலைப்பைக் கிழித்து நெற்றிக்காயத்தில் வைத்துக் கட்டிய பைரவி, உருவத்திற்கு மூச்சு வருகிறதா என்று பார்த்தாள். மெல்லிய சுவாசம் அவளுக்கு நம்பிக்கையை அளித்தது.

அந்த உருவத்தின் இடையில் சிறு வாள் இருந்தது. இடுப்பைச் சுற்றி அழுத்தமாக ஆடை ஒன்று கட்டப்பட்டிருந்தது. மூடியிருந்த விழிகளும், விழிகளுக்கு மேல் அகன்ற நெற்றியும், நீண்ட நாசியும் உடைய அந்த இளைஞனை வைத்த கண் வாங்காமல் சிறிது நேரம் நோக்கினாள் பைரவி.

மயக்கம் தெளிந்து மெல்லக் கண்விழித்த அவன், எழுந்திருக்க முயன்றான். அதில் பரபரப்புத் தெரிந்தது. ஆனால் உடல் மிகவும் சோர்வுற்றிருந்தான். கை கால்களை அசைக்க முடியவில்லை. பசிக் களைப்பும் உடன் சேர்ந்திருந்தது. நீரிலே நீண்ட நேரம் நீந்திய காரணத்தால், அவனுடைய உடல் சிலிர்த்தது. தாகத்தால் நா வறண்டிருந்தது.

குடிக்க நீர் வேண்டுமென்று சைகை காட்டினான். ஓடும் காவிரி நீரில் ஒரு கை அள்ளி வந்து அவன் வாயில் ஊற்றினாள் பைரவி. மீண்டும் இரண்டு மூன்று முறை அவ்வாறு செய்தாள்.

வீட்டிற்குச் சென்று மோர் கொண்டு வந்து கொடுக்க எண்ணினாள்.

''தங்களால் எழுந்து நடக்க முடியுமா?'' என்று கேட்டாள் பைரவி, கவலையுடன்.

தலையில் ஏற்பட்ட காயம் விண் விண் என்று வலித்தது. அவனுக்கு இப்போது நினைவுக்கு வந்தது.

அவன்தான் எயினன். மதுரையிலிருந்து தஞ்சைக்கு உளவு அறிய வந்தவன். ஆனால், சோழநாட்டு ஒற்றர்கள் மிக எளிதில் அவனை அடையாளம் கண்டுகொண்டனர். தஞ்சைச் சிறை யிலடைத்தனர் இளவரசன் ஆதித்தன் வந்த பிறகு விசாரிக்கலாம் என்று.

எயினன் சில நாள்கள் சிறையில் செய்வதறியாது திகைத்தான். ஒரு நாள் அவனுக்கு இரவு சோறிட வந்த காவலாளியைத் திடீரெனத் தாக்கி வீழ்த்தி விட்டுச் சிறையிலிருந்து தப்பி ஓடினான். குதிரை ஒன்று கிடைத்தது. அதில் ஏறி விரைந்தான். பாண்டிய நாட்டு ஒற்றன் தப்பிய செய்தி அறிந்த குதிரை வீரர்கள் அவனைப் பின் தொடர்ந்தனர். அவர்கள் மிக நெருங்கி வரும்போது அவன் காவிரியில் குதித்துச் சுழலில் மறைந்தான்.

தண்ணீருக்குள்ளேயே வெகுதூரம் மூச்சடக்கி நீந்தி நீரின் மேல் எழுந்தபோது அவன் கை சோர்ந்துவிட்டது. ஓரிடத்தில் சற்று இளைப்பாறக் கரைக்கு வந்து சேர்ந்தபோது அங்கே சோழநாட்டு வீரர்கள் கூடிப் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. மீண்டும் ஆற்றில் குதித்தபோது படித்துறைப் படிக்கட்டுகளில் மோதி, நெற்றியில் காயம் ஏற்பட்டது.

இரத்தம் பீறிடுவதையும் பொருட்படுத்தாமல் நீந்தி வந்தவன், கை சோர்ந்து போய் மரக்கிளை ஒன்றைப்பற்றிக் கொண்டு மிதந்து வந்தான். மயக்கமுற்றான். இப்போதுதான் கண் விழித்தான்.

பைரவியைப் பார்த்தவுடனேயே ஆவலுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தான். உடல் நோவு மறைந்துவிடும் என்று எண்ணியவனாக பைரவியைப் பார்த்து மெல்லப் புன்முறுவல் பூத்தான். என்றாலும் உள்ளுக்குள் பயமிருந்தது.

"எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் என்று நீ சொல்கிறாயோ அவ்வளவு தொலைவு நடக்கிறேன்" என்றான் எயினன்.

அவனுடைய பேச்சில் சிறிது குறும்புத்தனம் மிளிர்வதைப் பைரவி புரிந்து கொண்டாள். அந்தச் சமயம் அவனைக் கண்டிக்க விரும்பவில்லை. அவனுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்க பைரவியும் விரும்பினாள்.

"என் வீடு அதிக தொலைவு இல்லை. அதோ தெரிகிறதே அங்கு தான்" என்றாள்.

மெல்ல எழுந்திருக்க முயன்ற அவனைத் தொட்டுக் கைலாகு கொடுக்கலாமா என ஒரு கணம் எண்ணினாள். எயினன் பைரவியை நோக்கினான். பைரவி எயினனை நோக்கினாள். அவன் கரத்தைப் பிடித்துதவலாமா என எண்ணினாள் பைரவி. அவள் கரம் நடுங்கியது. எயினன் அதற்குள் மெல்ல எழுந்துவிட்டான். தன்னைத் தொட அவள் நாணமுறுகிறாள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

செயற்கை அழகு ஏதுமின்றி, பருவத்தின் குளிப்பாட்டலால் பூரித்துப் பூரண செழுமையுடன் விளங்கிய அவளை ஒரு முறை அவன் நோக்கினான். அப்பார்வையின் சக்தி தாளாமல் தலைகுனிந்து கொண்ட பைரவி, ஏதோ பேச முயன்றாள்.

"மெல்ல மெல்ல நடக்கலாமா?"

"இப்போது களைப்பு பறந்து விட்டது. நடக்க முடிகிறது. சிறிது குடிக்க ஏதாவது தாருங்கள். நான் பருகிவிட்டுப் போய்விடுகிறேன்."

"எங்கே போகிறீர்கள்....?"

"வந்த இடத்திற்கு."

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

பைரவி இவ்வாறு கேட்டவுடன் எயினனால் உடனே மறுமொழி கூற முடியவில்லை.

"ஆற்று வெள்ளத்தில் எப்படிச் சிக்கினீர்கள்? நீந்தத் தெரியாதா?" என்று பைரவி கேட்டாள். அவன் சற்றுப் பின் தங்கி நடந்தான். பைரவி முன்னால் நடந்தாள். மறுமொழியை எதிர்பார்த்துப் பின்புறம் திரும்பிப் பார்த்தாள்.

"நீந்தத் தெரியாமலிருந்தால், இங்கே கரை ஏறி இருக்க முடியாது" என்றான் எயினன், நகைத்தவாறு.

நான்தான் தங்களை கரை ஏற்றினேன். மரக்கிளையொன்றில் மிதந்து வந்தீர்கள்" என்றாள் பைரவி.

"இனியும் நீதான் கரை ஏற்ற வேண்டும். எனக்கு வழி சொல்ல வேண்டும்!" என்றான் எயினன்.

பைரவி திரும்பிப் பார்த்துச் சற்று நின்றாள். நெற்றியில் கட்டப்பட்டிருந்த துணியில் இரத்தம் கசிந்திருந்தது.

என்ன சொல்கிறான் இவன்? இரு பொருள்படப் பேசுகிறானே?

"என்ன சொல்கிறீர்கள்? காவிரியில் மூழ்க இருந்த தங்களைக் காப்பாற்றியது என் கடமை. இனியும் கரை ஏற்றுவது - வழி சொல்லுவது - என்றால் எனக்குப் புரியவில்லையே?" என்று கேட்டாள் பைரவி.

"நான் வெள்ளத்திலேயே சென்று மாண்டிருக்கலாம்" என்று கூறிய எயினன் குரலில் சோகத்தைக் கண்டாள்.

"ஏன் இப்படி வேதனையுடன் பேசுகிறீர்கள்?" என்று கேட்டாள் பைரவி.

"நான் இந்த உலகத்திலிருந்து இனி என்ன பயன்?" என்றான் எயினன்.

"நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பலனுக்காகவா வாழ்கிறோம்? ஏதோ வாழ்கிறோம். ஆற்றுநீர் போல் அன்றாடம் வாழ்க்கை ஓடுகிறது" என்றாள் பைரவி.

"மிக அழகாகப் பேசுகிறாய். அழகாக என்றால் நீ பேசும்போது உன் அதரங்கள் அசைகின்றனவே, அதைச் சொல்லவில்லை; நீ பேசும் போது உன் வட்ட விழி சுழல்கிறதே, அதைச் சொல்லவில்லை. சிரிக்கும்போது உன் கன்னமிரண்டும் குழிகின்றனவே, அதைச் சொல்லவில்லை. உன் குரல் இனிமை, உன் அழகையும் வென்று விடப் போட்டி போடுகின்றது. அதைவிட உன் பேச்சின் ஆழம் அழகைப் புலப்படுத்துகிறது" என்றான் எயினன்.

இதுவரை அவள் எழிலை யாரும் வர்ணித்ததில்லை. முதன் முறையாக அவன் தனனை வர்ணித்ததால், பைரவி நாணமுற்றாள். உள்ளத்தே பெருமை பொங்கி நின்றது. அவள், ''நீங்களும்தான் மிக அழகாகப் பேசுகிறீர்கள்'' என்றாள் தலைகுனிந்தவாறு.

''அழகாகப் பேசி, அழகாயிருக்கும் அணங்கே! உன் பெயரும் மிக அழகாகத்தானிருக்க வேண்டும். அறியலாமா? இந்த ஆற்றங்கரையோரம் தனியே குடிலமைத்திருக்கக் காரணம் என்ன?'' என்றான் எயினன். கேட்டபோது அவன் சற்றுத் தடுமாறினான். அவள் கரத்தைப் பிடித்துக்கொள்ள விரும்பினான். ஆனால், பைரவி சற்று விலகி நடந்ததால் அதற்கு இடம் தரவில்லை.

பைரவி அவனது விழிகளை ஒருமுறை தன் மின்னல் விழிப் பார்வையால் சந்தித்து, ''நான் ஒரு பாடினி...'' என்றாள்.

''பாடினி என்றால்?''

''பாடுவேன்.... அது என் தொழில்.''

''பாடுவதே ஒரு தொழிலாக முடியுமா?''

''தொழில்.... அதைத் தொழில் என்று எங்கள் குடும்பம் கருதுவதில்லை. வாழ்க்கை என்றே நினைக்கிறது. தமிழ்நாட்டில் பல நூறு ஆண்டுகளாக மன்னர்கள் மீது புகழ்ந்து பாடிப் பரிசுப் பொருள்களைப் பெற்று வாழ்க்கையை நடத்தி வந்து கொண்டிருக்கிறோம்.''

''ஓ! நான் கேள்விப்பட்டதில்லை!''

''இப்போது கேள்விப்பட்டதோடு பார்த்துவிட்டீர்களே! ஆமாம், நீங்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவரில்லையா? எல்லாமே தங்களுக்குப் புதுமையாக இருக்கிறதே?''

எயினன் ஒரு கணம் மௌனமானான். என்ன சொல்வது என்று யோசித்த வாறு நடந்தான். அதற்கு முன் குடிலின் புறக்கடைப் பகுதி வந்துவிட்டது. வீட்டைச் சுற்றி முள்வேலி போட்டிருந்தார்கள். படலைத் தாண்டிக்கொண்டு தென்னை, மா முதலிய மரங்கள் நிறைந்திருந்த தோட்டத்தின் வழியே வீட்டை அடைந்தார்கள்.

எயினன் கால்கள் சற்றுத் தடுமாற மெல்ல நடந்தான்.

''நான் கேட்டதற்கு இன்னும் மறுமொழி கூறவில்லை...'' என்றாள் பைரவி. அவனுடைய நடையை முன்னும் பின்னும் பக்கவாட்டிலுமாக ரசித்தாள் அவள். கம்பீரமாக வீரன் போல் அவன் தோன்றுகிறான். முகத்தை வழிக்காததால் முகத்தில் முடி அடர்ந்து வளர்ந்திருந்தது. மேல் அங்கியெல்லாம் இரத்தக் கறை.

வீட்டிற்குள்ளே அழைத்துச் செல்லலாமா, வேண்டாமா என்று ஒரு கணம் ஐயுற்றாள்.

வீட்டிற்குள்ளே செல்லலாமா, வேண்டாமா என்று அவன் ஒரு கணம் சிந்தித்தான்.

தன் தலை சுழல்வது போல் ஒரு கணம் உணர்ந்தான். அங்கேயே வாசற்படியருகே உட்கார்ந்து விட்டான்.

பைரவி பதறிப் போனாள். ''ஆகா, என்ன நேர்ந்தது தங்களுக்கு? அப்போதே பருகக் கேட்டீர்கள். சோர்வும் தலையிலே ஏற்பட்ட காயமும் களைப்பை அளித்துவிட்டனவா?'' என்று கேட்டாள்.

மெல்ல எயினனை அமரச் செய்து கவரில் சாயவைத்தாள். அவனது ஸ்பரிசத்தால் அவள் உடல் புல்லரித்தது.

அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அருகே மாட்டுத் தொழுவம்; ஆனால் யாரும் இல்லை. சிறு குடிசை போல் அது அமைந்திருந்தது. வீட்டிற்குள்ளே அழைத்துச் செல்லாமல் தொழுவத்தில் இளைப்பாறச் சொன்னால்...?

'தந்தையும் தாயும் அறிந்தால்? ஆபத்திலிருந்து காப்பாற்றியவரை இவ்வாறு வெளியே மாட்டுத் தொழுவத்தில் இருக்க வைத்தாயே என்று கோபிக்கலாம். அல்லது முன் பின் தெரியாதவரை வீட்டிற்குள் அழைத்து வந்துவிட்டாயே என்றும் குறை கூறலாம். எதற்கும் இங்கேயே வசதியாக இருக்க வைப்போம். பெற்றோர் கேட்டால், மயக்கமுற்றதால் அவரால் நகர முடியவில்லை என்று சொல்வோம்' என்ற முடிவிற்கு வந்து, எயினனை மாட்டுத் தொழுவத்திற்குள் அழைத்துச் சென்றாள். மாட்டுத் தொழுவம் என்ற பெயரே தவிர, சிறு குடிசை போல் இருந்தது. மாடுகள் ஏதும் இப்போது இல்லை. வைக்கோல் நிறைந்திருந்தது.

வைக்கோலைக் கீழே பரப்பி, அதிலே சற்று இளைப்பாறச் சொன்னாள்.

எயினனுக்கும் அவ்வாறு மறைந்திருப்பது பத்திரமானது எனத் தோன்றியது. மற்றவர் கண்ணில் படாமல் சற்றுக் கண்ணயரலாம் என்று முடிவு செய்துகொண்டு வைக்கோலில் தலை சாய்த்துப் படுத்தான்.

கலயத்தில் கம்பங்கூழும், மோரும் கொண்டு வந்த பைரவி, அவன் களைப்பால் கண்ணயர்ந்திருப்பதைக் கண்டு அவனை எழுப்ப முயன்றாள்.

என்ன கூறி எழுப்புவது? உடை வாளுடன் கம்பீரமாகத் திகழ்வதால் வீரராக இருக்கலாம். 'ஐயோ, வீரரே!' என்று அழைக்கலாமா?

''ஐயா... ஐயா'' என்றாள். கையைத் தட்டி ஒலி எழுப்பினாள். 'இவர் பெயரைக் கேட்க மறந்தோமே' என்று எண்ணினாள். 'ஊர் எது என்று கேட்டோம். சொல்லவில்லையே இவர்' என்று அவனருகே சென்று முகத்தருகே குனிந்து நோக்கினாள். 'நெற்றிக் காயத்திற்கு மருந்திட வேண்டும். தெருக்கோடியிலுள்ள வைத்தியரிடம் சென்று மூலிகை வாங்கி வர வேண்டும்' என்று முடிவு செய்தாள்.

''ஐயா.... ஐயா... கூழைக் குடித்துவிட்டுப் பிறகு நன்றாக உறங்குங்கள்'' என்று குரல் கொடுத்துப் பார்த்தாள். அவன் துயில் நீங்கவில்லை.

எயினனை எப்படியாவது எழுப்பி விடுவதென்று முடிவு செய்து அருகே இருந்த வைக்கோல் துரும்பை எடுத்து மெல்ல அவன் காதுக்குள் செலுத்தினாள் குறும்புக்காரி.

எயினன் திடுக்கிட்டு எழுந்தான். பைரவியின் கையிலிருந்த உடையும், கூழும், மோரும் பார்த்தவுடனேயே அவனுக்குப் புதுத்தெம்பை அளித்தன.

பொழுது சாய இன்னும் நாழிகை இருந்தது. இருட்டிய பிறகு வெளியேறுவதே நல்லது என்ற எண்ணத்தில் பைரவி கொடுத்த கூழைக் குடித்துக் களைப்பு நீங்கினான்.

''உன் பெயர் என்ன என்று இன்னும் சொல்லவில்லை... பாடினி என்றால் பெயரும் அதேதானா?'' என்று எயினன் கேட்டான். உடுத்தியிருந்த ஆடைகளை மாற்றி வேறு உடை உடுத்த வேண்டும் போல் தோன்றியது.

''உங்கள் பெயரைக் கூட நான் கேட்கவில்லை; உங்கள் ஊரைத் தான் கேட்டேன். நீங்கள் சொல்லவில்லையே....'' என்று கேட்டாள் பைரவி.

எயினன் அவளைப் பார்த்தவாறே மெல்லச் சிரித்தான். ''உன் பேச்சும் கூட இசை போலவே இருக்கிறது! நீ பேசிக்கொண்டே இருந்தால் நெற்றி வலிகூட மறைந்துவிடும்'' என்றான் எயினன்.

''பேசிக் கொண்டே இருக்கலாம்; மருத்துவரிடம் சென்று மூலிகை வாங்கி வரவேண்டும். ஆனால் எனக்குக் கோயிலில் மாலைப் பதிகம் பாடும் பணி இருக்கிறதே'' என்றாள்.

''அப்படியென்றால் நீ போய்விடுவாயா? நான் சற்று இளைப்பாறி விட்டுப் புறப்படட்டுமா? இப்பொழுதே விடை பெற்றுக் கொள்கிறேன்'' என்று கவலையுடன் அவள் முகத்தைப் பார்த்தான் எயினன்.

பைரவியின் முகத்தில் திகைப்பு ஏற்பட்டது.

''எங்கிருந்து வந்தீர்கள், எங்கே புறப்படப் போகிறீர்கள் என்று சொல்ல வில்லையே நீங்கள்? இதுபோன்ற கொட்டிலில் தங்களைத் தங்கியிருக்கச் செய்வதில் எனக்கு வருத்தமே. வீட்டிற்குள்ளே தங்கலாம். ஆனால் அங்கே ஒருவர் படுக்கலாம், இருவர் நிற்கலாம் என்பது போல் வசதி. வெளித் திண்ணையை விட இங்கு சௌகரியம் என்று நான் நினைக்கிறேன்'' என்றாள் பைரவி.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இந்த இடத்திற்கு என்ன! மாளிகை போல் இருக்கிறது. உன் பெயர் கனிமொழி என்று இருக்கும் என்று தோன்றுகிறது. கனிவான பேச்சு. அதைவிட உபசரணை. நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்? எங்கள் நாட்டிற்கு வந்தால் உனக்கு முத்துமாலை பரிசாக வாங்கித் தருவேன்'' என்று கூறியவன், சட்டென உதட்டை மடித்துக் கொண்டான். ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டது போல். பைரவி அவனைக் கூர்ந்து நோக்கினாள். ''உங்கள் நாடா? நீங்கள சோழநாட்டைச் சேர்ந்தவர் இல்லையா? உம்; எந்த நாடாயிருந்தால் என்ன? நாடு, சமயம், காலம்,

எதையும் பார்த்துத்தான் உதவி செய்ய வேண்டுமென்பதில்லை. முத்துமாலை பரிசு தரக்கூடிய செல்வரா தாங்கள்?'' என்றாள் பைரவி.

''பாடினி! காலத்தில் செய்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன். ஆற்றிலே மிதந்து வந்த என்னைக் காப்பாற்றியிரா விட்டால் நான் உலகத்தை விட்டே போயிருப்பேன். பிறகு நாடேது, ஊரேது?'' உண்மையிலேயே அவன் குரல் தழுதழுத்தது.

''நான் என் கடமையைச் செய்தேன். என் தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்த பாடம். இந்த உலகத்திலுள்ளவர்களைச் சமமாகப் பாவிப்பது; ஆபத்துக் காலத்தில் உதவுவது; சமாதானமாக வாழ்வது என்பவை அவர் கூறிய அறிவுரைகள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' என்று அவர் சொல்லிக் கொடுத்திருக்கிறார்'' என்றாள் பைரவி. பாடுவதைப் போன்று மூச்சு விடாமல் பேசுவதிலும் அவளுக்குப் பிரியம் அதிகம்.

''யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா...
.....
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே''

என்று எயினன் மெல்லப் பாடினான்.

பைரவிக்கு வியப்புத் தாங்கவில்லை.

''உங்களுக்கு இந்தப் பாடல் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''இந்தப் பாடலைப் பாடிய கணியன் பூங்குன்றனார் எங்கள் நாட்டைச் சேர்ந்தவர்'' என்று கூறி, பைரவியின் முகத்தை அவன் உற்று நோக்கினான்.

பைரவி பரபரப்புடன், ''ஆகா, நீங்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவரா? பூங்குன்றத்தைச் சேர்ந்த சோதிடக் கலையில் வல்லவரான அவர் உயர்தரமான கருத்தைப் பாடியுள்ளார். காலத்தால் என்றும் அழியாத பாட்டு! இதோ வந்துவிட்டேன்'' என்று கூறி உள்ளே ஓடிய பைரவி யாழை எடுத்து வந்தாள். மீட்டினாள். 'ட்ரிங்... ட்ரிங்...' என்ற மெல்லிய ஒலி எழுந்தது. ஒரு பறவை சிறகடித்துப் பறந்து சென்றது. பைரவிக்குப் பிடித்தமான அணில் எங்கிருந்தோ ஓடி வந்து 'கீச் கீச்' என்றது.

''என் தந்தை இந்தப் பாடலை யாழோடு மீட்டிப் பாடினால் இன்றெல்லாம் கேட்கலாம். நான் இந்தப் பாடலை இசைத்துப் பல நாள்களாகி விட்டன'' என்று கூறி அவள் யாழை மீட்டினாள்.

''யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்

இனிது என மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லர் பேரி யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே....''

மாலை இளங்காற்றும், மனத்துக்கு ஏற்ற சுருத்து நிறைந்த பாடலும், இனிய இசையும், இசையில் இரண்டறக் கலந்து மீட்டிய யாழ் ஒலியும் எவினனைத் தன்னை மறக்கச் செய்தன. அவன் நன்றாகக் கண்ணயர்ந்தான். மெல்லிய குறட்டை ஒலி அவனிடமிருந்து எழுந்தது.

அவன் அயர்ந்து உறங்குவதைச் சிறிது நேரம் பார்த்தவாறிருந்த பைரவி அங்கிருந்து எழுந்தாள். யாழைக் கையில் எடுத்துக்கொண்டு தொழுவத்தை விட்டு வெளியே வந்தாள்.

தொழுவத்தின் வெளியே பொன்னருவி நின்று கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள் பைரவி.

5

தஞ்சை மாளிகை பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. வேளக்காரப் படையினர் கையில் உருவிய வாளுடன் மாளிகையைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். தஞ்சைக் கோட்டை வாயில்களின் காவற்காரர்கள் முன்பு எப்போதையும் விட, கண்காணிப்பு அதிகம் மிக்கவர்களாய், வருவோர், போவோரைக் கவனத்துடன் நோக்கிக் கொண்டிருந்தனர். குறிப்பாகக் கோட்டைக்குள் வருவோரை அவர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். புதிதாக வருபவர்களைத் தடுத்து நிறுத்தி விசாரித்துக் கொண்டிருந்தனர்.

வீதிகளில் மக்கள் கும்பல் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தனர். அடுத்துள்ள கிராமங்களுக்கு ஓய்வெடுக்கச் சென்றிருந்த நிரந்தரப் படை வீரர்கள் வேகமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

விவரமறியாத மக்கள், பரபரப்பிற்கு என்ன காரணம் என்றறிய, தெரிந்தவர்களைக் கேட்டறிய முயன்றவாறு இருந்தனர். ஒருவராலும் தக்க காரணத்தைச் சொல்ல முடியவில்லை. ''பாண்டிய நாட்டினின்று வந்து பிடிபட்டுச் சிறையிலிருந்த ஒற்றன் தப்பி ஓடி விட்டானாம். அதனால் கவலை

மிகக் கொண்ட கோட்டைக் காவல் தலைவர் ஆபத்து உள்ளுக்குள்ளேயே இருக்குமோ என்ற கவலையில் படை வீரர்களை எச்சரித்திருக்கிறார்'' என்று பேசிக் கொண்டனர்.

விஜயாலய சோழர் அன்று கண் விழித்தவுடன் கேட்ட முதற்கேள்வி, 'நாகப்பட்டினம் சென்ற இளவரசன் ஆதித்தன் வந்து விட்டானா?' என்பதே. மெய்க்காவல் அதிகாரி பணிவான குரலில் நாகைப்பட்டினத்தினின்று வந்த செய்தியை விவரித்துக் கூறலானான்.

இளவரசன் ஆதித்தன் நாகைக் காரோணர் கோயிலுக்குச் சென்று வணங்கி வழிபட்டு, திருவோலக்க மாளிகையில் தங்கியிருந்து குதிரை வாணிபம் செய்யும் வணிகரை வரவழைத்தான். சோனகர்கள் குடும்பத்தினர் சிலர், பல ஆண்டுகளாக நாகையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் தலைவர் போல் திகழும் அப்துல் கரீம் மரக்காயர் தனது பணியாட்கள் சூழ விலையுயர்ந்த பட்டாடைகள், பேரீச்சம் பழ வகைகள், சோனக நாட்டுத் தங்க ஆபரணங்கள் நிறைந்த பரிசுப் பொருள்களுடன் வந்து வணங்கி நின்றார். இளவரசன் ஆதித்தனுக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசில்களாகக் கொண்டு வந்திருக்கும் செய்தியையும் பணிவுடன் தெரிவித்தார்.

பல வளைவு கொண்ட ஒட்டகங்களை இருந்த இடத்திலிருந்தே சாளரம் வழியே நோக்கிக் கடகடவென நகைத்து, ''ஆ! இந்த விசித்திரப் பிராணியை வைத்துக்கொண்டு என்ன செய்வது, மரக்காயரே! நான் கேட்டது பரி! ஒட்டகமல்ல'' என்றான்.

கை கட்டி வாய் பொத்தி நின்ற மரக்காயர் மெல்லிய புன்முறுவலுடன், ''சோழர் குல விளக்கே! அவ்வாறு நினைக்கக் கூடாது. ஓர் ஒட்டகம் பத்துக் குதிரைகளுக்குச் சமம்'' என்று கூற முற்படும்போது ஆதித்தன் குறுக்கிட்டு, ''ஒட்டகம் மீது ஏறி வாளேந்திப் போர் புரிய முடியுமா?'' என்று கேட்டான்.

''ஆகா; நன்றாக முடியும்... பார்ப்பதற்கு இப்படி இருக்கிறதே தவிர, அவை வேகமாகச் செல்லும். பொதி சுமக்கும். பால் கொடுக்கும்!'' என்றார்.

மீண்டும் ஆதித்தன் நகைத்து, ''பால் கொடுக்குமா?'' என்று கேட்டவுடன், மரக்காயர், ''இளவரசே! ஒட்டகப்பால் எங்கள் நாட்டில் ஒரு முக்கிய உணவு. உடலுக்கும் நல்லது'' என்றார்.

''அது சரி! ஆயிரம் குதிரைகள் உங்களுடைய மரக்கலத்தில் வரப்போவதாகக் கூறினீர்களே. அதைப் பற்றிப் பேசுவோம். அவற்றின் நிலை என்ன?'' அழுத்தமான குரலில் கேட்டான்.

''சோழ குலத்தைப் பெருமைப்படுத்த வந்த உதயசூரியனை நிகர்த்த இளவரசர் அவர்களே! எனக்குச் சொந்தமான நான்கு மரக்கலங்களும் கடலில் வந்துகொண்டிருக்கின்றன. முந்நீர் பழந்தீவில் மரக்கலத்தைச் சிறிது நாள்கள் நிறுத்தி வைக்கக் கட்டளையிட்டேன். அவை பாண்டிய மன்னர் கோரிக்கைப் படி கொண்டு வரப்பட்ட குதிரைகள்'' என்ற மரக்காயரை ஆதித்தன் மீண்டும்

இடைமறித்து, ''சோழ நாட்டிலே வாழும் நீங்கள் பாண்டியருக்காகக் குதிரைகளை வரவழைக்கலாமா?'' என்று கேட்டான். குரலில் சிறிது சீற்றம் இருந்தது.

''மிகவும் பொறுத்தருள வேண்டும். இந்தச் சிறிய குதிரை வியாபாரி சொல்வதையும் சற்றுப் பொறுமையாகக் கேட்க வேண்டும். என் பாட்டனார், அவருக்கு முப்பாட்டனார் காலத்திலிருந்து கடற்கரையோரத் துறைமுகப் பட்டினங்களில் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். கடல் மல்லை, பூம்புகார், கொற்கை, தொண்டி, நாகைப்பட்டினத் துறைகளில் எங்கள் குடும்பங்கள் வசித்துவருகின்றன. எங்கள் வாழ்க்கையே கடலை நம்பித்தான். பெரிய பெரிய கலங்களைக் கட்டுவோம். அரசர்கள் உதவியால் கட்டப்படும் கலங்களையும் விலைக்கு வாங்கிக் கொள்வோம். எங்கள் கலங்கள் குதிரைகளை மட்டுமே ஏற்றி வரும். திரும்பிச் செல்லும் போது உணவுப் பண்டங்கள், ஆடை, அணிகளைக் கொண்டு செல்வோம். எங்களுக்குச் சோழ, பாண்டிய அரசர்கள் அனைவரும் வேண்டியவர்களே. ஒரு வார்த்தை கூறினால் என்னைக் கோபிக்க மாட்டீர்கள் என்று நம்பிச் சொல்கிறேன். பல ஆண்டுகளாக சோழநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களில் குதிரை வியாபாரம் அருகிவிட்டது. அதற்குக் காரணம் பல உண்டு. என்னைப் பொறுத்தருள வேண்டும். தங்கள் நாட்டை இழந்த சோழர்கள், பல்லவர்களிடம் அடிமைப்பட்டதால் தங்களுக்கென்று தனியே ஏதும் செய்து கொள்ளவில்லை. பல்லவ மன்னர்களே குதிரைப் படைகளை வைத்திருந்தனர். ஆனால் பாண்டிய மன்னர்கள் சோனகக் குதிரையின் பயனையும் பெருமையையும் அறிந்து நல்ல விலை கொடுத்து வாங்கி வந்தார்கள். சிறிது காலத்திற்கு முன்பு பாண்டிய மன்னர்களுக்கும் எங்களுக்கும் மனவேற்றுமை ஏற்பட்டது. எந்தக் காரணத்தாலோ பாண்டிய நாட்டில் குதிரைகள் இறந்துவிட்டன. அதனால் எங்கள் மீது கோபங்கொண்ட பாண்டிய மன்னர் எங்களை அவமதிக்கத் தொடங்கினார். சிலரைச் சிறையிலிட்டார். சிலரை ஊரை விட்டோட்டினார். அதனால் நாங்கள் பாண்டியர்களுடன் குதிரை வாணிபஞ் செய்ததையே குறைத்துக் கொண்டோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் வரகுண பாண்டிய மன்னர் தொண்டியிலுள்ள என் சகோதரரைக் கூப்பிட்டனுப்பினார். சில குதிரைகளை வாங்கிக்கொண்டார். அப்போதுதான் ஆயிரம் குதிரைகளை வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டார்'' என்று மரக்காயர் மெல்ல, ஆனால் அழுத்தந்திருத்தமாகப் பேசினார்.

''பாண்டியருடன் ஒப்பந்தஞ் செய்துகொண்ட நீங்கள் ஏன் நாகைக்குக் குதிரைகளைக் கொண்டு வருகிறீர்கள்?'' ஆதித்தன் சீறினான்.

மிகவும் நயமாக, ஆனால் கண்டிப்புடன், ''முதலிலேயே தங்களை வேண்டிக் கொண்டேன், நான் கூறுவது முழுவதையும் கேட்டருள வேண்டும் என்று. நாங்கள் வணிகர்கள். கடைவிரிப்போம். கேட்பாரிருந்தால் கொடுப்போம். இல்லையேல் கடையை மூடி வேறிடத்திற்கு எடுத்துச் செல்வோம். கருணை

கூர்ந்து கேளுங்கள். பல்லவ நாட்டிலும் சமீப காலமாகக் குதிரைகள் வாங்குவதை நிறுத்தி விட்டார்கள். வரகுண பாண்டியன் கூப்பிட்டனுப்பினார், 'ஆயிரம் குதிரைகள் வேண்டும்' என்றார். ஒரு குதிரை முந்நூறு வராகன் வீதம் பேசினோம். 'சரி' என்றார். முன் பணம் மன்னரிடம் கேட்பது முறையா? ஆனால் மரக்கலம் கடலில் வந்துகொண்டிருக்கும்போதே பாதிப் பணம் தந்துவிடுவது பாண்டியர் வழக்கம். மீதிப்பாதியைத் துறையிலிருக்கும்போது பெற்று விடுவோம். அதன்படி மன்னரை அணுகினோம். சந்திக்க முடியவில்லை. ஒப்பந்தப்படி பாதித் தொகையைக் கேட்டோம். குதிரை வாங்குவது குறித்துப் பேசிய அதிகாரிகள், பாதித் தொகை தருவதைத் தாமதப்படுத்தி வந்தார்கள். துறையில் குதிரை இறங்கியபிறகு தரத்தைப் பரிசோதனை செய்த பிறகு தான் விலைப் பணம் முழுமையையும் தருவதாகக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். இளவரசர் அவர்களே! மற்ற பண்டங்களைப் போலல்ல, குதிரைகளைக் கொண்டு வருவது. ஆயிரம் என்றால் நூறு குதிரைகளை அதிகமாகவே கொண்டு வருவோம். வழியில் அவை இறந்துவிடும். அவற்றின் உணவு வகைகளுக்கு ஏராளமாகச் செலவாகும். நிழல் நோய் வராமல் காக்க வேண்டும். அதனால் தான் பாதித் தொகை முன்பணம் கேட்பது. பாண்டிய அரசர் ஒப்பந்தப்படி நடப்பதற்கு மறுக்கிறார் என்றவுடன் எங்களுக்குக் கவலை ஏற்பட்டது. அப்போதுதான் சோழநாட்டு வணிகர்கள் என்னைச் சந்தித்தனர். பலமுறை சந்தித்தனர். அல்லாவின் அருளால் சோழ நாட்டிற்குப் புதுத் தெம்பை அளித்துள்ள பரகேசரி விஜயாலய சோழ தேவர் நீடூழி வாழ்க! அவரது திருக்குமாரர், அறிவும் ஆற்றலும் மிக்க இளவரசர், நீடூழி வாழ்க! மிகுந்த ஆலோசனையின் பேரில் குதிரைகளைத் தொண்டியில் இறக்காமல் நாகைக்குத் திருப்ப முடிவு செய்தோம். ஆனால் சோழ நாட்டுச் செய்தி விரைவில் பாண்டிய நாட்டை எட்டி விடுகிறது போல் தோன்றுகிறது. பாண்டிய நாட்டு ஒற்றர்கள் சோழநாட்டில் நிறைந்திருக்கின்றனர் என்று நினைக்கிறேன். குதிரைகள் தொண்டிக்கு வராத செய்தி பாண்டிய மன்னருக்கு எட்டியிருக்க வேண்டும். தொண்டியிலுள்ள என் சகோதரரை அழைத்துப் பாண்டிய நாட்டு அதிகாரிகள் பயமுறுத்துவதாகச் செய்தி வந்துள்ளது'' என்று மரக்காயர் கூறியவுடன் ஆதித்தன் துள்ளி எழுந்து, ''சுற்றி வளைக்காதீர். இப்போது நிலைமை என்ன?'' என்று கர்ஜித்தான். 'சோழ நாட்டில் ஒற்றர்கள் நிறைந்திருக்கின்றனர்' என்ற செய்தி அவனைச் சீற்றங் கொள்ளச் செய்தது.

''எங்கள் கலங்கள் ஈழத்தைக் கடந்து, இராமேசுவரம் அடையாமல் தொண்டிக் கரையை நெருங்காமல் வெகு தொலைவிலேயே வந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. குதிரையின் விலைக்குண்டான பொன் நாணயங்களை உடனே தருமாறு நாகையிலுள்ள சோழ வணிகர்களைக் கேட்டுள்ளேன்'' என்று கூறி வாய் பொத்தி மிக்க மரியாதையுடன் நின்றார் மரக்காயர்.

ஆதித்தன் அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். ஒற்றர்களைப் பற்றிய கவலை அவன் உடலைத் தீய்த்தது.

''சரி, சரி. நீங்கள் செல்லலாம். குதிரையின் தொகை உங்களுக்கு அளிக்கப்படும்'' என்று கூறி, கை ஒலி எழுப்பி மெய்க் காவலரை அனுப்பி, வணிகர் தலைவரை அழைத்து வரச் செய்தான்.

வணிகர் தலைவர் வந்தவுடன், ''இவரிடம் பேசி, குதிரைகளுக்குண்டான தொகை எவ்வளவு உண்டோ அதைக் கொடுத்துவிடுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

வணிகர் தலைவர் வாய் பொத்தி மிக மெல்லிய குரலில், ''இளவரசருடன் தனியே பேசவேண்டும்'' என்று மிகவும் பயபக்தியுடன் கூறினார்.

மரக்காயரைச் செல்லுமாறு பணித்து, வணிகர் தலைவருடன் ஆதித்தன் பேசினான்.

''மூப்பதாயிரம் வராகன்களை உடனடியாகத் தருவதற்கு கருவூலம் இடங்கொடுக்கவில்லை'' என்று தனாதிகாரி தெரிவித்ததை அவர் மிக நடுக்கமுடன் தெரிவித்தார்.

ஆதித்தன் முகம் சிவந்தது.

ஆதித்தனுக்கு இரண்டு செய்திகள் சீற்றத்தை அளித்தன. குதிரைகளை விற்கப்போகும் செய்தி பாண்டி நாட்டை எட்டியது என்பது ஒன்று. குதிரைகள் வாங்கப் போதுமான செல்வம் கருவூலத்தில் இல்லை என்ற செய்தி மற்றொன்று. சோழநாடு இப்போது சிறு நாடுதான். ஆனால் ஒரு காலத்தில் பரந்து விரிந்திருந்தது. சிற்றரசர்கள் திறைப் பணத்தைச் சோழ மன்னர் கழலடியில் சேர்ப்பித்துக் கொண்டிருந்தனர். இமயத்தில் புலிக்கொடி நாட்டிய மன்னர்கள் ஆண்ட சோழ நாடு இன்று சிறுத்துவிட்டது. குதிரைகள் வாங்கக் கூட முடியவில்லை.

ஆதித்தன் பெருமூச்சு விட்டான். சீற்றத்துடன் கூடிய அந்தக் கனல் கலந்த மூச்சு அவனைப் பொங்கி எழச் செய்தது. அப்போதே ஓர் உறுதி பூண்டான், 'இழந்த சோழநாட்டின் பகுதிகளை எப்படியும் மீட்டு விடுவது' என்று.

அதற்கு முதலில் நாட்டில் ஒழுங்குமுறையைப் பலப்படுத்த வேண்டும். கருவூலத்தில் வேண்டிய செல்வங்களைச் சேர்க்க வேண்டும். உடனடியாகக் குதிரைகளை வாங்கப் பணம் திரட்ட வேண்டும்.

மரக்காயரை அழைத்து, ''எப்பொழுது மரக்கலம் வரும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டான் ஆதித்தன்.

''அடுத்த பௌர்ணமிக்குள்'' என்றார் மரக்காயர்.

''நான்கு நாள்களில் நீங்கள் கேட்ட தொகை கிடைக்கும். துறையில் குதிரைகளைப் பத்திரமாக இறக்குங்கள். உடனே தஞ்சைக்கு அனுப்புங்கள். தஞ்சைக்குக் குதிரைகள் அனுப்பும் செய்தி வேறு எங்கும் தெரியக்கூடாது. தெரிந்தது என்றால் நாகைப் பகுதியில் நீங்கள் எக்காலத்தும் வசிக்க முடியாது'' என்று சற்றுக் கடுமையாகவே கூறினான் ஆதித்தன்.

மரக்காயர் தலையசைத்து வணங்கிப் பின்புறமாக நகர்ந்தார். என்றாலும், அவர் விழிகளில் ஒரு சிரிப்பு இருந்தது.

''நான் கூறுவதற்கு என்னைப் பொறுத்தருள வேண்டும். நாம் இப்போது பேசி முடிவு செய்த செய்தி உடன் பாண்டிய மன்னருக்கு எட்டிவிட்டால், அவரும் தாங்கள் கோரியது போலவே எங்களைக் கேட்கக் கூடுமல்லவா? அதனால் நாம் பேசியவை யாவும் பரம இரகசியமாக இருக்க வேண்டும் எனப் பெரிதும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். செய்தி எங்களிடமிருந்து செல்லாது. இது சத்தியம்'' என்றார் மரக்காயர்.

தலையசைத்த இளவரசன் ஆதித்த சோழன் மனம் அப்போதே பறந்து போய்த் தஞ்சைக் கோட்டையை அடைந்துவிட்டது. தஞ்சைச் சிறையிலுள்ள பாண்டிய ஒற்றனின் நினைவு வந்தது. அவனைத் தக்கபடி விசாரித்தால் எல்லாம் புரியும் என்ற முடிவுக்கு வந்தான்.

6

பொன்னருவியைப் பார்த்தவுடன் பைரவி திடுக்கிட்டாள். பரபரப்புடன் அவளை அங்கிருந்த குடிலுக்குள் அழைத்துச் சென்றாள். குறும்புப் புன்னகை முகத்தில் மிளிர, பொன்னருவி பைரவியின் முகத்தை உற்று நோக்கி, ''தொழுவத்தில் மாடு கன்றில்லையே! இதுவரை அங்கே என்ன செய்து கொண்டிருந்தாய் பைரவி?'' என்று கேட்டாள்.

பொன்னருவி புரிந்துகொண்டுதான் பேசுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்ட பைரவி, பேச்சை மாற்ற விரும்பி, ''உச்சி வேளையில் எங்கே வந்தாய் பொன்னருவி?'' என்று கேட்டாள்.

''எனக்குப் பல நாள்களாக ஒரு சந்தேகம். உச்சி வேளையில் பாடுவதற்கேற்ற பண் யாது?'' என்று கேட்டாள் பொன்னருவி.

மெல்ல அவள் கன்னத்தில் தட்டி, ''போடி, உன்னை எனக்குத் தெரியாதா? தொழுவத்தில் யாழுடன் பாடிக்கொண்டிருந்தபோதே நீ வந்துவிட்டாய். சுற்றி வளைக்காமல் கேளேன், தொழுவத்தில் படுத்திடுப்பது யார் என்று?'' என்று நகைத்தபடி சொன்னாள் பைரவி.

பொன்னருவி மெல்ல நகைத்தாள். ''பைரவி! உண்மையிலேயே உன்னிடம் சந்தேகம் கேட்கவே வந்தேன். ஆனால் நீ வீட்டில் இல்லை. நீ குளிப்பதற்காக ஆற்றிற்குச் சென்றிருப்பதாக உன் தாயார் சொன்னார்கள். நான் ஆற்றங்கரைக்குச் சென்றேன். உன்னைக் காணவில்லை. தொழுவத்தில் யாழின் ஒலி கேட்டது. நீ பாடும் ஒலி கேட்டது. பைரவிக்கு ஏதாவது பித்துப் பிடித்து விட்டதோ, இப்படித் தொழுவத்தில் இருந்து பாடுகிறாளே என்றுகூட நினைத்தேன்!'' என்று பொன்னருவி சொல்லி வரும்போது பைரவி குறுக்கிட்டாள்:

''ஆமாம், பொன்னருவி! எனக்குத் திடீரெனப் பைத்தியமே பிடித்து விட்டது. யாழெடுத்துப் பாடிக்கொண்டே இருக்கவேண்டும் எனும் ஆவல் தோன்றிவிட்டது. 'வேற்று நாட்டவர்', 'நம்மவர்' என்ற வேற்றுமை பாராட்டாமல் பாடத் தோன்றுகிறது. இந்த நிலையைச் சமரச மனப்பான்மை என்றும் கூறலாம்; பித்துப் பிடித்த நிலை என்றும் கூறலாம்.''

''பைரவி! எனக்குப் புரியவில்லை. புரியுமாறு சொல்லேன்! வேற்று நாட்டவர் எதிரே நீ பாடினாயா? எங்கே, எப்போது?'' என்று பொன்னருவி கேட்டாள்.

'உச்' என்று இதழ் மீது விரல் வைத்துச் சைகை காட்டி, ''அவர் தூங்குகிறார். தொந்தரவு கொடுக்க வேண்டாம்'' என்று மெல்லக் கூறினாள் பைரவி.

''அவர் என்றால்?...'' பொன்னருவி கேட்டாள்.

''பேசிக்கொண்டே போவோம்; குளக்கரைக்குச் செல்வோம். நான் இன்னும் குளிக்கவில்லை. நீராடியவாறே பேசுவோம்'' என்று பொன்னருவியை அழைத்துச் சென்றாள்.

ஆற்றங்கரையில் மிதந்து வந்த எயினனைக் காப்பாற்றியதிலிருந்து யாழை மீட்டிப் பாடியது வரையில் பைரவி தெரிவித்தாள்.

''அவர் வேறு ஒன்றும் சொல்லவில்லை. பாண்டிய நாட்டைச் சேர்ந்தவரவர் என்று தெரிந்துகொண்டேன்'' என்றாள் பைரவி.

''பாண்டிய நாட்டவர்கள் நமது விரோதிகள் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று பொன்னருவி கேட்டாள்.

''விரோதி - நண்பர்கள் அனைவரும் எனக்கு ஒன்றே!'' என்றாள் பைரவி.

''உன் மனப்பான்மையை எப்படி ஒப்புக் கொள்வது? நமது நாடு சோழ நாடு. நீ எப்படிப் பாண்டிய நாட்டவருக்கு உதவலாம்?'' - பொன்னருவியின் குரலில் கடுமை இருந்தது.

''சோழர்கள், பாண்டியர்கள் என்பதெல்லாம் நாம் பிரித்துப் பேசும் வார்த்தைகள். என் பார்வைக்கு அனைவரும் தமிழ் பேசுபவர்கள். சொல்லப் போனால் நாமிருக்கும் இந்தப் பகுதி இப்போது பாண்டியர்கள் வசமிருக்கிறது. இதற்கு என்ன சொல்கிறாய்?'' - பைரவி கேள்வியை வீசினாள்.

''பல்லவர்கள் சோழ நாட்டை ஆக்கிரமித்தனர். அவர்கள் அபகரித்த அந்தச் சோழ நாட்டுப் பகுதியைப் பாண்டியர்கள் பிடித்துக் கொண்டனர். நமது அரசர் தக்க தருணத்தை எதிர்பார்த்திருக்கிறார். பாண்டியர்களை ஓட்டிவிடுவார்'' என்றாள் பொன்னருவி.

''அதுவும் தெரியும். தஞ்சை மாளிகையில் திட்டம் தீட்டப்படுகிறது. குதிரைகள் வாங்க இளவரசர் ஆதித்தர் நாகைக்குச் சென்றிருக்கிறார். நாளையே பாண்டியர்கள் தோற்றோடலாம். அதற்காக நான் வருந்துவேன் என்று நினைக்கிறாயா?'' என்றாள் பைரவி.

''பாண்டிய வீரனிடம் நீ கேட்டறிந்ததைச் சொல்லி விட்டாயா?'' - பொன்னருவி கவலையுடன் கேட்டாள்.

''நான் அவருடன் இன்னும் நாட்டு வளப்பம் ஏதும் பேசவில்லை. அவர் நெற்றியில் ஏற்பட்டிருக்கும் காயத்திற்கு மருத்துவரிடமிருந்து மருந்து பெற்று வரவேண்டும்'' என்றாள் பைரவி.

''வைத்தியரையே அழைத்து வருவதுதானே?''

''கூடாது, கூடாது; அவர் இங்கே தங்கியிருப்பது ஒருவருக்கும் தெரியக் கூடாது.''

''அதென்ன, இப்போது மட்டும் சரிசமமாகப் பார்க்கும் மனப்பான்மை எங்கே போனது?''

''அடைக்கலம் புகுந்தவரை அகப்பட்டுக்கொள்ளச் செய்யலாமா?''

''உன் வீட்டைத் தேடி ஓடிவந்தா அவர் அடைக்கலம் புகுந்தார்?''

''அடைக்கலம் புகுந்தால்தான் உண்டா? நான்தான் காப்பாற்றினேன். காப்பாற்றியவரைக் காட்டிக்கொடுக்கலாமா?''

''எதிரிகளைக் காட்டிக் கொடுப்பது தவறில்லை. அது தர்மமுமாகும்.''

''எதிரி என்று நான் கருதவில்லை. எனக்கு அனைவரும் சமம். அத்துடன்...''

''அத்துடன்?... சொல் பைரவி! சொல்.''

''சொல்வதற்கு எவ்வளவோ இருக்கின்றன. என்றாலும் அவர் கருத்தும் என் கருத்தும் ஒன்றாக உள்ளது.''

''அவரைச் சந்தித்த சில நொடிகளில் அதை எப்படிக் கண்டு கொண்டாய்?''

''யாதும் ஊரே'' என்ற பூங்குன்றனார் கருத்து எனக்குப் பிடித்தமானது. அடிக்கடி யாழில் மீட்டிப் பாடுவேன் என்பது உனக்குத் தெரியும். அவருக்கு அந்தப் பாடல் மனப்பாடம். அவருக்கு மிகவும் பிடித்திருக்கிறது.''

''எல்லாருமே உற்றவர்கள், எல்லாமே எமது ஊர் என்ற மனப்பான்மை யுடையவராய் அவரைப் பார்த்தால் தோன்ற வில்லையே?''

''உனக்குத் தோன்றவில்லை. எனக்குத் தோன்றுகிறது. நான் என்ன சொன்னாலும் நீ ஏற்றுக் கொள்ள மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். அதனால் நாம் இனி அவரைப் பற்றிப் பேசாமல் மற்ற விஷயங்களைப் பேசுவோம்...'' பைரவி கூறிவிட்டு, குளக்கரையில் ஏறினாள். சேலையைப் பிழிந்து மார்பு வரை கற்றிப் பழைய புடைவையை அவிழ்த்து அதையும் அலசிப் பிழிந்தாள்.

''என் வீட்டில் அவர் தங்கியிருப்பதைப் பற்றி நீ ஒருவரிடமும் சொல்ல வேண்டாம் என்பது என் வேண்டுகோள்'' என்றாள் பைரவி.

''சரி, நான் யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் பாண்டியர்கள் படையெடுப்பைப் பற்றி என் தந்தையிடம் கூறுவேன். இளவரசர் குதிரை

வாங்கச் சென்றிருப்பதைப் பற்றிக் கூறுவேன். பாண்டிய நாட்டு ஒற்றர்களிடம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று சொல்வேன். உனது வீட்டுத் தொழுவத்திலுள்ள பாண்டிய நாட்டவர் என்றைக்குமே அங்கே இருக்க முடியாது. எப்படியும் அவர் மறைவிடத்தினின்று வந்தே ஆகவேண்டும். உன் வீட்டு எல்லை தாண்டியவுடனேயே அவரைச் சோழ வீரர்களிடம் பிடித்துக் கொடுக்கவும் தயங்கமாட்டேன்'' என்று பொன்னருவி தனது நாட்டுப் பற்று பரிமளிக்கக் கூறியபோது பைரவியின் முகம் கறுத்தது. பல ஆண்டுகளாக இணைபிரியாத தோழியாக இருந்து வந்த பொன்னருவியா இவ்வாறு பேசுகிறாள் என்று வேதனைப்பட்டாள். வேதனை ஆத்திரமாக மாறியது. ஆத்திரத்தை வெளியே புலப்படுத்த முடியாமல் மனத்திற்குள்ளேயே குளுரைத்துக் கொண்டாள்.

'ஆ! பொன்னருவி! உனக்கு இவ்வளவு சாமர்த்தியம் என்றால் எனக்கு எவ்வளவு இருக்கும்? அவரைப் பிடித்துக் கொடுக்க உன்னால் முடியுமா? அதையும் பார்த்து விடுகிறேன்' என்று பைரவி சொல்லிக் கொண்டாள்.

அவளுக்கே வியப்பாயிருந்தது. 'திடீரென்று வந்த ஓர் இளைஞன் மீது இவ்வளவு கரிசனமேன்? ஒரு பகல் கூட முழுதாக ஆகவில்லை. 'ஒரு பகல் பழகினார் உயிரை ஈவரால்...' என்று சொல்லியிருக்கிறார்களே, அப்படியிருக்குமோ?' என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

பொன்னருவிக்கு பைரவியின் போக்கைக் கண்டு வியப்புத் தாங்கவில்லை. 'பைரவிக்கு நாட்டுப் பற்று என்பது எள்ளளவும் இராதா?' என்று எண்ணினாள். மறுகணம், பாண்டிய நாட்டு வாலிபனை எப்படியும் சோழ வீரர்களிடம் காட்டிக் கொடுத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தாள். அவள் வீட்டு எல்லையைத் தாண்டிய பிறகே தனது திட்டத்தைச் செயலாற்றுவது என்று உறுதி பூண்டாள்.

வீட்டையடைந்தவுடன், தனது தந்தையிடம், இளவரசர் நாகைப்பட்டினம் சென்றிருக்கும் செய்தியைத் தெரிவித்தாள். அதற்குள் குலநாதன் அங்கு வந்துவிட்டான்.

''பொன்னருவி! நீ சொல்லப்போகும் பரம இரகசியம் எனக்குத் தெரியும்'' என்றான்.

பொன்னருவி திடுக்கிட்டாள். குலநாதனுக்கு மறைந்திருந்து கேட்கும் தீய குணம் உண்டு. 'குளக்கரையில் பைரவியுடன் தான் பேசிக் கொண்டிருந்ததை மறைந்திருந்து கேட்டிருப்பாரோ? மறைந்திருந்து பேச்சைக் கேட்பது இருக்கட்டும். பைரவி நீராடிக் கொண்டிருந்ததையும் அல்லவா கண்டிருப்பார்? சே, இவர் குணம் ஏன் இப்படிப் போகிறது? பொன்னருவிக்கு ஆத்திரம் மிகுந்தது. தன் தந்தையிடம் கோபமுற்றாள்.

''அப்பா! இவரைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறீர்களே! பெண்கள் குளிக்குமிடத்தில் இவருக்கு என்ன வேலை? கேளுங்கள் அப்பா!'' என்றாள்.

குலநாதன் திடுக்கிட்டான். ''எனக்கென்ன வேலை? நான் ஏன் செல்கிறேன்? அபாண்டப் பழியை ஏன் சுமத்துகிறாய்?'' என்று கேட்டான்.

''சரி, இப்போது எங்கிருந்து வருகிறார் என்று கேளுங்கள். நானும் பைரவியும் பேசிக் கொண்டிருந்தவற்றை மறைந்து நின்று கேட்டிருப்பார். அதனால்தான் அந்த இரகசியம் தனக்குத தெரியும் என்கிறார்'' என்றாள்.

''பைரவியும், பொன்னருவியும் பேசிக்கொண்டவை எனக்குத் தெரியாது. நான் அவர்கள் குளிக்குமிடமும் செல்லவில்லை. தஞ்சைச் சிறைக்கோட்டத்திலிருந்து பாண்டிய நாட்டு ஒற்றன் ஒருவன் தப்பி வந்துவிட்டானாம். காவிரியில் குதித்துவிட்டானாம். காவிரிக் கரையோர ஊர்களிலெல்லாம் தேடிவருகிறார்கள். போர் ஏற்படப் போவது நிச்சயம்'' என்று கூறிப் பொன்னருவியை நோக்கினான் குலநாதன்.

'அடடா, நாம் தவறாகவன்றோ சொல்லிவிட்டோம்? குலநாதனுக்கு நாம் பேசியது ஏதும் நல்லவேளையாகத் தெரியாது' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவளாய், ''காவிரிக் கரையிலுள்ள கிராமங்களிலெல்லாம் தேடுகிறார்களா? யார் தேடுகிறார்கள்?'' என்று ஆவலுடன் கேட்டாள் பொன்னருவி.

''யார் தேடுவார்கள்? நம் நாட்டுப் படைத் தலைவர்தான். தப்பியவர், பாண்டிய நாட்டு ஒற்றராம்'' என்றான் குலநாதன்.

பொன்னருவி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு தந்தையை நோக்கி. ''அப்பா! போர் ஒன்று வரப்போவதென்பது உண்மைதான். பாண்டியர்கள் மிகவும் கெட்டிக்காரத்தனமாக ஒற்றர்களை ஊடுருவ விட்டிருக்கிறார்கள். நம் ஊரிலேயே ஓர் ஒற்றர் தங்கியிருக்கிறார்'' என்றாள்.

''எங்கே இருக்கிறார்? என்னிடம் சொல். உடனே நான் கையுடன் பிடித்துத் தஞ்சைக்கு இழுத்துச் சென்று விடுகிறேன்'' என்றான் குலநாதன்.

''ஆகா, அவ்வளவு தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?'' என்று கேட்ட பொன்னருவி, குலநாதனை மேலும் சோதனை செய்வது போல் குறை கூறக்கூடாது என்ற முடிவுக்கு வந்தவளாய், ''குலநாதா! உங்கள் திறமையைக் காட்டக்கூடிய வாய்ப்பொன்றை அளிக்கப் போகிறேன்'' என்றாள்.

''எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் பற்றி உனக்கு மிகவும் தாழ்வான அபிப்பிராயம். போர் என்றால் பயந்தோடி விடுவேன் என்பது உன் அபிப்பிராயம். அதை மாற்றுகிறேன். வாளைச் சுழற்றிப் பாண்டிய வீரர்களின் தலையினைப் பந்தாடுகிறேன் பார்'' என்று மார்பை நிமிர்த்திப் பேசினான்.

பொன்னருவி மெல்ல நகைத்தாள். ''அத்தான்!'' என்று மெல்ல அழைத்தாள்.

அவள் தந்தை கரபத்ரன் செவியிலும் அந்த அமுதச் சொற்கள் வீழ்ந்தன. மகள் மனம் மாறிவிட்டாள்! இவ்வளவு காலம் குலநாதனை வெறுத்தவள், 'அத்தான்' என்று அன்பொழுக அழைத்துவிட்டாள் என்றறிந்து மகிழ்ந்தார்.

''குலநாதா! இனி உனக்கு நல்ல காலம்தான்'' எனக் கூறிக் கடகடவெனச் சிரித்தார். பிறகு அவன் அருகே நெருங்கி மெல்லிய குரலில் ''குலநாதா! எப்படியாவது அவள் மனத்தை மாற்றிவிடு'' என்றார்.

பொன்னருவிக்கு நாணம் ஒரு பக்கமும், மிகவும் விரைவாக ஆற்ற வேண்டிய காரியத்தை இப்படி வேடிக்கை விஷயமாக்குகிறாரே தந்தை என்ற கவலை ஒரு பக்கமுமாக அலைக்கழிக்க, ''அப்பா, ஆபத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை. நான் முக்கியமான செய்தியைச் சொல்ல வந்தேன்... திசைதிருப்பி விட்டீர்களே அப்பா!'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

மீசையை மெல்ல ஒதுக்கிவிட்டுக்கொண்டு கரபத்ரன் நகைத்தார்.

''என் அருமை மகளே! அந்த முக்கிய செய்தியை உடனே சொல்...'' என்றார்.

''முதலில் அவருக்குச் சொல்கிறேன்'' சூலநாதனை ஒருமுறை நோக்கினாள்.

சூலநாதனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

''பைரவியின் வீட்டை இரவும் பகலுமாகக் கண்காணிக்க வேண்டும். அங்கிருந்து ஊருக்குப் புதியவரொருவர் வெளியேறுவார். அவரை உடனே பிடித்துக்கொள்ள வேண்டும்'' என்று மெல்லிய குரலில் கூறினாள் பொன்னருவி.

''புரிந்துவிட்டது. தஞ்சையிலிருந்து தப்பி ஓடிய ஒற்றன் பைரவி வீட்டில் ஒளிந்துகொண்டிருக்கிறான். அப்படித்தானே? நான் கவனித்துக் கொள்கிறேன். அவனைப் பிடித்துப் படைத்தலைவர் எதிரே நிறுத்தி விடுகிறேன். அவ்வளவு தானே? இதை நான் செய்தால் எனக்கு என்ன பரிசு தருவாய் பொன்னருவி?'' என்று முகமெல்லாம் பல்லாக நகைத்தான்.

''பரிசு! இந்த நாட்டிற்குப் பெரும் ஆபத்து ஏற்படப் போகிறது. அதைத் தடுத்து, பாண்டிய விரோதிகளிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் பரிசு கேட்கிறீர்கள். வேடிக்கை தான். அந்த ஒற்றனைப் பிடியுங்கள். வரப்போகும் போரில் திறமையைப் புலப்படுத்துங்கள். பிறகு பரிசு தருவேன்'' என்றாள் பொன்னருவி.

சூலநாதன் நகைத்தவாறு, ''என்ன பரிசு என்பதை இப்போதே வாய் விட்டுச் சொல்லக் கூடாதா?'' என்று கேட்டான்.

கரபத்ரனுக்குச் சற்று எரிச்சலாக இருந்தது. ''ஏனம்மா பொன்னருவி! அப்படியென்றால், பாண்டிய விரோதிகள் நம் தலைவாசலை நெருங்கி விட்டார்கள் என்றுதானே பொருள்?'' என்று கேட்டு, பொன்னருவியின் கவனத்தைத் திருப்பினார்.

''ஆம், அப்பா! பாண்டியர்கள் படையெடுத்து வரப்போகிறார்கள். காஞ்சிபுரத்தில் உள்ள பல்லவர்களுக்கு இந்தச் செய்தி எட்டியிருக்குமா என்பது தெரியவில்லை. உடனே தஞ்சைக்குப் புறப்படுங்கள் அப்பா! நாமிருக்கும் சோழருக்கே உரிய பூமி பாண்டியரிடமிருக்கிறது. அதை மீட்க வேண்டாமா? புறப்படுங்கள்'' என்றாள் பொன்னருவி.

சூலநாதன் பைரவியின் வீட்டைக் கண்காணிக்கச் சென்றான்.

கரபத்ரன் சோழ நாட்டிற்குப் புறப்பட ஆயத்தமானார்.

7

ஸ்ரீவல்லப பாண்டியன் திருச்செந்தூருக்குச் சென்று முருகப்பிரானைப் பிரார்த்தனை செய்து வணங்கிவிட்டுத் தொண்டிக்கு வந்து சேர்ந்தார். மதுரையை விட்டுப் புறப்பட்டுப் பத்து நாட்களாகி விட்டன. தஞ்சைக்குச் சென்ற எயினன் சோழ வீரர்களிடம் அகப்பட்டுக் கொண்டான் என்ற செய்தி கேட்டது முதல் அவருக்கு மிகுந்த வேதனையாயிருந்தது. சிற்றரசர்களாய்ப் பல்லவர்களுக்கு அடங்கியிருக்கும் சோழர்கள் மறைவாகப் போருக்கு ஆயத்தம் செய்கிறார்கள் என்பதைப் பாண்டிய மன்னர் உணர்ந்து கொண்டார். அதனால் படையெடுத்துச் செல்வதில் மிகுந்த கவனமும், தக்க ஏற்பாடும் கொண்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்தார். சோனகர்கள் குதிரைகளைச் சோழ மன்னருக்கு விற்கப் போகிறார்கள் என்பதை அறிந்தபோது அவருக்குச் சீற்றம் மிகுந்தது. புள்ளன், கடற்படை உதவியைக் கேட்டவுடன், உடனே அளித்து, துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிட்டார்.

நக்கம்புள்ளன் மிகுந்த சாமர்த்தியசாலி. இரு பெரும் மரக் கலங்களில் பாண்டிய வீரர்களை ஏற்றினார். ஒன்றை தொண்டித் துறைக்கு வடகிழக்கே ஒரு காத தொலைவில் நங்கூரம் பாய்ச்சி நிற்கச் செய்தார். பதினைந்து நாள்களுக்குப் போதுமான உணவும், குடிநீரும் கலத்தில் சேர்த்து வைத்தார்.

மற்றொரு மரக்கலத்தை இராமேச்வரம் தீவுகளுக்கருகே நிற்கச் செய்தார்.

தொண்டித் துறைமுகத்தருகே நக்கம்புள்ளன் கவலையுடன் தங்கியிருக்கு மிடத்துக்கு ஸ்ரீவல்லபன் வந்து சேர்ந்தார். திருச்செந்தூர் முருகனுடைய திருக்கோயில் பிரசாதத்தை அவருக்கு அளித்தார்.

''திருமுருகன் அருளால் குதிரைகள் நமக்குக் கிடைக்கும் என நினைக்கிறேன்'' என்றார் நக்கம்புள்ளன்.

''கிடைத்து ஆகவேண்டும். இல்லாவிடினும் நமது படையெடுப்பு நாளை மாற்றுவது பற்றி யோசிக்க வேண்டி நேரிடும். தஞ்சையில் எயினனைச் சிறைப் பிடித்து விட்டார்கள். சோழநாட்டு நிலவரம் நமக்கு முழுமையும் தெரியவில்லை. நாம் செய்த பெரும் தவறு, வடக்கு எல்லையைப் பற்றி இதுவரை நினைக்காததே. நமது எல்லை மண்ணியாற்றங்கரை வரை இருக்கிறது. நமது மாளிகை மண்ணியாற்றங்கரையில் இருக்கிறது. ஒருமுறையேனும் அங்கு சென்றிருக்கலாம். நம்மீது விசுவாசமுள்ள அங்குள்ள குடிமக்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறையாவது உதவியிருக்கலாம். நாம் ஏதும் செய்யவில்லை. இப்போது திடீரென படையெடுப்பதென்றால் அங்குள்ள நிலைமையை அறியவேண்டாமா? நக்கம்புள்ளரே! நீங்கள் எயினனை அனுப்பியது தவறு. அழகிய பெண்களைப் பார்த்தால் அங்கேயே பல்லைக் காட்டிக் கொண்டு நின்று விடுவான். யாராவது பாடிக்கொண்டிருந்தால் தானும் உடன் சேர்ந்து பாடத் தொடங்கி விடுவான். அவனை அனுப்பினீர்களே!'' என்றார்.

நக்கம்புள்ளன் உடனே மறுமொழி கூறவில்லை. கடலிலிருந்து வரும் செய்தியின் மீதே அவருடைய கவனமிருந்தது என்றாலும், எயினனைப் பற்றி மன்னர் குறை கூறியதை மட்டும் அவரால் ஏற்க முடியவில்லை.

"அவனுக்கு இசைஞானமிருப்பதால்தான் அனுப்பினேன். தஞ்சைப் பகுதியில் கலைஞர்கள் அதிகம். எயினன் தன் இசைத் திறமையால் மக்களிடம் நெருங்கிப் பழகமுடியும். மேலும் எயினனின் முகராசி, அவன் பெண்களைக் கவர்ந்து விடுவான். வேறு என்ன வேண்டும், ஓர் ஒற்றன் எளிதில், வேற்று நாட்டில் நடமாட?..." என்றார்.

ஸ்ரீவல்லபனால் அவரது கூற்றை ஏற்க முடியவில்லை.

"ஒற்றர்களின் கருத்தும் கிடைக்காமல், குதிரைகளுமில்லாமல் வடக்கு நோக்கிப் படையெடுப்பதில் ஆபத்து இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அபராஜித பல்லவனுக்கு உதவியாக விஜயாலயன் வரமாட்டான் என்பது என்ன உறுதி?" என்று கேட்டார் ஸ்ரீவல்லபன்.

"அபராஜித வர்மனுக்குச் செய்தி எட்டி அவன் வரும் முன்பே நமது படைகள் நந்திபுரத்துக் கோட்டையைப் பிடித்து விடும்" என்றார் நக்கம்புள்ளன்.

"மண்ணியாற்றங்கரைக்கும் நந்திபுரக் கோட்டைக்கும் எவ்வளவு தொலைவு?" - ஸ்ரீவல்லபன் கேட்டார்.

"மிக அருகில் தான்" - மிகவும் எளிதாகக் கூறினார் புள்ளன்.

"அவ்வாறு இருக்கும்போது இவ்வளவு காலம் நாம் அந்தக் கோட்டையை எவ்வாறு கைப்பற்றாமல் விட்டோம்?" - மன்னர் கேட்டார்.

"நந்திப்புரக் கோட்டை மிகப் பலம் வாய்ந்தது."

"இப்போது மட்டும் அந்தப் பலம் எங்கு போனது?"

"அபராஜிதன் தெற்கு எல்லையைக் கவனிப்பதில்லை. பாறைகளை அடுக்கிக் கோயில்கள் கட்டுவதில் முனைந்துள்ளான். பல்லவ நாடே கலகலத்து இருக்கிறது. நாம் மிக விரைவில் போரில் இறங்கவேண்டியதுதான். அதனால் தான் குதிரைகளை எதிர்பார்க்கிறோம்" என்று கூறி, மீண்டும் கடற்கரையை நோக்கினார் புள்ளன்.

"ஆயிரம் குதிரைகளும் ஒரே மரக்கலத்திலா வருகின்றன?" - ஸ்ரீவல்லபன் கேட்டார்.

"சோனகர்கள் மிகுந்த திறமைசாலிகள். பத்துக் கலங்களுக்கு மேல் வருகின்றன. ஒவ்வொரு கலத்திலும் நூறு குதிரைகள் ஏற்றப்பட்டிருக்கும். வழியில் இறந்துபோனவை போக மீதிதான் விற்பனைக்கு" - புள்ளன் கூறினார்.

"அப்படியென்றால், ஆயிரம் குதிரைகள் நமக்குக் கிடைக்காதா?" - ஸ்ரீ வல்லபன் கேட்டார்.

புள்ளன் தலையசைத்தார். "ஆனால் ஆயிரத்திற்கும் விலை கொடுக்க வேண்டும்."

"என்ன செய்வது? இனிப் பாண்டிய நாட்டிலேயே குதிரை வளர்க்க வேண்டும். இல்லாவிடில் சோனகர் கருணையில்தாம் வாழவேண்டும்" - புள்ளன் வேதனையுடன் கூறினார்.

"குதிரைகளை இறக்கிய பிறகு பணம் தர மறுத்தால்?" ஸ்ரீ வல்லபன் கேட்டார்.

புள்ளன் நகைத்தார். "நம்மை விட சோனக வணிகர்கள் கெட்டிக்காரர்கள். கரை இறங்குவதற்கு முன்பே பாதிப் பணம் வாங்கி விடுவார்கள். கடைசிக் கலத்தினின்று இறங்கும் முன்பே மீதியையும் வாங்கிவிடுவார்கள். பேச்சுக்கு மாறுதலாக நடப்பது தெரிந்தால் கலங்களிலிருந்து குதிரையை இறக்க மாட்டார்கள். கலம் திரும்பிப் போய்விடும். நமது நாட்டைப் பற்றி அவர்களுக்குத் தெரியும். மிகவும் கவனமாக இருப்பார்கள்" என்றார்.

"அப்படியானால் என்ன செய்யலாம்?" ஸ்ரீ வல்லபன் கேட்டார்.

"நாம் ஏமாற்றிவிட்டோம் என்பதை அறிந்தே சோழ நாட்டினருக்குக் குதிரைகளை விலை பேசிவிட்டனர். நாம் சும்மா விடுவோமா? பரிகள் ஏறி வரும் கலத்தை நமது கடற்படை வழியிலேயே மடக்கிவிடும். பாருங்கள் நடக்கப் போவதை!" என்றார் புள்ளன்.

இரவு கழிந்து, காலை புலர்ந்து, பகல் நடந்து இரவு வரும் சமயத்தில் படகொன்று கடற்கரையை நோக்கி வந்தது. மீன் கொடி வீரர்கள் படகில் இருந்தனர்.

புள்ளன் மகிழ்ச்சியால் கூத்தாடினார். "படகைப் பார்த்தவுடனேயே இப்படித் துள்ளுகிறீர்களே, ஏன்?" என்று கேட்டார் ஸ்ரீவல்லபன்.

"சோனகர்கள் கலம் சிக்கி விட்டது. அதனால் துள்ளுகிறேன்."

"எப்படி அறிந்தீர்கள்?"

"படகில் வரும் வீரர்கள் நமது கடற்படையைச் சேர்ந்தவர்கள். இராமேச்வரம் அருகே தங்கி இருந்த கலத்திலிருப்பவர்கள்."

"அதனால்...."

"சோனகர்கள் கலம் சிக்கிவிட்டால், உடனே வந்து செய்தி தெரிவிக்கு மாறு கட்டளையிட்டிருந்தேன். இதோ அவர்கள் வந்து விட்டார்கள். அதனால் குதிரைகளை ஏற்றி வந்த கலம் நம் வசம் என்பது தெரிந்து விட்டது" என்றார் பெருமிதத்துடன் நக்கம்புள்ளன்.

ஸ்ரீ வல்லபன் முகத்தில் நம்பிக்கை ஒளி பரவியது. "வீரர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டறிவோம்" என்றார் மன்னர்.

புள்ளன் கூறியது போலவே நடந்தது. சோனகர் கலங்கள் இராமேச்வரம் தீவைத் தண்டிச் செல்ல முனைந்தன. பாண்டியர்கள் படைக் கலமும் பின்தொடர்ந்தது.

தொண்டித் துறைக்கருகே அவை நங்கூரம் பாய்ச்சுவதாகத் தோன்ற வில்லை. மேலும் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தன. காற்றும்

சாதகமாக வீசவே விரைந்து சென்று கொண்டிருந்தன, ஒன்றின் பின ஒன்றாகப் பத்துக் கலங்களும்.

சோனகர்கள் கலங்களைச் செல்ல விட்டபிறகு பாண்டியர் கடற்படை பின்தொடர்ந்தது. தொண்டியைத் தாண்டியவுடன் சோனகர்கள் கலத்திலிருந்த கலபதி, பெருங்கலமொன்று தங்கள் கலத்தைப் பின் தொடர்ந்து வருவதைக் கண்டான்.

சிறிது தொலைவு சென்றவுடன், இரண்டு பெரும் படகுகள் தங்கள் கலத்தை நெருங்குவதையும் கண்டான்.

கலத்தின் மிக அருகே வந்ததும், படகிலிருந்து கயிறு ஒன்று வீசப்பட்டது. நூல் ஏணி போன்ற அந்தக் கயிறு சோனகர்கள் மரக்கலத்தின் பக்கமாகப் பிணைந்தது. இருவர் நூல் ஏணி வழியாகக் கலத்தின் மேல் தளத்திற்கு விரைந்தனர். கலபதியை அவர்கள் சந்தித்து தாங்கள் பாண்டிய மன்னர்களின் தூதுவர்கள் என்றும், உடனே குதிரைகளை ஏற்றி வந்த கலங்களை தொண்டித் துறைக்குத் திருப்புமாறும் கூறினர்.

''குதிரைகள் சோழ மன்னருக்கு விற்கப்பட்டு விட்டன. அதனால் தொண்டிக்கு கலத்தைத் திருப்பவேண்டிய அவசியமில்லை'' என்று கலபதி அலட்சியமாக மறுமொழி கூறினான்.

''அந்தச் செய்தியை எமது மன்னரிடம் வந்து தெரிவித்து விடுங்கள்'' என்றனர் வீரர்கள்.

''மதுரைக்கு வந்து தெரிவிப்பதா? ஆகாத காரியம்!'' என்று கலபதி மறுமொழி கூறினான்.

''இல்லை, இல்லை. அவ்வளவு சிரமம் தங்களுக்கு வேண்டாம். தொண்டித் துறையில் தங்களுக்காக மன்னர் காத்திருக்கிறார்'' என்றனர் வீரர்கள்.

''பாண்டியர்களுக்கு நாங்கள் குதிரை விற்பதாக இல்லை'' என்றான் கலபதி.

''எங்கள் மன்னர் வாங்குவதாக முடிவு செய்துவிட்டார்.''

''வேறு குதிரைகள் கொண்டு வருகிறோம். இவை சோழ மன்னருக்கு விற்கப்பட்டு விட்டன.''

''எங்கள் அனுமதியில்லாமல் விற்கலாமா?''

''எங்கள் விருப்பம். நீங்கள் கேட்க உரிமையில்லை.''

''அந்த உரிமை விவகாரத்தை மன்னரிடம் பேசிக் கொள்ளலாமே?''

''பேசுவதற்கு ஒன்றும் இல்லை.''

''மரியாதையாகத் தெரிவிக்கவே நாங்கள் இங்கு வந்தோம்.''

''மிக மரியாதையுடன் உங்களை அனுப்பி வைக்கிறோம். படகேறித் திரும்பிச் செல்லுங்கள்.''

''உறுதியாகச் சொல்கிறீர்களா?''

''எப்போதும் நாங்கள் உறுதி தவறமாட்டோம். நாங்கள் பாண்டியர்களல்லர் உறுதி மீற!''

கலபதி இவ்வாறு கூறியது கேட்டுப் படகிலிருந்து வந்த வீரர்கள் நூலேணி வழியாக இறங்கிப் படகை அடைந்தனர்.

படகும் கண்ணுக்கெட்டிய தொலைவு சென்று மறைந்தது. பகல் மறைந்து இருள் சூழ்ந்தது. குதிரைகளை ஏற்றி வந்த கலங்கள் விரைந்தன. நடுக்கடலில் பேரிருள்.

திடீரென்று அந்த இருளையும் கிழித்து வெளிச்சமாக்கிச் சரமாரியாகத் தீப்பந்தங்கள் எங்கிருந்தோ பறந்து வந்தன. கலங்களின் பாய்கள் மீது குறி பார்த்து வீசப்பட்ட பந்தங்களால் அவை பற்றி எரியத் தொடங்கின. கலங்களுக்குத் தீ பரவாமல் இருக்க, அவற்றை அவிழ்த்துக் கடலில் வீசவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தீப்பந்தங்களால் குதிரைகள் சேதமடையக் கூடாது என்பதை அறிந்திருந்த பாண்டியர்களின் கடற்படைகள் குறிப்பிட்ட அளவுக்குள்ளேயே பந்தங்களை வீசியதால் தொடர்ந்து தீ பரவவில்லை.

சோனகர்களின் கலங்களில் மிகப் பெரும் பீதி ஏற்பட்டது. மற்ற கலங்களின் பாய்கள் வெகு விரைவில் சுருட்டப்பட்டன. நங்கூரம் இறக்கப் பட்டது. கலங்கள் இருந்த இடத்திலேயே நின்றன.

எந்தவித ஆபத்தையும் எதிர்த்து நிற்க ஆயத்தமாயிருந்த கலங்களிலுள்ள பணியாட்கள் தங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு போரிட கலபதியின் கட்டளையை எதிர்பார்த்திருந்தனர்.

''தீப்பிழம்புகள் பாய்வது நின்றுவிட்டன என்பதைக் கவனித்தீர்களா?'' என்று கலபதியை நோக்கிக் கேட்டான் காவல் பணியாட்களில் முதன்மையாக இருந்தவன்.

''அதனால்?'' என்று அவனைக் கூர்ந்து நோக்கினான் கலபதி.

''கட்டளையிடுங்கள். தாமதிக்கக் கூடாது. கடலில் நீந்திக் கொள்ளையர் கப்பலை உடனே சென்று தாக்குவோம்.''

''நிதானம் தேவை.''

''காரியம் மிஞ்சிவிடும். ஒரே ஒரு கலம்தான். நாங்கள் வீழ்த்திவிடுவோம்.''

''இல்லை. வந்திருப்பது ஒரே ஒரு கலம் என்று சொல்ல முடியாது.''

''ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால் இந்நேரம் மற்ற கலங்களின் மீதும் பந்தங்களை வீசியிருப்பார்களே?''

''கலங்களைக் கொளுத்துவது அவர்கள் நோக்கமாயிராது. சற்றுப் பொறுப்போம். வேறு கலங்கள் இருந்தால் அதற்குள் வந்துவிடும். பொழுது புலரும்வரை அமைதியாக இருப்போம். கலத்தில் பறக்கும் கொடியை அறிந்துகொள்ள வேண்டும்.''

''வேறு யாராக இருக்க முடியும்? பாண்டியர்களாகத் தான் இருக்க முடியும்.''

"அப்படி முடிவு செய்துவிட முடியாது. கடற்கொள்ளையர்களாகவும் இருக்கலாம்."

கலபதியின் நிதானமான உத்தரவு காவற் பணியாட்களின் தலைவனுக்குச் சற்று எரிச்சலையளித்தாலும் ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் கலபதி அவ்வாறு கூறுகிறார் என்பதை உணர்ந்துகொண்டான்.

கீழ்த்திசையில் ஒரு சிறு புள்ளிபோல் தெரிந்த கதிரவனின் ஒளி வட்டம் மெல்ல மெல்லத் தோகை விரித்தது போல் விரிந்தது. மேகக் கூட்டங்களின் மறைவிலிருந்தாலும் செம்பொற் குழம்புகள் பீறிட்டுப் பிரவகிக்கத் தொடங்கியதால் கருநீல வானத்து மங்கை மஞ்சள் பூசிக்கொண்டாற்போல எழிற்கோலம் பூண்டாள். அவள் கடலிலே நீந்தி மிதப்பது போல கருநிறம் பொன்னிறமாகியது.

"ஆ! அதோ பார்" என்று கூறினான் கலபதி. அனைவரும் பார்த்தனர். மிக அருகே இருந்த அந்தப் பெரிய கலத்தில் மீன் கொடி பறந்துகொண்டிருந்தது. சோனகர்கள் கலத்தை நோக்கிப் படகு ஒன்று வந்தது. அதிலே இருந்து பரபரப்புடன் கலத்தின் மீது ஏறியவர்கள் மற்றொரு கலம் நெருங்கி வந்து கொண்டிருப்பதைத் தெரிவித்தனர்.

"நான் நினைத்தது சரியாகிவிட்டது" என்றான் கலபதி.

"தாங்கள் என்ன நினைத்தீர்கள்?"

"நம்மை இருபுறமும் பாண்டியர் கலங்கள் சூழும் என்று நினைத்தேன்."

"நம்மால் அந்த இரு கலங்களையும் முறியடிக்க முடியாதா?"

"முடியாது..."

"ஏன்?"

"அவர்கள் நம்மைத் தாக்குவதற்கு ஆயத்தமாகத் தேர்ந்தெடுத்த வீரர்களுடன் வந்திருப்பார்கள். குதிரைகளை அபகரிப்பது அவர்கள் நோக்க மாயிராது. சோழநாட்டுக்குக் குதிரைகளைக் கிடைக்காமல் செய்வது அவர்களுடைய முதல் நோக்கமாயிருக்கலாம்."

"நமது கலங்களைத் தாக்குவதால் குதிரைகள் இறந்துவிடுமே?"

"குதிரைகளுக்குச் சேதம் வராமல் தாக்குவதும் அவர்கள் நோக்கமா யிருக்கலாம். நம்மைப் பயமுறுத்திப் பணிய வைப்பது அவர்களின் திட்டமாயிருக்கலாம்."

"பணியப் போகிறோமா? அதை நேற்றே அவர்களிடம் சொல்லி யிருக்கலாமே?"

"அதைத் தான் நான் முடிவு செய்யவேண்டும். பணிவதால் உள்ள சாதக பாதகங்கள் என்ன? பணியாமல் நமது முழுப்பலத்தைக் கொண்டு பாண்டியர் களுடைய கலங்களைத் தாக்கினால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை யோசிக்கிறேன். பாண்டியர்களிடம் பலம் மிக்க கடற்படை இருப்பது தெரியாது."

"எவ்வளவு நேரம் யோசிப்பீர்கள்? கட்டளையிட்டிருந்தால் நாங்கள் அந்த மரக்கலங்களை நோக்கிச் சென்றிருப்போம். ஒவ்வொரு கணமும் நமக்குப் பாதகமாகலாம். இது என் கருத்து."

"உன்னுடைய முட்டாள்தனமான கருத்துக்கு நன்றி. நமது கலத்திலுள்ள குதிரைகளின் மதிப்பு தெரியாமல் பேசுகிறாய். குதிரைகளை நாம் யாருக்கும் விற்கவில்லை. நம்மிடமுள்ள உணவுப் பொருட்களும் ஒரு வாரத்திற்கு மேல் வராது. தந்திரத்தால் நமது வியாபாரத்தை இலாபகரமாக முடித்துக்கொள்ள வேண்டும்."

"அப்படியென்றால் அடிபணியப் போகிறீர்களா?"

"வியாபாரத்தில் விட்டுக் கொடுப்பது பணிந்துபோவதல்லடா, முட்டாள்! அதிகமாய் வாதிடாதே. போ, உன்னுடைய இடத்திற்கு. அதோ வருகின்றதே படகு, அதில் வரும் பாண்டிய வீரர்களுக்கு முதலில் மறுமொழி கூறு." - கலபதி சீறினான். அவன் சுட்டிக் காட்டிய திசையில் படகுகள் வந்து கொண்டிருந்தன.

அப்படகுகளில் வந்த பாண்டிய வீரர்கள், சோனகர் மரக்கலங்களை நெருங்கியவுடன், படகிலிருந்த பாண்டியக் கடற்படைத் தலைவர், கலபதியைக் கீழே இறங்கி வருமாறு கட்டளையிட்டார்.

கலபதி மௌனமாக நூலேணியின் வழியே இறங்கினான்.

நக்கம்புள்ளன் எதிரே நின்ற கலபதி சோர்ந்து காணப்படாததால் உறுதியுடனிருப்பது தெரிந்தது.

நக்கம்புள்ளனின் திறமையைப் பாண்டிய மன்னர் ஸ்ரீவல்லபன் பாராட்டினார். என்றாலும், "வழிமறித்துக் குதிரையைக் கொள்ளையிட்டோம் என்ற பெயர் நமக்கு வரக்கூடாது. உடனே குதிரைகளுக்குரிய விலையைக் கொடுத்து விடுவோம்" என்றார் மன்னர்.

"கொடுத்துவிடலாம். இப்போதுள்ள நிலைமையில் குதிரைகளுக்குரிய விலை முழுமையையும் கொடுத்து விட்டால் நமது நிதிநிலைமை மிகவும் பாதிக்கப்படும்" என்றார் புள்ளன்.

"நமது கருவூலம் அவ்வளவு வறண்டுவிட்டதா?"

"வறட்சி என்று சொல்லமுடியாது. ஒரே நாளில் செலவிட்டு விடுவது இந்தச் சூழ்நிலையில் நம்மை மிகவும் பாதிக்கும் என்பது என் கருத்து."

"எப்படி?"

"உடனே நாம் வடக்கு நோக்கிப் படையெடுக்கப் போகிறோம். நமது திட்டம் மகத்தானது. நமது படைகள் ஒரே சமயத்தில் காவிரியைக் கடக்கப் போவதில்லை."

"ஆமாம், நாம் பேசி முடிவு செய்த திட்டம்தானே?"

"நமது படைகள் பாடியிறங்கி இருக்கும்போது, அவர்களுக்கு உணவு தேவை. அதற்கான நிதியை நாம் வைத்துக்கொள்ள வேண்டும்."

''ஒரே மூச்சில் காவிரியைத் தாண்டி மண்ணியாற்றங்கரைக்குச் சென்று, அங்கிருந்து தஞ்சைக்குச் சென்றுவிட்டால்?''

''மன்னர் பிரானே! அவ்வளவு எளிதன்று. பல்லவர்களுக்குப் படையெடுப்புச் செய்தி செல்லாமல் தடுத்து நிறுத்த வழி வகுத்துள்ளேன். மேற்கே கங்கர்களிடமிருந்து தாக்குதல் வந்தால்? சோழர்களும் சேர்ந்து கொண்டால்? அதனால் நமது படைகளை ஒரே சமயத்தில் நடத்திச் செல்ல வேண்டாம். மண்ணியாற்றங்கரை மாளிகையை அடைவோம். நந்திபுரத்துக் கோட்டையைத் தாக்குவோம். பிறகு திட்டங்களைப் பரிசீலனை செய்து கொள்வோம்'' என்று நக்கம்புள்ளன் கூறியதை ஸ்ரீவல்லபன் ஏற்றார்.

ஆனால், அடுத்து அவர்களுக்குக் கிடைத்த செய்தி நக்கம்புள்ளனையும் பாண்டிய மன்னரையும் மீண்டும் சிந்திக்க வைத்தது.

எயினன் சோழர்களிடம் சிக்குண்டு விட்டான் என்ற செய்தி கேட்டு முதலில் அதிர்ச்சியடைந்தவர் புள்ளன்தான்.

''நான் கூறியது சரியாகிவிட்டது. பார்த்தீர்களா புள்ளரே! எயினன் எதிரிகளிடம் சிக்கிவிட்டான்'' என்றார் மன்னர்.

புள்ளன் மௌனமாயிருந்தார். பிறகு, ''எயினன் அதிக நாள் தஞ்சைச் சிறையிலிருக்க மாட்டான். எப்படியாவது தப்பி வந்து விடுவான். நாம் முடிவெடுத்தபடி நாள் பார்த்துப் படைகளை நடத்திச் செல்வோம். எயினன் நம்முடன் வந்து சேர்ந்துகொள்வான்'' என்றார்.

''தஞ்சைப் பகுதி நிலவரம் அறியாமல் நாம் நுழைவது சரியல்ல, புள்ளரே! யோசித்துச் செயல்படுங்கள்'' என்றார் மன்னர்.

8

பைரவி மெல்ல அடி மேல் அடியெடுத்து வைத்துத் தொழுவத்திற்குள் நுழைந்தாள். எயினன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் உடல்நிலை பரிபூரணமாகக் குணமாகியிருந்தது.

அங்கிருந்து எப்படித் தப்பிச் செல்வது என்ற சிந்தனை அவனுக்கு, கவலை என்றும் கூறலாம். பைரவியின் விழிகளை விட்டகல முடியாத நிலை ஏற்பட்டு விடுமோ என்ற கவலை அவனுக்கு ஏற்பட்டது. உடை வாளை மெல்லத் தொட்டுப் பார்த்தான். 'விழிகளை இந்த வாள் வென்று விடக்கூடிய சக்தி பெற்றிருக்கிறது. வாளே நீ வாழி' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

காதல் வலையில் சிக்குவதற்கு அங்கே வரவில்லை என்பது அவனுக்குத் தெரியும். பைரவியின் இசையில் மயங்குவது போலவும், அவளுடைய பேச்சில் மயங்குவது போலவும் நடித்து, இங்கிருந்து தப்பிச் செல்ல வழி கேட்டறிவோம் என்ற முடிவுக்கு வந்தான்.

நிழலாடியது கண்டு திடுக்கிட்டுத் திரும்பினான். பைரவி புன் முறுவலுடன் நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு சிறு மூட்டை இருந்தது.

''யாழை இப்படி மூடி மறைத்து எடுத்து வர முடியாதே?'' என்று எயினன் கேட்டான்.

''எப்பொழுதும் யாழுடனேயே சுற்றி அலைய முடியுமா?'' பைரவி அவனருகே அமர்ந்தாள்.

''யாழ்ப்பாணர் மகள் யாழுடன் அலைவதில் என்ன அதிசயம்?'' எயினன் அவள் விழிகளை நோக்கினான்.

''யாழ் மீது தங்களுக்கு மிகவும் பிரியமோ?'' பைரவி மெல்ல நகைத்தாள்.

''யாழ் மீதும், யாழுக்கு உடையவர் மீதும்!'' என்று எயினன் கூறியது பைரவியின் முகத்தில் புதிய மலர்ச்சியை ஏற்படுத்தியது. புகழ்ச்சியில் மயங்கினாள்.

''அப்படியா? இதோ யாழெடுத்து வருகிறேன்'' என்று எழ முயன்றவளின் கரத்தைப் பிடித்திழுத்து எழாமல் தடுத்தான் எயினன்.

பைரவியின் உடல் சிலிர்த்தது. ஆடவருடன் பழகுவதோ, அவர்களிடையே சமமாக அமர்ந்து உரையாடுவதோ அவளுக்குப் புதிதல்ல. ஆனால், அப்படி எதிர்பாராதவிதமாக வீர வாலிபனின் ஸ்பரிசம் அவள் உடலில் பட்டது இதுவே முதல் தடவை.

அவள் உடல் குலுங்கியது. நாணம் மெய்யெங்கும் பரவிச் சிலிர்க்க வைத்தது. முகம் சிவந்தது. கருமையில் செம்மை தனிச்சோபையுடன் திகழ்ந்தது. அவள் அதை எதிர்பார்க்கவில்லை. அப்படியே உட்கார்ந்திருப்பதா, எழுந்து செல்வதா என்று அவளுக்குத் தோன்றவில்லை. நாணம் மாறி, ஒரு வித அச்சம் முகத்தில் பரவியது.

''ஏன், பயந்துவிட்டாயா?'' - எயினன் கேட்டான், அவள் முக மாற்றத்தை நொடியில் புரிந்துகொண்டு.

''நான் ஏன் பயப்பட வேண்டும்?'' என்றாள் பைரவி, சிரிக்க முயன்றவாறு.

எயினனின் நெற்றிக்காயம் பூரணமாக ஆறியிருந்தது. கொண்டு வந்திருந்த மூட்டையை பைரவி மெல்ல அவிழ்த்தாள். அதில் புதிய உடைகள் இருந்தன. உணவும் இருந்தது.

''பசியுடனிருப்பீர்கள். முதலில் ஆகாரம். அப்புறம்தான் பேச்சு'' என்றாள் பைரவி.

எயினன் பார்வை உடைகளின் மீதிருந்தது. இதை அணிந்து கொண்டு எளிதில் தப்பிவிடலாம். பைரவியின் உதவி மட்டுமிருந்து விட்டால்...

''பைரவி! உனக்கு எப்படி நன்றி கூறுவது என்றே தெரியவில்லை. அழுக்குப் படிந்திருக்கும் உடையை எப்போது களைந்து எறிவோம் என்று துடித்துக் கொண்டிருந்தேன்'' என்றான்.

''இவ்வளவு நாள்களாக மாற்றுடையில்லாமல் என்ன செய்தீர்கள்....?'' - பைரவி கேட்டாள்.

''வேறு வழியில்லை. இப்படிச் சுலபமாகச் சிக்கிக் கொள்வோம் என்று நினைக்கவில்லை. நல்ல வேளையாகத் தப்பினேன். மீண்டும் அகப்பட்டுக் கொள்ளாமல் நீ காப்பாற்றினாய். அதற்கு நன்றி தெரிவிக்கிறேன். மற்றொரு நன்றியும் பாக்கி இருக்கிறது'' என்று கூறி, பைரவியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

''சொல்லுங்கள்...'' - பைரவி கேட்டாள்.

''சொல்கிறேன். நன்றி கூறும் வகையில் உதவி செய்யவேண்டும்.'' எயினன் குழைந்தான்.

''உதவியா? என்னால் ஆகக் கூடியது என்னவோ?''

''இன்றோ, நாளையோ நான் இங்கிருந்து புறப்பட வேண்டும்.''

பைரவி உடனே மறுமொழி கூறவில்லை. எயினனைத் தேடுகிறார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

''என்ன, பேச்சையே காணோம்...?''

''தங்களைத் தேடுகிறார்கள். நீங்கள் மதுரைக்குச் சென்றுதானாக வேண்டுமா? இங்கேயே தங்கி இருக்கக்கூடாதா?'' - பைரவி கேட்டாள்.

''என்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்ற வேண்டும். என் பிறந்த நாட்டிற்கு நான் துரோகம் செய்யலாமா?''

''பிறந்த நாடா? எது பிறந்த நாடு?''

''பாண்டிய நாடு.''

''எல்லா ஊரும் எங்களுடைய ஊர் என்ற உங்களுடைய கொள்கை என்னவாகியது?''

''அந்தக் கொள்கை ஏட்டளவில்தான். பாண்டிய நாட்டவர்கள் அதைக் கடைப்பிடித்தால், நாட்டை இழந்து விட்டோட வேண்டியது தான்!''

''பாண்டிய நாட்டைப் பாண்டிய மன்னர்தானே ஆளுகிறார்? சோழ நாட்டைப் போல தங்கள் நாட்டை இழந்து கையகல நாட்டின் அரசராக விளங்கவில்லையே...?''

''பாண்டியநாடு காஞ்சி வரை பரவியிருந்தது. பல்லவர்கள் அதைக் கைப்பற்றிக் கொண்டனர். மீண்டும் அடைய வேண்டும் என்பது எங்கள் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்ற உறுதி பூண்டிருக்கிறேன் நான். நாட்டு நிலைமை அறிய சோழ நாட்டிற்கு வந்தேன். படையெடுப்பிற்கு முன்பு நிலைமையை அறிய வேண்டாமா?''

''எனக்குப் போர் என்றாலே பிடிக்கவில்லை.''

''சொல்கிறாயே தவிர, உன் உள்ளத்திற்குள் உன் பிறந்த நாடான சோழநாட்டின் மீதுதான் பற்று! எனக்குத் தெரியாதா...?''

''இல்லை, இல்லவே இல்லை. எனக்கு இந்தத் தமிழ் மண் முழுவதும் பற்று; பாசம். என் உயிரே யாழ் மீட்டுவது. என் தந்தையைப் போல ஊரெங்கும், நாடெங்கும் சுற்றி அரசர் அவையில், வள்ளல் முன்னிலையில் பாடவேண்டும் என்பதே...''

''எங்கள் பாண்டிய நாட்டிற்கு வருகிறாயா?''

''ஆகா, வருகிறேன்! உங்கள் மாமன்னரைச் சந்திக்கிறேன். அவரைக் கேட்கிறேன், ஏன் போர் வெறிபிடித்து அலைகிறீர்கள் என்று...''

''என்னுடனேயே வந்து விடுகிறாயா? நீயும் நானும் சேர்ந்து தப்பி விடலாம்...''

''நான் எங்கிருந்து தப்பவேண்டும்? யார் சிறையில் நான் வாடுகிறேன்?''

''சரி. நான் தப்பிச் செல்ல வேண்டாமா? சோழர்களிடம் மீண்டும் அகப்பட்டுக் கொள்ளச் சொல்கிறாயா?''

''பாண்டிய ஒற்றராக இனிப் பணி செய்ய மாட்டேன் என்று உறுதி கூறுங்கள். நாளையே சோழ மன்னரிடம் சென்று உங்களைப் பொறுத்தருளு மாறு வேண்டுகிறேன். நீங்கள் இங்கேயே தங்கி விடலாம்.''

''நான் இங்கே தங்கி என்ன செய்வது?''

''உங்களுக்கு நன்றாகப் பாட வருகிறது. நான் யாழ் மீட்டுவேன். நீங்கள் பாடலாம்...''

''நான் பாட, நீ யாழ் மீட்ட இதுதான் வாழ்க்கையா?''

''வேறு என்ன வாழ்க்கை வேண்டும்? கானமிசைத்து வானம்பாடியைப் போல் காலங்கழிப்போம்.''

''பறவைகளுக்குக் குடும்பம் என்பது கிடையாது. நாமும் அப்படியே இருக்க முடியுமா?''

''இருந்தால் என்ன?''

பைரவி இவ்வாறு கூறியவுடன், எயினன் அவளையே உற்று நோக்கினான். பிறகு அவள் அருகே நெருங்கி, ''பைரவி! பறவைகள் குடும்பம் நடத்துகின்றன தெரியுமா? ஒன்றை ஒன்று நேசிக்கின்றன; குஞ்சுகளைப் பெறுகின்றன, தெரியுமா?''

''தெரியுமே!'' பைரவியிடம் எந்தவித மாறுதலும் இல்லை. எயினனுக்கு அதற்கு மேல் பேச்சைத் தொடரத் தயக்கமாயிருந்தது.

''பைரவி! நான் இங்கே தங்கமுடியாது. அப்படிச் செய்தால் என்னைத் துரோகி என்பார்கள். என்னை இந்த மண்ணிலேயே வெட்டிப்புதைத்து விடுவார்கள். இங்கே இருந்தாலும் ஆபத்து பைரவி! இன்னும் சிறிது நேரம் என்னை வற்புறுத்தினால் நான் மனம் மாறிவிடுவேன். உன் விழிகளுக்கு நான் அடிமையாகிவிடுவேன். இங்கிருந்து தப்பிச் செல்ல வழி வகுத்துவிடு. பிறகு, நான் மதுரை சென்று படை வீரர்களுடன் வருவேன். மண்ணியாற்றங்கரையின்

மாளிகை பாண்டியர்களின் மாளிகை. பல்லவனை முறியடிப்போம். பல்லவர்க்கு உதவ வரும் சோழர்களைத் துவம்சம் செய்து தஞ்சையையும் கைப்பற்றுவோம். மண்ணியாற்றங்கரை மாளிகையில் உன்னைச் சந்திக்கிறேன். அதுவரை எனக்காகக் காத்திருப்பாயா?''

எயினன் கூறியது கேட்ட பைரவி, சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு, ''சரி, சிந்திக்க எனக்கு நேரம் கொடுங்கள். முதலில் பசியாறுங்கள். புத்துடை அணியுங்கள். நான் வெளியே சென்று மீண்டும் மாலையில் வருகிறேன்'' என்றாள். அவள் மனம் கடுமையான சிந்தனையில் ஈடுபட்டிருந்தது.

பைரவி சென்றவுடன் தொழுவத்தின் மறைவிலிருந்த பொன்னருவி வெளியே வந்தாள். பைரவியும் எயினனும் பேசிக் கொண்டிருந்தது முழுவதையும் கேட்டுக்கொண்டிருந்த அவள் ஒரு முடிவுக்கு வந்தவளைப் போல் தொழுவத்திற்குள் நுழைந்தாள்.

எயினன் மாற்று உடையை அணிய முயன்று கொண்டிருப் பதைக் கண்டு நாணமுற்று, அவள் பரபரப்புடன் வெளியே வந்தாள். உடையணிந்த எயினன் யாரோ வந்து செல்கிறார்களே என்ற கவலையுடன் என்ன செய்வது என்று புரியாமல் நின்று கொண்டிருந்தான். மீண்டும் பொன்னருவி உள்ளே நுழைந்தாள்.

''வரலாமா?'' என்று கேட்டுக்கொண்டே வந்த பொன்னருவியைப் பார்த்த எயினன் மேலும் பிரமித்தான். 'பாடினி பைரவியின் அழகு நம்மை மயக்குகிறது என்றால் அதைவிட இவளழகு நம்மைச் சுண்டி இழுத்துவிடும் போலிருக்கிறது' என்ற எண்ணம் அவனுக்குக் கவலையாகவும் மாறியது. பொன்னருவி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.''

''பைரவி என்னுடைய உயிர்த்தோழி. அவளிடம் நான் யாழ் பயில்கிறேன். உங்களுடைய வேலை நிமித்தமாக அவள் வெளியே சென்று கொண்டிருக் கிறாள்...'' என்று தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தவளை இடைமறித்து, ''ஆமாம், ஆமாம். நான்தான் அனுப்பினேன். பைரவியின் தோழிகள் அனைவரும் அவளைப் போல் அழகாகவே இருக்கிறார்கள்!'' என்று கூறிக் குறும்புடன் அவளை நோக்கினான்.

''பைரவிக்கு நான் ஒருத்திதான் உயிர்த் தோழி. அவளுக்குத் தோழி அமைவது கஷ்டம். அவள் வீட்டில் எங்கே தங்கியிருக்கிறாள்? தந்தையின் கடமையைத்தான் செய்கிறாள். எங்கும் செல்வாள்'' என்றாள் பொன்னருவி.

''நீயும் யாழ் கற்றுக்கொண்டு பாடினியாகப் போகிறாயா?'' - எயினன் கேட்டான்.

பொன்னருவி தலையசைத்தாள். ''இல்லை. இல்லை... ஆடவர் களிடையே பழகும் திறமை எனக்கில்லை. நாணம் என்னுடன் பிறந்தது.''

''நியாயம்தானே? பெண்களுக்குரியது நாணம். அதுவே கவசம்; அதுவே ஆயுதமும் கூட'' என்றான் எயினன்.

எயினனுடன் மிகவும் கவனமாகப் பேச வேண்டும்' என்று முடிவு செய்தாள் பொன்னருவி.

தரையில் உணவுப் பாத்திரம் இருப்பதைக் கண்ட பொன்னருவி, ''அடடா, இன்னும் நீங்கள் ஆகாரம் உட்கொள்ளவில்லை போலிருக்கிறதே! பசித்தோரைப் பார்த்திருப்பது தவறு. பைரவி மிக முக்கியமான செய்தியைச் சொல்லுமாறு சொன்னாள். உச்சிப் பொழுதில் நீங்கள் இங்கிருந்து தப்பிச் செல்லலாம். வெளியே மஞ்சள் அங்கி அணிந்தவர் ஒருவர் முருங்கை மர நிழலிலிருப்பார். தங்களைப் பார்த்தவுடன் அவர் மெல்ல நகைப்பார். அவருடன் தாங்கள் விரைந்து செலலலாம். அவர் குதிரையொன்று அளிப்பார். அதில் ஏறி...'' என்று பொன்னருவி கூறியபோது, ''பைரவி அதற்குள் வரமாட்டாளா?'' என்று எயினன் கவலையுடன் கேட்டான்.

''வருவாள்; வருவாள். ஒருவேளை வர நேரமானால் தாங்கள் தாமதிக்க வேண்டாம். விரைவாக உணவருந்திப் புறப்பட ஆயத்தமாகுங்கள். ஒருவேளை சோழநாட்டு வீரர்கள் இங்கே வரலாம். அதற்குள் புறப்படுவது நல்லது'' என்றாள் பொன்னருவி.

எயினன் பொன்னருவியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். அவள் முகத்தில் இயற்கையாக உள்ள எழிலை மஞ்சள் பூசி நீராடி வந்திருந்ததால் ஏற்பட்ட பளபளப்பு அதிகமாக்கியது.

பைரவியின் விழிகளில் பரந்த மனப்பான்மை. இவள் விழிகளில் கபடமும் திறமையும் மின்னின. பரந்த மனப்பான்மையுடையவர் களுக்கு இப்படி ஒரு தோழி தேவைதான்.

''பைரவியின் தோழி! உன் பெயரைக் கேட்கவில்லையே நான்! இன்னும் சிறிது நேரத்தில் நான் இங்கிருந்து வெளியேறப் போகிறேன். உன் பெயர் கூறி அழைக்க இப்போது நேரமிருக்காது. என்றாலும் நான் சில நாள்களில் திரும்பி வருவேன். அப்போது தேவை யல்லவா?'' என்று எயினன் கேட்டான்.

''திரும்பி வருவீர்களா? இங்கிருந்து தப்பிச் செல்வதே பெரும் பாடாக இருக்கும்போது, மீண்டும் வருவது சோழப் படைகளிடம் அகப்பட்டுக் கொள்வதற்கா?'' என்று பொன்னருவி அவன் விழிகளை நேருக்கு நேர் சந்தித்தவாறு கேட்டாள்.

எயினன் மெல்ல நகைத்தான். பெரிதாக ஆர்ப்பாட்டமாகச் சிரிக்க வேண்டும் எனத் தோன்றியது.

''பெண்ணே, பைரவியின் தோழியே! நான் மீண்டும் வரும் போது சோழப் படைகளிடம் அகப்பட்டுக்கொள்ள வரமாட்டேன். தேர்ப்படைகள், கரிப் படைகள், பரிப் படைகள் சூழப் பாண்டியர் படைகளுடன் வருவார்கள். உருவிய வாளுடன் நான் வருவேன். சோழர் படைகள் எதிர்க்காமல் இருந்தால் மிகுந்த புத்திசாலித்தனம். எதிர்த்தாலோ நிர்மூலமாகி இருந்த இடம் தெரியாமல் போய்விடுவார்கள். அதனால் நான் இப்போது தப்பிச் செல்வது மீண்டும்

கம்பீரமாக வரவே! மண்ணியாற்றங்கரை மாளிகையில் நான் கம்பீரமாகத் தங்குவேன். இந்தப் பகுதியின் தலைவனாக என்னை ஆக்கி விடுவார்கள். அப்போது உன்னை அழைக்க வேண்டி நேரலாம். உன் பெயரை அறிந்துகொள்ள வேண்டாமா?'' என்று எயினன் மார் நிமிர்த்திப் பேசினான். மளமளவென்று உணவுக் கிண்ணம் காலியாகிக் கொண்டிருந்தது.

திடீரென்று அவனுக்கு விக்கல் ஏற்பட்டது. தண்ணீர் வேண்டுமென்று சைகை செய்தான். பொன்னருவி குடிலின் உள்ளே ஓடினாள். ஒரு செம்பில் நீர் கொணர்ந்தாள்.

''பெண்ணே!'' என்றான் எயினன்.

''என் பெயர் குறிஞ்சி!'' பொன்னருவி பொய் சொல்லுமாறு நேர்ந்தது, அவசியம் காரணமாக.

''ஆகா, எல்லாம் பண்ணோடு பொருந்திய பெயர்கள்! குறிஞ்சி! எனக்கு ஓர் உதவி செய்வாயா?''

''தங்களுக்கு உதவி செய்யவே என்னை என் தோழி அனுப்பியுள்ளாள். அவள் கூறியபடி உதவி செய்வேன். ஆனால் அவளுக்குத் துரோகமிழைக்க மாட்டேன்.''

''அப்படியென்றால்?...''

''அவளிடத்தை நான் கைப்பற்றிவிட மாட்டேன். மண்ணியாற்றங்கரை மாளிகையில் உரிமையுடன் நீங்கள் பைரவியை அழைத்துச் சரியான இடமளிப்பதை நான் கவர்ந்து கொள்ள மாட்டேன்'' என்று பொன்னருவி கூறியவுடன், எயினன் வாய் விட்டே நகைத்தான். ''குறிஞ்சி! உன் வடிவழகும் சொல்லழகும் போட்டி போடுகின்றன. நீ கூறுவதைப் பார்த்தால் பைரவிக்கு...''

''ஆமாம். பைரவிக்குக் காதல் மலர் விரிந்து மணம் வீசத் தொடங்குகிறது. அதனால்தான் அவள் தங்களுக்கு உதவ முன்வருகிறாள். என்னையும் உதவுமாறு கேட்டுக் கொண்டாள். உம்... உம்... நீங்கள் பேசிக்கொண்டே யிருந்தால் நானும் பேசிக் கொண்டேயிருப்பேன். உங்கள் பேச்சில் உள்ள கவர்ச்சி வாளைவிடப் பலமானது... அதில் நான் மயங்கிவிட்டால் எங்கள் இருவரிடையே பிணக்கு ஏற்படும். கடைசியில் தாங்கள் ஒருவருக்கும் கிடைக்காமல் போய்விடுவீர்கள்.''

''அதெப்படி? நான் விரும்பும் ஒருத்தியை அடைவதை யாரால் தடுக்க முடியும்?''

''ஒரே ஒருவரால்தான்! இளவரசர் ஆதித்த சோழரால்! எங்களுக்குள் ஏற்படும் பொறாமையால், நீங்கள் தப்பிச் செல்வதைத் தடுத்துவிடுவோம். இளவரசர் உங்களைச் சிறையிலடைத்துவிடுவார். எதிரி நாட்டு ஒற்றர்களுக்கு என்ன தண்டனை என்பது தங்களுக்குத் தெரியும். எங்களிடம் ஏற்படும் பூசலால் நாங்கள் தங்களைக் காட்டிக் கொடுத்து எங்களில் ஒருவரும் அடையாமல் போவதைவிட...''

பொன்னருவியின் பேச்சில் மயங்கி விடக் கூடாது என்று எயினன் நினைத்தாலும் முடியவில்லை. பைரவிக்கு ஏற்பட்ட காதலை உணர்ந்து, இவள் தன்னுள் ஏறபடும் காதலைக் கருக்கிக்கொள்ள முயல்கிறாள்.... பாவம்!... நம்மிடம் இவளுக்கு ஏற்பட்டுள்ள காதலை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோம் எணறு எண்ணிய எயினன், ''குறிஞ்சி! உனது ஒளிவு மறைவில்லாத பேச்சால் உன் மீதுள்ள மதிப்பு எனக்கு அதிகமாகிறது. எனக்கோர் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டேனே, அதை நீ நிறைவேற்ற வேண்டும்!'' என்று கேட்டுக்கொண்டான்.

''சொல்லுங்கள். செய்யக் காத்திருக்கிறேன்'' என்றாள் பொன்னருவி.

''எனக்கு எழுத்தாணியும், ஓலை நறுக்கு ஒன்றும் வேண்டும்.''

''இவ்வளவுதானா? இது ஒரு பெரிய உதவியா?''

''உம், மேலும் சொல்கிறேன் கேள்; நான் எழுதிக் கொடுக்கும் ஓலையைக் காஞ்சிமா நகருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.''

''காஞ்சிக்கா? பல்லவர் தலைநகரமல்லவா அது?''

''ஆமாம். அங்கே நான் குறிப்பிடும் ஒருவரிடம் அதைக் கொடுக்க வேண்டும்.''

''ஐயோ! பாண்டிய நாட்டு ஒற்றர் தரும் ஓலையைக் காஞ்சிக்குக் கொண்டு சென்றால், பல்லவ அரசர் சும்மாயிருப்பாரா?''

''பயப்படாதே, குறிஞ்சி! ஓலையைப் படித்தவுடன் பாராட்டுதல் கிடைக்கும்.''

''பாண்டியர்களின் ஓலையைப் படிப்பவர்கள் பாராட்டுவார்களா? விசித்திரமாயிருக்கிறதே?....''

''விசித்திரம் இல்லை; சித்திரமிருக்கிறது. அபராஜிதப் பல்லவனுக்குச் சித்திரக்காரர்கள் தேவையாம். சிற்பியும், சித்திரக்காரரும் மதுரையிலிருந்து காஞ்சி செல்கிறார்கள். அதைத் தெரிவிப்பதே இந்த ஓலை. ஆனால் மிக இரகசியமாக நான் குறிப்பிடுபவரிடம் மட்டுமே இதைக் கொடுக்க வேண்டும்.'' எயினன் பேச்சைக் கேட்டு பொன்னருவியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் பிரதிபலிக்கவில்லை.

''பயமாயிருக்கிறதா?...'' - எயினன் கேட்டான்.

''பயமென்ன? பல்லவ நாட்டவர்கள் எங்களுக்கும் விரோதிகள். எங்கள் நாட்டைக் கவர்ந்தவர்கள். அவர்களைக் கண்டால் ஆத்திரம்தான். பயமென்ன?''

''அப்படியென்றால் நானும் சோழ நாட்டவருக்கு விரோதி தானே? என்னிடம் மட்டும்...''

எயினன் இவ்வாறு கூறியவுடன், பொன்னருவி மிக நாணமுற்றவள் போல் தலையைத் தாழ்த்திக் கொண்டு, ''அங்குதான் விழிகளை வாள் வென்று விடுகிறது...'' என்றாள்.

''ஒப்புக்கொள்ளவே மாட்டேன். விழிகளை வாள் வென்றதாகச் சரித்திரமே இல்லை. நான்கு விழிகள் என்னை அடிமைப்படுத்த முயல்கின்றன'' என்று கூறிய எயினன் பொன்னருவியின் உள்ளத்தை ஆராய்பவன் போல் கூர்ந்து நோக்கினான்.

''இப்படியே நாம் பேசிக்கொண்டிருந்தால் உச்சிப்பொழுது தாண்டிவிடும். பைரவி என்னைக் கோபிப்பாள். கோபம் பொறாமையாக மாறலாம். கோபத்தீயைத் தாங்கலாம். பொறாமைத் தணலைத் தாங்க முடியாது. நான் ஏடும் எழுத்தாணியும் கொண்டு வருகிறேன். நீங்கள் எழுதிக் கொடுத்துவிட்டுப் புறப்பட ஆயத்தமாகுங்கள்'' என்று கூறிய பொன்னருவி, மீண்டும் குடிலுக்குள் சென்று ஓலையும் எழுத்தாணியும் கொணர்ந்தாள்.

எயினன் எழுதினான். பொன்னருவியை மிகவும் நம்பிக்கை யானவளாகக் கொண்டு எழுதினான். பல்லவர்கள் படை எக்காரணம் கொண்டும் காஞ்சியை விட்டுப் புறப்படாமலிருக்கும் விதத்தில் திட்டங்களை வகுக்கக் காஞ்சியிலுள்ள பாண்டிய நாட்டு ஒற்றனுக்கு எழுதினான்.

ஓலையைப் பெற்ற பொன்னருவி, ''இது எந்த மொழி? தமிழில் எழுத வில்லை போலிருக்கிறதே!'' என்றாள்.

''ஆமாம். நீ படித்து விடக் கூடாதல்லவா? அதனால்தான் பிராகிருதத்தில் எழுதினேன்.''

பொய்க் கோபம் கொண்ட பொன்னருவி, ''என்மீது நம்பிக்கையில்லா விட்டால் இந்தச் செய்தியை என்னிடம் ஏன் கொடுக்கிறீர்கள்? எந்த மொழியிலிருந்தால் எனக்கென்ன? என் தோழி பைரவிக்காகச் செய்கிறேன். ஓலையை யாரிடம் கொடுப்பது? வழிச் செலவுக்கும் பணம் தாருங்கள்'' என்றாள்.

''பணமா? எல்லாம் சேர்த்துத் தருகிறேன்! பணத்திற்காகவா உதவி செய்கிறாய்?'' என்று எயினன் கேட்டான்.

''நான் பைரவிக்காக உதவி செய்கிறேன். பைரவி தங்களை அடைய உதவி செய்கிறாள். எனக்கு என்ன ஆதாயம்? நாளைக்கு பைரவியும் உங்களுடன் பாண்டிய நாட்டுக்குச் சென்றுவிடலாம். உயிர்த் தோழியை நானும் இழந்துவிடுவேன். உயிர்த் தோழியை அபகரிக்கும் தங்களுக்கு ஏன் உதவி செய்யவேண்டும் என்றுகூட நினைக்கிறேன். ஆனால் தங்களைச் சோழ வீரர்களிடம் சிக்க வைக்காமல் தப்பிச் செல்ல வழி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் செயலாற்றுகிறேன். பைரவிக்குக்கூடத் தெரியாது, தாங்கள் இந்தக் கிராமத்தில்தான் எங்காவது ஒளிந்திருக்க வேண்டும், ஒவ்வொரு வீடாகத் தேட வேண்டும் என்று பேசிக்கொள்கிறார்கள். அதற்குள் நீங்கள் புறப்பட்டுவிட வேண்டுமே என்று கவலையுடன் நான் தங்களைத் துரிதப்படுத்துகிறேன்...'' என்றாள் பொன்னருவி.

காஞ்சியில் யாரிடம் ஓலையைச் சேர்க்க வேண்டும் என்பதைத் தெரிவித்த எயினன், பொன்னருவியை விழுங்கி விடுபவன் போல் பார்த்தான்.

''குறிஞ்சி! பைரவியைவிட நீதான் என் கண்களுக்கு மிக அழகாகத் தோன்றுகிறாய். உங்களிருவரையும் நான் காதலிக்கிறேன். உங்களிருவரையும் மணம் புரிந்துகொள்ளவும் சித்தமாயிருக்கிறேன்'' என்று கூறிப் பொன்னருவியின் கரங்களைச் சட்டென்று பற்றியிழுத்து அணைக்க முயன்றான்.

பொன்னருவி மிக எளிதாக அவனிடமிருந்து விலகி, ''ஐயா, பாண்டிய நாட்டு ஒற்றரே! என்னை விட அழகிகள் இந்தக் கிராமத்தில் உள்ளனர். அவர்கள் அனைவரையும் மணப்பதென்பது முடியாத காரியம். விழிகள் பொல்லாதவை. அவற்றைத் தங்கள் வாள் போன்ற உறுதியால் வெல்ல வேண்டும். உம்... இன்னும் சிறிது நேரத்தில் புறப்பட ஆயத்தமாயிருங்கள். தங்களை அழைத்துச் செல்ல இருப்பவர் வந்து விட்டாரா என்று பார்த்து வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டாள்.

''ஓலை மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இரகசியமாக இருக்க வேண்டும் என்பதை உனக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?'' என்றான் எயினன்.

பொன்னருவி தொழுவத்தை விட்டு வெளியே விரைந்தாள். அவள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் பைரவி அங்கே வந்தாள்.

பொன்னருவி வந்து சென்ற செய்தியைக் கேட்டு அவள் திடுக்கிட்டாள்.

9

இளவரசன் ஆதித்தன் மிகுந்த நம்பிக்கையுடன் தஞ்சையை வந்தடைந்தான். பாண்டியர்களுக்காக வந்த புரவிகளைச் சோனக வணிகர்கள் சோழ நாட்டிற்கு விற்குமாறு செய்துவிட்டோம் என்ற பெருமிதம் அவன் உள்ளத்தில் நிறைந்திருந்தது. குதிரைப் படைகள் அமைக்கக் குதிரைகள் கிடைத்துவிட்டன. இப்போது போதுமான தூசிப் படைகளைச் சேகரிக்க வேண்டும். அதற்கான வழி வகைகளைத் தஞ்சை சென்றவுடன் ஆலோசித்து முடிவு செய்வோம் என்ற சிந்தனையுடன் வந்தவன், தந்தையிடம் சென்றான்.

''குதிரைகள் இன்னும் சில நாள்களில் நாகைத் துறைமுகத்தை வந்தடைந்துவிடும்'' என்று பெருமிதத்துடன் கூறினான் ஆதித்தன். அதற்கான விலையைப் பற்றித் தந்தையிடம் விவரித்த ஆதித்தன், ''இந்தச் செய்திகளை மிகவும் இரகசியமாக வைத்துக்கொள்வதில் தான் நமது வெற்றி இருக்கிறது. தஞ்சையில் பாண்டிய ஒற்றர்கள் ஊடுருவி இருப்பதாக நாகைப்பட்டினத்து வணிகர் சொல்கிறார்'' என்றான்.

விஜயாலயன் தலையசைத்தார். ''நமது வீரர்களிடம் சிக்குண்ட பாண்டிய நாட்டு ஒற்றன் ஒருவனும் சிறையிலிருந்து தப்பி விட்டதாகவும் என்னிடம் ஒற்றர் தலைவர் தெரிவித்தார்'' என்றார்.

ஆதித்தன் துள்ளினான். ஏற்பட்ட சினத்தால் அவனது உடல் நடுங்கியது.

''அரசே! தங்களிடம் இந்தச் செய்தியைச் சொல்வதற்கு ஒற்றர் தலைவருக்குத் துணிவு இருந்ததா?'' என்று சீறினான் ஆதித்தன்.

''அவர் என்ன செய்வார்? நம்மிடையே துரோகிகளும், பலவீனர்களும் இருக்கிறார்கள். அவர்களை முதலில் களைய வேண்டும்'' என்று கூறிய விஜயாலயன், ''மகனே, ஆதித்தா! என் கனவு என் வாழ்நாளில் நிறைவேறும் என்று தோன்றவில்லை. நாகைப்பட்டினமும், திருவாரூரும், தஞ்சையும் மட்டும் கொண்டதா சோழ நாடு? ஆதித்தா! பலமுறை உனக்கு நமது பழம் பெருமையைக் குறித்துச் சொல்லி இருக்கிறேன். வடக்கே காளத்தி வரையில் சோழ நாடு விரிந்திருந்தது! அதை நாம் மீண்டும் அடைய வேண்டும். அதுவே உன் இலட்சியமாக இருக்க வேண்டும்.'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

''அரசே! தங்கள் கனவை நான் அறிவேன். என் இலட்சியமும் அதுதான். அதனால்தான் பெரும் படையைத் திரட்ட முயல்கிறேன். திருக்குடந்தை, நந்தி புரத்துக் கோட்டை, உறையூர் அனைத்தும் பாண்டியர்களிடம் இருக்கின்றன. அவற்றை மீட்க வேண்டிப் பெரும் படைகளைத் திரட்டுகிறேன். குதிரைகள் வந்துவிடும். திருக்கோவலூர் மலையமான் ஒத்துழைத்தால்...'' என்று கூறும்போது, விஜயாலயன் சற்று மெல்லிய குரலில் கூறினார் :

''ஆதித்தா! மிகவும் கவனமாகத் திட்டமிட வேண்டும். உன் பலத்தைப் பாண்டியர்களை எதிர்ப்பதில் செலவு செய்துவிடாதே, தந்திரத்தைக் கையாள வேண்டும். புரிகிறதா?''

ஆதித்தனுக்குப் புரியவில்லை. ''பாண்டியர்களை எதிர்ப்பதில் பலத்தை வீணாக்காதே என்று சொல்கிறீர்களே! பாண்டியர்கள் படையெடுத்து வரப்போகிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டாமா?'' என்று கேட்டான்.

''பாண்டியர்கள் யார் மீது போர் தொடுக்கப் போகிறார்கள்?'' - விஜயாலயன் கேட்டார்.

''யார் மீது என்பதன்று, எந்த இடங்களைப் பிடிக்க வேண்டும் என்பதே இப்போதுள்ள பிரச்னை'' என்றான் ஆதித்தன்.

''எந்த இடங்களை?''

''பாண்டிய மன்னன் மண்ணியலாற்றங்கரை மாளிகையில் வந்து தங்கி, வட திசையில் காஞ்சி வரையில் செல்லப் போகிறானாம்.''

''அவை யாருடைய நாடு?''

''இப்போது பல்லவர்கள் ஆள்கிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் நம்முடைய முன்னோர்களின் நாடு. தொண்டை நாடும், காஞ்சியும் சோழ நாடல்லவா? பல்லவர்கள் நம்மை வென்று தங்கள் ஆட்சியை நிலைநாட்டிக் கொண்டனர். மீண்டும் பாண்டியர்கள் பல்லவர்கள் மீது படையெடுத்து வருவதும், நம்மீது படையெடுப்பதும் ஒன்றே தான். அதனால்தான் பாண்டியர்களைத் தடுத்து நிறுத்தி முறியடிக்க வேண்டும் என்று சொல்கிறேன்.''

ஆதித்தன் இவ்வாறு கூறியதைக் கேட்டு விஜயாலயன் நகைத்தார்.

''மகனே! ஆலோசியாமல் விரைந்து செயல்படுவது மட்டும் வீரமன்று. நாம் பண்டைப் பெருமையை இழந்து நிற்கிறோம். படை பலம் போதா; செல்வமும் கருவூலத்தில் குறைவே. தஞ்சைக் கோட்டையை இன்னும் பலப்படுத்த வேண்டும். பாண்டியர் படைகள் அனுபவம் மிக்கவை. எண்ணிக்கையில் அதிகமானவை. அவர்களை எதிர்த்து நிற்கத் தக்க பலம் தேவை...'' என்றார். 429790/5877349

''அப்படியென்றால் நமது வீரர்கள், பாண்டியர்களை எதிர்க்க சக்தி யற்றவர்கள் என்றா கூறுகிறீர்கள்?'' ஆதித்தன் குரலில் வேதனை மறைந்து நின்றது.

''தனித்தனியே ஒவ்வொரு வீரரும் தோள் வலியும், வாள் வலியும் மிக்கவர்களாயிருக்கலாம். ஆனால் பாண்டியரின் பெரும் படை எதிரே நம் படை எம்மாத்திரம்? பாண்டியர்களிடம் யானைப் படைகளின் எண்ணிக்கை அதிகம். நம்மிடம் யானைப் படைகள் உள்ளனவா?'' - விஜயாலயன் கேட்டார்.

''இல்லை... இருபது யானைகளுக்கு மேல் இல்லை. ஆனால் பழுவேட்டரையர் உறுதி கூறியிருக்கிறார், சேர நாட்டிலிருந்து பல வேழங்களைக் கொண்டு வருவதாக.'' ஆதித்தன் உறுதியான குரலில் கூறினான்.

''இருக்கலாம். பல்லவர்களிடம் எவ்வளவு யானைகள் இருக்கின்றன என்று தெரியுமா?'' விஜயாலயன் கேட்டார்.

''எவ்வளவு என்று எண்ணிக்கை தெரியாது. பலநூறு யானைகள் பல்லவ நாட்டில் பற்பல இடங்களில் உள்ளன. அபராஜிதன் படைகளை ஒழுங்கு படுத்துவதில்லை. அவன் கவனம் போர்க்களங்களில் இல்லை...'' என்றான் ஆதித்தன்.

''அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். எப்படியாவது அபராஜிதன் கவனத்தைப் போர்க்களத்தின் பக்கம் திருப்ப வேண்டும்'' என்றார் விஜயாலயன்.

''அதில் ஆபத்திருக்கிறது அரசே! அபராஜிதன் தனது படை வீரர்களைப் பெருக்காமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அப்போதுதான் நாம் எளிதில் அபராஜிதனை அடக்கி தொண்டை மண்டலத்தைப் பறித்துக்கொள்ள முடியும். அதுவே என் இலட்சியம்'' என்று பெருமிதத்துடன் கூறினான் ஆதித்தன்.

''உன் இலட்சியம் மகத்தானது. ஆனால் இப்போது அடைய முடியாது. அபராஜிதன் படைகளின் எண்ணிக்கை எதிரே நம் படைகளின் எண்ணிக்கை குறைவானதே... எளிதில் உன்னை அபராஜிதன் வென்றுவிடுவான்'' என்றார் விஜயாலயன்.

ஆதித்தனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. அதை வெளிப்படுத்த முடியவில்லை. தந்தை என்ன சொல்கிறார் என்றே அவனுக்குப் புரியவில்லை. ''பாண்டியர் களையும் தாக்கக்கூடாது. பல்லவர் களிடமும் மோதக் கூடாது. என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' - ஆதித்தன் கேட்டான்.

''பாண்டியர்களோடு பல்லவனை மோதவிடு!''

''அதெப்படி முடியும்? நமது நாட்டின்மீதுதானே பாண்டியன் படையெடுக்கிறான்? தஞ்சைக்கு மிக அருகே வந்துவிடுவானே! நந்திபுரத்துக் கோட்டையும் நமது எல்லையும் மிக மிக அருகே இருக்கின்றனவே?''

''நீ அப்படி நினைக்கிறாய். பாண்டியர்கள் திட்டமோ பல்லவர்களிடமிருந்து அந்தக் கோட்டையை மீட்பதுதான். பிறகு தான் தஞ்சையின் பக்கம். தஞ்சையின் போர் பலத்தை அறிய ஒற்றனை அவர்கள் அனுப்பியதும் அதனால்தான்.''

''அந்த ஒற்றனும் தப்பி ஓடிவிட்டான் என்று சொன்னீர்களே?''

''அவனை எப்படியாவது பிடித்துவிட ஏற்பாடு செய். பாண்டியப் படைகளின் ஆபத்து குறித்து காஞ்சிக்குச் செய்தி அனுப்பு.''

விஜயாலயன் இவ்வாறு கூறியவுடன் ஆதித்தன் திகைத்து நின்றான்.

அவனது திகைப்புணர்ச்சியை உணர்ந்த விஜயாலயன், ''ஆதித்தா! கவலைப்படாதே. தக்க சமயத்தில் நமக்கு உதவ நமது விசுவாசிகள் வருவார்கள். அதோ கரபத்ரன் வருகிறார். அவர் சொல்வதைக் கேள்'' என்றார். கை ஒலி எழுப்பி, காவலரைக் கூப்பிட்டு, கரபத்ரனை அங்கு அழைத்து வருமாறு கூறினார்.

கரபத்ரன் மிகுந்த பயபக்தியுடன் கை கட்டி, வாய் பொத்தி வந்து நின்றார்.

''கரபத்ரா! இளவரசரிடம், நீர் கண்டு, கேட்டறிந்தவற்றை விவரமாகக் கூறும்'' என்றார்.

கரபத்ரன் கூறியதைக் கேட்கக் கேட்க ஆதித்தனுக்குச் சினம் மூண்டது.

''பாடினிப் பெண் துரோகியாக மாறிவிட்டாளா? 'பாண்டியன் ஒற்றன்' என்று அறிந்தும் அவள் தன் வீட்டில் அவனுக்கு அடைக்கலம் கொடுத்தாளா? முதலில் அவளைச் சிறை செய்வோம்'' என்று கூவினான் ஆதித்தன்.

விஜயாலயன் தன் மகனைக் கையமர்த்தினார்.

''ஆதித்தா! அவசரப்படாதே. பாடினியைச் சிறை செய்வதில் பலனில்லை. பாண்டிய ஒற்றனை உடனே பிடித்துவிட வேண்டும். கரபத்ரன் அதற்கு ஏற்பாடு செய்து வந்திருக்கிறார். இதற்குள் ஒற்றனைப் பிடித்து நமது வீரர்களிடம் ஒப்படைத்திருப்பார்கள்.''

''பெண்களுக்கு வர வர நாட்டுப்பற்று குறைந்து வருகிறது. இளம் வாலிபனைப் பார்த்தவுடன் மயங்கிவிடுகிறார்கள்'' என்றான் ஆதித்தன்.

விஜயாலயன் மெல்ல நகைத்து, ''ஆதித்தா! எல்லாப் பெண்களும் நாட்டுப் பற்றற்றவர்களாக இருக்கமாட்டார்கள். கரபத்ரன் மகள் பொன்னருவிதான் அந்த ஒற்றனைத் தப்பிச் செல்லாமல் தடுத்துநிறுத்த ஏற்பாடு செய்துள்ளாள். அவள்தான் கரபத்ரனையும் இங்கே அனுப்பியுள்ளாள். கரபத்ரனுக்கு ஏறத்தாழ என் வயதாகிறது. உனக்குத் தெரிந்திருக்காது. போர்க்களங்களில் என்னுடன் இருந்து வீர சாகசம் புரிந்தவர். அவர் மேல்போர்வையை விலக்கினால் அவர் மார்பிலே உள்ள வடுக்களைப் பார்த்தால் புரிந்து கொள்வாய். அவருடைய மகள் நம்நாடு மேலோங்க வேண்டும் என்று துடிக்கிறாள். உன்னைப் போலவே கரபத்ரனும், பாண்டியருடன் மோதத் துடிக்கிறார். ஒரு கரபத்ரன் போதுமா?'' என்று கூறிக் கரபத்ரனை நோக்கினார்.

கரபத்ரன் தொண்டையைக் கனைத்துக்கொண்டார். ''உத்தரவிடுங்கள். நான் ஒருவனே இரண்டு வாள்களையும் இரண்டு கரங்களிலும் ஏந்திச் சுழற்றிப் பல நூறு பகைவர்கள் சிரங்களைக் கொய்வேன். பாண்டியர்கள் படை நமது எல்லையை அடையும் முன்பே நிர்மூலப்படுத்துவோம்'' என்று வீரம் ததும்பப் பேசினார்.

கரபத்ரனின் வீரம் ததும்பும் சொற்களையும், அவருள்ளத்தில் வீர உணர்ச்சி கொந்தளிப்பதையும் ஆதித்தன் உற்று நோக்கியவாறிருந்தான்.

''கரபத்ரா! உம் வீர உணர்வு மங்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். என்னுடைய கனவை நனவாக்க உம்மைப் போன்ற உண்மை வீரர்கள் சிலர் இருந்தாலே போதும். நான் இன்னும் எவ்வளவு காலமிருப்பேன் என்று சொல்ல முடியாது. என் மகனுக்கு நீங்கள் எல்லாம் உறுதுணையாயிருங்கள். என் காலத்திலேயே சோழ வள நாடு இழந்த பெருமையை நிலைநாட்டி உயர்வதைப் பார்த்துவிட்டால் என் உள்ளம் நிறைவுறும். கனவும் நிறைவேறும்'' என்று விஜயாலயன் கூறும்போது, கரபத்ரன் குறுக்கிட்டு, ''மாமன்னர் அவர்களே! தங்கள் கனவு நனவாகும் காலம் வந்துவிட்டது. அதனால் தான் பாண்டியர் படைகள் நமது எல்லையை அடையும் முன்பே தடுத்து முறியடிப்போம் என்று கூறினேன்'' என்று உற்சாகத்துடன் கூறினார்.

ஆதித்தனும் சேர்ந்து கொண்டான். ''ஆம், அரசே! கரபத்ரனும் என்ன சொல்கிறார் பாருங்கள். பாண்டிய ஒற்றனை இந்த நேரத்திற்குள் நமது வீரர்கள் சிறை பிடித்திருப்பார்கள். அவன் மூலமாகப் பாண்டியர் பலம், அவர்கள் திட்டம் அனைத்தையும் அறிவோம். அதற்குள் குதிரைகள் வந்து இறங்கிவிடும். பாண்டியர்களிடம் குதிரைகள் இரா. நாம் பாண்டியர்களை வெல்வோம்'' என்று இளமையும் உற்சாகமும் ததும்பப் பேசினான்.

ஆனால், அவனுடைய திட்டப்படி குதிரைகள் நாகைப் பட்டினத்துக்கு வரவில்லை என்பதும், பாண்டிய ஒற்றன் எயினன் சோழ வீரர்களிடம் சிக்கவில்லை என்பதும் அப்போது ஆதித்தனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை!

10

''நீங்கள் பெரிய தவறு செய்துவிட்டீர்கள். காஞ்சிக்கு அனுப்ப வேண்டிய ஓலையைப் பொன்னருவியிடம் கொடுத்திருக்கக் கூடாது'' என்று சற்றுக் கோபமாகவே எயினனிடம் பேசினாள் பைரவி.

பைரவியின் கோபம் எயினனுக்குப் பிடித்திருந்தது. உரிமையுடன் அவள் நெருங்கி வருவது போல் தோன்றியது.

''உன்னுடைய உயிர்த்தோழி என்று அவளைக் கருதினேன். உன் வீட்டிற்குள் தங்கு தடையின்றிச் செல்லும் உரிமை பெற்றிருப் பதையும் கவனித்தேன். ஏடும் எழுத்தாணியும் அவள்தான் கொடுத்தாள்'' என்றான்.

பைரவி சிறிது நேரம் அவன் விழிகளையே உற்றுநோக்கிய பின்னர், ''அதனால் மிகவும் அந்தரங்கமான செய்தியை அவள் மூலம் அனுப்ப முடிவு செய்துவிட்டீர்கள்! உங்களை ஒற்றராகத் தேர்ந்தெடுத்த பாண்டிய மன்னரின் ராஜ தந்திரத்தை எப்படிப் பாராட்டுவதென்று தெரியவில்லை. என்னிடம் பேசிக் கொண்டிருந்த பொன்னருவி, ஓலையைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்க வில்லை'' என்றாள்.

''மிகவும் இரகசியம் என்று நான் சொன்னதால். அவள் உன்னிடம் கூடத் தெரிவிக்காமலிருக்கலாம். உடனே இங்கிருந்து தப்பிச் செல்லவும் வழி சொன்னாளே! அதுவும் நீ கூறியதாகத் தெரிவித்தாள். அதனால் தான் நான் மாற்றுடை அணிந்து ஆயத்தமாக இருக்கிறேன்'' என்று பொன்னருவி கூறியதனைத்தையும் தெரிவித்தான் எயினன்.

பைரவி திடுக்கிட்டாள். வெளியே ஓடிச் சென்று பார்த்தாள். பொன்னருவி கூறியதுபோல் சூலநாதன் மரத்தின் மறைவில் நின்று கொண்டிருந்தான். ஆகா; பென்னருவி மிகவும் திட்டமிட்டுச் செயலாற்றுகிறாள். எப்படியாவது எயினனைச் சிறைப்படுத்த முடிவு செய்துவிட்டாள். உம்...

''ஏ, பொன்னருவி! நீயும் பெண்; நானும் பெண். யார் வெல்கிறார்கள் என்று பார்ப்போம். இவரைச் சிறைப்படுத்தத் திட்டமிட்டாயா? பார்க்கலாம்; உன் திட்டம் நிறைவேறாது'' என்று பைரவி தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

''யாரிடம் பேசுகிறாய்? பொன்னருவி இருப்பதாக நினைத்துப் பேசுகிறாயா?'' என்று கேட்டான் எயினன்.

''ஐயோ, நீங்கள் பொன்னருவியிடம் நன்றாக ஏமாந்து விட்டீர்கள். நான் வராமலிருந்தால் பொன்னருவியின் பேச்சைக் கேட்டு நம்பி, சோழ வீரர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பீர்கள்...'' என்று பைரவி பதறினாள்.

''ஆமாம்; ஆமாம். நீ வராமலிருந்தால் நான் ஆற்று வெள்ளத்தோடு சென்றிருப்பேன்'' என்று மெல்ல நகைத்தவாறு கூறினான் எயினன்.

''தங்கள் நகைச்சுவை எனக்குப் பிடிக்கவில்லை. தங்களை ஏன் காப்பாற்றினோம் என்று இப்போது வேதனைப்படுகிறேன். தங்களால் என் அருமைத்தோழியிடம் விரோதம் கொண்டுவிட்டேன்'' என்று பைரவி வேதனை நிறைந்த குரலில் கூறினாள்.

''ஏன், இப்போது கூட ஒன்றும் ஆகிவிடவில்லை. என்னை மறந்துவிடு. நீயே என்னைக் காட்டிக் கொடுத்துப் பொன்னருவியிடம் நற்பெயரைப் பெறலாம். நட்பை இழக்க வேண்டாம்'' என்று எயினன் கூறியதும், பைரவி சீறினாள்.

''என்ன சொன்னீர்கள்? என் விழிகளைப் பார்த்துச் சொல்லுங்கள். சோழர்களிடம் சிறைப்படச் சித்தமாக இருக்கிறீர்களா? ஒற்றர்களுக்கு என்ன தண்டனை என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும். மரண தண்டனை. ஆனால் எனக்கு மரண தண்டனையை அவர்கள் நிறைவேற்றுவதற்குள் பாண்டியர் படை வந்துவிடும். அவை தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்துவிடும். ஆயிரமாயிரம் வீரர்கள் தஞ்சைக் கோட்டை மதில் மீதேறிக் குதிப்பர். சிறைக் கோட்டத்தை உடைப்பர். என்னை வெளியேற்றுவர்...'' என்று வீரமும், நகைச்சுவையும் கலந்து பேசினான்.

''வெளியேறியவுடன் என்னைக் காணத் தங்களால் முடியாது'' என்றாள் பைரவி.

''ஏன்?''

''தங்களைச் சிறைப்படுத்தியவுடனேயே நான் உயிரை மாய்த்துக் கொண்டிருப்பேன்!'' என்றாள் பைரவி.

''பைரவி!'' என்று கூவிய எயினன், அவளை அணைத்துக் கொண்டு பைரவியின் விழிகளில் தளும்பிய நீரைத் துடைத்தான்.

பைரவியின் உடல் முழுவதும் சிலிர்த்தது. எயினனிடமிருந்து விடுபட வேண்டும் போல் தோன்றியது. அதே சமயத்தில் அவன் அணைப்பில் காலமெல்லாம் இருக்கவேண்டும் போலும் தோன்றியது. எனினும், மெல்ல அவன் அணைப்பிலிருந்து விடுபட்டு தன் விழிநீரைத் துடைத்துக்கொண்டு, ''சோழர்களிடம் தங்களைச் சிக்கவிட மாட்டேன். இரவோடிரவாகத் தப்பிவிடுங்கள். நடுநிசிக்குப் பிறகு தாங்கள் வந்த வழியே தோட்டத்தின் எல்லையில் ஓடும் ஆற்றில் குதித்து நீந்திச் சென்று எப்படியாவது தப்பிவிடுங்கள்'' என்றாள்.

எயினன் உண்மையிலேயே நெகிழ்ந்து போனான். மற்றொரு முறை அவளை அணைக்க முயன்றான். ஆனால், அதற்குள், குடிலுக்குள்ளேயிருந்து பைரவியை அவள் தாயார் அழைக்கும் குரல் கேட்டது. எயினனை வைக்கோல் போரின் மறைவில் ஒளிந்திருக்கக் கூறிவிட்டுச் சென்றாள்.

பைரவி கூறியது போன்றே, நடுநிசியைத் தாண்டிய பிறகு எயினன், பைரவியிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான். விரைவில் திரும்புவ தாகவும், பாண்டியர் படைகள் எல்லைக்குள் நுழைவதற்கு முன்பே தான் வந்துவிடுவதாகவும், வரும்போது மாறுவேடத்தில் வருவதாகவும் கூறினான். ''மண்ணியாற்றங்கரை மாளிகையில் நீயும் நானும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழப்போகிறோம். எனக்குக் கிடைக்கும் பரிசும், பாராட்டும், வெகுமதியும் உனக்கும் சேரும். பாண்டிய மன்னரிடம் நடந்தவை அனைத்தையும் கூறி, உனக்குப் பல பரிசுகள் வாங்கித் தருவேன். அவற்றைவிடப் பெரிய பரிசு என்னையே நான் உனக்குத் தருவதுதான்'' என்று உணர்ச்சி மிகப் பேசினான்.

எயினன் தப்பிச் சென்ற அந்த இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. புலரும்பொழுது பைரவிக்கு ஆபத்தையும் உடன் கூட்டி வந்தது.

சோழ வீரர்கள் பைரவியின் வீட்டு வாயிற் கதவைத் தட்டினர். தூக்கம் கலையாத நிலையில் கதவைத் திறந்த பைரவியை நோக்கி வீரர்கள், பரபரப்படைந்தனர்.

''எங்கே அந்த ஒற்றன்?'' என்று சீறினர்.

''எந்த ஒற்றன்?'' என்று கேட்டாள் பைரவி.

''ஆ, பெண்ணே! ஒன்றும் தெரியாதவள் போல் அருமையாக நடிக்கிறாய். அவனை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய்?'' என்று கேட்ட வீரர்கள், வீட்டிற்குள்ளே நுழைந்து தேடத் தொடங்கினர்.

சோழ வீரர்களுடன் பொன்னருவியும் வந்திருந்தாள். பைரவி அவளை நோக்கி, ''வேலை விழிகளால் வெல்ல முடியாது'' என்றாள். பொன்னருவி மௌனமாக நின்றுகொண்டிருந்தாள்.

வீடு, மாட்டுத் தொழுவம், பரண், குதிர் என்று ஓரிடமும் விடாமல் தேடிய வீரர்கள், பொன்னருவியை நோக்கிக் 'காணவில்லை' என்று கையை விரித்தனர்.

''பாண்டிய நாட்டு ஒற்றனைப் பிடிக்காமல் தஞ்சைக்குச் சென்றால் இளவரசர் தலையைச் சீவி விடுவார்'' என்று வீரர்கள் அஞ்சினர்.

''ஒற்றன் கிடைக்காவிட்டால், ஒற்றனுக்கு இடம் கொடுத்து மறைத்து வைத்ததற்காக இவளையாவது அழைத்துச் செல்வோம்'' என்று வீரருள் ஒருவன் கடுமையாகக் கூறினான்.

உயிருக்குயிராய் இதுவரை பழகிய பைரவியைக் குற்றவாளியாக்கி, மன்னர் முன் நிறுத்த நேரிடுகிறதே என்ற வேதனை பொன்னருவியின் உள்ளத்தில் ஒரு கணம் பிறந்தது. தாய் நாட்டின் விரோதியான பாண்டியரிடம் தொடர்பு கொள்ளும் ஒரு துரோகியைக் காட்டிக்கொடுப்பது எந்தவிதத்திலும் தவறில்லை என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

❖ ❖ ❖ ❖

விஜயாலயன் எதிரே பைரவி மிகப் பணிவுடன் நின்றாள். ஆனால் அவள் முகத்தில் பயமில்லை. உடலில் நடுக்கமில்லை. ராஜ தண்டனை கிடைத்துவிடப் போகிறதே என்று அஞ்சவில்லை. இளவரசர் வேங்கையைப் போல் அந்தக் கூடத்தில் நடை போட்டார்.

''பாடினியே! நீ புரிந்தது மாபெரும் குற்றம் என்பதை அறிவாயா?'' என்று விஜயாலயன் கேட்டார்.

பைரவி மறுமொழி கூறும் முன்பு ஆதித்தன் சீறினான். ''ஒரு குற்றமா? மூன்று குற்றங்களை இவள் செய்திருக்கிறாள். விசாரணை இன்றியே மரண தண்டனை கொடுத்திருக்க முடியும். பெண்ணைக் கொன்ற பாவம் சேர்ந்து விடப் போகிறதே என்று அஞ்சுகிறேன்.''

''பாடினி! உன் மீது நம்பிக்கை மிகக் கொண்டிருந்தேன். எங்கு செல்வதற்கும் உனக்குத் தடை இருப்பதில்லை. அதை உனக்கு ஏற்றதாகப் பயன்படுத்திக் கொள்ளலாமா?'' மன்னர் குரலில் கடுமை இல்லை. நம்பிக்கை இருந்தது.

பைரவி பதிலிறுக்கவில்லை.

''அரசே! இவள் நெஞ்சழுத்தம் மிக்கவள். பலகாலமாகத் திட்டமிட்டுப் பாண்டிய நாட்டிற்குச் செய்திகளைச் சொல்லியனுப்பி வந்திருக்கிறாள் என்று தோன்றுகிறது'' என்று இளவரசன் கூறியபோது மட்டும் பைரவி குறுக்கிட்டு, ''என்னைப் பொறுத்தருளுங்கள் அரசே! இந்த அபாண்டத்தை நான் மறுக்கிறேன். எனக்கு எதிரி என்றும், ஒற்றர் என்றும், பகைவன் என்றும் பேதமே தெரியாது'' என்றாள்.

''பெண்ணே! நடிக்காதே. உன்னை விசாரிக்கும் நேரமே வீணானது. சிறையிலடைத்து அன்ன ஆகாரமில்லாமல் வாடச் செய்தால் உண்மை வெளிப்படும். இந்தப் பாண்டிய ஒற்றனிடம் நீ என்னென்ன செய்திகளைச் சொல்லி அனுப்பினாய்...?'' என்று ஆதித்தன் கர்ஜித்தான்.

பைரவியின் விழிகள் நீரைச் சிந்தத் தொடங்கின.

''பாண்டிய ஒற்றன் தப்பிச் செல்லப் பொன்னருவியும் வழி வகுத்தவள் என்பது எனக்குத் தெரியும்'' என்றாள் பைரவி.

எதிரே நின்றிருந்த பொன்னருவி, ''இல்லை... இல்லை... அது ஒற்றனைச் சிறைப்படுத்த நான் செய்த தந்திரம் அரசே!'' என்றாள். மேலும், ''இவளும் பாண்டியநாடு செல்லத் திட்டமிட்டிருந்தாள். நல்ல வேளையாக நம் வீரர்கள் தக்க சமயத்தில் வந்துவிட்டனர்'' என்றாள்.

''வீண் பேச்சுக்கு இடமில்லை. இவளை இழுத்துச் செல்லுங்கள்'' என்று கட்டளையிட்டான் ஆதித்தன்.

விழிநீரைத் துடைத்துக்கொண்டே பைரவி விஜயாலயனை நோக்கி, ''மாமன்னர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். தங்களிடம் மட்டும் நான் மிக அந்தரங்கமான சில செய்திகளைக் கூற வேண்டும். அருள்கூர்ந்து அவற்றைக் கேட்டபிறகு என் தண்டனையை நிறைவேற்றுங்கள்'' என்று வேண்டினாள்.

விஜயாலயன் தலையசைத்தார். பைரவி தயங்கினாள். ''தங்களிடம் மட்டுமே'' என்று குழைந்தாள் பைரவி.

''அப்படியே! இளவரசர் உட்பட அனைவரும் சற்று வெளியே செல்லுங்கள்'' என்று கட்டளையிட்டார் மன்னர்.

''இந்தப் பாடினி, மன்னரை மயக்கி விட்டிருக்கிறாள். வயதான காலத்தில் அரசரைத் தன்வயப்படுத்த முயல்கிறாள்'' என்று முணுமுணுத்தான் ஆதித்தன்.

பாடினி, விஜயாலயன் அருகே சென்று மிகவும் பயபக்தியுடன் பேசினாள். நடந்தவற்றைக் கூறினாள். எயினனைக் காப்பாற்றி யதையும், அவனது நெற்றிக் காயத்துக்கு மருந்திட்டதையும் கூறினாள். தொழுவத்தில் தங்க வைத்ததைத் தெரிவித்தாள். பிறகு, அவன் தப்பி ஓட வழி செய்ததையும் தெரிவித்தாள். அதற்கு மேலே அவள் எடுத்துக் கூறிய சிலவற்றைச் சற்றுக் கவனமாகக் கேட்டார் விஜயாலயன்.

''அப்படியா?'' என்று விஜயாலயன் வியப்புடன் பைரவியை நோக்கிக் கேட்டார்.

"ஆமாம், அரசே! என்னை நம்பலாம்" என்று பைரவி நிமிர்ந்த தலையுடன் சொன்னாள்.

"அப்படியே செய்" என்று கூறிய விஜயாலயன், "சரி; 'யாதும் ஊரே' பாடலை இப்போது யாழிசையுடன் பாடிக்காட்டு" என்றார்.

பைரவி யாழை மீட்டினாள். அரசரின் எதிரே பைரவி யாழுடன் கலந்து பாடுவது கேட்டு, அந்தக் கூடத்தின் வெளியே இருந்தவர்கள் திகைத்தனர்.

ஆதித்தன், ஆத்திரம் தாங்காமல் உள்ளே பாய்ந்தான். விஜயாலயன் கையமர்த்தினார். பைரவி பாடி முடித்ததும், "ஆதித்தா! பைரவியின் விருப்பப்படி வெளியூர் செல்ல அவளுக்கு வழிசெய்" என்றார்.

பைரவி கையில் யாழுடன், நிமிர்ந்த நடையுடன் மன்னரின் அறையை விட்டு வெளியே வரும்போது பொன்னருவியைப் பார்த்து, "வேலை விழிகளால் வெல்ல முடியுமா முடியாதா என்பதைப் பார்த்து விடுகிறேன்" என்று மெல்லிய புன்முறுவலுடன் கூறிக்கொண்டே நடந்தாள்.

ஆத்திரம் மிகுந்த ஆதித்தனை விஜயாலயன் கையமர்த்தி, "ஆதித்தா! விட்டுப் பிடிப்பது ராஜதந்திரத்தில் ஒன்று. பாடினியைச் சிறையிலடைப்பதால் பாண்டியர்களை உன்னால் தடுத்துவிட முடியுமா?" என்று கேட்டார்.

"ஏன் முடியாது? இந்த நேரம் நாகைத் துறையில் குதிரைகள் வந்திறங்கி யிருக்கும். ஆயிரம் குதிரைகள் என்றால் சாதாரணமா? பாண்டியர்களைக் காவிரியின் தென் கரையிலேயே, உறையூரிலேயே மோதி நிறுத்தி விடுவோம்" என்று உறுதியாகப் பேசினான் ஆதித்தன்.

விஜயாலயன் நகைத்தார்.

"அரசே! ஏன் நகைக்கிறீர்கள்? என் பேச்சில் நம்பிக்கை இல்லைபோல் ஒலிக்கிறதே தங்கள் சிரிப்பு?"

"ஆதித்தா! மிகவும் அவசரப்படுகிறாய். நாகைப் பட்டினத்தி லிருந்து குதிரைகள் வருவதாகவே வைத்துக் கொள்வோம். குதிரை ஏற்றம் அறிந்த வீரர்கள் ஆயிரம் பேர் இருக்கிறார்களா?" என்று விஜயாலயன் கேட்டார். இப்போது அவர் குரலில் முன்பிருந்த நயம் இல்லை.

ஆதித்தன் உடனே பேசவில்லை.

"ஏன் பேசாது நிற்கிறாய்? போருக்கு ஆயத்தம் செய்வதில் ஒன்று மிக இரகசியமாக நாள்களைக் கடத்த வேண்டும். நம் படை பலத்தைப் பெருக்க வேண்டும்" என்றார்.

ஆதித்தன் மௌனமாகத் தந்தையை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

"பொன்னருவி கூறியதைப் பார்த்தால் பாண்டியர்களின் படை யெடுப்பைக் குறித்த செய்தி காஞ்சியை எட்டாமலே பாண்டிய ஒற்றன் செய்திருப்பான் என்று தோன்றுகிறது" என்றார் விஜயாலயன்.

"அரசே! எயினன் என்னிடம் ஓலையைக் கொடுத்தது உண்மை தான். அந்த ஓலையைக் காஞ்சிக்கு அனுப்பிவிட்டேன்." என்றாள் பொன்னருவி.

"என்ன? காஞ்சிக்கு அனுப்பிவிட்டாயா? என்ன காரியம் செய்தாய்?" என்று ஆதித்தன் சீறினான்.

"என் அத்தானிடம் அந்த ஓலையை அனுப்பினேன். எயினன் முத்திரை மோதிரமும் கொடுத்தான். ஆனால் பாண்டிய இலச்சினை பதித்த முத்திரை மோதிரத்தை நான் அவரிடம் கொடுக்கவில்லை. இதோ இருக்கிறது" என்று பொன்னருவி, பாண்டியரின் கயல் பொறித்த அடையாள மோதிரத்தை இளவரசரிடம் கொடுத்தாள்.

"நேரே காஞ்சிக்குச் சென்று பல்லவ அரசனைச் சந்தித்து, எயினன் கொடுத்த ஓலையைக் கொடுத்து, பாண்டியர்கள் படை எடுப்பைப் பற்றி எச்சரிக்குமாறு என் தந்தை என் அத்தானிடம் கூறியுள்ளார்" என்றாள் பொன்னருவி, பெருமை நிறைந்த விழிகளுடன் இளவரசரை நோக்கியவாறு.

"உன் அத்தானுக்குக் காஞ்சிமாநகரம் பழக்கமானதா?" - இளவரசன் கேட்டான்.

"அவர் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்தானே?" என்றாள் பொன்னருவி.

"அப்படியா? காஞ்சியினின்று அவர் இங்கு ஏன் வந்தார்?" இளவரசன் கேட்டான்.

பொன்னருவி நாணம் மேலிட்டவளாய்த் தலையைக் குனிந்து கொண்டாள்.

"அரசரிடமோ, என்னிடமோ தெரிவிக்காமல் இத்தகைய காரியத்தைச் செய்யலாமா?" ஆதித்தன் சற்றுக் கோபத்துடன் கேட்டான்.

"கூடாதுதான். ஆனால் என் தந்தை மிகவும் அவசரப்பட்டார் போர் மிகவும் அருகேயே வந்துவிட்டதுபோல் பரபரத்தார். பல்லவர்களை எச்சரிக்க வேண்டும் என்று துடிதுடித்தார். அவர் எடுத்த முடிவு சரியானதே என்றே எண்ணுகிறேன். சமூகத்திடம் முன்னரே சொல்லாதது தவறென்றால் பொறுத்தருளுங்கள்" என்று பொன்னருவி குரல் தழுதழுக்கக் கூறினாள். விழிகள் எந்த நொடியிலும் நீரைப் பொழியத் துடித்தன.

"பெண்ணே! கவலைப்பட வேண்டாம்! உன் தந்தை செய்தது சரியே. நான் என்ன செய்திருப்பேனோ அல்லது இப்போது என்ன செய்ய நினைத்திருக்கிறேனோ, அதைத் தான் உன் தந்தை செய்தார். இந்தப் போர் சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும் நடைபெறப் போகும் போரன்று" என்று கூறி விஜயாலயன் சிறிது நிறுத்தினார்.

"அரசே! தாங்கள் சொல்வது புரியவில்லையே. பிறகு யாருடன் தான் பாண்டியர்கள் போரிடப் போகிறார்கள்?" - ஆதித்தன் ஆவலுடனும், சற்று எரிச்சலுடனும் கேட்டான்.

"பாண்டியர்கள் யாருடன் போர் புரியப் போகிறார்களோ, தெரியாது. ஆனால் பாண்டியர்களுடன் போர் புரியப் போவது பல்லவர்கள்தான்" என்றார் விஜயாலயன்.

''எப்படி?'' என்று சந்தேகத்துடன் கேட்ட இளவரசனை நோக்கி, ''ஆதித்தா! காவிரிக் கரையிலுள்ள ஊர்கள் பல்லவர்களைச் சேர்ந்தவை. நந்திபுரத்துக் கோட்டை பல்லவர்களுடையது. மண்ணியாற்றங்கரையில் பாண்டியர்கள் கட்டியுள்ள மாளிகையும் பல்லவர்கள் வசம் உள்ளது. இப்போது சொல்; பாண்டியர்கள் யாருடன் மோதுவார்கள்?'' என்று கேட்டார் விஜயாலயன்.

''இருக்கலாம். அவை நம்முடைய பூமியல்லவா? நாம் அதை அடைய வேண்டாமா? ஒரு காலத்தில் தொண்டை மண்டலம் முழுமையும் நமக்கு உரிமையுடையதாக இருந்தது. பல்லவர்கள் நம்முடைய மண்ணை அபகரித்துக் கொண்டார்கள். மீண்டும் அவர்கள் பாண்டியர்களுடன் போரிடுவதால், அந்தப் பூமி நமக்கு எப்படிச் சொந்தமாகும்?'' ஆதித்தன் தந்தையைக் கேள்வியால் மடக்கி விட்டதாக நினைத்தான்.

விஜயாலயன் மெல்லிய புன்னகையுடன், ''அப்படியென்றால் பல்லவர்களுடன் போரிடலாமே'' என்றார்.

ஆதித்தன் மௌனமாயிருந்தான். விஜயாலயன் தொடர்ந்து, ''அபராஜிதப் பல்லவனை உன் உற்ற நண்பன் என்று கூறிக் கொள்கிறாய். ஒரு தடவை நீ காஞ்சிக்குச் செல்லத் திட்டமிட்டாய். நம் நாட்டை அபகரித்தவனுடன் நட்பெதற்கு?'' என்று கேட்டார்.

''அபராஜிதன் என் நண்பன்தான். அவன் சோழ நாட்டை அபகரிக்க வில்லையே! அவன் முன்னோர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு படையெடுத்துக் கைப்பற்றிக் கொண்டனர். அதனால் இப்போது அபராஜிதனுடன் விரோதங் கொள்ள முடியுமா?'' ஆதித்தன் கேட்டான்.

''அப்படியென்றால் நாம் இப்போது இருக்கும் நிலப்பரப்புடன் திருப்தியடைய வேண்டியதுதான்!'' விஜயாலயன் கூறிவிட்டு மகனின் முகத்தை நோக்கினார்.

''நான் அப்படிச் சொல்லவில்லை. என்னுடைய இலட்சியம் தொண்டை மண்டலத்தை மீண்டும் அடைய வேண்டும் என்பதே. ஆனால் அதற்கு ஏற்ற போதுமான படை பலம் சேகரிக்கும் வரையில் பொறுத்திருக்க வேண்டும்'' என்று ஆதித்தன் கூறினான்.

''போதுமான படை பலம் நம்மிடமில்லை என்பதை நீ ஒப்புக் கொள்கிறாய் அல்லவா? இந்த நிலையில் பாண்டியர்களை எதிர்க்க மட்டும் பலம் போதுமா? அதனால்தான் பல்லவர்களைப் போரிட விட்டுவிட்டு நாம் காத்திருப்போம் என்கிறேன் நான்'' என்றார் விஜயாலயன்.

''நமக்கிப்போது குதிரைகள் கிடைக்கின்றன'' என்று ஆதித்தன் மீண்டும் கூறும்போது சீற்றமுற்ற விஜயாலயன், ''சொன்னதையே திரும்பவும் கூறாதே ஆதித்தா! குதிரைகள் கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வாய்?'' என்று கேட்டார்.

அவர் எந்த வேளையில் கேட்டாரோ, நாகைப்பட்டினத்திலிருந்து செய்தி வந்தது, குதிரைகள் வரவில்லை என்று.

ஆதித்தன் ஒரு கணம் திகைத்தான். மறுகணம் எரிமலை யானான். குமுறும் கடலானான். வீசும் புயலானான். அண்டமதிர இடிக்கும் பேரிடியானான். வாளை உருவி, ''ஏய் சோனக நாட்டு வணிகனே! உன்னை விட்டேனா பார்'' என்று கூறி நாகைப்பட்டினம் நோக்கி விரைந்தான்.

11

சோழநாட்டினின்று தப்பி வந்த எயினனைக் கண்ட பாண்டியப் படைகள் மகிழ்ச்சியில் மூழ்கின. ''நொடி கூடத் தாமதப்படாமல் படை புறப்படலாம்'' என்று கூறிய எயினன், பழையாறையில் நடந்தவற்றைத் தெரிவித்தான். பாடினிப் பெண் செய்த உதவியைக் கூறினான்.

''அந்தப் பாடினிப் பெண்ணையும் உடன் அழைத்து வந்திருக்கலாமே?'' என்று நக்கம்புள்ளன் எயினனை நோக்கிக் கேட்டார்.

''நமக்காக பாடினிப் பெண் பைரவி மண்ணியாற்றங்கரையில் காத்திருப்பாள்'' என்றான் எயினன்.

''நீ மண்ணியாற்றங்கரையிலுள்ள நமது மாளிகையைப் பார்த்தாயா?'' என்று கேட்டார் புள்ளன்.

''தஞ்சைக் கோட்டையை விட்டுத் தப்பினோம், பிழைத்தோம் என்று ஓடி வந்து பைரவி வீட்டில் அடைக்கலம் புகுந்த நான், பிறகு வெளியே வரவில்லை'' என்றான் எயினன்.

''சோழ நாட்டில் இரகசியம் அறியச் சென்றாயா? அல்லது வேல் விழியாளிடம் மனதைப் பறி கொடுக்கச் சென்றாயா?'' என்று நக்கம்புள்ளன் கேட்டார்.

எயினன் சற்றுக் கோபத்துடனேயே, ''பைரவியை ஒரு முறை சந்தித்த எந்த ஆண்மகனும் அவளது வேல்விழி வீச்சினின்று தப்பவே முடியாது. ஆனால் பைரவி ஓர் அபூர்வப் பெண். வரம்பு மீறாமல் நானும் நடந்து கொண்டேன். அவளும் நடந்து கொண்டாள்'' என்றான்.

''ஓ... மனத்தை மிகவும் கட்டுப்படுத்திக்கொண்டுதான் மாட்டுத் தொழுவத்தில் சில நாள்கள் இருந்தாயோ...?'' என்று மெல்ல நகைத்தார் புள்ளன்.

''பைரவியின் தோழி பொன்னருவி என்பவளும் மிக அழகானவள். அவளிடமும் நான் மயங்கிவிடவில்லை. நான் காதலிக்கவா சென்றேன்?'' சற்று கொதிப்பாகவே கேட்டான் எயினன்.

''பிறகு சாதித்தது என்ன?'' - புள்ளன் கேட்டார்.

''பைரவியின் நட்பை...''

''நட்பு உனக்கேற்பட்டதில் எங்களுக்கு அக்கறை இல்லை. இந்தப் படையெடுப்பு நிகழ்ச்சியால் நமது நாட்டிற்கு என்ன பயன்?''

''பயனின் அளவைக் குறிப்பிட முடியாது. பைரவியின் உதவியால் நாம் வெற்றியடையப் போகிறோம். அப்போது தெரிந்து கொள்வீர்கள், பாடினிப் பெண்ணின் மகத்தான உதவியை. அவள் நட்பு எனக்குக் கிடைக்காதிருந்தால் காஞ்சிக்கு ஓலை அனுப்பியிருக்க முடியாது. காஞ்சியினுளுள்ள நமது ஒற்றருக்குச் செய்தி அனுப்பி விட்டேன். நமதுபடை நந்திபுரத்துக் கோட்டையைப் பிடிக்கும் வரை பல்லவர்களுக்குப் போர் நிகழ்ச்சியே தெரியாது இருக்கும் வண்ணம் செய்துவிட்டேன். பழையாறையினின்று வடக்கு நோக்கி நமது படைகள் விரைந்து காஞ்சியைக் கைப்பற்ற வேண்டியதுதான்...'' என்று பெருமிதத்துடன் கூறினான்.

நக்கம்புள்ளன் சிறிது நேரம் எயினனை நோக்கினார். ''விழிகளை வென்றுவிட்டேன் என்று பெருமையுடன் கூறுகிறாயே?''

''அப்படிச் சொல்லமுடியாது. நமது படைகள் மண்ணி யாற்றங்கரையை அடையும் வரை விழிகளை நான் வென்று விட்டேன் என்றுதான் பொருள். நமது வெற்றிக்குப் பிறகு, என் மனநிலை மாறிவிடலாம். பைரவியை என்னால் மறக்க முடியாது. அனைவரும் ஒருவரே என்ற சமரச மனப்பான்மையுடைய பைரவியைப் போன்ற பெண் ஒருத்தியை இனி இந்த உலகில் காண முடியாது.''

''அப்படி என்றால் அவளை நீ காதலிக்கிறாயா?''

''ஆமாம். அவள் உருவம் என்னிதயத்தில்; என் நினைவு அவளிதயத்தில். அந்தப் பாச உணர்ச்சியைக் கொண்டு முதலில் பாண்டிய நாட்டிற்கு வெற்றியைத் தேடித் தருவேன். பிறகு அவளும் நானும் திருமணம் புரிந்து கொண்டு...'' என்று எயினன் கூறும்போது, புள்ளன் அவன் பேச்சை நிறுத்தி, ''போதும் போதும். எயினா! உன் முடிவு என்ன? இப்போதே படை எடுத்துச் செல்ல ஏற்ற நேரம் என்று கூறுகிறாயா?'' என்று கேட்டார்.

எயினன் ஆமோதித்தான்.

'தும், தம்' என்று முரசு முழங்கியது. கொம்பு ஒலித்தது. 'பூம், பூம்' என்று சங்க நாதம் படை வீரர்களை அணி வகுத்துப் புறப்படச் செய்தது. கயற்கொடி பிடித்த யானைகள் அசைந்தாடிச் சென்றன. சோனக நாட்டுக் குதிரைகளின் மீது பாண்டிய வீரர்கள் வேல் ஏந்தி அமர்ந்து 'வெற்றி வேல்' என்று முழக்கம் செய்தனர். பாண்டியர் படைகள் வடக்கு நோக்கி முன்னேறின.

பைரவி பழையாறையிலே யாழுடன் சுற்றி வருவதைக் காணக் காணப் பொன்னருவிக்கு எரிச்சலாயிருந்தது. சோழ மன்னன் விஜயாலயனிடம் ஏதோ கூறி, அவரைக் கவர்ந்து, தண்டனையிலிருந்து தப்பிவிட்டாள் என்றே பொன்னருவி நினைத்தாள். பயங்கரமான நாட்டுத் துரோகம் இழைத்த வளுக்குத் தண்டனை தராது போகச் சொல்லிவிட்டாரே மன்னர் என்று வேதனைப்பட்டாள். பைரவியிடம் பேச்சுக் கொடுத்து, அவள் வாய் வழியாகவே உண்மையை அறிய முயன்றாள் பொன்னருவி.

''பைரவி! உன் காதலன் நலமுடன் பாண்டிய நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தானா?'' என்று கேலியும் கிண்டலுமாகக் கேட்டாள் பொன்னருவி.

பைரவி கோபங் கொள்ளவில்லை. ''காஞ்சிக்குச் சென்றாலே உன் அத்தை மகன், அவன் அங்குள்ள பாண்டிய ஒற்றனைச் சந்தித்தானா?'' என்று கேட்டாள்.

''உனக்கு எப்படித் தெரியும்?'' என்று பொன்னருவி திடுக்கிட்டுக் கேட்டாள்.

''அவர்தான் சொன்னார்...'' என்றாள் பைரவி.

''அவர் என்றால் யார்?'' என்று கேட்டாள் பொன்னருவி.

''சற்று முன்பு நீ குறிப்பிட்டாயே 'என் காதலன்'' என்று. அவரே தான்!

''ஓகோ!'' என்று கூறிய பொன்னருவி, உதட்டில் குறும்புத்தனம் மிளிர, ''எனக்கு இன்னும் நாட்டுக்குத் துரோகம் இழைக்கும் திறமை வரவில்லை'' என்றாள்.

''நீ என்ன சொல்கிறாய், பொன்னருவி? அப்படியென்றால் துரோக மிழைக்கும் திறமையை நான் மட்டும் பெற்றிருக்கிறேனா?''

''நான் சொல்லவில்லை. ஊரே சொல்கிறது. நீ பாண்டிய நாட்டு ஒற்றனைக் காப்பாற்றி மறைத்து வைத்தது துரோகமில்லையா?''

''காப்பாற்றியது உண்மைதான். ஆற்று வெள்ளத்திலே அவர் மயக்க மடைந்து மிதந்துவந்தார். அந்தப் போதில் ஆற்றங்கரையில் நீ இருந்தாலும் காப்பாற்றியிருப்பாய்...''

''காப்பாற்றியிருப்பேன். அது மனிதாபிமானம். ஆனால் எதிரி நாட்டைச் சேர்ந்தவன் என்பதை அறிந்தவுடன் நமது ஊர்க்காவல் தலைவரிடம் உடனே சொல்லியிருப்பேன்.''

''பொன்னருவி! அவர் மயக்கமடைந்த நிலையிலிருந்தார். நெற்றியில் இரத்தகாயம். அவரை மாட்டுத் தொழுவத்தில்தான் தங்கவைத்தேன். குடிலுக்குள் அழைத்துச் செல்லவில்லை. உடனே மருத்துவரிடம் ஓடினேன். அதற்கிடையில் நீயும் அங்கே வந்திருக்கிறாய். அவர் எதிரி நாட்டு ஒற்றர் என்பது உனக்குத் தெரியும். நீதான் அவரைக் காவலரிடம் ஒப்படைப்பதுதானே!''

''செய்திருப்பேன்; ஆனால் நீ என் உயிர்த் தோழி. அதனுடன், எனக்கு இசை கற்றுக் கொடுக்கும் ஆசான். சோழநாட்டுப் பற்று உனக்கும் இருக்குமென்று நினைத்தேன்.''

''நாட்டுப் பற்றில் நான் யாருக்கும் குறைந்தவளல்லள். ஆனால் அதற்கும் மேலாக இந்தப் பிரபஞ்சத்திடம் மிக மிகப் பற்றுடையவள். மக்கள் அனைவரும் சமம் என்ற எண்ணம் படைத்தவள். அவரும் அந்த இலட்சியமுடையவ ராயிருந்தார், அதனால் எந்த நாட்டவராயிருந்தாலும் நான் கவலைப் படவில்லை.''

பைரவியின் திறமை மிகுந்த பேச்சு, பொன்னருவியை மாற்ற முயன்றது. இதுபோலவே சோழ மன்னரிடமும் பேசி அவர் மனத்தையும் மாற்றியிருப்பாள் என்று முடிவு செய்தாள் பொன்னருவி. அந்தப் பேச்சை அப்படியே மாற்றி பைரவியிடமிருந்து மேலும் செய்தியறிய விரும்பினாள்.

"பைரவி! உன்னுடைய நாட்டுப் பற்றை நான் சந்தேகிக்க வில்லை. ஆனால் மற்றவர்கள் குறை கூறுகிறார்கள். பாண்டிய நாட்டினின்று படைகள் புறப்பட்டு விட்டனவாம். அதை நீ எதிர்பார்த்து இருக்கிறாயாம். சோழநாட்டின் முக்கியமான இடங்களை நீ அவர்களுக்குக் காட்டிக் கொடுக்கப் போகிறாயாம்....." என்று பேச்சைத் தொடங்கினாள் பொன்னருவி.

பைரவியின் முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை. "எனக்குப் பாண்டியர் களைப் பற்றியோ, பல்லவர்களைப் பற்றியோ கவலையில்லை. எனக்கு அவர்மீதுதான் கவலை. அவர் இசையில் வல்லவர். குரலினிமை இருக்கிறது. என்னைப் போன்ற பரந்த நோக்கு இருக்கிறது. அவருக்கும் யாழ் மீட்டக் கற்றுக்கொடுத்தால் நாங்களிருவரும் யாழிசையில் அமிழ்ந்து உலகையே மறந்திருப்போம்" என்று அவள் கூறும்போது விழிகளை மூடி, ஏதோ தன் எதிரே நடக்கும் நிகழ்ச்சிகளை அகக் கண்களால் கண்டு அனுபவிப்பது போன்ற பரவசத்தில் ஆழ்ந்தாள்.

பொன்னருவி திடுக்கிட்டாள். "பைரவி! நீ என்ன சொல்கிறாய்? நீ அவரைக் காதலிப்பது உண்மைதானா? அவர் உன் கருத்துக்கு உடன்பட்டவ ராயிருக்கலாம். இசைப் புலமை மிக்கவராயிருக்கலாம். ஆனால் எதிரி நாட்டவர். என்னைப் பார். நான் என் அத்தானை முழுதும் நம்பவில்லை. என் இலட்சியக் கனவுக்கு ஏற்பச் சமமாக வரவில்லை என்று அவரை நான் முழுவதும் ஏற்றுக்கொள்ளத் தயங்கினேன். காஞ்சி மாநகருக்கு அவர் சென்று வெற்றிகரமாகத் தன் பணியை முடித்தது அறிந்தபிறகுதான் அவரைக் காதலிப்பது என்று முடிவு செய்தேன்...." என்றாள்.

"காஞ்சி நகரில் வெற்றிகரமாகத் தன் பணியை உன் அத்தான் முடித்தாரா?" என்று பைரவி கேட்டாள்.

"உன் காதலனின் முத்திரை மோதிரத்துடன் காஞ்சி நாட்டுக்குச் சென்ற என் அத்தான் நல்ல வேளையாக அவர் சொன்னதுபோல் பாண்டிய ஒற்றரைச் சந்திக்கவில்லை. பல்லவ மன்னரிடம் சென்றார். தெற்கே பல்லவ நாட்டிற்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை எடுத்துக் கூறினார். பாண்டியரை முறியடிக்கப் பல்லவர் படைகள் வருகின்றன. என் அத்தான் நாட்டுக்குச் செய்த மகத்தான தொண்டு அது. பைரவி! உன்னுடைய திட்டம் நிறைவேறாது. உன் பாண்டிய நாட்டுக் காதலனின் முயற்சி வெற்றியடையாது. அத்துடன் நான் ஒன்று உனக்கு அந்தரங்கமாகக் கூறுவேன். பாண்டியப் படைகள் வரும் போது நீ இங்கே இராதே. சோழநாட்டு வீரர்கள் உன்மீது மிகக் கோபமாக இருக்கிறார்கள். பாண்டியர் படைகள் தோற்றோடியவுடன் உனக்குக் கடுமையான தண்டனையை அளித்துவிடுவார்கள். உன் உயிர்த் தோழி என்ற முறையில் உன்னை எச்சரிக்கிறேன்..." என்றாள் பொன்னருவி.

பைரவி சிரித்தாள். ஓர் அலட்சியம் அதில் தென்பட்டது.

"பொன்னருவி! நான் எயினன் வருகைக்காகக் காத்திருக்கிறேன். என்னை யாரும் தடுக்க முடியாது. உன் எச்சரிக்கைக்கு நன்றி. நாட்டுப் பற்றில்

நான் ஒருவருக்கும் சளைத்தவளல்லள்..." என்று கூறிவிட்டு, பைரவி அவளிடமிருந்து விடை பெற்றுக்கொண்டாள்.

மறுநாள் பொழுது விடியும்போது போர் முரசம் காவிரிக் கரையெங்கும் எதிரொலித்தது.

12

கார்விரியைப் பாண்டியர் படைகள் கடந்தன. சோழர்களின் எதிர்ப்போ பல்லவர்களின் எதிர்ப்போ இராது என்ற நம்பகமான தகவல் நக்கம்புள்ளனுக்குக் கிடைத்தபடியால், குதிரைப் படையினை உறையூருக்கு அருகே நிறுத்திவிட்டு குறைவான படைகளுடன் நந்திபுரக் கோட்டையை நோக்கி முன்னேறினர். முதலில் மண்ணியாற்றங்கரையில் கட்டப்பட்டிருந்த தங்களுடைய மாளிகையை மிக எளிதில் கைப்பற்றினர்.

இந்தச் செய்தி ஆதித்தனுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டது. கொதித்தெழுந்த ஆதித்தன் தன் தந்தையிடம் சென்றான். மிகவும் குறைவான படைகளுடனே பாண்டியர்கள் வந்திருப்ப தாகவும், குதிரைப் படைகள் இப்போது மிக எளிதில் பாண்டியர்களைத் தோற்கடித்துவிடும் என்றும், படையெடுப்பிற்கு அனுமதி அளிக்குமாறும் வேண்டினான்.

விஜயாலயன் அவன் கூறுவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டார். "ஆதித்தா! பாண்டியர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் தான் குறைவான படைகளுடன் வந்திருக்கிறார்கள். காஞ்சியினின்று பல்லவர் படைகள் வரும் என அவர்கள் எதிர்பார்க்கலாம். இரண்டு மூன்று நாள்கள் பொறுத்திருந்த பிறகு நாம் செயலில் இறங்குவோம்" என்று கூறினார். பிறகு ஆதித்தனை அழைத்து, "அந்தப் பாடினிப் பெண் பிறகு வந்தாளா?" என்று கேட்டார்.

"அந்தப் பாடினிப் பெண்ணைத் தாங்கள் முழுமையும் நம்புகிறீர்கள். அவள் பாண்டியர் படைகள் பாடி இறங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றதாகக் கேள்விப்பட்டேன். நமதுநாட்டு உளவுகளை அவள் எதிரியிடம் தெரிவிக்கிறாள். அவளை நாம் சிறையிலடைக்காமல் விட்டு வைப்பதற்கு அனைவரும் வியப்படை கிறார்கள்" என்று தந்தையைக் குறை கூறுவது போல் தெரிவித்தான்.

விஜயாலயன் தலையசைத்தாரே தவிர, மறுமொழி கூறவில்லை. "பாணர்க்கும் பாடினிக்கும் ஒரு சௌகரியமுண்டு. அவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்வார்கள். யாழிசைத்து மகிழ வைப்பது அவர்களுடைய தொழில். போர் வீரர்கள் யாழிசையை மிகவும் ரசிப்பார்கள். அந்த முறையில் பாடினி பாண்டியர் பாசறைக்குச் சென்றிருக்கலாம்" என்றார்.

ஆதித்தனுக்கு அவர் கருத்து உடன்பாடாக இல்லை.

∴ ∴ ∴ ∴

பாடினி யாழை மீட்டியவாறு பாண்டிய வீரர்கள் தங்கியிருக்கும் பாசறைக்குச் சென்றது உண்மை தான். அங்கே அவள் விழிகள் எயினனைத் தேடின. வழியில் காண்பவர்களிடமெல்லாம் எயினனைக் குறித்து விசாரித்தாள்.

எயினனும், படைத் தலைவர் நக்கம்புள்ளனும் மண்ணியாற்றங் கரை மாளிகைக்குச் சென்றிருக்கிறார்கள். என்பதை அறிந்து மண்ணியாற்றங்கரை மாளிகைக்குப் பைரவி சென்றாள்.

பாடினி வருவதை எயினன் தொலைவிலேயே கண்டுவிட்டான். அவளை வரவேற்க மாளிகையின் வாயிலில் வந்து நின்று, எந்தத் தடையும் அவளுக்கு ஏற்படாமல் மாளிகைக்கு அழைத்துச் சென்றான்.

"பைரவி! நீ எப்படியும் வருவாய் என்பது எனக்குத் தெரியும்" என்ற அவளை வரவேற்றான்.

"நான் இங்கே வருவது எவ்வளவு ஆபத்து என்பது தங்களுக்குத் தெரியுமா?" என்று பைரவி கேட்டாள்.

"என்ன ஆபத்து! எங்கள் படைகள் எந்தவித எதிர்ப்புமின்றி வந்து விட்டன. சோழ நாட்டினர் அருகே வரவே அஞ்சுகிறார்கள். காஞ்சிக்குச் சென்ற உன் தோழியின் உறவினன், பல்லவர் படைகள் புறப்படாமல் தடுத்து விட்டான் என்று தெரிகிறது. நாளை இரவு பாண்டிய மன்னர் கம்பீரமாகக் காவிரியாற்றைக் கடந்து நந்திபுரக் கோட்டைக்கு வரப்போகிறார். ரிஷபக் கொடி இறக்கப்பட்டு கயற்கொடி பறக்கும்" என்று பெருமையுடன் பேசிக் கொண்டே சென்றான்.

பிறகு பைரவியை மிக நெருங்கி, "பைரவி! உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே தெரியவில்லை. நீ என்னைக் காப்பாற்றியிராவிடில் நான் மதுரைக்குத் திரும்பிச் சென்றிருக்க மாட்டேன். பாண்டியர் படைகளும் இவ்வளவு எளிதில் மண்ணியாற்றங்கரை மாளிகையை எதிர்ப்பே இல்லாமல் கைப்பற்றி இருக்க முடியாது. உனக்குப் பெரும் பரிசுகள் தரப்போகிறோம். படைத்தலைவர் நக்கம்புள்ளனைச் சந்திக்கலாம் வா. உன்னைக் குறித்து அவரிடம் சொல்லியிருக்கிறேன்." என்று கூறி அவளை அணைத்துக் கொள்ள முயன்றான். அவன் அணைப்பினின்றும் மிக எளிதாக விடுபட்ட பைரவி, நக்கம்புள்ளன் இருக்குமிடத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு வற்புறுத்தினாள்.

பாண்டிய நாட்டுப் படைத்தலைவர் நக்கம்புள்ளன், வெற்றிப் பெருமிதத்தில் அமர்ந்திருந்தார். மறுநாள் நந்திப்புரக் கோட்டைக்கு வெற்றி முழக்கத்துடன் வரவிருக்கும் பாண்டிய மன்னரை வரவேற்கத் திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார். எயினன் அவரிடம் பைரவியை அறிமுகப்படுத்தி அவளுடைய சேவையை மீண்டும் சுருக்கமாக எடுத்துரைத்தான்.

நக்கம்புள்ளன் ஒரு முறை பைரவியை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு பெரிதாக நகைத்து, "ஓ! நீ தான் அந்தப் பாடினிப் பெண்ணா! எயினன் உன்னைப் பற்றி மிகப் புகழ்ச்சியாக எடுத்துச் சொன்னான். உனக்கு வேண்டிய பரிசுகளைக் கேள், பெறலாம்" என்றார்.

பாடினி மிக வணக்கத்துடன், "என்னைக் குறித்துப் புகழ்வதற்கு ஏதுமே இல்லை. நான் பாடினிப் பெண். அரசர்களையும், புரவலர்களையும் நான் புகழ்ந்துப் பாடுவேன். பாடிப்பரிசு பெறுவது எங்கள் தொழில். தங்கள் மன்னர் எதிரே யாழுடன் நான் பட வேண்டும். அதற்கு அனுமதி கேட்கவே இங்கே வந்தேன்." என்றாள்.

"மன்னர் எதிரே பாடப் போகிறாயா? ஆகா; நன்றாகப் பாடு. யாழுடன் பாடு. ஆடுவதற்கு விறலியர் இருந்தால் அழைத்துவா. உனது அபிமானம் மிக எயினன் அதற்கு ஏற்பாடு செய்வான்" என்றார் புள்ளன்.

நன்றி கூறி வணங்கி விடைபெற்ற பைரவியைத் தொடர்ந்து வந்த எயினன், "பைரவி! மன்னர் எதிரே பாடப் போகிறாயா? ஏன் உனக்குத் திடீரென இந்த யோசனை? முத்தும் பவழமும் வாங்கிச் செல்வாய் என்று எண்ணினேன்" என்றான்.

"தங்களை விட எனக்கு முத்தும் பவழமும் பெரியனவா? தங்களை எனக்குப் பாண்டிய மன்னர் பரிசாகத் தருவாரா?" என்று பைரவி விழிகளைச் சுழல விட்டவாறு கேட்டாள்.

எயினன் தடுமாறினான். "என்னையா?" என்று திகைப்பில் பேச முடியாமல் தடுமாறினான். "பைரவி! என்னையா கேட்கிறாய்? என்னிடமே நீ கேட்டிருக்கலாம். அரசரிடம் கேட்க வேண்டுமா?"

"தாங்கள் மன்னரின் அடிமை. தங்களை மன்னர்தான் பரிசாக அளிக்கவேண்டும்."

"நான் பாண்டிய நாட்டின் அடிமையா? ஒருகாலும் இல்லை. நான் சுதந்திரமானவன். எனக்கு எல்லா ஊர்களும் சொந்தம். எல்லாரும் உறவினர். ஒரு நாடும் என்னை அடிமைப்படுத்த முடியாது. ஒரே ஒருவர்தான் என்னை அடிமைப்படுத்த முடியும்" என்றான் எயினன்.

"தங்களை அடிமைப்படுத்தக்கூடியவர் யார் என்று அறியலாமா?" என்று பைரவி கேட்டாள்.

"இதோ என் எதிரே இருந்து என் உடலிலும், உள்ளத்திலும் கனலை மூட்டிக் கொண்டிருக்கும் நீதான்..." என்று கூறி, அவள் எதிர்பாராவிதத்தில் அவளை மூச்சுவிட முடியாதபடி அணைத்து, அவள் அதரங்களைப் பேச முடியாதபடி செய்தான்.

"இவ்வளவு பெண் சபலம் உள்ள தங்களை எவ்வாறு ஒற்றராக நியமித்தார்கள்?" என்று பைரவி, இருளில் தூண் ஓரமாக அவனைத் தழுவியவாறு நகர்ந்தாள்.

"அப்படிச் சொல்லி விடாதே பைரவி! எந்தச் சபலத்துக்கும் நான் அடிமையாக மாட்டேன். இந்த வாளை வெல்ல எந்த விழிகளாலும் முடியாது. அப்படி வெல்வதென்றால், உனது குடிலின் மாட்டுத் தொழுவத்திலிருந்த போதே நீ என்னை வென்றிருக்கலாம். உன்னை விட அழகியான உனது

தோழியின் எழில் என்னை வென்றிருக்கும். அதாவது நான் உங்களிடம் மயங்கியிருப்பேன்'' என்று கூறி பைரவியை மேலும் இறுக்கியபோது, பைரவி அவனிடமிருந்து மெல்ல விடுவித்துக் கொண்டாள்.

''பாண்டிய நாட்டு ஒற்றரே! இதுவரை ஓர் ஆணின் மூச்சும் என்மீது படச் சகியாத நான், எந்த ஓர் ஆணின் ஸ்பரிசமும் என்னை நுகர அனுமதிக்காத, விரும்பவே விரும்பாத நான் தங்களிடம் சிக்குண்டேன்; தொழுவத்தில் தோற்காத தாங்கள், இந்த மாளிகையில் என்னிடம் தோற்றதேன்?'' என்று மெல்ல நகைத்தவாறு கேட்டாள்.

''நாங்கள் வெற்றியடைந்தோம். என்னை எதற்காகப் பாண்டிய மன்னர் சோழ நாட்டிற்கு அனுப்பினார்? அந்தப் பயணத்தில் நான் வெற்றியடைந்தேன். அதனால் நான் இப்போது உன்னிடம் தோற்கச் சம்மதிக்கிறேன்.''

''வெற்றியடைந்தீர்களா? அதெப்படி?''

''சோழர்கள் போருக்கு ஆயத்தமாக இல்லை. பல்லவப் படைகள் எதிர்க்க வரமாட்டா என்று நான் புள்ளரிடமும், பாண்டிய மன்னரிடமும் தெரிவித்தேன். அதன்படியே நடந்தது. அதனால் என் பயணம் வெற்றி என்று அனைவரும் கொண்டாடுகிறார்கள். எனக்கு உதவி செய்த உன்னையும் கொண்டாடு கிறார்கள். நான் எதைக் கேட்டாலும் பரிசாக அளிக்கச் சித்தமாக இருக்கிறார்கள்'' என்று எயினன் குதூகலத்துடன் கூறினான்.

''தங்களை எனக்கு அளிப்பார்களா?'' மீண்டும் பைரவி கேட்டாள்.

பைரவியின் கன்னங்களின் மென்மையை மெல்ல வருடியவாறு எயினன் அவள் காதருகில் மட்டும் கேட்கும் வண்ணம், ''நான்தான் சற்று முன்பே சொன்னேனே. என்னைப் பரிசாகத் தர அவர்களுக்கு ஏது உரிமை? நானே என்னை உன்னிடம் ஒப்படைக்கிறேன்'' என்றான்.

''உறுதியாகவா?''

''ஆமாம், சத்தியமாக.''

''அப்படியென்றால் நீங்களும் நானும் இந்த நாட்டை விட்டுப் போய்விடுவோமா?''

''எங்கே கூப்பிட்டாலும் நான் வருகிறேன். வானுலகத்திற்கும் நாமிருவரும் ஒன்றாகச் செல்வோம்.''

''நான் யாழுடன் வருகிறேன். தங்களுக்கு யாழ் இசைக்கக் கற்றுத் தருகிறேன்.''

''ஆகா; அப்படி ஓர் இசைக்கடலில் காலமெல்லாம் மூழ்கியிருக்க வேண்டும் என்பதே என் ஆசை.''

''என் கருத்தையே தாங்கள் கொண்டிருப்பதற்கு என் முதல் பரிசாக இதை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று தன் பவழக் கனிவாய்ச் சுவையை எயினன் அறியச் செய்த பைரவி அவனை நோக்கி, ''அன்பே! நான் என் பெற்றோரையும், நான் பிறந்த சோழநாட்டையும் விட்டுப் பிரிவது போல், பாண்டிய நாட்டை விட்டுத் தாங்கள் பிரியச் சித்தமாக இருக்கிறீர்களா?'' என்றாள்.

''ஆகா, இன்னும் ஓரிரு நாள்களில் நந்திபுரக் கோட்டைக்குள் பாண்டிய மன்னர் நுழைந்து கம்பீரமாக அமர்ந்தவுடன் நான் அவரிடம் விடை பெற்றுக் கொள்வேன்.''

''அவரது அவையில் என்னைப் பாட அனுமதிப்பீர்களா?''

''ஆகா, நான் உத்தரவு பெற்றுத் தருகிறேன். பாட்டு முடிந்ததும் நாம் இருவரும் மன்னரை வணங்குவோம். அவரது ஆசியுடன் நீ விரும்பிய இடத்திற்குச் செல்வோம்.''

''இது உறுதிதானே?'' என்று பைரவி கேட்டு எயினனிடம் சத்தியம் வாங்கிக்கொண்டாள்.

''பைரவி! நீ இன்றி நான் இனி வாழவே முடியாது. பாண்டிய நாட்டின் பெரும் பதவி தருவதாகச் சொன்னாலும் நான் உதறி விடுவேன். பைரவி! எனக்கு நீ வேண்டும்'' என்று எயினன் காதல் போதை தலைக்கேறப் பேசினான்.

''நான் வேண்டும் - எனது யாழ் வேண்டாமா?'' என்று பைரவி இடையை விட்டு எயினனது கரங்களை ஒதுக்கியவாறு கேட்டாள்.

''ஆகா! நீ வேண்டும்; உன் யாழ் வேண்டும்; யாழிசை வேண்டும்'' என்றான்.

பைரவி எயினனிடமிருந்து பிரியாவிடை பெற்றாள். நந்திபுரக் கோட்டையில் பாண்டிய மன்னன் எதிரே யாழ் மீட்டி மகிழ்விக்க அனுமதி பெற்றுத் தருவதாக எயினனும் வாக்களித்தான்.

13

பல்லவர் படைகள் அபராஜிதன் தலைமையில் நந்திபுரக் கோட்டையை நோக்கி வந்துகொண்டிருந்தன. அந்தச் செய்தி விஜயாலயனுக்கும் எட்டியது.

''ஆதித்தா! படைகளை ஆயத்தப்படுத்து. அணிவகுத்து பலத்தைப் பரிசோதித்துவிடு. வீரர்களைத் தரம் பிரித்துவிடு. யானைப் படைகளை முன்னால் அனுப்பாதே. நமது வில்லவர்களைத் தக்க தருணத்தில் பயன்படுத்து. வாள் வீசும் வில்லவர்களை முன்னணியில் நிறுத்து. ஆதித்தா! இனி எத்தனையோ போர்க் களங்களை நீ காணுமாறு இருக்கும். போரில் வெற்றிபெற தோள் வலிமையுடன், மதி வலிமையும் வேண்டும். தக்க தருணம் பார்த்துத் தாக்க வேண்டும். பல்லவர்கள் படை நெருங்குகிறதாம். நீயும் புறப்பட்டு விடு. அபராஜிதனிடம் போர் வீரர்களின் எண்ணிக்கை அதிகம். ஆயுதங்களும் அதிகம்'' என்று அறிவுரை கூறிய விஜயாலயன் ஆதித்தனை அருகழைத்து சில முக்கிய செய்திகளைச் சொன்னார்.

ஆதித்தனுக்கு ஏற்பட்ட வியப்புக்கு எல்லையில்லை. 'படுத்த படுக்கை யாயிருக்கும் தந்தை சகல செய்திகளையும் தெரிந்து வைத்திருக்கிறாரே' என்று ஆச்சரியப்பட்டான்.

இரவு நடுநிசியைத் தாண்டியிருக்கும். பைரவி பொன்னருவியின் வீட்டை அடைந்து கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த பொன்னருவி கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தாள்.

"நான்தான் பொன்னருவி!" என்றாள் பைரவி. "ஏன் அப்படி வியப்புடன் பார்க்கிறாய்? நடுநிசியில் கதவைத் தட்டியவளை வா என்று அழைக்காமல் வாசலிலேயே நிற்கவைத்திருக்கிறாயே?"

"இல்லை... என்னைத் தேடி இந்த நேரத்தில் வந்திருக்கிறாயே, என்ன காரணமாயிருக்கும் என்று யோசித்தேன்..."

"உன்னால் ஆகவேண்டியது இருக்கிறது."

"என்னாலா?... பாண்டிய நாட்டிற்கு உதவக் கூடிய நிலையில் நானில்லை பைரவி!"

"பொன்னருவி! என்னுடன் யாழெடுத்துப் பாட வேண்டும். அதற்காக உன்னை அழைக்க வந்தேன்."

"யாழெடுத்தா?"

"ஆம், நான் பாடுவேன். நீயும் பாட வேண்டும். நம்முடன் யாழ் கொண்டு நூறு பேராவது வருவார்கள். சோழநாட்டின் பெருமையைப் புலப்படுத்த வேண்டும்..."

"நீ சொல்வது புரியவில்லையே பைரவி! நான் வருகிறேன். இன்னும் நூறு பேர் வருவார்களா?"

"ஆமாம்; நீ வருகிறேன் என்று உறுதியாகச் சொன்னால் நான் நூறு பேரை அழைத்து வருவேன். தக்க பரிசுகள் கிடைக்கும்."

"போரின் உச்ச நிலையில் நீ யாழ் மீட்டப் போகிறாயா? வாள்கள் மின்னும் போது யாழ்கள் ஒலிக்கப் போகின்றனவா? எங்கே என்று சொல்வாயா?"

"சொன்னால் வருவாயா?"

"பைரவி! நான் உன் உயிர்த்தோழி. அதையும் விட நீ எனக்கு ஆசிரியை என்ற நிலையுங்கூட உன்னிடம் நான் யாழ் பயில்கிறேன்; இசை பயில்கிறேன். அந்தக் காரணத்திற்காகத்தான் உன்னைக் காட்டிக்கொடுக்க முடியாமல் இருக்கிறேன். இல்லாவிடில் இந்த நேரத்தில், சோழநாட்டு வீரர்கள் உன்னைச் சிறை செய்து தஞ்சைக்குக் கொண்டு சென்றிருப்பார்கள்" என்றாள் பொன்னருவி.

"சோழ வீரர்கள் எதற்காக என்னைச் சிறைப்படுத்த வேண்டும்?" பைரவியின் குரலில் வியப்பு மிகுந்திருந்தது.

"ஆகா, பைரவி நன்றாகப் பேசவும் கற்றுவிட்டாய். நீ செய்யும் காரியம் தவறானது என்று உனக்குத் தெரியவில்லையா? நாட்டுக்குத் துரோகம் இழைக்கிறாய் என்பதை மறந்துவிட்டாயா?" - பொன்னருவி கோபம் நிறைந்த குரலில் கேட்டாள்.

"நான் எந்த நாட்டிற்கும் துரோகம் இழைக்கவில்லை..." பைரவியின் குரலில் கண்டிப்பு இருந்தது.

"பாண்டிய நாட்டு ஒற்றனை உன் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் மறைத்து வைத்திருந்தாய். பிறகு அவன் தப்பி ஓட வழி செய்தாய். அதற்கும் மேலாக அவனைக் காதலித்து அவனுடன் பாண்டிய நாட்டிற்கே ஓடிவிடத் திட்டமிட்டிருக்கிறாய். இதைவிடத் துரோகம் வேறு என்ன வேண்டும்?" - பொன்னருவி சீறினாள்.

பைரவி தலைகுனிந்து தன் குற்றத்தை உணர்வாள் என்று நினைத்தாள். அதற்கு மாறாக பைரவி பெரிதாகச் சிரித்தாள்.

"பொன்னருவி! நீ அறிவாய் எல்லா நாடுகளும் எல்லா மக்களும் ஒருவரே - ஒரே இனம் என்று. அதனால் துரோகம் என்ற சொல்லுக்கே இடமில்லை. நான் கூறுவதை நீ ஏற்கமாட்டாய். கடைசியாகக் கேட்கிறேன். நீ என்னுடன் யாழெடுத்துப் பாட வருவாயா மாட்டாயா?" - பைரவியின் குரலில் கண்டிப்பு மிகுந்திருந்தது. பொன்னருவி பேசவில்லை.

"உன்னிடம் ஒளிவு மறைவு ஏன்?... எயினன் தங்கியிருக்கும் மாளிகைக்குப் போகிறோம். அங்கேதான் யாழுடன் பாடுகிறோம்!" என்றாள் பைரவி.

"நான் வரவில்லை. எதிரியின் மாளிகைக்கு நான் வரவில்லை. வாளின் வலிமையால் விழிகளை அடிமை கொண்டுவிட்ட அந்த எயினன் எதிரே நான் வரமாட்டேன் பைரவி! உனக்கு எவ்வளவு தைரியமிருந்தால், எதிரி நாட்டு ஒற்றனை அவர்களது மாளிகையிலேயே சந்திக்கச் செல்கிறாய்? போர் மேகம் குமுறிக் கொண்டு நிற்கும் இந்தவேளையில், மகா பயங்கர யுத்தமொன்றிற்கு ஆயத்தமாகும் இந்த வேளையில் இசை என்ன, கூத்தென்ன? பைரவி! நீ போகலாம்: இதைக் கூறவா நீ நடுநிசியில் வந்தாய்? நான் உன்னை மறந்து விட்டேன். துரோகிகளின் நட்பு எனக்குத் தேவையில்லை." பொன்னருவி மிகக் கடுமையாகப் பேசி மறுமொழியையும் எதிர்பாராமல் கதவைத் தாழிட்டு விட்டாள்.

பைரவி சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தாள். அவள் வருத்தப்பட வில்லை. மெல்ல நடந்து தன் குடிலுக்குச் சென்றாள்.

பைரவி சென்ற பிறகு, பொன்னருவிக்குப் படுத்திருக்கவே தோன்ற வில்லை. வீட்டு முற்றத்தில் படுத்திருந்த தன் தந்தை கரபத்ரனை எழுப்பி, "அப்பா! அப்பா! நிலைமை முற்றிவிடும் போலிருக்கிறது. பைரவிக்கு இருக்கும் துணிவுக்கு அவள் தஞ்சையையே கட்டிக்கொடுத்துவிடுவாள் போலிருக்கிறது. உடனே புறப்படுங்கள்; கிராமச் சாவடிக்குச் சென்று வீரர்களை எழுப்பி, உடனே பைரவியைப் பின் தொடரச் செய்யுங்கள்" என்றாள்.

கரபத்ரன் தூக்கத்தை விட்டுத் துள்ளி எழுந்தார். "என்னம்மா சொல்கிறாய்? பைரவி, நாட்டுக்குத் துரோகம் இழைக்கிறாளா? என்ன செய்வது? விஜயாலயரும்

துணிந்து போரில் இறங்கவில்லை. பல்லவர் படைகளும் வரவில்லை. பாண்டியர்களுக்குப் பயம் விட்டு விட்டது. என்ன துணிவு இருந்தால், மண்ணியாற்றங்கரைக்கே வந்து அவர்கள் மாளிகை கட்டியிருப்பார்கள்? சோழ நாட்டினரின் வீரம் எங்கே மறைந்தது? விஜயாலயரின் தோள் வலிமை எங்கே சென்றது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னை இப்போது என்ன செய்யச் சொல்கிறாய்?'' என்று விரக்தியும், வேதனையும் கலந்து பேசினார் கரபத்ரன்.

''அப்பா, என்ன சொல்கிறீர்கள்? கண் எதிரே பைரவி நாட்டுக்கு விரோதமாகக் காரியங்களைச் செய்கிறாள். அவளைத் தடுக்க முடிய வில்லையே! சதிகாரர்களை முறியடிக்காத ஆட்சி இருந்து என்ன பயன்?'' - பொன்னருவி சீறினாள்.

மகளுடைய உணர்ச்சியைக் கரபத்ரன் புரிந்துகொண்டார். இருவரும் இணைபிரியாத் தோழிகள். ஒருத்தி பாண்டியரை ஆதரிக்கிறாள். மற்றொருத்திக்குப் பிறந்த நாட்டின்மீது உயிர். தன் தோழியின் கரம் வலுப்பதைக் கண்டு மற்றவளால் எப்படி அமைதியாக இருக்க முடியும்?

''பொன்னருவி! இதோ நான் புறப்படுகிறேன். என் கவசங்களை எடுத்துக் கொடு. நான் ஒருவனே மண்ணியாற்றங்கரை மாளிகைக்குச் செல்கிறேன். அங்கே பாண்டிய மன்னர் தங்கியிருக்குமிடத்திற்கு நான் ஒருவனே தன்னந் தனியனாகச் செல்கிறேன். பாண்டிய மன்னனின் மெய்க்காவலர்களைத் துண்டு துண்டாக்குகிறேன். பாண்டியனின் தலையை இந்த வாளாலேயே கொய்து எறிகிறேன். கோட்டையின் மீது பறக்கும் மீன்கொடியை இறக்கிவிடுகிறேன்'' என்று குளுரைத்தார். பிறகு புறப்பட ஆயத்தமானார்.

தன் தந்தை போர்க்கோலம் பூண ஆயத்தமானது பொன்னருவிக்குப் புதிய சுறுசுறுப்பை அளித்தது. என்றாலும் தன் தந்தை போவதைப் பற்றிக் கவலை கொண்டாள். இந்தச் சமயத்தில் சூலநாதன் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று பொன்னருவி நினைத்தாள்.

காஞ்சி சென்றுள்ள சூலநாதன், எப்போது திரும்பி வருவான் என்ற கவலை அவளை ஆட்கொண்டது. தந்தையை நோக்கி! ''அப்பா, காஞ்சி சென்ற அவர் எப்போது திரும்பி வருவாரப்பா?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''அவர் என்றால் யாரம்மா?'' என்று கரபத்ரன், உதட்டில் குறும்புச் சிரிப்பு தவழக் கேட்டார். மார்புக் கவசத்தை அப்போது அணிந்து கொண்டிருந்தார்.

பொன்னருவி நாணம் மிகுந்தவளாய்த் தலை குனிந்தாள். ''யாரையம்மா சொல்கிறாய்? எப்போதும் வெறுப்புணர்ச்சியைக் காட்டுவாயே, அந்த உன் அத்தானையா?'' என்று கரபத்ரன் கேட்டார்.

கை விரல்களால் முகத்தை மூடிக்கொண்டு குழந்தை போலச் சிணுங்கிய பொன்னருவி, ''அவரை நான் ஒரு காலத்தில் வெறுத்தது உண்மைதான். ஆனால் அவரிடமுள்ள திறமை எனக்கு இப்போது தான் தெரியவந்தது. அவர் மேற்கொண்டிருக்கும் புனித யாத்திரையால் சோழ நாட்டிற்குப் பெரும் பயன் ஏற்படப் போகிறது. அவர் இன்னும் வரவில்லையே என்ற கவலை எனக்கு

ஏற்படுகிறது. பாண்டியர்கள் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் நாட்டிற்குள் பிரவேசித்ததும், எனது ஆருயிர்த் தோழி சதிகாரியாக மாறியதைக் காணும்போது ஏதோ ஆபத்து இந்த நாட்டிற்கு வரப்போகிறது என்று தோன்றுகிறது. கடவுளே! என் அத்தானுடைய பயணம் வெற்றிகரமாக முடிய அருள் செய்வாய்'' என்று வேண்டினாள். பொன்னருவியால் உள்ளத்துணர்ச்சியை அடக்க முடியவில்லை. விம்மும் ஒலி அவளிடமிருந்து வந்தது.

''குழந்தாய் பொன்னருவி! ஏன் வருத்தப்படுகிறாய்? இந்த நாட்டிற்கு ஒருவித ஆபத்தும் வராது. உன் அத்தானுக்கும் எந்த ஆபத்துமில்லை. எல்லாம் நல்லபடியாக முடிந்து உங்கள் இருவர் திருமணத்தையும் சுவாமிமலையில் நடத்திப் பார்க்கும் வகையில் நானும் இருப்பேன்'' என்ற கரபத்ரன் மகளை அணைத்துக்கொண்டு அவள் விழிநீரைத் துடைத்தார்.

வெளியே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. ''யாரது?'' என்று கரபத்ரன் குரல் கொடுத்தார். முக்காடிட்ட ஓர் உருவம் தள்ளாடி வந்து ''அப்பாடா'' என்று கூறித் தரையில் களைப்பு மிகுதியால் படுத்தது.

''ஆ, நீங்களா?'' என்று பொன்னருவி பரபரப்புடன், விளக்கைத் தூண்டிவிட்டு அந்த உருவத்தினருகே சென்றாள்.

''சூலநாதனா, நலமாக வந்தாயா?'' என்று கரபத்ரன் அவனருகே சென்று கேட்டார். மிகுந்த தாகத்தாலும் களைப்பு மிகுதியாலும் சோர்ந்திருந்த சூலநாதன், தண்ணீர் வேண்டுமென்று கேட்டான்.

''காய், பழமா, அதைச் சொல்லுங்கள்!'' என்று பொன்னருவி பரபரப்புடன் கேட்டாள்.

''தண்ணீர் கொடு, சொல்கிறேன்'' என்றான் சூலநாதன்.

''சொல்லுங்கள் தருகிறேன்'' என்றாள் பொன்னருவி.

''காயா கொண்டு வருவேனா?'' என்று சூலநாதன் கூறியபோது பொன்னருவி ஆனந்தத்தில் கூத்தாடி தந்தை அங்கே இருக்கிறார் என்பதையும் கவனியாமல் அவனை ஆரத் தழுவிக் கொண்டாள்.

மறுநாள் பைரவியுடன் நூறு பேர் யாழுடன் ஆயத்தமாயிருந்த செய்தி - பல்லவர்கள் படை பழையாறையை நெருங்கிவிட்ட செய்தி - தஞ்சைக்கும் எட்டியது. ஆதித்தன் தலைமையில் தேர்ந்தெடுத்த படைகள் நந்திபுரம் கோட்டையை நோக்கிப் புறப்பட்டன.

பைரவி, மண்ணியாற்றங்கரையைக் கடந்து மாளிகை வாயிலில் வந்து நின்றாள். பாண்டிய மன்னர் மிகக் கம்பீரமாக அந்த மாளிகையில் வீற்றிருந்தார். பைரவியின் வருகையை எதிர்பார்த்துநின்ற எயினன் பைரவியை வரவேற்றான்.

''உனக்காகக் காத்திருக்கிறேன் பைரவி! பாண்டிய மன்னரிடம் நான் உன் வருகையைத் தெரிவித்துவிட்டேன். உன்னுடன் வந்திருக்கும் இவர்கள் யார்?'' என்று எயினன் கேட்டான்.

''இவர்கள் என்னிடம் யாழ் பயின்றவர்கள் என்னுடன் சேர்ந்து யாழ் மீட்டப் போகிறார்கள். ஒரே சமயத்தில் நூறு யாழ்கள் ஒலிக்கப் போகின்றன. உங்கள் மன்னர் மகா பாக்கியசாலி. எந்தக் காலத்திலும் கண்டிராத இசை நிகழ்ச்சியை அவர் கண்டு அனுபவிக்கப் போகிறார். யாழிசையில் மெய்மறக்கப் போகிறார்'' என்றாள் பைரவி.

''பாண்டிய மன்னர் மிகமிகப் பாராட்டுவார். அவர் இப்போதே வெற்றிப் பெருமிதத்திலிருக்கிறார். என் மீது அவருக்கு முன்பிருந்த மதிப்பு இப்போது மேலும் உயர்ந்துவிட்டது. வெகு எளிதில் மண்ணியாற்றங்கரை மாளிகையைப் பிடித்துவிட்ட பெருமை அவருக்கு. பல்லவர் படைகள் வராமலிருப்பதற்கு என்னுடைய முன் யோசனைதான் காரணம் என்று அவர் நம்புகிறார். நான் கூறிவிட்டேன், 'பைரவி என்ற பாடினிப் பெண்தான் அனைத்துக்கும் காரணம்' என்று. உன்னை அரசவைப் பாடினியாக நியமிக்கலாமா என்று பாண்டிய மன்னர் ஸ்ரீவல்லபன் புள்ளனை நோக்கிக் கேட்டார். இப்போது உன் யாழிசையோடு உன்னுடன் நூறு யாழ் ஒலிப்பதையும் கேட்டு அவர் குதூகலமடைவார். இங்கேயே இரு பைரவி! மன்னரிடம் சென்று உன்னை அழைத்து வர அனுமதி பெற்று வருகிறேன்'' என்று கூறி, எயினன் அரசர் இருப்பிடம் சென்றான்.

திரும்பி வரும்போது வெற்றியுடன் கூத்தாடிக்கொண்டே வந்தான். பைரவியின் முகவாயை மெல்லப் பிடித்துக் கொஞ்சலாக, ''இன்னும் ஐந்து நாழிகைக்குள் உன்னைச் சந்திக்கச் சம்மதிக்கிறார். ஆனால் உன்னுடன் வந்தவர்களை அவர் சந்திக்க விரும்பவில்லை'' என்றான்.

''அப்படியென்றால் நான் திரும்பிப் போய்விடுகிறேன். அவர்கள் என்னுடன் சேர்ந்து பாண்டிய மன்னர் மீது பரணி பாடப் போகிறார்கள். அவர்கள் உடன் வரவில்லை என்றால் எனக்கு மட்டும் இங்கென்ன வேலை? சோழ நாட்டிலுள்ள பாணர்கள் அனைவரும் வந்திருக்கிறார்கள் என்றால் உங்கள் மன்னரின் பெருமை எவ்வளவு உயர்ந்திருக்கிறது, தெரியுமா? அதை நீங்கள் ஏன் அவரிடம் எடுத்துச் சொல்லவில்லை?'' என்று பைரவி கோபம் கொண்டவளைப் போல் கேட்டாள்.

''ஆம்; நான்தான் எடுத்துச் சொல்லவில்லை. அரசர் எதிரில் நீ பாடுவது கூட எனக்கு விருப்பமில்லை. என் உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிகிறது. உன் இசைப் புலமையையும் அழகையும் பார்க்கும் மன்னர் உன்னைத் தன்னுடையவளாக்கிக் கொண்டால்? என்றாலும் சிறிது நேரம் நீ பாடுவதற்கு நான் சம்மதித்தேன். மது மயக்கத்திலே உள்ள மன்னர் யாழிசையில் மயங்கி அப்படியே உறங்கிவிடுவார். நானும் மயங்கும் நிலையில் இருப்பேன். மதுவினாலன்று; இசையினால், உன் அழகினால். மாளிகை மேல்மாடத்திற்குச் சென்றுவிடுவோம். அங்கே தனித்திருப்போம்...'' எயினன் சொற்கள் தடுமாறி வெளிவந்தன.

சரி என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தாள். பைரவி உடன் வந்த நூறு பேரில் தலைவராயுள்ளவரை அணுகி ஏதோ கூறினாள். பிறகு எயினனிடம் வந்து,

''அப்படியென்றால் இவர்கள் மாளிகை வெளிவாயிலருகே உட்கார்ந்திருக்கட்டும். திரும்பிப் போகச் சொல்வது முறையாகாது'' என்றாள்.

எயினன் தலையசைத்தான்.

பாண்டிய மன்னர் ஸ்ரீவல்லபனின் எதிரே மதுக்கிண்ணம் திரும்பி வழிந்தது.

''ஏ பெண்ணே! நீதான் பாடினியா? நன்றாகப் பாடுவாயா?'' என்று அரசர் வாய் குழறக் கேட்டார்.

''ஆமாம் அரசே!'' என்று பணிவுடன் கூறினாள் பைரவி.

''என்ன பாடுவாய்?''

''எல்லாம் பாடுவேன்.''

''யாழினின்று மாறுபட்ட புது இசைக்கருவி ஒன்றைப் பல்லவ மன்னன் கண்டுபிடித்தானே தெரியுமா?''

''பரிவாதினி... வீணை.... தெரியும்...''

''அதை மீட்டுவாயா?''

''ஓ...''

''இப்போதே மீட்ட முடியுமா?''

''பரிவாதினி வீணையைப் பல்லவர்கள் இரகசியமாகப் பாதுகாத்து வருகின்றனர். எனக்கு அது கிடைத்தால்...''

''ஆ! இரகசியமா? பாடினிப் பெண்ணே! உனக்கு அந்த வீணை தானே வேண்டும்? இன்னும் இரண்டொரு நாள்களில் காஞ்சி நோக்கி நமது படைகள் செல்லும். நீயும் உடன் வருகிறாய். அங்கே பல்லவர்களை வென்று பரிவாதினியை மீட்டு உனக்குப் பரிசாகத் தருகிறேன். இப்போது நீ பாட இருக்கும் பண்ணின் பெயர் என்ன?''

''நான் யாழை மீட்டியவாறு பாடுகிறேன். நீங்களே கூறுங்கள், பண்ணின் பெயரை...'' என்று கூறிய பைரவி யாழை மீட்டினாள்.

இரவிலே விழித்தெழுந்து குயில்கள் இசைக்கின்றனவா? அருவி நீர் தன் ஓசையை மாளிகைக்குள் கொண்டு வந்துவிட்டதா?

''யாதும் ஊரே யாவரும் கேளிர்.... தீதும் நன்றும்...'' பைரவி பாடிக் கொண்டிருந்தாள்.

''இது... இது... எங்கள் நாட்டுப் புலவர் பாடியது. நீ இதை எப்படி அறிந்தாய் பாடினிப் பெண்ணே?'' - மன்னரிடமிருந்து சொற்கள் தடுமாறி வெளிவந்தன.

பைரவி மறுமொழி கூறவில்லை. பாடினாள், பாடினாள், பாடிக் கொண்டேயிருந்தாள். மது மயக்கமும், இசை இன்பமும் ஒன்று சேர மன்னர் மஞ்சத்தில் சாய்ந்தார்.

பைரவி திடீரென்று பாட்டை நிறுத்தினாள். அந்த நிசி வேளையில் அவள் யாழிசையை நிறுத்தியது காற்று நின்றது போலிருந்தது. அருவிச் சலசலப்பு ஒய்ந்தது போல் தோன்றியது.

மறுநொடி பலர் பரபரப்புடன் ஓடிவரும் ஓசை. வாளோடு வாள் மோதும் ஒலி; சொல்லில் அடங்காத பயங்கரக் கூக்குரல்.

மாளிகையைச் சுற்றித் திடீரென நெருப்பு பிடித்துக் கொண்டது. மாளிகைக்குள் இருந்த பாண்டிய வீரர்கள் செய்வதறியாது தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடும் பேரோசை. எதிர்த்து நின்றவர்கள் படுகாயமுற்று பூமியில் ஓலமிட்டுச் சாயும் கூக்குரல். மாளிகை அல்லோலகல்லோலப்பட்டது.

பைரவியுடன் யாழெடுத்து வந்திருந்தவர்கள் கரங்களில் யாழில்லை. கூரிய வாளிருந்தது. அவர்கள் பாணர்கள் அல்லர்; வீரர்கள். அவர்கள் இடமும் வலமுமாகச் சுழன்று சுழன்று தாக்கினர். மாளிகை மீதிருந்த கயற்கொடி கிழித்தெறியப்பட்டது. புலிக்கொடி ஏற்றப்பட்டது.

பல்லவர் படைகளின் ஒரு பகுதி நான்கு புறமும் சூழ்ந்து கொண்டது.

மற்றொரு பகுதி உறையூரை நோக்கி விரைந்தது. ஆதித்தன் படைகளும் வழியில் சேர்ந்து கொண்டன.

குதிரை மீது ஏறி விரைந்து கொண்டிருந்த பல்லவச் சக்கரவர்த்தி அபராஜிதன் வழியில் ஒரிடத்தில் குதிரையை நிறுத்தினான்.

இளவரசன் ஆதித்த சோழன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

ஆதித்தனை அபராஜிதன் அன்பு மிகுதியால் இறுகத் தழுவிக் கொண்டான்.

''சோழ இளவரசே! தங்கள் தந்தை நலமா? தங்களை இவ்வளவு சீக்கிரத்தில் சந்திக்க முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்று அன்பு வெள்ளம் விழிகளிலும் சொற்களிலும் பொங்கக் கூறினான்.

''பல்லவ மாமன்னரே! தக்க சமயத்தில் வந்தீர்கள். இல்லாவிடில் போரின் போக்கே மாறியிருக்கும். நந்திபுரக் கேட்டை வீழ்ந்திருக்கும். தாமதம் செய்யாமல் பாண்டியர் படைகளை வளைத்துக்கொண்டு சிறைப்படுத்துவோம். நமக்குக் குதிரைகள்தாம் வேண்டும். குதிரை மீதுள்ள வீரர்களை மதுரைக்கு ஓட்டி விடுவோம்'' என்று ஆர்வமும் வெற்றிச் செருக்கும் மிகப் பேசினான்.

''நண்பரே, ஆருயிர் நண்பரே!'' என்று அபராஜிதன் பாசத்தால் பெருக்கெடுத்த விழிநீரைக் கொண்டு ஆதித்தன் தோள்களை நனைத்தான்.

மண்ணியாற்றங்கரை அமைதியுடன் காட்சி அளித்தது. மண்ணியாற்றங் கரையிலுள்ள பாண்டிய மாளிகை தீயில் கருகிப் போய்க் காட்சியளித்தது. சின்னாபின்னமாகக் கிடந்த பாண்டிய வீரர்களின் சடலங்களைப் பணியாள்கள் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர். பாண்டிய மன்னர், ஆபத்துதவிப் படை வீரர்களால் உயிர் காக்கப்பட்டு மதுரைக்குத் தப்பி ஓடிவிட்டார். பாண்டியர்கள் புதிதாக வாங்கிய குதிரைகள் பல ஆதித்தன் திட்டப்படி சோழர்கள் வசமாயின.

தஞ்சை மாநகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. சோழ இளவரசனின் வெற்றியை மக்கள் பெரிதும் கொண்டாடினர்.

தஞ்சைக் கோட்டைக்குள் ஆதித்தனும், பல்லவ மாமன்னர் அபராஜிதனும் கம்பீரமாக நுழைந்தபோது, மக்கள் இருபுறமும் கூடி நின்று வாழ்த்தி வரவேற்றனர்.

14

நோயில் நலிவுற்ற விஜயாலய சோழ மன்னரை மெல்ல மெல்ல அவை அரங்கத்தில் கைத்தாங்கலாகக் கொணர்ந்து அமர்த்தினர். அபராஜித பல்லவனை விஜயாலயன் வரவேற்றார். அவையில் பல கவிஞர்களும், அறிஞர்களும், மந்திரி மண்டலத் தாரும் கூடி நின்றனர்.

''அபராஜித வர்மரே! தக்க சமயத்தில் தாங்கள் வந்திராவிடில், சோழநாட்டுத் தலைவிதியே மாறியிருக்கும். சோழநாட்டுத் தலைவிதி மாறினால் பல்லவ நாட்டைப் பற்றிக் கேட்க வேண்டாம்'' என்று அபராஜிதனைப் புகழ்ந்தார் விஜயாலயன்.

''தக்க சமயத்தில் தாங்கள் நல்லதொரு தூதுவரை அனுப்பினீர்கள். அதனால் தாங்கள்தான் மிகுந்த பராட்டுதலுக் குரியவர்'' என்றான் அபராஜிதன்.

''அந்தப் புகழ் இதோ நிற்கிறாளே, வீர மகள் பொன்னருவிக்குப் போய்ச் சேரும். அவளுடைய அத்தான், துணிவுடன் காஞ்சிக்கு விரைந்து தங்களிடம் செய்தியைத் தெரிவித்தான்...'' என்று கூறும் போது, பொன்னருவியின் அத்தான் சூலநாதன் குறுக்கிட்டு, ''நான் காஞ்சிக்குச் செல்ல இதோ நிற்கும் பாடினி பைரவிதான் காரணம்...'' என்றான்.

பைரவி என்றவுடன் அனைவரும் பைரவி நிற்கும் பக்கம் நோக்கினர்.

விஜயாலயன் பைரவியை அருகே அழைத்தார்..''அவையோர் களே! பைரவியின் பங்கு இந்தப்போரில் மகத்தானது. அவள் தன் பெயருக்கு மாசு ஏற்படும் என்று அறிந்தும் துணிவுடன் செயலாற்றினாள். சோழநாட்டுத் துரோகி என்ற ஏச்சுக்கும் காரணமானாள். ஆனால் அவள் தக்க சமயத்தில் திட்டம் வகுத்திராவிடில் நாம் வென்றிருக்க முடியாது. சில நாள்களுக்கு முன்பே அவள் என்னைச் சந்தித்தாள். யாழுடன் பாண்டிய மன்னரைத் தனியே சந்திக்கப் போவதாகக் கூறினாள். அவ்வாறே செய்தாள்...'' என்று அவர் கூறி நிறுத்தியவுடன், பொன்னருவி வியப்புடன், ''அரசே! நான் என் உயிர்த் தோழியைத் தவறாக நினைத்தேன். அவள் சேவை மகத்தானது. நடுநிசியில் வந்து கதவிடித்து பாண்டியர் மாளிகைக்குச் சென்று யாழிசைக்க என்னையும் அழைத்தாள். நான் அவளைக் கடிந்து பேசிவிட்டேன். பைரவியின் மகத்தான சேவை இப்போதுதான் புரிகிறது'' என்றாள்.

இளவரசன் ஆதித்த சோழன், பைரவியின் பக்கம் திரும்பிப் புன்முறுவல் பூத்தான்.

"அரசர் பைரவியை ஆதரிக்கிறார் என்றால் ஏதோ உண்மை மறைந்திருக்கிறது என்று அப்போதே முடிவு செய்துவிட்டேன். அதனால்தான் நான் குறுக்கிட்டு ஏதும் பேசவில்லை. பைரவியின் சேவையை நாம் பாராட்டி அவளுக்குப் பரிசுகள் வழங்க நான் மன்னருக்குப் பரிந்துரை செய்கிறேன். பாண்டிய மன்னன் எதிரே யாழ் மீட்டச் சென்றபோது, உடன் மாறுவேடத்தில் சோழ வீரர்களையும் அவள் அழைத்துச் சென்றிருக்கிறாள். பாடலை நிறுத்தியவுடன் திடீரெனத் தாக்க வேண்டும் என்பது அவளுடைய திட்டம். அவளுடைய திட்டம் பலித்தது. பாண்டிய மன்னர் உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பி ஓடிவிட்டான். மன்னன் பின் வாங்கியதும் பாண்டியப் படைகளும் சிதறுண்டன... பைரவி! உனக்கு என்ன பரிசு வேண்டும்? கேள்" என்றான்.

பைரவி மௌனமாயிருந்தாள். சோழமன்னர் விஜயாலயன் அவளை நோக்கி, "பைரவி! வேண்டியதைக் கேள். எவ்வளவு கிராமங்கள் பரிசாக வேண்டும்? பட்டும், பட்டாடையும், பொன்னும், மணியும் வேண்டுமா?" என்று கேட்டார்.

"சோழ மன்னர் அவர்களே! பல்லவச் சக்கரவர்த்தி அவர்களே! இளவரசர் அவர்களே! பரிசு பெறவேண்டும் என நான் இந்தப் பணியைச் செய்யவில்லை. ஒரு நாட்டிற்கு அதன் மக்கள் செய்யும் அடிப்படைக் கடமையைத்தான் செய்தேன். பாண்டிய ஒற்றர் தப்பி ஓடிவந்தபோது மனிதாபிமானத்துடன் அவரைக் காப்பாற்றினேன். பிறந்த நாட்டிற்கு விசுவாசமாயிருப்பது அந்த நாட்டுப் பிரஜையின் கடமை. விசுவாசமுள்ள ஒருவன் ஒற்றனாக விளங்குகிறான். ஆனால், வேற்று நாட்டவரால் துரோகி என்று பழித்துக் கூறப்படுகிறான். பாண்டிய ஒற்றனைக் காப்பாற்றியதற்காக எனக்கும் துரோகப் பட்டம் வந்து சேர்ந்தது. ஆனால் நான் பாண்டிய ஒற்றரின் இசையில், கொள்கையில் மனத்தைப் பறிகொடுத்தேன். அவரும் என்னிடம் காதல் கொண்டார். எனக்காக ஏதும் செய்ய விரும்பினார். நான் காதலைப் பயன்படுத்திக் கொண்டேன். நான் பிறந்த சோழ நாட்டிற்குத் தக்க தருணத்தில் உதவி செய்யத் திட்டமிட்டேன். என் விழிகள் அவர் வாளை வென்றன. அவர் இப்போது தங்களால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார். நான் பாராட்டும் பரிசும் -பெற நிற்கிறேன்..." என்று கூறும்போது விஜயாலயன் குறுக்கிட்டு, "போரில் அகப்பட்டுக் கொண்ட எதிரி நாட்டைச் சேர்ந்தவரைச் சிறையில் அடைப்பது தவறல்லவே?" என்று கேட்டார்.

"தவறில்லைதான். ஆனால், குற்றத்தைப் பொறுத்து விடுதலை செய்வதும் ஓர் அரசரின் பெருந்தன்மையைக் காட்டும்" என்றார்.

"அது சரி, பைரவி! உனக்கு வேண்டிய பரிசை நீ கேள். தருகிறேன்."

"நிச்சயமாக நான் கேட்கும் பரிசை நீங்கள் தருவீர்களா?"

"உறுதியாக! என்னால் முடியாத பரிசாக இருந்தால் அதைப் பல்லவ மன்னர் தருவார்."

"அரசே! என் விழிகளுக்கு அடிமையானவரை, தனது நாட்டு மன்னருக்குத் தோல்வி ஏற்படச் செய்யக் காரணமாயிருந்த எயினரைத் தாங்கள் விடுதலை செய்யவேண்டும்" என்று கூறி மன்னரின் முகத்தை நோக்கினாள்.

அவையிலுள்ளவர்களிடமிருந்து வியப்புக் குரல் எழுந்தது.

"விடுதலையானவுடன் நானும் அவரும் வேறு எங்காவது கண் காணாத நாட்டிற்குச் சென்று இசை பாடிக் காலங்கழிப்போம்" என்றாள் பைரவி.

சிறிது நேரம் சபையில் மௌனம் நிலவியது. விஜயாலயன் என்ன முடிவு கூறப் போகிறாரோ என்று சபையே எதிர்பார்த்தது.

"பைரவி! உன் கோரிக்கையை ஏற்கிறேன். உன் உள்ளங்கவர்ந்த எயினனை விடுதலை செய்ய உத்தரவு இடுகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. நீங்களிருவரும் திருமணம் புரிந்துகொண்டு சோழ நாட்டிலேயே இருக்கவேண்டும்."

பைரவி மிகுந்த வணக்கத்துடன், "மன்னர் பிரானே! தங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொல்வதற்குப் பொறுத்தருள வேண்டும். நாங்கள் இந்த நாட்டிலிருந்தால் ஒருவேளை என் காதலருக்கு மீண்டும் தன் திருநாட்டின் நினைவு வந்து அந்த நாட்டிற்கு உதவியாக ஏதாவது செய்யத் தோன்றலாம். எங்கள் கொள்கையான, 'எல்லாம் எங்களுடைய ஊர்; அனைவரும் நம் நண்பர்கள்' என்ற உயர்ந்த கொள்கையைக் கருத்தில் கொண்டு எங்காவது தொலைவிலுள்ள நாட்டிற்குச் சென்றுவிடுவோம். எங்கு சென்றாலும் சோழ மாமன்னர் விஜயாலயரை 'வாழ்க வாழ்க' என்று எப்போதும் வாழ்த்திக்கொண்டே இருப்போம்" என்றாள்.

எயினன் விடுதலை செய்யப்பட்டான். மலர்ந்த முகத்துடன் பைரவியின் கரங்களைக் கோத்துக்கொண்டு அந்த அவைக்கு வணக்கம் தெரிவித்து, எயினன் அங்கிருந்து நகர்ந்தான்.

பைரவியும் எயினனும் சென்றுகொண்டே இருந்தனர்.

"பைரவி! கடைசியில் நீதான் வென்றாய். என் வாளை விட உன் விழிகளுக்குத்தான் சக்தி அதிகம்" என்று எயினன பைரவியின் செவிகளில் மெல்லக் கூறினான்.

பைரவியின் சிரிப்பொலி காவேரி பாயும் பகுதி எங்கும் எதிரொலித்தது.

"எந்த நாட்டை யார் வென்றார்கள்? யாரிடம் யார் தோற்றார்கள்? நமக்கு அனைவரும் வேண்டியவர்களே!" என்று கூறி பைரவி நகைத்தாள்.

முன்னுரை

வரலாற்று அடிப்படையில் சிறுகதைகளோ, நாவலோ எழுதும் போது, உண்மைச் சம்பவ அடிப்படை இருந்தால், கடந்த காலச் சமூக வாழ்க்கை, நெறிமுறை, ஆட்சி ஆகியவற்றை எளிதில் அறிய முடியும்.

வரலாற்றுக் கதைகளில் பெரும்பாலும் அரச குடும்பத்தவர் களின் சொந்த வாழ்க்கையே சித்தரிக்கப்படுகின்றன; அந்தப்புர மகளிர், பட்டத்தரசி, இளவரசர், இளவரசி, அவர்கள் இதயத்தில் பூத்துப் பொலிந்த காதல்; பகைவர் மீது போர், ஒற்றர்கள் சூழ்ச்சி – என்று மன்னர்களைச் சுற்றியே சம்பவங்கள் கற்பனை செய்யப்படுகின்றன என்று விமர்சிப்பவர்கள் உளர்.

கடந்த காலச் சம்பவங்களைக் கருவாகக் கொண்டு கற்பனையும் சேர்த்து நாவல் புனையும் போது அரசர்களைத் தவிர அவர் ஆட்சிக் காலத்து மக்கள் வாழ்ந்த நிலை; அவர்கள் உணர்ச்சிகள் இவற்றையும் கருத்தில் கொண்டு எழுதினால் தொன்று நிகழ்ந்தனவற்றைப் படிப்போர் அறிய உதவியாக இருக்கும்.

அந்த வகையில் நான் எழுதும் வரலாற்றுப் புதினங்களில் நாட்டு மக்களையும் கதைப் பாத்திரங்களாகச் செய்து கதையில் அவர்களுக்கு முக்கிய இடம் அளிக்கத் தவறுவதில்லை.

வரலாற்று நாவல் எழுதச் சம்பவங்களைத் தேடிக் கல்வெட்டுகள், சாசனங்கள், ஆராய்ச்சியாளர் எழுதிய நூல்கள் இவற்றைப் புரட்டிக் கொண்டிருந்த போது கல்வெட்டுச் செய்தி ஒன்று என் மனததை ஈர்த்தது.

குலோத்துங்க சோழ மன்னரது ஆட்சிக் காலத்தில் பெண்கள் வறுமை நிலையால் தம்மை விற்றுக் கொண்ட செய்தி காணப்பட்டது.

அந்த அரசரது முப்பதாம் ஆட்சி ஆண்டில் வயிராதராயர் என்ற தலைவரும் அவர் மனைவியும் அடிமைகள் பலரை உடையவரா யிருந்தனர் என்ற செய்தியும் கல்வெட்டிலிருந்து அறிய முடிந்த செய்தி.

என் மனத்தில் பல ஆண்டுகளாக இந்தச் செய்தி ஊறிக் கிடந்தது. 'மாலைமதி' மாத வெளியீட்டில், சரித்திர நாவல் ஒன்று வேண்டும் என்று அன்பர் பால்யூ அந்தப் பத்திரிகை சார்பில் கேட்டபோது, இந்தக் கருவை உருவாக்க எண்ணினேன். 'அவனுக்கே அவள் இதயம்' என்ற பெயரில் நூல் வடிவமாக வெளிவருகிறது.

குலோத்துங்க சோழர், கோப்பெருஞ்சிங்கன், காஞ்சி மீது படையெடுத்த தெலுங்கு நாட்டுச் சிற்றரசன், குலோத்துங்கன் மகள் எல்லாரும் வரலாற்றுப் பாத்திரங்கள். வயிராதராயர் என்ற பெயர் கொண்ட தலைவரும் நிஜமே. அடிமைகளாகத் தங்களைத் தாங்களே பெண்கள் வறுமை காரணமாக விற்றுக் கொண்ட செய்தியும் உண்மை. பெண்கள் பெயர், அவர்களது கற்பனை. இந்த நான்கு கோட்டிற்குள் நிகழ்ந்த சம்பவங்கள் மட்டுமே என் கற்பனை.

– விக்கிரமன்

மங்கலத்தேவன் மகள்

1

அம்பலவாணன் திருக்கோயிலின் மணி ஓசை 'டாண் டாண்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. சந்தியா காலப் பூசையைக் காணக் கூத்தரசனின் சபை முன்பு மக்கள் கூடியிருந்தனர். பொன் விமானத்தின் மீது தன் கதிர்க்கரங்களை நீட்டித் தழுவிய கதிரவனின் பொன் ஒளியில் விமானம் மேலும் புத்தழகு பெற்று விளங்கியது.

குமாரநம்பியும் தீப ஒளி காணக் கோவிந்தராசர் சந்நிதி ஓரம் காத்திருந்தாலும், அவன் விழிகள் கீழைக் கோபுர வாயிலை நோக்கியே இருந்தன. தாளத்தின் ஓசையும், முழவொலியும், வீணையின் நாதமும், பதிகப் பாடலும் முடிந்து திருநீறு பெற்று மக்கள் மெல்லக் கலையத் தொடங்கிய பிறகும் தூண் அருகே நின்ற குமாரநம்பி நகரவில்லை.

"நம்பி!" என்ற குரல் கேட்டவுடன் நம்பி திடுக்கிட்டுத் திரும்பினான்.

மங்கலத்தேவன் நின்று கொண்டிருந்தார். அவருடைய அடர்ந்த புருவமும், முகத்தில் பாதியை மறைக்கும் மீசையில் பாதி நரைத்திருந்தாலும், அவருடைய முகத்தில் மூப்பின் சின்னங்கள் ரேகை விட்டிருந்தாலும் அவருடைய குரலில் கம்பீரம் மட்டும் குறையவில்லை.

குமாரநம்பி முகத்தில் தேங்கியிருந்த ஏமாற்ற உணர்ச்சியை மாற்றிக் கொண்டு, "வணக்கங்க, நலமாயிருக்கிறீர்களா?" என்று மெல்லிய நகையுடன் கேட்டான்.

"நலந்தான் தம்பி! தில்லை பொன்னம்பலவாணர் அருளாலும், குலோத்துங்க சோழ சக்கரவர்த்திகளின் ஆதரவாலும் செளக்கியத் துக்கு ஒரு குறையும் இல்லை. நீ நலமாயிருக்கிறாயா? உன் தாயார் நலமாயிருக்கிறார்களா?" என்று நலம் விசாரித்தார் மங்கலத்தேவன். மங்கலத் தேவனுக்குத் தெரியாத குடும்ப விஷயங்களே இராது எனலாம். சோழ நாட்டின் முக்கியப் புள்ளிகளைப் பற்றிய செய்தியைத் தெரிந்து வைத்திருப்பது அவரது இயற்கைக் குணம் மட்டும் இல்லை; அவரது வேலையுங்கூட

நம்பியின் முகம் மெல்ல மாறியது. அவனது விழிகளில் துக்கத்தின் சாயை இருந்தாலும், கோபுர வாயிலை எதிர்நோக்கிப் பார்க்கும் ஏக்கமும் இருந்தது.

"தாயார் காலமாகி ஆறு மாதங்களாகிவிட்டன. பாட்டா" என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

மங்கலத்தேவன் குரலில் சோகம் ஒலிக்க, "அந்தத் துயரச் செய்தி காதில் விழுந்தது. ஆனால், உண்மை தானா என்று அறிந்து கொள்ள முடியவில்லை. உம்...." என்று பெருமூச்சு விட்டவர், "நீ இன்று இரவு இங்கேயே தங்கிவிடப் போகிறாயா?" என்று கேட்டார்.

சிதம்பரத்தில் இரவு தங்குவதா அல்லது ஊருக்குத் திரும்பி விடுவதா என்று அவன் இன்னும் முடிவு செய்யவில்லை. கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து பல ஊர்களுக்கு விஜயம் செய்துவரும் குலோத்துங்க சோழ சக்கரவர்த்தியின் மெய்க்காவல் படை வீரர்களுள் குமாரநம்பியும் ஒருவன்.

குலோத்துங்க சோழர், தில்லை அம்பலவாணரைத் தரிசித்து, நூற்றுக் கால் மண்டபத்தில் தங்கியிருந்து நாள்தோறும் சபையை நடத்தி அன்று தான் சிதம்பரத்திலிருந்து புறப்பட்டார். குமாரநம்பி மட்டும் உத்தரவு பெற்றுச் சிதம்பரத்திலேயே அன்று தங்கிவிட்டான். சொந்த ஊருக்குச் சென்று வருவதாக அவன் காரணம் கூறியிருந்தாலும் வேறு காரணம் அவன் இதயத்துக்கு மட்டுமே தெரிந்தது.

அந்த மூன்று நாள்கள் பழக்கம் அவனிடம் எவ்வளவோ மாறுதலை ஏற்படுத்தி விட்டது.

அந்த விழிகளுக்குத் தான் எவ்வளவு சக்தி! அவன் அந்த நாள்களின் அனுபவத்தைச் சற்று நினைவுபடுத்திக் கொண்டான்.

அவள் தந்தையின் பக்கமாக மிக அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டிருந்தாலும் அந்த விழிகளுக்கு அச்சம் என்பதே கிடையாதோ? அவை சுழன்றன, துள்ளின, பாய்ந்தன, பாய்ந்து இதயத்துக்குள் நுழைந்தன.

"ஐயா! சக்கரவர்த்திகளை நான் சந்தித்துச் சமூகத்திடம் வேண்டுகோள் ஒன்று தெரிவிக்க வேண்டும்" என்று அவளுடைய தந்தை மிகவும் பயபக்தி புடன் அவனிடம் கேட்டபோது, நம்பி உள்ளூர நகைத்துக் கொண்டான். சக்கரவர்த்திகளைச் சந்திக்க வேண்டும் என்று கேட்பதற்குக் கூட இவ்வளவு அச்சமா என்று வியந்தான்.

"பெரியவரே, உமது பெயர் என்ன? எந்த ஊர்? உம்மைச் சக்கரவர்த்தி களுக்கு முன்பே தெரியுமா?" என்று நம்பி, தன் அதிகார தோரணையுடன் கேட்டுத் தன் பார்வையை அவரது பின்புறம் நின்றிருந்த விழி அழகியின் பக்கமும் செலுத்தினான்.

"என் பெயர் ஆதிரையன் மாதேவன். என்னைச் சக்கரவர்த்தி தெரிந்து கொண்டிருக்க முடியாது. வெள்ளாற்றங்கரை ஓரம் வீரப்பட்டினத்தில் சிறிது நிலங்களை வைத்துக் கொண்டு உழுது பயிரிட்டு வாழ்ந்து வருகிறேன். இவள்

என்னுடைய மூத்த மகள் சிந்தாமணி" என்று கூறித் தம் மகள் பக்கம் திரும்பினார்.

இதுவரையில் கம்பீரமாக விழிக் கணைகளை வீரனான நம்பியின் மீது வீசிக் கொண்டிருந்த சிந்தாமணி தலையைக் குனிந்து கொண்டாள்.

இவ்வளவு விவரமும் தனக்குத் தெரிய வேண்டுமா என்று நம்பி ஒரு கணம் யோசித்தான். அவர் கூறியவற்றைக் காதிலே போட்டுக் கொள்ளாதவன் போல், "தாங்கள் சக்கரவர்த்திகளை எதற்காகச் சந்திக்க வேண்டும்?" என்று ஒரு கேள்வியை வீசினான்.

அதுவரை மிகவும் பணிவாகப் பேசிய மாதேவன், 'ஐயா, தங்களிடம் தெரிவிக்கவேண்டிய செய்தி இல்லை அது. எனக்குச் சக்கரவர்த்திகளைத் தான் பார்த்துப் பேச வேண்டும்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியது கேட்டு நம்பி ஒரு கணம் திகைத்தான். கோபம் கொண்டு விட்டாரோ?

"சக்கரவர்த்திகள் ஓய்வெடுக்கச் சென்று விட்டார்கள். இப்போது சந்திக்க முடியாது" என்றான்.

இப்போது அவன் விழிகளும் சிந்தாமணியின் விழிகளும் நேருக்கு நேர் சந்தித்தன. மட்டியூர், கழிக்கோட்டைப் போர்க்களங் களில் அவன் பாண்டியப் படைவீரர்களை நேருக்கு நேர் சந்தித்திருக் கிறான். அப்போது காணாத வேலின் வேகத்தை இப்போது இங்கு அதிகமாகவே உணர்ந்தான்.

மாதேவன் பேசுவதற்கு முன்பே அவன் பேசினான்; "அவசியம் பார்க்க வேண்டுமென்றால் இன்று மாலை 'இராஜராஜ விஜயம்' நாடகத்துக்குப் பிறகு வேண்டுமானால் ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

அவர் திரும்பித் தம் மகளைப் பார்த்தார். அந்தப் பார்வை நாடகத்தைக் காணத் தங்கியிருக்க வேண்டுமா என்று கேட்பது போல் தோன்றியது.

"வேண்டாம் அப்பா! நாம் ஊர் திரும்பி விடுவோம்" என்று சிந்தாமணி மெல்லக் கூறினாள். அந்த மென்மையான சொற்களில் கடுமையும் அழுத்தமும் கலந்திருந்தன.

"ஏம்மா, உனக்கு நாடகம் பார்க்க ஆசையில்லையா? நேற்றுச் சொன்னாய், நாடகம், சித்திரக் கூடத்தில் நடக்கும் நடனம் எல்லாம் பார்க்க வேண்டு மென்றாய்.....?" என்று மகளைக் கேட்டார் தந்தை.

"ஆமாம்; நேற்று ஆசையாயிருந்தது. இன்று அந்த ஆசை மாறிவிட்டது" என்று நம்பியைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

"அடடா, தங்கள் மகளுக்குக் கோபங்கூட வரும்போல் தோன்றுகிறது. இப்போதே அவளுக்குச் சக்கரவர்த்திகளைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணமோ? அது நிறைவேறாததால் மனமாற்றம்...." என்று மாதேவனைப் பார்த்தவாறு அவன் கூறினாலும் அவன் பார்வை சிந்தாமணியின் பக்கமே இருந்தது.

"சிந்தாமணி கோபப்படவே மாட்டாள்" என்று அவர் கூறுவதற்குள் அவள் குறுக்கிட்டாள்.

''ஆமாம்; எனக்குக் கோபந்தான். சக்கரவர்த்திகள் ஒய்வாக இருக்கும் போது சந்தித்து நமது வேதனையைத் தெரிவிக்காமல் பிறகு எப்போது சந்திப்பதாம்?'' என்று அவள் கூறும்போது உண்மையாகவே அதில் கோபம் மிகுந்திருந்தது. சிறிது நாணத்தால் சிவந்திருந்த அவளுடைய செழுமையான கன்னங்கள் சீற்றத்தால் சிறிது கறுத்ததும் தனி அழகாகத் தான் இருந்தது.

வேதனை - அவர்களுக்கு. என்ன வேதனையாயிருக்கும்? பயிர்த் தொழில் செய்வதால் உரமேறிய மேனி. வறுமையோ கவலையோ கண்டறியாத முகம்; அவர் வயதைக் குறைத்தே மதிப் பிட்டன. கம்பீரத்துக்குத் தந்தையைக் கொண்டிருந்த சிந்தாமணி அழகுக்குத் தாயைக் கொண்டிருக்க வேண்டும். சக்கரவர்த்தியைக் காணப்போகிறோம் என்பதற்காக எடுத்து அணியப்பட்ட புடைவையில் அழகாக நெய்யப்பட்ட அந்தப் பூங்கொத்துகள் நிறம் மங்கியிருந்தாலும் அவளுடைய மேனி புதுமலர் போல் பூத்துக் குலுங்கியது. பருவத்துக்குத் தலைவாயிலாகக் கச்சை மீறித் திகழும் மார்பகத்தின் மீது நம்பியின் விழிகள் செல்லும்போது அவள் சேலையை இழுத்துப் போர்த்தி, கரங்களைக் கட்டிக் கொண்டு நிற்கும் வடிவம் நம்பியின் இதயத்தில் மெல்லப் பதிந்தது.

'சக்கரவர்த்தி ஓய்வெடுக்கச் செல்லாதிருந்தால் இவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யலாம். இதில் நமக்கென்ன நஷ்டம்?' என்ற எண்ணத்துடன் மண்டபத்தின் ஒருபுறம் திரையிட்டு மறைக்கப் பட்டிருந்த இடம் வரை சென்றான். 'இப்போதே அரசரைச் சந்தித்து விட்டுத் திரும்பி விடுவார்களோ? 'சென்றால் என்ன? உனக்கு ஏன் கவலை?' என்று அவன் தன் கள்ள மனத்தைக் கேட்டுக் கொண்டான். மெல்லிய சிரிப்புத்தான் அதற்கு மறுமொழியாக வந்தது. சிந்தாமணியை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு உள்ளே சென்றவன் விரைவில் திரும்பி வந்தான்.

தூணைப் பிடித்தவாறு அவள் நின்று கொண்டிருந்தாள். மாதேவன் திருச்சுற்றை நோக்கியவாறிருந்தார். என்ன சொல்லப் போகிறானோ என்ற ஆவல் அவள் விழிகளில் முந்தி நின்றது.

''மன்னிக்க வேண்டும். அரசர் உறங்கிக் கொண்டிருக்கிறார். நான் கூறியது போல் இரவு சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்று நம்பி கூறினான்.

சக்கரவர்த்தியின் அந்தரங்க உதவியாளனாகத் திகழும் காவல் வீரனிடம் விளங்கும் பணிவு மாதேவனைக் கவர்ந்தது. 'சக்கரவர்த்தி தகுந்தவர்களைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்' என எண்ணிக் கொண்டார்.

''ஐயா, நீங்கள் எப்போதும் இங்கேயே இருப்பீர்களா?'' என்று மாதேவன் கேட்டார்.

''நான் இங்கு இல்லாவிட்டாலும், நீங்கள் இருக்குமிடம் வந்து தங்களை அழைத்துச் செல்கிறேன்.'' என்று நம்பி கூறிய இனிய சொற்கள் அவருக்கு இதமாக இருந்தன.

''நாங்கள் தில்லைக் காளி கோயில் வீதியில் தங்கி இருக்கிறோம். அங்கே வரவேண்டிய சிரமம் தங்களுக்கு வேண்டாம். இரவு நடக்கவிருக்கும் நாடகம் பார்க்க இங்கு நாங்கள் வந்து விடுகிறோம். 'இராஜராஜ விஜயம்' நாடகம் பார்த்துப் பல ஆண்டுகளாகி விட்டன. சிந்தாமணி பார்த்ததேயில்லை'' என்றார் மாதேவன்.

அவர்கள் தங்கியிருக்கும் இல்லத்துக்கு வருவதாக நினைத்து அவன் கூறவில்லை. நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது அந்த இடத்துக்கு வருவதாக எண்ணியே சொன்னான். இப்போது அவர்கள் இருக்குமிடம் தெரிந்து விட்டது. உம்; அவன் எதற்கு அங்கே போகப் போகிறான்?

தந்தையும் மகளும் நூற்றுக்கால் மண்டபத்திலிருந்து புறப்பட்டு விட்டார்கள். நம்பி அவர்கள் செல்வதையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான். சிந்தாமணி ஒரு முறையாவது திரும்பிப் பார்ப்பாள் என்று அவன் எண்ணி நின்றிருந்தான். அவள் திரும்பிப் பார்க்கவேயில்லை. தந்தையை ஒட்டியும், அவரது பின்புறமுமாக மாறி மாறி அவள் நடந்தாள். அவளுடைய நடையின் நளினம் அவன் உள்ளத்தில் புதுச் சிலிர்ப்பை அளித்தது. மார்பின் பாரம் தாங்காமல் வேதனையுறும் நுண்ணிடையும், அதனால் சற்று முன் சாய்ந்த நடையும், அதன் அசைவும், கரங்களின் நெளிவும், வாரித் தொங்கவிடப் பட்டிருந்த கூந்தல் பின்புறத்தே ஆடி அசையும் அழகும், கணுக்கால் தெரியச் சற்றுத் தூக்கிக் கட்டப்பட்ட சேலையும், மாநிறப் பாதங்களும், ஆகா - அவற்றைக் கண்டவாறே வாழ்நாளெல்லாம் இருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

'தந்தையும் மகளும் எதற்காகச் சக்கரவர்த்திகளைச் சந்திக்க விரும்பு கிறார்கள்? திருமணப் பருவத்திலுள்ள மங்கையையும் உடன் அழைத்துக் கொண்டு வந்திருக்கும் தந்தையின் கவலை என்னவாக இருக்கும்?' என்று நினைத்தவாறு நின்றிருந்த நம்பி அவள் ஒரு தடவையாவது திரும்பிப் பார்க்க மாட்டாளா என எதிர்பார்த்தான். அந்த விழிகளை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. இரண்டு மூன்று முறை நேருக்கு நேர் சந்தித்துப் பேசாமல் தன் விழிகளுடன் பேசிய அவள் ஒரு தடவையாவது திரும்பிப் பார்க்க மாட்டாளா என்று எதிர்பார்த்த நம்பி பெருமூச்சு விட்டவாறு அங்கிருந்த மண்டபத்துக்குள் சென்றான்.

தொலைவில் சென்று கொண்டிருந்த சிந்தாமணி அப்போது தான் திரும்பிப் பார்த்தாள். நம்பி உள்ளே செல்கிறான் என்பதையும் கவனித்தாள். அவளிடமிருந்து பெருமூச்சொன்று எழுந்தது. அந்த மெல்லிய ஒலியை அறிந்த மாதேவன் அவளைப் பார்த்து, ''என்னம்மா?'' என்று கேட்டு அவளுடைய கரத்தைப் பரிவோடு பற்றினார்.

''ஒன்றும் இல்லையப்பா! இன்று சக்கரவர்த்திகளைச் சந்திக்க முடியும் என்று நம்புகிறீர்களா?'' என்று கேட்டாள். அவள் குரலில் கவலை படர்ந்திருந்தது.

"எல்லாம் அந்த அம்பலவாணர் அருள்" என்று கூறிய மாதேவன் தம் நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

சிந்தாமணி சிரித்தாள்.

"என்னம்மா சிரிக்கிறாய்?" என்றார் அவர்.

"அம்பலவாணர் என்ற அழகான பெயரை அந்தக் கொடியவனுக்கு எப்படி வைத்தார்கள் என்று நினைக்கும் போது எனக்குச் சிரிப்பு வந்தது. அருள் உள்ளம் கொண்ட இறைவனுக்கு அம்பலவாணர் என்று பெயர். அந்தக் கொடிய வனுக்கும் அந்தப் பெயரா? ஆண்டவனும் அவர் பக்கந்தானே இருக்கிறார்?" என்றாள்.

அவர்கள் கீழைக்கோபுர வாசலைத் தாண்டி விட்டனர். மற்றக் கோபுரங்கள் கட்டப்படாத சமயம்.

மாதேவன் கோபுரத்தை ஒருமுறை வணங்கினார். "குழந்தாய்! அப்படிச் சொல்லி விடாதே. வயிராதராயர் எப்போதும் இதே குணத்துடன் இருந்தார் என்று நினைக்காதே" என்றார்.

"அது யாரப்பா வயிராதராயர்?" சிந்தாமணி வியப்புடன் கேட்டாள்.

"அம்பலவாணனுடைய பெயர் தான் வயிராதன். நானும் அவனும் ஒன்றாகப் படித்தவர்கள். இரண்டு பேருக்கும் கல்வியில் நாட்டம் செல்ல வில்லை. எனக்கு என் தந்தை வைத்துச் சென்ற மாந்தோப்பும், நஞ்சை நிலங்களும் இருந்தன. அவனுடைய தந்தை சுற்றுவட்டாரத்தில் செல்வாக்கு மிக்கவர். கிராம அதிகாரி. செல்வாக்குடன் செல்வமும் சேர்ந்தது" என்று பேசிக் கொண்டே நடந்தனர் இருவரும்.

"செல்வாக்கும் செல்வமும் எவ்வளவு அகந்தையைக் கொடுத்து விட்டன பார்த்தீர்களா? அவரையும், அவருடைய மகனையும் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை" என்று வெறுப்புடன் கூறினாள் சிந்தாமணி.

"சிந்தாமணி! வீதியில் உரக்கப் பேசக் கூடாது. அம்பல வாணனின் ஆட்கள் எங்கும் இருப்பர். நம்மைத் தொடர்ந்தும் வந்து கொண்டிருப்பார்கள்" என்று மெல்லச் சமாதானப்படுத்துவது போல் பேசினார் மாதேவன்.

"சக்கரவர்த்திகளைச் சந்திக்கும் போது நீங்கள் என்னையும் சற்றுப் பேச அனுமதியுங்கள். அப்பா! அந்த அம்பலவாணரின் அட்டூழியங்களை நான் அவரிடம் எடுத்துச் சொல்கிறேன். 'சோழ நாட்டில் இது போன்று யோக்கியப் பொறுப்பற்றவர்களைத் தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லாமல் போய்விட்டதா, என்று கேட்கிறேன். சக்கரவர்த்திகள் என் தலையைச் சீவி விட்டாலும் பயப்படவில்லை" என்று சிந்தாமணி திடமாகப் பேசியதைக் கேட்ட மாதேவனுக்கு வியப்பாக இருந்தது.

சிந்தாமணி உலகமே அறியாத சிறிய பெண் என்று முடிவுக்கு வந்தார் மாதேவன்.

அவர்கள் தங்கியிருந்த வீடு தில்லைக் காளியம்மன் வீதியில் இருந்தது. அவருடைய மனைவி வழி உறவினளான மூதாட்டி தேவ காரியத்தில்

ஈடுபட்டுத் தன் வாழ்நாள்களை ஓட்டி வந்தாள். சிறிய வீடு. கிராமத்திலிருந்து சிதம்பரம் வரும்போதெல்லாம் அவர் அங்கே தான் தங்குவார். செங்கமலத்தாச்சி அவரை அன்புடன் வரவேற்று உபசரிப்பாள். 'மருமகப்பிள்ளை' என்ற மரியாதையான சொல்லை அவள் சொல்லும் போது அவருக்கு மூதாட்டியிடம் பயபக்தி ஏற்படும். வருவாய் குறையாமல் செல்வாக்கோடு இருந்த போது செங்கமலத்தாச்சி காட்டிய மரியாதை, சற்றுச் சரிந்து வறுமையை எட்டிய இப்போதும் இருப்பது அவருக்கு வியப்பாகவே இருந்தது.

"மருமகப்பிள்ளே, வாங்க வாங்க.... அது யாரு? உங்க மகளா? சிவகாமியைப் பார்க்கிறாப் போலவே இருக்குது" என்று தன் பொக்கை வாயைக் காட்டிப் பேசி வரவேற்றாள் ஆச்சி.

சிந்தாமணி, அவள் தாயையே கொண்டிருந்தாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய அருமை மனைவி சிவகாமி திடீரெனக் காலமானதிலிருந்து சிந்தாமணியின் முகத்தைப் பார்த்தே வேதனையை மாற்றிக் கொண்டிருக்கிறார் மாதேவன்.

சிந்தாமணி மூதாட்டியை வணங்கினாள். மாதேவனும் மேல் துண்டை இடுப்பில் எடுத்துக் கட்டிக்கொண்டு வணங்கினார். தலைப் பாகையை அவிழ்த்து வைத்தார்.

"சக்கரவர்த்திகள் நூற்றுக்கால் மண்டபத்தில் வந்து தங்கி யிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். சமூகத்தைச் சந்தித்து வேண்டுகோள் தர நினைத்தேன். இவளும் சிதம்பரம் கோயிலைப் பார்க்க வேண்டும் என்றாள்" என்று தாம் வந்த விவரத்தை மாதேவன் கூறி முடித்தார்.

செங்கமலத்தாச்சி பெருமூச்சு விட்டாள். "நாடே கேள்வி முறையில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. மருமகப்பிள்ளே! காவல் அதிகாரிகள் பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறார்கள். சக்கரவர்த்தியோ தெற்கே பாண்டிய நாட்டோடு போர் புரிந்து கொண்டிருக்கிறார். 'அத்தி பூத்தது போல்' இப்போது சிதம்பரத்துக்கு வந்திருக்கிறார். அவர் காதுகளிலும் நாட்டு நடப்பு விழுந்திருக்கிறது" என்று மூதாட்டி சோழநாட்டின் சில பகுதிகளில் நடக்கும் அக்கிரமங்களைக் குறிப்பாகக் கூறினாள்.

மூதாட்டி நாட்டு விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பது குறித்து மாதேவன் வியப்படையவில்லை. கண்ணும், காதும் கூர்மையாக இருக்கும் வரை ஆச்சி, நாட்டு நடப்பைப் பற்றிப் பேசாமல் இருக்கமாட்டாள் என்பது அவருக்குத் தெரியும். வயிராதராயர் தம்மிடம் நடந்து கொள்ளும் முறையையும் செங்கமலத் தாச்சி தெரிந்து வைத்துக் கொண்டிருப்பாள். அதைப் பற்றி விசாரிப்பாள். சிறிது சிறிதாக விளைநிலங்களை விற்று வருவதைப் பற்றியும் அவள் அறிந்திருப்பாள். சுவாமி தரிசனம் செய்து விட்டுச் சக்கரவர்த்திகளையும் பார்த்துவர அவர் புறப்பட்ட போது ஆச்சி ஏதும் கேட்கவில்லை.

இப்போது தந்தையும் மகளும் திரும்பி வந்தவுடன் ஆச்சி, பரபரப்புடன், "சக்கரவர்த்திகளைச் சந்தித்தீர்களா?" என்று கேட்டாள். சிந்தாமணி தான் மறுமொழி கூறினாள்.

''பார்க்க முடியவில்லை பாட்டி! இரவில் கோயிலில் நாடகம் இருக்கிறதாம். நாடகம் முடிந்த பிறகு சந்திக்கலாம் என்று சொல்கிறார்கள்....'' என்றாள் சிந்தாமணி.

ஆச்சி ஏதும் பேசவில்லை. சக்கரவர்த்திகளைச் சந்தித்து என்ன பேசப் போகிறீர்கள் என்பதைப் பற்றியும் அவள் கேட்கவில்லை.

மாலை மறைந்து இருள் சூழ்ந்து விட்டது. சிதம்பரத்து அகன்ற வீதியின் முனைகளில் உள்ள தூண்களில் விளக்குகளை ஏற்றிக் கொண்டே முதியவர் ஒருவர் மெல்ல நடந்து சென்றார். வீடுகளின் வாயிலில் உள்ள மாடங்களில் அகல் விளக்குகள் ஏற்றி வைக்கப் பட்டன. விக்கிரம சோழன் திருவீதி வழியே குலோத்துங்கன் பவனி வருகிறார் என்பதை அறிந்து வீதியின் இருபுறமும் மக்கள் கூடியிருந்தனர். சிந்தாமணியையும் அழைத்துக் கொண்டு மாதேவன் அரச பவனியைக் காணச் சென்றார்.

சிந்தாமணிக்குக் காண்பன எல்லாம் ஒரே பிரமிப்பாக இருந்தது. சோழ மாமன்னரைக் காணப்போகிறோம் என்பதோடு, அவளுக்கு மற்றோர் ஆவலும் உள்ளத்தே உதித்தது. அவளுக்கே புரியவில்லை, ஏன் அந்த இளவீரன் நினைவு தனக்கு வருகிறது என்று. தில்லைப் பொன் விமானமும், நூற்றுக்கால் மண்டபமும் அவள் கண் எதிரே தோன்றிய போது, மண்டபத்து வாயிலில் நின்ற அந்த வீரனும் அவள் எதிரே தோன்றினான். அவன் பரிவோடு பேசியதும், இடையிடையே தன்னை நோக்கியதும் அவள் முன் தோன்றின. பரந்த மார்பும், கூர்மையான விழிகளும், மெல்லிய மீசையும் உணர்ச்சியைப் புலப்படுத்தும் அதரங்களும், திடமான கரங்களும், பேசும்போது முகத்தில் விளங்கும் ஒளியும் அவள் மனத்தில் ஆழப் பதிந்து விட்டன.

''சக்கரவர்த்திகளை நாம் எந்தவிதத் தடையும் இல்லாமல் போய்ப் பார்க்க முடியாதா அப்பா?'' என்று சிந்தாமணி கேட்டாள்.

''முடியாதம்மா! மெய்க்காவல் படையைச் சேர்ந்தவர்களின் அனுமதி வேண்டும்.''

''மண்டபத்தருகே நாம் சந்தித்தோமே, அந்த வீரர் மெய்க்காவல் படையைச் சேர்ந்தவர் தானே?''

''ஆமாம்; அவர்தான் நம்மை இரவு வரச்சொல்லியிருக்கிறார்; அவரால் மன்னரைச் சந்திக்க வைக்க முடியும் என நினைக்கிறேன்.''

''மெய்க்காவல் படை வீரர்கள் இப்போது பவனியின் போதும் வருவார்களா?''

இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்ட அவள் தந்தையின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள், அவர் தவறாக நினைத்து விடப் போகிறாரோ என்று.

''எப்போதும் வருவார்கள். அவர்களைத் தவிர வேளக்காரப் படையினர் இருக்கிறார்களே, அவர்களும் வருவார்கள்.''

தனக்குள்ளே அவள் மெல்லச் சிரித்துக் கொண்டாள். இப்படிச் சுற்றி வளைத்துக் கேட்பதற்கு மாறாக 'அவர்' வருவாரா என்றே கேட்டிருக்கலாமே?

பவனி எப்போது வரும் என்று ஆவலுடன் சிந்தாமணி எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

சங்கொலி எழுந்தது. காளைகள் மீது அமைந்த பெரும் முரசுகளின் முழக்கம் கேட்டது. வளைந்த கொம்புகள் ஒலித்தன. வாழ்த்தொலி கேட்டுக் கொண்டிருந்தது.

புலிக்கொடியை ஏந்திய வீரர்கள் பகுதி பகுதியாக வீரநடை போட்டு வந்தனர்.

சிலம்பம் சுழற்றித் தம் திறமைகளைப் புலப்படுத்தியவாறு சிலம்ப வீரர்கள் சுழன்றாடி வந்தனர்.

சிந்தாமணியும், அவள் தந்தையும் நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்தபோது சிறிது நேரம் ஊர்வலம் நின்றது. நாட்டிய மாடுகிறார்களோ? சிந்தாமணி பார்த்தாள்.

பாதச் சதங்கை ஒலிக்க, வளை குலுங்க ஆடவரும் பெண்டிரும் தங்கள் ஆடல் திறமையைப் புலப்படுத்தினர். தாளத்துக்கு ஏற்ப அவர்கள் ஆடிய சதிரைச் சிந்தாமணி ஆவலுடன் கவனித்தாள்.

வீரப்பட்டினத்துக் கோயிலில் சாக்கையர் ஆணும் பெண்ணு மாகத் தெய்வ சந்நிதியில் நடனமாடுவதை அவள் கண்டிருக்கிறாள். வீதியிலேயே இத்தகைய நடனத்தை அவள் இப்போதுதான் காண்கிறாள்.

''இவர்களும் அரச பரிவாரத்தைச் சேர்ந்தவர்களா அப்பா?'' என்று சிந்தாமணி கேட்டாள்.

''ஆமாம் குழந்தாய்! ஆலயங்களில் உள்ளது போன்றே அரச சபையிலும், ஊர்வலங்களிலும் நடனமாட ஆடவரும் பெண்டிரும் உள்ளனர்'' என்று மாதேவன் கூறினார். அவர் கவனம் நாட்டியத்தில் இல்லை.

சிந்தாமணி ஆடல் அற்புதத்தையும், நட்டுவாங்கத் திறமை யையும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். குழலும் மத்தளமும் நடனக் கலைக்குப் பக்கபலமாகத் திகழ்ந்து கொண்டிருந்தன.

ஊர்வலம் நகர்ந்தது. பட்டத்து யானை முகபடாம் ஒளி வீசக் கம்பீரமாக நடந்து வந்தது. யானை மீதுள்ள அம்பாரியில் குலோத்துங்கச் சோழச் சக்கரவர்த்தி ஏறுபோல் அமர்ந்திருந்தார். இன்று ஏனோ அவருடன் தேவியும் அமர்ந்திருக்கவில்லை.

''சக்கரவர்த்தியும் முதுமையை அடைந்துவிட்டார்'' என்றாள் சிந்தாமணி.

மாதேவன் மெல்ல நகைத்தார். ''என்றும் இளமையாய் இருக்கும் வரத்தை அவர் பெறவில்லை. அரசர் முதுமையை அடைய அடைய அவருடைய நேரிடைக் கவனமும் குறைகிறது. அம்பல வாணனைப் போன்றவர்கள் தாங்கள் வைத்ததே சட்டம் என்று நினைக்கிறார்கள்''. என்றும் தமக்குத் தாமே கூறிக் கொண்டார்.

சிந்தாமணியின் விழிகள் ஊர்வலத்தில் மெய்க்காவல் வீரன் நம்பியைத் தேடின. ஊர்வலம் நகர்ந்தது. அவள் பெருமூச்சு விட்டாள். மீண்டும் அவள் தந்தை அவளைப் பார்த்துக் கேட்டார்.

''என்னம்மா, ஏதோ நினைக்கிறாய்; சொல்ல முடியாமல் பெருமூச்சு விடுகிறாய். சொல்லு குழந்தாய்! உனக்குத் தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் என்னிடம் சொல்லாமல் நீ வேறு யாரிடம் சொல்லப் போகிறாய்?'' என்று பரிவுடன் கேட்டார்.

சிந்தாமணி உடனே மறுமொழி கூறவில்லை. ''கிராமத்தில் தங்கை தனியே இருப்பாளே, என்ன செய்து கொண்டிருப்பாளோ என்ற நினைப்பு வந்தது'' என்றாள்.

இப்போது மாதேவன் பெருமூச்சு விட்டார். திருமணப் பருவத்தின் தலைவாசலில் நிற்கும் தம் இரு புதல்விகளுக்கும் எப்போது திருமணம் செய்விக்கப் போகிறோமோ என்ற நினைவு அவருக்குப் பெருமூச்சாக வந்தது.

''நான்கு நாள்களுக்குப் போதுமான அரிசி வைத்து விட்டு வந்திருக்கிறேன் அம்மா! செண்பகம் புத்திசாலிப் பெண். பிழைத்துக் கொள்வாள்'' என்று கூறும்போது அவர் விழிகளில் நீர் கோத்தது.

''அப்பா, கோயிலுக்குப் போவோமா?'' என்று சிந்தாமணி கேட்டாள்.

''நாடகம் இன்னும் தொடங்கியிருக்க மாட்டார்கள் அம்மா! இரவு ஆகாரத்தை முடித்துக் கொண்டு புறப்படுவோம்'' என்றார் மாதேவன்.

''அதற்காக இல்லையப்பா; சீக்கிரமாகச் சென்றால் நம்பியைப் பார்க்கலாம்'' என்று சொல்ல அவள் நினைத்தாள். வெளியே சொல்ல முடியுமா? ஊர்வலத்தில் நம்பியைக் காண முடியவில்லை.

'அவரை எதற்காகப் பார்க்கவேண்டும்? அவரை நமக்கு முன்பின் தெரியாதே. அவரைப் பார்க்கக் கூடாது. அவரது விழிகளில் ஏதோ ஒரு விதச் சக்தி இருக்கிறது. அந்தச் சக்தி இதயத்துக்குள் புகுந்து நம்மை என்னவோ செய்கிறதே, என்று சிந்தாமணி நினைத்தாள்.

தில்லைச் சிதம்பரத்து நிருத்திய சபை அருகே மக்கள் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. நூற்றுக்கால் மண்டபத்தில் விசேஷமாக அமைக்கப்பட்ட மேடையில், சிறப்பாசனத்தில் குலோத்துங்க சோழதேவர் அமர்ந்திருந்தார். ஒளிவீசும் தீவர்த்திகளின் ஒளியில் அந்த மண்டபமே சுவர்க்கபுரி போல் காட்சியளித்தது.

மக்கள் வெள்ளத்தில் நீந்தி மண்டபத்தின் அருகில் எவ்வாறு செல்வது என்று தந்தையும் மகளும் திகைத்தவாறு நின்று கொண்டிருந்தார்கள். அன்று அவர்களால் குலோத்துங்க சோழ சக்கரவர்த்தியைச் சந்திக்க முடியவில்லை. நாடகம் நடந்து கொண்டே இருந்தது. நடுநிசியும் தாண்டியது. விழிகளை உறக்கம் ஆட்கொண்டதால் தந்தையும் மகளும் எழுந்து வந்துவிட்டனர்.

2

மறுநாள் காலை சிந்தாமணி சிதம்பரம் கோயில் திருக் குளத்துப் படிக்கட்டுகளில் உட்கார்ந்திருந்தாள். நீராடி விட்டு, ஆடவல்லானைத் தரிசித்த பிறகு மீண்டும் நூற்றுக்கால் மண்டபத்துக்குச் செல்ல வேண்டும் என்பது அவர்கள் திட்டம். மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும் என்ற அவளுடைய ஆசையை நிறைவேற்ற, மாதேவன் மஞ்சள் கிழங்கொன்றை வாங்கிவரச் சென்றிருந்தார்.

சிந்தாமணிக்கு இரவு உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்ததால் இப்போது விழிகள் எரிந்தன. மூடிய விழிகளின் எதிரே பற்பல தோற்றங்கள். நம்பி உருவம் தோன்றுகிறதே, ஏன்? அதை அழிக்க எவ்வளவு முயன்றும் முடியவில்லை. இன்று அவரைச் சந்தித்துத் தான் ஆக வேண்டும். முழங்காலில் முகத்தைச் சாய்த்துக் கொண்டாள். இரவு நடந்த நாடகத்தின் சில காட்சிகள் மீண்டும் அவள் நினைவுக்கு வந்தன. இராஜ ராஜனைக் காதலிக்கும் இன்பவல்லியாக நடிக்கும் பெண்ணின் நடனத் திறமையும், அவளது காதலுக்கு ஏற்படும் இடையூறுகளும் துயரத்தையும், சோகத்தையும் முக உணர்ச்சிகளாலும் விழிகளாலும் அவள் வெளிப்படுத்தும் நேர்த்தியும் அவளைக் கவர்ந்தன. 'அதே பாத்திரம் ஏற்று நான் நடித்தால்?' என்ற கேள்வி அவள் உள்ளத்தில் எழுந்தது.

கிராமத்தில் தந்தைக்குப் பெரும் பளுவாக இருப்பதை விட ஏதாவது பணி செய்து உதவினால் என்ன என்று அவள் எண்ணினாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது. என்ன வேலை செய்ய முடியும்? நிலங்களில் களை எடுத்து, நாற்று நடலாம். தந்தை அதற்கு ஒரு நாளும் அனுமதிக்க மாட்டார். தங்கள் குடும்ப கௌரவத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பார். கௌரவம் என்ற ஒன்றுக்காகவே அவர் இருக்கும் நிலங்களை விற்று வருவதை அவள் அறிந்து தான் இருந்தாள்.

நிலவரி பாக்கிக்காகச் சில காலமாக அம்பலவாணன் தன் தந்தையை மிகவும் தொந்தரவு செய்வதையும் அவள் அறிவாள். தந்தை மிகப் பொறுமைசாலி. தாய் இறந்த பிறகு அவரது பொறுமை மௌனமாக ஆகிவிட்டது. உடுத்த மற்றோர் ஆடையைத் தவிர வேறில்லை. சிதம்பரத்தில் உள்ள பெண்கள் விதவிதமான ஆடை அலங்காரங்களுடன் வீதியில் உலவுவதைப் பார்க்க அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது. அதே சமயம் தன்னுடைய ஆடையைப் பார்த்துக் கொண்டபோது வெட்கமாகவும் இருந்தது. மாற்றுப்புடைவை இல்லாமல் இப்போது குளத்தில் எப்படி நீராடப் போகிறோம்? படித்துறையில் சில பெண்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள். தானும் நீராடவேண்டும். மறுகரைக்கு நீந்திச் செல்லவேண்டும். வெள்ளாற்றில் நீந்திய மிகுந்த அனுபவம் அவளுக்கு உண்டு. யாரோ தன் எதிரே நிற்பது போன்றும், மெல்லக் கனைப்பது போன்றும் தோன்றவே, மூடியிருந்த விழிகளைத் திறந்தாள் சிந்தாமணி.

நம்பி நின்று கொண்டிருந்தான். குளத்தில் குளித்து விட்டு ஈர உடையுடன் படியேறிக் கொண்டிருந்தவன் படிக்கட்டுகளில் சிந்தாமணி அமர்ந்திருப்பதைக் கண்டான். உட்கார்ந்தவாறே உறங்குகிறாளா, அல்லது சிந்திக்கிறாளா என்று அவனுக்குத் தெரியவில்லை.

சிந்தாமணி திடுக்கிட்டு எதிரே நிற்கும் நம்பியை நோக்கினாள்.

பிழிந்த துணியை உதறித் திறந்த மார்பை மூடிக்கொண்டான் நம்பி. அந்த பரந்த, பாறை போன்று உறுதியான அவன் மார்பை மற்றொரு முறை பார்க்க வேண்டும் போல் சிந்தாமணிக்குத் தோன்றியது. அவள் எழுந்து நின்று கொண்டாள். உடல் மெல்லச் சிலிர்த்தது. நாணத்தால் பேச்ச எழவில்லை. முகத்தைத் தோள் பக்கமாகத் திருப்பிக் குனிந்து கொண்டாள்.

அந்த முகத்தைத் தன் பக்கம் திருப்ப வேண்டும் போல் அவன் கை துறுதுறுத்தது. தடாகத்திலுள்ள தாமரை மலரை ஒரு தடவை பார்த்து விட்டுத் திரும்பவும் அவள் முகத்தைப் பார்த்தான்.

"நான் வருகிறேன்" என்று கூறியபடி மேல் படிக்கட்டில் அடி எடுத்து வைத்தான்.

செல்ல முயல்பவன் உடனே செல்ல வேண்டியது தானே?

முகத்தை இடத்தோளில் புதைத்துக் கொண்டு மெல்லச் சிரித்தாள் சிந்தாமணி.

"ஏன் நகைக்கிறாய்?" என்று நம்பி மெல்லக் கேட்டான்.

"நிற்பதற்கு வேறு வார்த்தை 'வருகிறேன்' என்பதா என்று நினைத்தேன், சிரிப்பு வந்தது" என்றாள் சிந்தாமணி. இதுவரையில் பேசியறியாத ஓர் இளைஞனிடம் பேசும் துணிவு எப்படி வந்தது? தன்னையே அவள் கேட்டுக் கொண்டாள்.

"நேற்று நின்று நின்று என் கால் எல்லாம் இன்னும் வலிக்கிறது. விழியை வழிமீது வைத்துப் பார்த்து விழியெல்லாம் சோர்வடைகிறது. மீண்டும் குளக்கரையில் நின்று தவமா செய்யச் சொல்கிறாய்? அதனால் தான் வருகிறேன் என்றேன்" என்றான் நம்பி.

சிந்தாமணி திடுக்கிட்டாள். 'இவர் என்ன சொல்கிறார்? நேற்று இரவு நமக்காகக் காத்திருந்தாரா? பொய் சொல்வாரோ? கற்பனை மிகுந்திருக்குமோ?'

"ஆமாம், சக்கரவர்த்திகளைக் காண நானும் என் தந்தையும் வந்தோம். எங்களை உடனே அனுமதித்தீர்கள். சக்கரவர்த்திகள் நீண்ட நேரம் எங்களிடம் பேசிக் கொண்டிருந்தார். எங்கள் குறைகளைக் கேட்டறிந்தார். உடனே நிவர்த்திக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார். நாங்கள் அவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்த போது வெளியே எங்கள் வருகைக்காகக் காத்திருந்து நின்றீர்களோ? ஐயோ, பாவம்!" என்று சிந்தாமணி முகத்தில் எவ்விதச் சலனமும் உணர்ச்சிப் பிரதிபலிப்பும் இன்றிச் சொன்னாள்.

நம்பி அவள் கற்பனைப் பேச்சை நினைத்துச் சிரித்தான். "நன்றாகக் கற்பனை செய்யும் திறமை உனக்கு இருக்கிறது" என்றான்.

"உங்களுக்கும் இருக்கிறது. எங்களுக்காகக் காத்திருந்ததாகச் சொன்னீர்களே, அதைவிடக் கற்பனை வேறு வேண்டுமா?"

"மண்டப வாயிலருகே காத்திருந்தது உண்மை. உன்னையும் உன் தந்தையையும் கண்ணுக்கெட்டிய தொலைவு காணவில்லை. நாடகம் முடிந்து வெகுநேரம் நான் காத்திருந்தேன்" என்று அவன் சொன்ன போது சிந்தாமணி அவன் முகத்தையே பார்த்தவாறிருந்தாள். கண்களில் ஒளியையும், உதடுகள் அசைவதையும், நாசி விரிவதையும் தோள் குலுங்குவதையும், அவன் கவனித்தாள்.

"சக்கரவர்த்திகளிடம் குறையைத் தெரிவிக்கும் அளவுக்கு உங்களுக்குச் சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா? என்னிடம் சொல்லலாமா? என்னால முடிந்த வரை நிவர்த்திக்க முயல்கிறேன்" என்றான் நம்பி.

'இந்தச் சமயத்தில் தந்தை வந்தால் நன்றாக இருக்கும், அவர் முறையாக எடுத்துச் சொல்லுவார்' என்று எண்ணினாள். இருந்தாலும் அவன் கேட்டதற்கு ஏதும் மறுமொழி கூறாமலும் அவளால் இருக்க முடியவில்லை.

"குலோத்துங்க சக்கரவர்த்தியின் ஆட்சி நடக்கிறதா என்ற சந்தேகம் எனக்கு" என்றாள் சிந்தாமணி.

நம்பி துணுக்குற்றான். "என்ன சொல்கிறாய்?" என்று அவன் கேட்டதில் கடுமை இருந்தது. சக்கரவர்த்தியின் மெய்க்காப்பாளன் என்றால் அவருடைய புகழ் உட்படத்தான்.

"ஆம், அழுத்தமாகக் கூறுகிறேன். எங்கள் கிராமத்தைப் பொறுத்த வரையில் சக்கரவர்த்தியின் ஆட்சி நடைபெறவில்லை என்று தான் கூறுவேன். எங்கள் ஊரில் உள்ள அம்பலவாணன் என்ற செல்வாக்கு மிக்கவரைப் பற்றிச் சக்கரவர்த்தியிடம் கூறத்தான் என் தந்தை வந்துள்ளார்" என்று சிந்தாமணி கூறிய போது அவளிடம் நாணம் இல்லை, அச்சம் இல்லை. நம்பியைப் பல காலமாக அறிந்தவள் போன்ற உணர்வுடன் அவள் பேசினாள்.

"சிந்தாமணி!" என்றான் நம்பி. "உன் பெயர் சிந்தாமணி தானே? கோபம் கொள்ளும் போது உன் முகத்தில் ஏற்படும் மாறுதல் கண்ணகியின் தோற்றத்தை நினைவுபடுத்துகிறது. உங்கள் குறைகளை நான் முழுவதும் தெரிந்து கொள்ளாமலேயே ஓரளவுக்குப் புரிந்து கொண்டு விட்டேன். அம்பல வாணனைப் பற்றித்தானே நீங்கள் சொல்ல விரும்புகிறீர்கள்? அம்பலவாணன் நேற்று காலையில் சக்கரவர்த்திகளைச் சந்தித்தான்." என்று கூறியபோது சிந்தாமணி திடுக்கிட்டாள்.

அப்போது அங்கே வந்து நின்ற மாதேவனும் கடைசியாக நம்பி கூறுவதைக் கேட்டுத் திகைத்தார்.

"அம்பலவாணன் வந்திருந்தானா? நான் சக்கரவர்த்திகளை சந்திக்க வந்திருப்பது அவனுக்குத் தெரிந்து விட்டதா? என்ன சொன்னான்?" என்று பதற்றத்துடன் கேட்டார்.

''சக்கரவர்த்திகளிடம் மற்றவர் பேசிக் கொண்டிருப்பதை நான் மறைந்திருந்து கேட்கும் வழக்கம் இல்லை. அவர் வந்ததன் முக்கியத்துவத்தை இப்போது தான் உணர்கிறேன்'' என்றான்.

தந்தையும் மகளும் ஒருவரையொருவர் பார்த்தவாறு நின்றனர்.

''நான் நேற்றே கேட்டேன். தங்களுக்கு ஏற்பட்டுள்ள மன வேதனை என்ன? என்னிடம் தெரிவிக்கலாம் என்றால் கூறுங்கள்'' என்றான் நம்பி, மாதேவனைப் பார்த்தவாறு.

''நேற்றைய நிலை வேறு, இன்று...'' என்று சொல்ல வாயெடுத்தவள் உதடுகளை அழுத்திக் கொண்டாள், தந்தையைப் பார்த்தவாறு.

''உம், நீயே சொல்லம்மா. நம்பியிடம் சொல்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நேற்றே சொல்லியிருக்கலாம். நம்பி அரசியல் அதிகாரி. நல்ல மனதுடையவர். நம் மீது இரக்கம் காட்டும் நெஞ்சம் நம்பிக்கு இருக்கிறது. நம் மனக்குறையை யாரிடமாவது சொல்லித்தானே ஆகவேண்டும்?'' என்றார் மாதேவன்.

''ஐயா! நான் குளித்து ஈர ஆடையுடன் நிற்கிறேன். இப்படியே நின்று நான் பேசிக் கொண்டிருந்தால் மற்ற பணிகளும் தாமதப்பட்டு விடும். நடராஜரின் காலைப் பூஜைக்கு அரசர் புறப்பட்டு விடுவார். நான் அங்கே இருந்தாக வேண்டும். சுவாமி தரிசனம் ஆகித் திரும்பி வரும்போது சக்கரவர்த்திகளை நீங்கள் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன். அந்த நேரத்தில் தாங்கள் தங்கள் கதையைக் கூறலாம்'' என்று சொல்லிய வண்ணம் சிந்தாமணியை நோக்கினான் நம்பி.

மாதேவன் மெல்லச் சிரித்தார். ''ஆமாம் என் நிலை கதையாகத் தான் ஆகிவிடும் போலத் தோன்றுகிறது. வீரப்பட்டினத்தில் நான் வாழ்ந்த நிலை என்ன? இன்று வாழும் நிலை என்ன? எல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விடுமோ என்ற அச்சம் என் மனத்தில் இப்போது தோன்றுகிறது.'' என்று கூறியபோது அவர் குரல் தழுதழுத்தது.

''ஐயா, ஐயா! நான் தங்கள் மனம் வேதனைப்படும்படியான வார்த்தை ஏதாவது சொல்லி விட்டேனா? அப்படியென்றால் என்னை மன்னித்து விடுங்கள். தங்களுக்கு என்னாலான உதவியைச் செய்யக் காத்திருக்கிறேன். முன் பிறவியில் விட்ட குறை தொட்ட குறை ஏதாவது இருக்குமோ? அது வந்து என் உள்ளத்தை இப்போது தொடுகிறது. கவலைப்படாமல் என்னிடம் சொல்லுங்கள். நீராடி, காலை உணவருந்தி மண்டபத்தருகே வந்து விடுங்கள்'' என்றான். ஈர உடைகள் பாதி காய்ந்து விட்டன.

நம்பி இன்னும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க மாட்டானா, அவனது கம்பீரத் தோற்றத்தை இன்னும் சிறிது நேரம் பார்த்தவாறு இருந்து மகிழ மாட்டோமா என்று சிந்தாமணி மனத்தில் நினைத்துக் கொண்டாள்.

மாதேவனுக்குச் சிறிது நம்பிக்கை துளிர்த்தது. மகளை மூதாட்டியின் வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு, தாம் மட்டும் புறப்பட்டார் சக்கரவர்த்தியைச் சந்திக்க.

''நான் இங்கே இருந்து என்ன செய்யப் போகிறேன்? நானும் சக்கரவர்த்திகளைக் காணக்கூடாதா?'' என்று சிந்தாமணி கேட்டாள். நம்பியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்காமல் போகிறதே என்ற கவலை அவளுக்கு.

''நான் மிக விரைவில் வந்து விடுவேன். சக்கரவர்த்தியைச் சந்தித்து என் முறையீட்டைத் தெரிவித்து விட்டால் உடனே புறப்பட்டுவிட வேண்டியது தான்'' என்று கூறிப் புறப்பட்டு விட்டார் மாதேவன்.

நூற்றுக்கால் மண்டபத்துக்கு அருகேயே காத்திருந்தான் நம்பி. மண்டபத்துக்கு அருகேயே வெண்ணிறப் புரவி ஒன்று நின்றிருந்தது. புரவியின் அருகே வேல் ஏந்திய வீரன் ஒருவன் குதிரைக்குக் காவலாக நின்று கொண்டிருந்தான்.

மாதேவன் அந்தக் குதிரையை இரண்டு மூன்று தடவை உற்றுப் பார்த்தார். குதிரையின் அழகு அவரைக் கவர்ந்தது. அந்தக் குதிரையை அவர் அதற்கு முன்பு பல தடவை பார்த்திருக்கிறார்.

''இந்த அழகிய குதிரையை நான் வேறு எங்கோ பார்த்திருக் கிறேன்'' என்று மாதேவன் பேச்சைத் தொடங்கினார்.

''பார்த்திருப்பீர்கள், இது திருமுனைப்பாடி நாட்டு நாடு காவல் அதிகாரியின் குதிரை'' என்றான் நம்பி. அவன் பார்வை நாலு பக்கமும் சுழன்றது. அவருடன் அவர் மகள் சிந்தாமணி வரவில்லையா என்பதை அறிய விரும்பிச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

''ஓகோ! இராசராசன் காடவராயர் வந்திருக்கிறாரா? நாடு காவல் அதிகாரி என்ற பெயர் தான்..... நல்ல வேளை, இந்தச் சமயத்தைப் பார்த்து என் மகளை அழைத்து வரவில்லை'' என்றார் மாதேவன்.

நம்பி வியப்புடன் அவரை நோக்கினான்.

''ஆமாம், நம்பி! வெள்ளாற்றின் வடகரை திருமுனைப்பாடி நாடு - ஒரு காலத்தில் அது பல்லவ நாட்டோடு சேர்ந்த நாடுதானே? என் கிராமம் அங்கே தானே இருக்கிறது! காடவராயர் வைத்தது தான் அங்கே சட்டம். சோழ சக்கரவர்த்திகளுக்கு மிகவும் வேண்டியவர் என்பதால் அவர் புரியும் அக்கிரமங்களைச் சொல்லி முடியாது'' என்று மாதேவன் சலிப்புடன் கூறினார்.

நம்பி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவரை உட்காரச் சொன்னான். காடவராயனைப் பற்றிய செய்தியைக் கேட்க அவனுக்கு ஆவல்.

''ஆமாம், ஐயா! சக்கரவர்த்திகளின் அபிமானத்தை மிகவும் பெற்றவர்'' என்று பேச்சைத் தொடங்கினான்.

''அவராம், அவர்! நம்பி! உன் வயது தான் அவருக்கு இருக்கும். உன் கம்பீரம் எங்கே? அவருடைய சிறுமை எங்கே? அவர் வந்துவிட்ட இந்த நேரத்தில் நான் என் முறையீட்டை எப்படிக் கூறப் போகிறேன்?'' என்று எரிச்சலுடன் கூறினார்.

''சுவாமி தரிசனத்துக்கு அரசர் புறப்படும் நேரத்தில் காடவர் கோன் வந்துவிட்டார். மிக முக்கியமான பேச்சு நடக்கிறது. நீங்கள் கூறுவது போல்

சக்கரவர்த்திகள் தங்களை இப்போது அழைக்க மாட்டார். என்றாலும் இங்கேயே இருங்கள். சமயம் நேரும்போது நானே அவரிடம் அழைத்துச் செல்கிறேன். அதுவரையில் நாம் பேசிக் கொண்டிருப்போம்'' என்று அவன் கூறிய போது அவருடன் மிக நெருங்கிவிட்ட உணர்ச்சி அவன் குரலில் புலப்பட்டது.

''பல்லவர் குலத் தலைவன் வீரசேகரக் காடவராயருடைய புதல்வன் இந்தச் சிறுவன். அவருடைய பெருந்தன்மை எங்கே? இவனுடைய நரிக்குணம் எங்கே? ஒருமையில் அழைப்பதற்கு என்னைத் தவறாக நினைக்காதே, நம்பி! பெண் சபலம் மிகுந்த இவன் நாடு காவல் அதிகாரியாக இருக்கிறானே என்று நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது. எங்கள் ஊரிலுள்ள அம்பலவாணனுக்கு மிக நெருங்கிய நண்பன்'' என்று அவர் கூறிய போது நம்பி குறுக்கிட்டு, ''தங்களுடைய ஊர் எதுவென்று சொன்னீர்கள்?'' என்று கேட்டான்.

''வீரப்பட்டினம். நல்ல விளைச்சல் மிகுந்த நிலங்களையுடைய ஊர். அழகிய சிவன் கோயில். கோயிலுக்கு நிறையச் சொத்து உண்டு. கோயில் அறங்காவலரில் ஒருவராக நான் இருந்திருக்கிறேன்'' என்று மாதேவன் கூறி நிறுத்தினார்.

''இப்போது நீங்கள் அறங்காவலராக இல்லையா?'' நம்பி கேட்டான்.

அவர் தலையசைத்தார். அவர் குரல் தழுதழுத்தது. ''நான் இப்போது எந்தப் பதவியிலும் இல்லை நம்பி! அந்த ஊரில் மதிப் பிழந்து போகுமாறு என்னைச் செய்து விட்டான் அம்பலவாணன்.''

''அம்பலவாணன் காடவர்கோனுக்கு மிகவும் வேண்டியவர் என்று சொன்னீர்கள்'' நம்பி எடுத்துக் கொடுத்தான்.

''ஆமாம், அம்பலவாணர் ஊராட்சித் தலைவர். கிராம அதிகாரி. அவருடைய நட்பு பல்லவர் கோனுக்குத் தேவையாயிருந்தது.''

''நட்பு என்றா சொல்கிறீர்கள்? காடவர்கோன் குறுநில மன்னன். என்ன இருந்தாலும் அம்பலவாணன் ஒரு சாதாரண அதிகாரி தானே? அதை நட்பு என்று எப்படிச் சொல்வது?''

''அம்பலவாணனுக்கு உள்ள சாமர்த்தியம், குறுக்கே புகும் அறிவு. அவன், ஒரு சிற்றரசனாக மாறக்கூடிய அளவுக்குச் சக்தி இருக்கிறது. காடவர் கோன் பெண்மோகம் கொண்டவன். அவனுடைய மோக வெறிக்கு அவ்வப்போது இரை போடுபவன் அம்பலவாணன். அதனால் அவர்களுடைய உறவில் நட்பு தான் மேலோங்கி இருக்கிறது.''

மாதேவன் கூறியவுடன் கதை சுவாரசியமாகப் போவதாக நம்பி உணர்ந்தான். சற்று மெதுவாகப் பேசுமாறு சைகை செய்துவிட்டு மண்டபத்துக்குள் ஒரு முறை சென்று பார்த்து வந்தான்.

''அங்கே, சக்கரவர்த்தியும் காடவர்கோனும் மிகவும் அந்தரங்க மாக உரையாடுகிறார்கள். நீங்கள் தொடர்ந்து மேலே சொல்லுங்கள். அம்பலவாணன் நற்குணம் படைத்தவனல்லன் என்றா சொல் கிறீர்கள்?'' என்று நம்பி தூபம் போட்டான் பேச்சுத் தொடருக்கு.

''அம்பலவாணன் வீட்டை நீ பார்த்ததில்லையே நம்பி! வீட்டை மாளிகை போல் கட்டியிருக்கிறான். அதில் கால்பாகம் என் சொத்து. மாளிகைக்கு மேன் மாடம் உண்டு. அந்தப்புரமாக அது திகழ்கிறது. வீட்டருகே நந்தவனம். நடன நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க ஒரு மண்டபம். குதிரை, யானைப் படைகள் தான் வைத்திருக்கவில்லை. ஆனால் கையாட்களாக நூறு பேருக்கு மேல் அவனிடம் சேவகம் செய்கிறார்கள்.'' மாதேவன் சற்று நிறுத்தினார்.

''என்ன சொன்னீர்கள்? அந்தப்புரமா? ஓர் அதிகாரி வீட்டில் அந்தப்புரமா? ஓர் அதிகாரி வீட்டில் அந்தப்புரம், நாட்டிய மண்டபம், மேல் மாடம்.... ஆச்சரிய மாயிருக்கிறதே?'' என்று ஆவலுடன் கேட்டான் நம்பி. கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகையில் அந்தப்புரம் இருப்பதையும், அரசகுலப் பெண்டிர் பலர் அங்கு வசிப்பதையும் அவன் அறிவான். சிதம்பரத்திலுள்ள கொட்டாரத்தில் பெண்கள் தங்குவதற்குத் தனி இடம் இருப்பதும் அவனுக்குத் தெரியும். பெரும் செல்வர்களின் வீடுகளில் முதல் கட்டு, இரண்டாம் கட்டு என்று வீட்டு மகளிர் நடமாட, பேச, மகிழ்வுடன் வாழ என்று தனி இடம் உண்டு. அந்தப்புரம் என்று தனி மாடம் அரச குலத்தவ ரல்லாதவர் வீட்டில் இருப்பதை இப்போது தான் கேள்விப் படுகிறேன்.'' சற்று மௌனமாயிருந்து;

''அம்பலவாணனுக்கு உறவினர் அதிகமோ? மனைவி ஒருத்திக்கு மேல் உண்டோ?'' - நம்பி கேட்டான்.

மாதேவன் எரிமலை போல் பொங்கினார் என்பதை அவர் முகம் காட்டியது. கைவிரல்களை மடக்கிக் கொண்டார்.

''உற்றார் - உறவினர்! அம்பலவாணனுக்கு எல்லாரும் உறவினர்கள் தாம். யாரை வேண்டுமானாலும் உறவினராக்கிக் கொள்ளும் சக்தி அவனுக்கு உண்டு. ஆனால் ஒரு மனைவிக்கு மேல் கிடையாது. அங்கு மட்டும் மனைவிக்கு அவன் அடிமை. வைரநாயகி, பெயருக்கேற்ப வைர நெஞ்சம் கொண்டவள். கணவனும் மனைவி யும் பலவிதங்களில் ஒரே குணமுடை யவர்கள். கணவனுடைய திட்டங்களுக்கு மனைவி ஒத்துழைப்பாள். மனைவியின் யோசனை களை அம்பலவாணன் அப்படியே ஆமோதித்து நிறைவேற்றுவான். செல்வத்தை மட்டும் அந்த ஒற்றுமை சேர்க்கவில்லை. அந்தப்புரத்தில் பல அடிமைப் பெண்களையும் சேர்த்து விட்டது.'' அவர் உணர்ச்சிவசப்பட்டார். அவர் உடல் நடுங்குவது தெரிந்தது.

''என்ன, அடிமைப் பெண்களா? ஆச்சரியமாயிருக்கிறதே!'' என்றான் நம்பி. சோழநாட்டில் இப்படியும் நடக்கிறதா என்று அவன் வியந்தான்.

''நம்பி! உனக்கு இந்தச் செய்தி கேட்கப் புதுமையாயிருக்கலாம். கோயிலுக்குத் தங்கள் புதல்விகளைத் தந்தை விற்பது உண்டு. வறுமை மிகுதியால் குழந்தைகளை விற்பதுண்டு. பரம்பரையாக அடிமையாக வாழும்

ஆண், பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அம்பலவாணனுக்கு இது ஒரு தொழில். அவனுடைய அந்தப்புரத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் இருக்கிறார்கள்'' என்று மாதேவன் கூறியது கேட்க வேதனையாக இருந்தது.

''காடவராயனுக்கு இந்தச் செய்தி தெரியாதா?'' நம்பி கேட்டான்.

''தெரிந்த பிறகு தான் அம்பலவாணனுடன் அவனுடைய நட்பு நெருங்கியது. நினைத்தபோது அந்தக் குறுநில மன்னன், நாடு காவல் அதிகாரி, வீரபராக்கிரமம் மிக்கவன், கோப்பெருஞ்சிங்கன் என்ற பட்டப்பெயரை உடையவன். வீரப்பட்டினத்து அம்பலவாணன் வீட்டுக்கு வெள்ளைப் புரவியில் வந்து விடுவான். அன்று பாட்டு, கூத்து கும்மாளம் தான். நம்பி! சோழநாட்டில் இப்படிப்பட்ட அக்கிரமம் நடக்கலாமா?'' மாதேவன் கொதிப்புடன் கேட்டார்.

''பெண்கள் அடிமைகளாகச் செல்வது பல காலமாக நடைபெறுகிறது என்று நீங்கள் தானே சொன்னீர்கள்?'' என்றான் நம்பி. மண்டபத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டு.

நம்பியும், மாதேவனும் பேசிக் கொண்டிருப்பதை ஓர் உருவம் பார்த்துக் கொண்டிருப்பது அப்போதும் அவனுக்குத் தெரியவில்லை.

''கோயிலில் இறைவனுக்குப் பெண்கள் அடிமையானார்கள். கோயிலில் தொண்டு செய்து வாழ்நாளைக் கழிக்கிறார்கள் பலர். திருமணமாகாத கன்னியர் இறைவனுக்குத் தொண்டு செய்யத் தங்களை விற்றுக் கொண்டார்கள். அது சரி. இது என்ன நியாயம்? அபலைப் பெண்களை விலைக்கு வாங்குவதைக் குலோத்துங்க சக்கரவர்த்தி எப்படி அனுமதிக்கிறார்?'' சீறினார் மாதேவன்.

''அதை அவருடைய கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும். நானே அதைச் செய்கிறேன்'' என்றான் நம்பி.

''அதைச் சக்கரவர்த்திகளிடம் கூறத்தான் நான் சிதம்பரம் வந்தேன் நம்பி'' என்றார் மாதேவன்.

''இவ்வளவு தானே? நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் ஊருக்குப் புறப்படலாம். இதற்காகச் சிதம்பரத்தில் தங்கியிருக்க வேண்டாம்'' நம்பி கூறிவிட்டானே தவிர, மாதேவனும் சிந்தாமணியும் உடனே சிதம்பரத்தினின்று புறப்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற கவலையும் உண்டாகியது அவனுக்கு.

''நம்பி! அதற்காக மட்டும் நான் இங்கே தங்கவில்லை. என் வாழ்வையே குலைத்துவிட அவன் திட்டமிட்டிருக்கிறான். என்னையும் அடிமையாய் நடத்த முடிவு செய்துவிட்டான். என் திட்டமிடாத செயலுக்கு, நான் பட்ட கடனுக்கு அவனுக்கு நான் காலம் காலத்திற்கு அடிமையாய் இருக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் என் செல்வ மகளை அவன் அடிமையாய்க் கேட்கிறான்'' என்று மாதேவன் கூறிய போது, ''என்ன சிந்தாமணியையா அவன் கேட்கிறான்?'' என்று நம்பி சீறி எழுந்தான்.

3

அம்பலவாணனும், மாதேவனும் இளம் வயதிலிருந்தே உற்ற நண்பர்கள். ஆனால், மாதேவன் தனது மூதாதையர் வைத்துவிட்டுப் போன சொத்தை வளர்க்கவில்லை. அம்பலவாணனுக்கு முன்னோர் களின் ஆஸ்தி ஏதும் கிடையாது.

அம்பலவாணனை விட மாதேவன் இரு பெரும் செல்வங்களைப் பெற்றிருந்தார். நல்லவர் என்ற பெயர். குணமுள்ள அழகிய மனைவி.

''உனக்குச் சிவகாமி வாய்த்தது உன்னுடைய அதிர்ஷ்டம் மட்டுமன்று, என்னுடைய துரதிருஷ்டமுங்கூட'' என்று ஒருநாள் அம்பலவாணன் கூறிய போது மாதேவன் திடுக்கிட்டார்.

''சிவகாமியைப் பெண் கேட்டு நான் சென்றேன். என்னுடைய அகம்பாவம் அவளுடைய பெற்றோர் மனத்தை மாற்றிவிட்டது. உன்னுடைய அடக்கம், பணிவு உனக்குப் பரிசாக அவளைப் பெற்றுத் தந்தது'' என்று அம்பலவாணன் பெருமூச்சு விட்டபோது மாதேவன் உள்ளம் துடித்தது.

அம்பலவாணனுடைய மனைவி அழகற்றவள் என்றாலும், அவளுக்கு அவன் அடிமை. ''அதிர்ஷ்டக்காரி அவள். அவள் வந்த பிறகு என் செல்வமும் செல்வாக்கும் வளர்ந்தன'' என்று பெருமையாகக் கூறிக் கொள்வான். அது மறைமுகமாக, 'உனது மனைவிக்கு அழகு இருந்து என்ன பயன், அதிர்ஷ்டம் இல்லையே!' என்று சொல்லாமல் சொல்வது போல் இருக்கும்.

சிவகாமியின் துரதிருஷ்டம் என்று கூற முடியாது. மாதேவன் நிலத்தில் சரிவரப் பாடுபடவில்லை. கோயில் நிர்வாகம், ஊர்ப் பொது வேலைகள் என்று மட்டும் கவனம் செலுத்தினார். அவை போதுமா? ஆண்டுதோறும் அம்பலவாணனிடமே கடன் வாங்கிச் செலவு செய்யும் நிலை ஏற்பட்டது. கடனுக்காக ஒவ்வொரு நிலமாக விற்பனை செய்து வந்தார் மாதேவன். அம்பலவாணனைத் தவிர அந்த நிலங்களை வேறு யாரும் வாங்க முடியாது.

''பல ஆண்டுகளாக நீ நிலவரி கட்டவில்லை. உன்னுடைய மாந்தோப்பு மகசூலுக்கும் வரி கட்டவில்லை. நான் உன்னுடைய பால்ய நண்பன். எவ்வளவு நாள்கள் நான் வரியை வசூலிக்காமல் விட்டு வைக்க முடியும்?'' என்று அம்பலவாணன் ஒருநாள் கண்டிப்பாகக் கேட்டு விட்டான்.

அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கி உள்ளவர்கள் எந்தத் தேர்தலிலும் கலந்து கொள்ள முடியாது என்ற நிலையில் வீரப்பட்டினத்து வீரேசுவரர் கோயில் அறங்காவலர் பதவியும் மாதேவனை விட்டுப் பறிபோனது.

தனது மாங்கல்யத்தைத் தவிர மற்றவை அனைத்தையும் சிவகாமி ஒவ்வொன்றாகக் கொடுத்து விட்டாள். கணவனின் மனம் நோக ஒரு வார்த்தையும் சொல்லியறியாதவள். தன் இரு பெண்கள் சிந்தாமணியையும், செண்பகத்தையும் தெய்வபக்தி உள்ளவர்களாக, ஒழுக்கம் மிக்கவர்களாக

வளர்த்து வந்தாள். ஆனால், அவள் அடிக்கடி தன் கணவரிடம் கூறுவாள்: ''இறைவன் என் இரண்டு பெண் களையும் இவ்வளவு அழகுள்ளவர்களாக ஏன் படைத்து விட்டாரோ? அந்தப் பாவி அம்பலவாணன் கண்பார்வை அவர்கள் மீதும் பட்டு விட்டதே'' என்று வருந்துவாள்; வேதனைப்படுவாள். அம்பல வாணன் தன்னை ஒருநாள் தனியே சந்தித்த செய்தியை அவள் தன் கணவரிடம் சொல்லாமல் இதயத்துக்குள்ளே புதைத்து வைத்திருந்தாள்.

''சிவகாமி! நீதான் என் வீட்டில் வாழ முடியாமல் போய்விட்டது. உன் பெண்களில் ஒருத்தியாவது என் வீட்டில் வாழவேண்டும் என்பது என் ஆசை'' என்று கூறினான். என்ன திட்டத்துடன் அவன் அவ்வாறு கூறினான்? தன் புதல்வர்களுள் ஒருவனுக்கு மணம் புரிந்து கொள்ள அவனுக்கு ஆசையா? தகப்பனை விட மிகக் கொடியவனான புதல்வனுக்குத் தன் மகளை மணம் புரிவிப்பதை விட, கோயிலில் தேவகாரியம் செய்ய மகளை விட்டு விடவே சம்மதிப்பேன் என்று உறுதி பூண்டாள் சிவகாமி.

ஆனால், அம்பலவாணனுக்கு சிந்தாமணியைத் தன் மருமகளாக ஆக்கிக் கொள்ளும் எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. அவனுடைய எண்ணம் வேறுவிதமானது என்று புரிந்து கொண்டவுடன் திடுக்கிட்டாள். சிவகாமியிடம் தனியே பேச வாய்ப்பு கிடைத்தவுடன் அம்பலவாணன் தனக்குப் பயன்படும்படியான சந்திப்பாக அதை மாற்ற முயன்றான். அவளை ஒரு முறையாவது தொட்டு அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற பல நாள் துடிப்பை அன்று நிறைவேற்ற முயன்றான். சிவகாமி பெண் புலியெனச் சீறினாள். தன் கன்னத்தைப் பதம் பார்த்த சிவகாமியின் மெல்லிய கரத்தின் அழுத்தத்தை நினைத்தவாறு அவன் சொன்னான்.

''சிவகாமி! நீ என்றாவது என் வீட்டுப் படியேறி ஆபத்து என்று வருவாய். உதவி கேட்டு வருவாய். அதற்கு விலையாக நான் உன் மகளைக் கேட்டுப் பெறாமல் உதவி புரிய மாட்டேன் என்பதை மறந்து விடாதே.''

சிவகாமியும், ''என் உயிருள்ள மட்டும் உங்கள் சூளுரை பலிக்காது'' என்று மட்டும் மறுமொழியாகக் கூறினாள்.

தலையின் மீது பெரும் பாறை ஒன்று இறங்கி வருவதைப் போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. உடனடியாகப் பெண்களுக்கு ஏற்ற மணாளனைப் பார்த்து மணம் புரிந்து விடவேண்டும். அல்லது இந்த ஊரை விட்டே போய்விட வேண்டும் என்று எண்ணினாள். தன் கணவரிடம் நடந்த செய்தியைக் கூறாமல், 'பெண்களுக்கு உடனடியாகத் திருமணம் செய்ய வேண்டும் அல்லது ஊரை விட்டே வெளியூர் சென்று விடவேண்டும், என்ற தன் திட்டத்தை மட்டும் தெரிவித்தாள்.

மாதேவனால் இரண்டையும் செய்ய முடியவில்லை. பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கப் பணத்துக்கு எங்கே போவார்? ஊரைவிட்டுச் செல்வதென்றால், அம்பலவாணனிடம் பட்ட கடனைத் தீர்த்தாக வேண்டும்.

சிவகாமிதான் யோசனை சொன்னாள்: ''நம்மிடமுள்ள நிலங்களையும் தோப்பையும் அவருக்கே விற்று அவருடைய கடனுக்கு வரவு வைத்துக் கொண்டது போக, மீதிப்பணத்தை வாங்கிக் கல்யாணத்தை முடித்து விடலாம்.''

மாதேவன் அம்பலவாணனிடம் சென்று நிலங்களை விற்பதைப் பற்றிய தன் முடிவைச் சொன்னார். தம் மகள்களின் திருமணத்துக்காகப் பூர்வீகச் சொத்தை விற்று விடுவதாகவும் கூறினார்.

''மாதேவா! உன் மகள் திருமணத்துக்காக நீ சொத்தை விற்க வேண்டுமா? அவற்றை விற்காமலே உனக்குப் பணம் தருகிறேன்'' என்றான் அம்பலவாணன். 429790/5877349

ஆனால் அவன் கூறிய யோசனை மாதேவனைச் சீறியெழச் செய்தது.

சிந்தாமணி, ஒரு நாள் குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும்போது வெண் புரவியில் வந்த காடவர்கோன் அவளைப் பார்த்திருக்கிறான். எழிலோவியமாக விளங்கும் அவளைப் பற்றி அம்பலவாணனிடம் கேட்டிருக் கிறான். ''சிந்தாமணியை அடைவது அப்படி ஒன்றும் சிரமமான செயலன்று; நான் முடித்து வைக்கிறேன்'' என்று வாக்களித்திருக்கிறான். ஆனால் மாதேவன் அதற்குச் சம்மதிக்கவில்லை.

அம்பலவாணன் பலவிதத்தில் எடுத்துச் சொல்லிப் பார்த்தான். அன்பாகவும் பயமுறுத்தியும் ஊஹூம், மாதேவன் சம்மதிக்கவில்லை.

ஒரு நாள் காலையில், அம்பலவாணனின் ஆட்கள் மாதே வனின் வீட்டுக்கு வந்தார்கள். அவனை அம்பலவாணன் அழைப்பதாகச் சொன்னார்கள். மாதேவன் சென்றார். அம்பலவாணனின் கணக்குப்பிள்ளை ஓர் ஓலையை அவரிடம் நீட்டி அதில் கையெழுத் திடச் சொன்னார்.

இதுவரை மாதேவன் அம்பலவாணனிடம் வாங்கியிருந்த கடன் தொகை வட்டியுடன் கணக்கிடப்பட்டு அதற்கு ஈடாக மாந்தோப்பு, மற்றும் நிலங்கள் அனைத்தையும் கிரயம் செய்வதாக ஓலையில் எழுதப்பட்டிருந்தது.

நிலங்களின் மதிப்பை விடக் கடன் தொகை அதிகமாக இருந்தும் அம்பலவாணன் பெரிய மனசு செய்து மீதம் தொகையை திருப்பித் தருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தேவநேயப் பாவாணர்
மரபுவழிமொழியியல் ஆய்வகம்
சென்னை - 600 002

அரசருக்குத் தரவேண்டிய நிலவரிப் பாக்கியைச் சிறிது காலம் வற்புறுத்தாமல் இருப்பதாகவும் அம்பலவாணன் கூறினான்.

தலை குனிந்தபடி மாதேவன் வீடு வந்து சேர்ந்தார். இனி அவர்களுக்கு அந்தக் கிராமத்தில் ஆற்றங்கரை ஓரமுள்ள சிறு துண்டு நிலந்தான் சொத்து.

சிவகாமி சொன்னாள்: ''இனி இந்தக் கிராமத்தில் என்ன வேலை? சிதம்பரத்தில் செங்கமலத்தாச்சியிடம் சென்று விடுவோம்'' என்றாள்.

அதற்கும் முட்டுக்கட்டை. கோயில் அறங்காவலராக மாதேவன் இருந்தபோது, எழுதப்பட்ட கணக்குகளில் வித்தியாசம் இருப் பதையும், கோயில்

அம்பிகையின் கழுத்தாபரணம் ஒன்று குறைவ தாகவும் அதற்குச் சரியான விடை கூறி, விவகாரம் முடியாமல் ஊரை விட்டு நகரக் கூடாது என்றும் எச்சரித்திருந்தான் அம்பலவாணன்.

இதைக் கேட்டவுடன் அதிர்ச்சியடைந்து படுத்த சிவகாமி பிறகு எழுந்திருக்கவில்லை. சிவகாமிக்குப் புரிந்து விட்டது. 'நான் ஆபத்து வேளையில் படியேறி வருவேன். தன் சூளுரையை நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்று அம்பலவாணன் நினைக்கிறான். தன் உயிருள்ள வரை அது ஒரு காலும் நடக்காது என்று சிவகாமி முடிவு செய்தாள். அவள் முடிவுப்படியே நடந்தது.

இப்படி திடீரென்று சிவகாமி இறந்து விடுவாள் என்று அம்பலவாணன் நினைக்கவில்லை. சிவகாமியின் மறைவு அம்பல வாணனின் கொடிய மனத்திலும் சிறு மாற்றத்தை ஏற்படுத்தி யிருந்தாலும் சிந்தாமணியைக் காடவர்கோனுக்கு ஆசை நாயகியாக அனுப்ப வேண்டும் என்ற வற்புறுத்தலை மட்டும் அவன் மாற்றிக் கொள்ளவில்லை.

அம்பலவாணனின் தீய எண்ணத்தையும் பலமாக வற்புறுத்து வதைக் குறித்தும் சோழ சக்கரவர்த்தியிடம் புகார் செய்யவே, மாதேவன் தன் மகளுடன் சிதம்பரம் புறப்பட்டு வந்தார்.

மாதேவன் கூறியவற்றைக் கேட்டு நம்பி கொதித்து எழுந்தான். ''நீங்கள் அம்பலவாணனைப் பற்றிக் கூறும்போது இதுவரை ஏற்படாத கோபம் இப்போது எனக்கு அடக்க முடியாமல் எழுகிறது. அவனுக்கு என்ன துணிவிருந்தால் சிந்தாமணியைக் காடவராயனுக்கு ஆசை நாயகியாக்குமாறு கேட்டிருப்பான்? உடனே சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அம்பலவாணனுடைய அட்டூழியத்தை அம்பலப் படுத்துகிறேன்'' என்று சூளுரைத்தான்.

ஆனால், அதுபோல் நம்பியால் செய்ய முடியவில்லை. உள்ளேயிருந்து சக்கரவர்த்தியும், காடவர் கோனும் நடராஜர் சந்நிதிக்குப் புறப்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. பரபரப்பு ஏற்பட்டது.

''ஐயா! நான் எப்படியும் சக்கரவர்த்திகளிடம் இன்று தெரிவித்து விடுகிறேன். நீங்கள் கவலைப்படாமல் சென்று மாலையில் வாருங்கள்'' என்று நம்பி கூறி, மண்டபத்துக்குள் சென்று விட்டான்.

மாதேவன் சோர்வடைந்திருந்தாலும் நம்பியின் சொல்லளவில் ஒருவித நிம்மதி அவருக்கு ஏற்பட்டிருந்தது.

குலோத்துங்க சோழதேவர் பரிவாரங்கள் புடை சூழ, காடவர் கோனுடன் நடராசர் திருச்சபைக்கு எழுந்தருளினார். சக்கரவர்த்தியின் நடையில் முதுமை காரணமாகத் தள்ளாமை இருந்தது. என்றாலும் கம்பீரம் குறையவில்லை. வெண்மஞ்சள் நிறப் பட்டாடையும் வெளிர் நீல நிற அங்கவஸ்திரமும், மார்பில் முத்தாரமும், வீரகண்டிகையும், இடையிலே வாளும் நெற்றியில் திருநீறும் முறுக்கி விடப்பட்ட மீசையுமாகக் கம்பீரமாக நடந்து செல்லும் அவருடனே மிக அருகே காடவர்கோன் சென்றது பலருக்கு வியப்பை அளித்தது.

நடையில் கம்பீரமும், முதிர்ச்சியடையந்த அனுபவமும் நிறைந்த குலோத்துங்க சோழர் அருகே செல்லும் காடவர்கோன் நடையில் மிடுக்கிருந்தாலும் அவருக்கு ஈடுகொடுத்து நடக்க முடியாமல் சற்று ஓட்டமும் நடையும் கைக்கொள்ள வேண்டியிருந்தது. மிக நெருங்கி உரையாடிச் செல்லும் அந்தஸ்தைச் சக்கரவர்த்தி இதுவரை வேறு ஒருவருக்கும் அளித்ததில்லை. பல்லவர் குலப் பட்டத்து உரிமையை இழந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் காடவராயர்கள் தங்களை பல்லவ குலப் பரம்பரை மன்னவர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள். சோழ அரசர்களும் அவர்களுக்கான மரியாதையை அளித்தாலும் கப்பம் பெறுவதை மட்டும் விட்டுவிடவில்லை. நந்திக் கொடியைப் பயன்படுத்தவும் அனுமதிக்கவில்லை. ஆனால் கோப்பெருஞ் சிங்கன் என்ற பட்டப் பெயருடன் தங்கள் பலத்தை அவர்கள் மெல்ல மெல்ல வளர்த்துக் கொண்டு வருவது குலோத்துங்கனுக்குத் தெரிந்திருந்தும் தெரியாதது போலவே இருந்தார். அரசருடைய அந்த நிலை மற்றவர்களுக்கு வியப்பை அளித்தது.

குலோத்துங்கனுடைய பட்டத்தரசி புவன முழுதுடையாள் கூட அரசரிடம் இதுபற்றிக் கேட்க அஞ்சியபோது, குலோத்துங்கனின் இரண்டாவது மனைவி இளையபிராட்டி என்று அன்பாக அரசரால் அழைக்கப்படுபவள் மட்டும் ஒருநாள் அவரைக் கேட்டுவிட்டாள்.

''பல்லவர்குலத் தலைவன் வீரசேகரக் காடவராயர் உயிருடன் இருந்த வரை அவருடைய அடக்கமும் நம்மிடம் காட்டும் பக்தியும் அவருடைய மகனுக்கு இல்லை'' என்று இளையபிராட்டி கூறினாள்.

குலோத்துங்கன் நகைத்தவாறு, பிராட்டியின் தோள்களைத் தழுவி, ''உன்னுடைய கூர்மையான நோக்கை நான் பாராட்டுகிறேன். மற்றவர்கள் காணாததை நீ காடவராய இளைஞனிடம் கண்டிருக் கிறாய். பட்டத்தரசியாக விளங்க நீயே தகுதியானவள்'' என்று கூறி, அவளுடைய இளமை மாறாத கன்னத்தைத் தடவியதும், அவள் குலோத்துங்கனுடைய கரத்தை மெல்ல விலக்கி, ''நான் பட்டத்தரசி ஆவது அடுத்த பிறவியில் நடக்கட்டும். வல்லபிக்கு ஏற்ற மணாளனையாவது தேடித் திருமணத்தைச் சீக்கிரம் முடியுங்கள். போர், போர் என்று வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்து விட்டீர்கள்!'' என்று சிணுங்கிய பிராட்டியை நோக்கிக் குலோத்துங்கன் மீண்டும் ஒரு புன்னகை பூத்தார். மறுமொழி அப்போது கூறவில்லை; மற்றொரு சமயத்தில் கூறினார்.

''பிராட்டி! காடவர்கோனைப் பற்றி நீ சில நாள்களுக்கு முன்பு சந்தேகம் தெரிவித்தாய். திருமுனைப்பாடி நாட்டுக் காவல் அதிகாரியாக விளங்கும் அவனுக்கு அதிக உரிமைகள் கொடுப்பதாக மற்றவர்கள் குறை கூறுவதும் எனக்குத் தெரியும். பிராட்டி அரசியல் விவகாரங்களை உன்னுடன் விவாதிப்பதில் எனக்கு என்றுமே ஆர்வமுண்டு. தெற்கே பாண்டியர்களுடன் எப்போதும் போர் நடத்திக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் வடக்கே எந்தவித அபாயமும், தொல்லையுமில்லாமல் இருப்பதற்குக் காரணமே

காடவர்கோன் வடபகுதியில் பாதுகாவலாய் இருப்பது தான். நமது மகள் வல்லபிக்கு ஏற்றவன் ஒன்று பாண்டிய குமாரனாக இருக்கவேண்டும். அல்லது காடவர் குலத்து அரச குமாரனாக இருக்கவேண்டும். பாண்டியர்களுடன் நாம் சமாதானம் செய்து கொள்வது இந்த ஜென்மத்தில் நடவாது என்று தோன்றுகிறது. எனக்குப் பிறகு சோழ நாட்டுக்கு உற்ற துணையாக அமையப் பலமுள்ள நாடு உதவிக்கு இருக்க வேண்டாமா?'' என்று கேள்வி கேட்டு நிறுத்தியவுடன், பிராட்டி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ''தங்களுடைய கற்றி வளைத்த பேச்சின் உள்ளர்த்தம் புரிகிறது. காடவர்கோன் ஏழிசை மோகனுக்கு வல்லபியை மணம் புரிவித்து விட நினைக்கிறீர்கள், அவ்வளவு தானே?'' என கேள்விக் கணையை வீசினாள்.

குலோத்துங்கன், பிராட்டியின் அறிவுத் திறமையைப் பாராட்டும் வகையில் அவளை உற்று நோக்கி, ''நான் முடிவு செய்திருப்பது சரிதானே?'' என்று வினவி, ''ஏழிசை மோகன் என்ற பெயர் காடவர் கோனுக்கு இருப்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்றும் கேட்டார்.

''நீங்கள் செய்துள்ள முடிவை நான் ஏற்க மாட்டேன்'' என்று கடுமையான குரலில் கூறிவிட்டாள்.

திடுக்கிட்ட குலோத்துங்கன் ''ஏன் தேவி அப்படிக் கூறுகிறாய்?'' என்று கேட்டார்.

''காடவர் கோனுக்குச் சோழநாட்டின் பெருமைக்கு ஏற்ப சமமாக இருக்கும் தகுதி கிடையாது.''

''எதைக் கண்டு நீ முடிவு செய்தாய்? அவன் வீரன் மட்டு மல்லன், சிறந்த கலை ரசிகன். வீணையை மீட்டுவதில் வல்லவன். அதனால் தானே ஏழிசை மோகன் என்ற பெயர் அவனுக்குக் கிடைத்திருக்கிறது! பெரும் புகழ் வாய்ந்த பல்லவர் குலத்தில் வந்தவன். திருமுனைப்பாடி நாட்டு நாடுகாவல் அதிகாரியாகவும் விளங்குகிறான்.''

''தங்களுடைய சமாதானத்தை ஒவ்வொன்றாக மறுக்கிறேன், கோபப்படாமல் கேளுங்கள், காடவர்கோனை வீரன் என்று சொல்லுகிறீர்கள். இதுவரை அவன் வீரத்தைப் புலப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியைக் கூட நான் கேள்விப்படவில்லை. பாண்டிய நாட்டுப் போர்க்களத்துக்கோ, வஞ்சி நகருக்கோ காடவர்கோனை ஏன் அனுப்பவில்லை? அப்போது அவனுடைய வீரத்தைக் கண்கூடாகக் கண்டிருக்கலாமே? கலை ரசிகன் என்றும், ஏழிசை மோகன் என்றும் கூறும் பெயர்களுடன் மன்மத தாசன் என்ற பெயரையும் கூட அவனுக்குக் கொடுத்து விடலாம். ஏழிசை மோகன் வருகிறான் என்றால் வீட்டுக் கதவையும் சாளரங்களையும் பெண்கள் அடைத்து விடுகிறார்களாம். 'கபாடம் திறமினோ' என்று ஜெயங்கொண்டார் உங்கள் பாட்டனார் காலத்தில் பாடினார். ''மங்கையரே கபாடம் மூடுமினோ' என்று பாடுவதற்கு இன்று புலவர்கள் பலர் காத்திருக்கின்றனர்.'' பிராட்டியின் சீற்றத்தைத் திகைப்புடன் குலோத்துங்கன் கேட்டவாறு இருந்தார்.

''தேவி! நீ கோபப்படும்போது அழகாய்த்தான் இருக்கிறாய். உன் அழகுக்காகத் தானே நான் உன்னை மணந்து கொண்டேன் என்பதை மறந்து விட்டாயா? பட்டத்தரசி இருக்கும் போது பாவை உன் கரம் பற்றியது மட்டும் நியாயமா? இளம் பருவத்தில் கலை உணர்ச்சி மிக்கவர்கள் இளம் மங்கையருடன் கூடிச் சல்லாபிப்பது தவறில்லை'' என்று கூறி அவளைத் தம்மருகே இழுத்தணைத்தார்.

அவர் அணைப்பை உதறி, ''உங்களுடைய இளம் வயது லீலைகள் எனக்குத் தெரியாதா? ஆனால தாங்கள் ஒரு போதும் வரம்பு மீறவில்லை. பெண்கள் சாபத்தைப் பெறவில்லை. ஏழிசை மோகனுடைய அட்டூழியங்களைக் கிராமந்தோறும் கூறுகிறார்கள். தங்களையும் அந்தப் பெண் பித்தனையும் ஒன்றுபடுத்தி விடாதீர்கள்'' என்றாள்.

சக்கரவர்த்திகள் திடுக்கிட்டார். பிராட்டி காடவர்கோனைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கும் போது தமக்கு ஏதும் தெரியாமல் போய்விட்டதே என்று சற்று வேதனையடைந்தார்.

''பிராட்டி! உனக்குச் செய்திகள் எங்கிருந்து கிடைத்தன?''

''சில நாள்களுக்கு முன்பு வல்லபி தன் தோழிகளுடன் காஞ்சி மாநகர் சென்றிருந்தாள். காஞ்சி ஏகாம்பரேச்வரர் பங்குனி உத்திரத் திருவிழாவின் போது நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நாட்டியத்தைக் காணக் காடவர்கோனும் வந்திருந்தானாம். நிகழ்ச்சியின் நடுவிலேயே எழுந்து சென்று விட்டானாம். நிகழ்ச்சி முடிந்த பிறகு, வல்லபி தான் தங்கியிருந்த மாளிகையின் மேன் மாடத்துக்குச் சென்றபோது, காடவர்கோன் இருந்த நிலையைப் பார்த்துத் திடுக்கிட்டாள். ஏழிசை மோகன் தன் எதிரே நடனமாடிக் கொண்டிருந்த மங்கையைத் தாவி அணைத்த அவனது செயலை வல்லபி வாய்விட்டு எப்படிக் கூறுவாள்?''

பிராட்டி முகம் சிவக்க இவ்வாறு கூறியதைக் கேட்டுக் குலோத்துங்கன் சீறுவார் என்று எதிர்பார்த்தது போக அவர் பெரிதாகச் சிரித்தார்.

''பிராட்டி! நீ மிகப் புத்திசாலியாக இருக்கலாம். ஆனால், உலக அனுபவம் போதாது உனக்கு. பெரும் மன்னராக வரும் தகுதி ஏழிசை மோகனுக்கு இருக்கிறது. அவற்றில் ஒன்று தான் துணிவு. சோழநாட்டிலுள்ள மற்ற சிற்றரசர்களான சம்புவரையரோ, மலைய மானோ, பழுவேட்டரையரோ வேறோர் ஊரில் இவ்வாறு நடந்து கொள்வார்களா? இது ஒன்றே போதும் காடவர்கோனின் துணிவைக் கூற. இளம் வயதில் பெண் சபலம் இருப்பதை நீ பெரிய குற்றமாகக் கருதலாமா? அது போகட்டும். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு வல்லபி ஏழிசை மோகனைப் பற்றி என்ன நினைக்கிறாள்? அவனுடைய சந்தர வடிவம், பொலிவுத் தோற்றம் அனைத்தும் அவளுக்குப் பிடித்திருக் கின்றனவா? நீ கேட்டறிந்தாயா?'' என்று குலோத்துங்கன் கேட்டார்.

பிராட்டி அந்த இடத்தை விட்டு எழுந்து விட்டாள். ''வல்லபிக்குக் காடவர்கோனைக் கட்டோடு பிடிக்கவில்லை'' என்றாள்.

''வல்லபிக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, நமது சோழர் குலம் மணத்தொடர்பு கொள்ளத் தக்க ஒரேயொரு தீரன் காடவர்கோன் தான். விரைவில் வல்லபியின் திருமணத்தை நடத்தி விடுவேன். வல்லபியின் மனத்தை மாற்ற நீ வழி செய்யாமல், வீண் குறைகளைப் பேசிக் கொண்டிராதே. காடவர்கோன் மீது குற்றம் சுமத்துவதில் அறிவை வீணாக்காதே'' என்று குலோத்துங்கன் கூறிய போது குரலில் சற்று முன்பு இருந்த குழைவு இல்லை. சக்கரவர்த்திக்கே உரிய கடுமை, கட்டளை மட்டுமே தொனித்தது.

பிராட்டியும் சளைத்தவளா? அவளும் சூளுரைத்தாள்: ''காடவர்கோனுக்கு வல்லபியை மணம் புரிவிக்க ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன். வல்லபிக்குத் திருமணமே ஆகாமல் போய் அவளைத் தேவகாரியம் செய்ய அனுமதிப்பேனே தவிர, காம விகாரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க ஒருநாளும் ஒப்புக் கொள்ள மாட்டேன். இது உறுதி'' என்றாள்.

குலோத்துங்கன் ஏதும் பேசவில்லை. மௌனமாகி விட்டார் என்றால் எரிமலை குமுறுகிறது என்று அர்த்தம். பிராட்டி கூறிய செய்தியைக் கேட்டறிந்த பிறகு ஏழிசை மோகனது நடவடிக்கை களைக் குலோத்துங்கன் கூர்ந்து கவனிக் கலானார். சக்கரவர்த்தியின் அந்தரங்க ஒற்றர்கள் நிழல் போல் காடவர்கோனைப் பின்தொடர்ந்து அவனுடைய நடவடிக்கைகளைக் குறித்து அவ்வப்போது மன்னருக்குத் தெரிவித்து வந்தனர். பிராட்டி குறிப்பிட்ட குணத்தை விளக்கும் சம்பவங்கள் ஒன்றிரண்டு ஒற்றர்களால் தெரிவிக்கப் பட்டன. ஆனால், அனைவரும் ஏழிசை மோகனுடைய செல்வாக்கையும், நாடெங்கும் மக்களிடையே அவனுக்குள்ள வரவேற்பையும் குறிப்பிட்டனர். அவனது தலைநகரான சேந்த மங்கலம் கோட்டையின் வலிமையையும் அவர்கள் எடுத்துக் கூறத் தவறவில்லை. ஆழ்ந்த ஆலோசனைக்குப் பிறகு காடவர் கோனுடைய ஆதரவு தமக்குப் பெரிதும் தேவை என்ற முடிவுக்குக் குலோத்துங்கன் வந்தார்.

அன்று தில்லை நகரில் தன்னைச் சந்திக்க வந்தபோது ஏழிசை மோகனின் முகத்தையே கூர்ந்து கவனித்தார். அவன் பேசும்போது ஏற்படும் முகபாவங்களை நோக்கினார். அவர்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது காஞ்சி நகரத்தைப் பற்றிய பேச்சு வந்தது.

காஞ்சி மாளிகையில் அவன் தங்கியிருந்தபோது நடைபெற்ற சம்பவத்தைப் பற்றிச் சக்கரவர்த்தி குறிப்பிட்டார்.

ஏழிசை மோகனின் முகத்தில் ஒருவிதச் சலனமும் ஏற்பட வில்லை. மாறாக மெல்லிய புன்னகைக் கீற்று கோடிட்டது.

''சக்கரவர்த்தி அவர்களே! அன்றைய தினம் மாளிகையில் நடன மங்கை ஒருத்தியைச் சந்தித்தேன். அந்தச் சந்திப்பிலிருந்து எனக்கு ஓர் ரகசியம் தெரிய வந்தது. நல்ல சித்தன்ன தேவன் காஞ்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டிருக் கிறானாம். அந்தச் செய்தியை ஊர்ஜிதம் செய்ய ஒற்றர்களை அனுப்பினேன். சித்தன்னன் படைகளைத் திரட்டி விட்டாராம். அதைச் சொல்லவே இங்கு விரைந்து வந்தேன்'' என்றான்.

''காடவர்கோனுக்கு நடனமங்கையிடமிருந்து செய்தி கிடைத்து விட்டது'' என்று கூறிக் குலோத்துங்கன் பெரிதாகச் சிரித்தாலும் மறுகணமே தன் குரலை மாற்றிக் கொண்டு, ''சபாநாயகரே! வயதில் இளையவராயினும் உமது வீரதீரத்தைக் கேள்விப்பட்டு வருகிறேன். நல்ல சித்தன்னனின் படையெடுப்பை முறியடிக்கும் பொறுப்பை உனக்கு அளிக்கிறேன்'' என்றார். பிறகு இருவரும் ஏதும் பேசவில்லை.

நடராசரின் காலைப் பூசையைக் காடவர்கோனுடன் காணப் புறப்பட்டார். தம் அருகே நெருக்கமாக அவனை அழைத்து நடந்தவாறே போரைப் பற்றிப் பேசினார். அவன் தோள் மீது கரத்தைப் போட்டவாறு அவர் காதோடு காதாகச் சில செய்திகளைக் கூறினார். காடவர்கோன் முகம் மலர்ந்ததையும், அவன் மேலும் நிமிர்ந்து நடப்பதையும் கண்ட நம்பிக்கு ஒன்றுமே புரியவில்லை.

சக்கரவர்த்திகளை எப்போது சந்திப்பது? மாதேவனுக்கு அம்பலவாணன் புரியும் கொடுமைகளை எப்படி எடுத்துச் சொல்வது என்று எண்ணினான்.

குலோத்துங்கன், பொன்னம்பலத்தைச் சுற்றி வந்தார். சித்திரக் கூடத்தில் கோவிந்தராசரைத் தரிசித்தார். சைவ வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் அந்த இடத்தில் சிற்பத் தூண்களுடன் கூடிய விசாலமான மண்டபம் ஒன்று கட்டுவதைப் பற்றி யோசித்தார்.

ஸ்படிக லிங்கத்துக்கு அபிஷேகம் நடைபெற்று, தீபாராதனை நடைபெற்று, வேத கோஷங்கள் முடிந்து, தேவாரப் பதிகங்கள் பாடும்போது, அனைவரும் பாடுபவரைத் திரும்பிப் பார்த்தனர். புதிய குரல் அனைவர் கவனத்தையும் ஈர்த்தது. கணீரென்ற குரலில் சிந்தாமணி பாடிக் கொண்டிருந்தாள். அவள் அருகே மூதாட்டி நின்று பக்தியுடன் ரசித்துக் கொண்டிருந்தாள்.

நம்பி தன் கண்களை நன்றாகத் திறந்து ஒருமுறை பார்த்தான். சிந்தாமணி தான் பாடிக் கொண்டிருந்தாள். சிந்தாமணியே தான். அவன் அருகே மாதேவன் இருக்கிறாரா என்று சுற்றுமுற்றும் நம்பி பார்த்தான். அவரைக் காணவில்லை.

காடவர்கோனின் பார்வை சிந்தாமணியின் மீது வீழ்ந்ததையும், வைத்த விழி வாங்காமல் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருப் பதையும் காண நம்பிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

4

''என்ன வயிராத ராயரே! உங்கள் ஊர்ப் பெண் தானே சந்நிதியில் பாடியவள்?'' என்று ஏழிசை மோகன் அம்பலவாணனைக் கேட்டான்.

''ஆமாம், பண்ணோடு குரல் இசைந்து வருகிறதல்லவா? தங்களுக்கு இசையின் நுணுக்கம் தெரியுமே!'' என்றான் அம்பலவாணன்.

நடராசர் சந்நிதியில் குழுமியிருந்தவர்களுள் அம்பலவாணனும் இருந்தான். காடவராயர் தன் ஊருக்குத் திரும்பிப் போன பிறகே

அம்பலவாணனும் ஊர் திரும்புவான். சிந்தாமணி, அங்கு வருவாள் என்றோ, சந்நிதியில் பாடுவாள் என்றோ அம்பலவாணன் எதிர்பார்க்க வில்லை.

"இசையைப் பற்றியோ, பண்ணைப் பற்றியோ நான் கேட்க வில்லை. அந்தப் பெண்ணைப் பற்றித்தான் பல நாள்களாகக் கேட்கிறேன். இப்போதும் கேட்கிறேன்" என்றான் ஏழிசை மோகன்.

அம்பலவாணன் உடனே மறுமொழி கூறவில்லை. நாற்புறமும் திரும்பிப் பார்த்தான்.

"அவளுடைய தகப்பன் என் நண்பன் தான். ஆனால் அவனைச் சம்மதிக்க வைக்க முடியவில்லையே. அவன் சம்மதம் தரவில்லையே" என்றான் மெல்லிய குரலில்.

"வயிராதராயரால் முடியவில்லை என்றால் வேறு யாரால் முடியப் போகிறது? நான் சில நாள்களில் வடக்கே படைகளுடன் புறப்பட்டு விடுவேன்." என்றான் ஏழிசை மோகன்.

அம்பலவாணன் கையைப் பிசைந்தான். "இதுவரையில் தாங்கள் விரும்பிக் கேட்டதை நான் மறுத்ததில்லை. தவறியதும் இல்லை. ஹூம்!" என்று பெருமூச்சு விட்டவன், காடவராயருக்கு மட்டும் கேட்கும் குரலில், "இப்போதே சிந்தாமணியை அழைத்துச் செல்கிறீர்களா? இங்கே கூப்பிடட்டுமா?" என்று தீர்மானமாகக் கேட்டான்.

"வேண்டாம், வேண்டாம். சக்கரவர்த்தி இங்கே தங்கியிருக்கும் சமயத்தில் அப்படியெல்லாம் செய்து விடாதீர்கள். நான் இன்றே சேந்தமங்கலம் செல்கிறேன். சில நாள்களில் வீரப்பட்டினம் வருவேன்" என்றான் ஏழிசை மோகன்.

முகத்தில் வெற்றி கிடைத்து விட்ட பொலிவுடன், "தாங்கள் வரும் அன்று சிந்தாமணி தங்களுடையவள்" என்றான் அம்பல வாணன்.

சிந்தாமணியும், மூதாட்டியும் செல்வதைப் பார்த்தவாறு பெருமூச்சுவிட்ட காடவராயன், "சிந்தாமணி, அழகான பெயர். பெயரை விட அவளும் அழகானவள்" என்றான்.

அம்பலவாணன் சிரித்தான். அப்பொழுதே அவன் மனத்தில் திட்டம் உருவாகி விட்டது.

"தங்கள் வருகைக்காகக் காத்திருக்கிறேன்." என்ற குரல் கேட்டு நம்பி திரும்பிப் பார்த்தான். திருக்குளத்துப் படிக்கட்டுகளின் ஓரத்தில் சிந்தாமணி அமர்ந்திருந்தாள்.

மெல்ல மெல்லக் கதிரவன் மறைந்து இருள் சூழும் வேளை.

நம்பி சிந்தாமணியை அந்த நேரத்தில் குளக்கரையில் எதிர்பார்க்க வில்லை. காலையிலிருந்தே அவன் மனம் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது. புரிய முடியா வேதனை உள்ளத்தில் கப்பிக் கொண்டிருந்தது.

"நான் வருவேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் நம்பி. ஆனால், அவளைச் சந்தித்து விட்டதில் இவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இதுவரை இருந்து வந்த மனப்பாரம் நொடியில் இறங்கிவிட்டது போல் தோன்றியது. சந்திக்க முடியாத ஒருவரைச் சந்தித்து விட்ட பரபரப்பு அவனிடம் ஏற்பட்டது. மூன்றாவது முறையாகச் சிந்தாமணியை அவன் காண்கிறான்.

சிந்தாமணி ஏதும் பேசவில்லை. தாமரைக் கொடி ஒன்று அவள் கரங்களில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனும் பேசவில்லை. அவளையே உற்று நோக்கியவாறு இருந்தான். பிறகு மெல்ல அவள் அருகே அமர்ந்தான்.

"காலையில் உன் பாட்டில் நான் மெய்மறந்து விட்டேன்" என்றான் நம்பி.

"நடராசர் எதிரே பக்திப் பரவசத்துடன் பாடும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமென்று கனவில் கூட நான் நினைக்கவில்லை. அந்தப் புண்ணியம் மூதாட்டிக்குத் தான் போய்ச்சேரும். என் பாட்டைக் கேட்க என் தந்தை அங்கில்லையே என்ற குறை எனக்கு....." என்றாள் சிந்தாமணி.

"நீ அம்பலத்துக்கு எப்போது, எப்படி வந்தாய்?" என்று நம்பி கேட்டான். அந்த மங்கிய ஒளியில் சிந்தாமணி தேவகன்னிகைபோல் அவன் கண்களுக்குத் தோன்றினாள்.

"நான் அம்பலத்துக்கு இன்னும் வரவில்லை. அறையில் தான் இருக்கிறேன்" என்று கூறி மெல்ல நகைத்த அவள், "என் தந்தை எனக்கு உறுதுணையாக இருக்கும் வரையில் நான் அம்பலத்துக்கு வரவேண்டி யிருக்காது" என்றாள். அந்தச் சிரிப்பொலி பொன் நாணயங்களைக் கவிழ்த்தது போன்றிருந்தது. முத்தை ஆபரணமாகக் கோத்தணியக் கையில் ஏந்தியது போன்றிருந்தது, அவள் பல்வரிசை.

சிந்தாமணியின் சாதுரியமான பேச்சு நம்பிக்கு வியப்பை அளித்தது.

"நான் நடராஜர் திரு நடனமிடும் பொன்னம்பலத்தைச் சொல்கிறேன். கோவிந்தராஜர் சந்நிதியிருக்குமிடத்தைச் சித்திரகூடம் என்றும், நடராஜர் சந்நிதியிருக்குமிடத்தைப் பொன்னம்பலம் என்றும் அழைப்பார்கள். சக்கரவர்த்தி துதிக்க வந்திருக்கும்போது நீ பதிகங்களைப் பாடியது உன் வாழ்நாளில் கிடைத்த பெரிய பாக்கியமாகும்." என்றான் நம்பி. அவனுக்கு அவளுடைய தளிர்க் கரங்களை மெல்ல எடுத்துத் தன் விரல்களுடன் பிணைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. தன் தலைப்பாகையை எடுத்துப் படிக்கட்டில் வைக்கத் திரும்புவது போல் மெல்ல அவள் அருகே நகர்ந்தான். ஆனால், சிந்தாமணி சற்று நகர்ந்து கொண்டாள்.

கையில் வைத்திருந்த தாமரைக் கொடியைத் தலைப்பாகையின் மீது மெல்ல வருடியவாறு, "நான் விளையாட்டாகக் கூறினேன். அம்பலம் என்பதற்குப் பொருள் என் தமிழ் ஆசான் சொல்லிக் கொடுத்திருக்கிறார்" என்றான். "நீ தமிழ் படித்திருக்கிறாயா?"

"தமிழ் படித்திருக்கிறேன், இசை பயின்றிருக்கிறேன். நிருத்தியமும் வரும். எல்லாம் என் தந்தை வசதியுடன் இருந்தபோது கற்றுத் தந்தவை"

"வசதியாக இருந்தபோதா? இருந்தபோது என்ற கடந்த காலத்தை எண்ணி வேதனையடைய வேண்டாம். உங்களுக்கு அம்பலவாணன் இழைத்த அநீதிகளைக் கேள்விப்பட்டேன். இனி ஒரு துன்பமும் அவனிடமிருந்து நேராமல் நான் காப்பாற்றுவேன்."

"என் தந்தை முழுக்கதையையும் சொல்லி விட்டாரா? எங்களுக்கு அந்த ஊரிலேயே இருக்கப் பயமாக இருக்கிறது. என் தாயின் கடைசி ஆசை அந்த ஊரை விட்டே புறப்பட்டுவிட வேண்டும் என்பது. ஆனால் எங்கள் மீது புதிய பழியை அம்பலவாணன் சுமத்திவிட்டாரே" என்று கூறும்போது சிந்தாமணியின் விழிகளில் நீர் தளும்பியது. அதை மறைப்பதற்காகக் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"சிந்தாமணி! சற்று நேரம் முன்பு கலகலவென்று நகைத்தாய். இப்போது விழிகளைக் குளமாக்குகிறாய். உனது தந்தை மீது எனக்குப் பெரும் மதிப்பேற்பட்டு விட்டது. உங்கள் குடும்பத்தை, எனக்கு முன்பு தெரியாது. முற்பிறவியின் தொடர்பாக இருக்கலாமோ என்று எனக்குத் தோன்றுகிறது. சோழநாட்டில் இப்படியோர் அநீதி நடக்கிறது என்பதைக் கேட்க எனக்குக் குருதி கொதிக்கிறது. அநீதியை அரசரிடம் எடுத்துக் கூறி அதற்கொரு முடிவு ஏற்படுத்தாமல் ஓயமாட்டேன். உன் தந்தையை இன்று எப்படியாவது சந்திக்க வேண்டுமே என்று எண்ணிக் குளக்கரைக்கு வந்தேன்" என்று கூறி மூடியிருந்த அவள் கரங்களை முகத்தினின்று விடுவித்து விழி நீரையும் துடைக்கக் கரங்களை நீட்டியபோது, சிந்தாமணி மேலும் சற்று நகர்ந்து அமர்ந்தாள். அவனுடைய கரத்தைத் தன் கரத்தால் பற்றிக் கொள்ள அவளுக்கும் ஆசை தான். அவனுடைய மெல்லிய ஸ்பரிசத்தை உணர அவளுக்கு ஆர்வம் தான். ஆனால் அவள் தாய் அவளை வளர்த்திருந்த விதம் பிற ஆடவரை அத்தனை எளிதாக நெருங்கும் துணிவை அளிக்கவில்லை. ஆனால்,

"என் தந்தையைப் பார்ப்பதற்காகத் தான் குளக்கரைக்கு வந்தீர்களா?" என்று சிந்தாமணி கேட்டாள். அவளால் எப்படி அவ்வாறு கேட்க முடிந்தது?

நம்பி அவள் முகத்து உணர்ச்சியைக் காண முயன்றான். இருள் தன் வண்ணத்தை நன்றாய்ப் பூசிவிட்டது. கோபுர மாடத்து விளக்குகள் குளத்து நீரில் பிரதிபலித்தன. விழிநீர் அந்தச் சிறு ஒளியிலும் பளிச்சிட்டது.

நம்பி இன்னும் நகர்ந்து வந்தான். அவள் கரத்தினின்று தாமரைக் கொடியைப் பறித்து, அவளுடைய விழிகளை மலரால் வருடினான்.

நம்பியே தன் முகத்தை மெல்ல வருடுவது போல் அவளுக்குத் தோன்றியது. மலர் அவளுடைய கழுத்தில் இறங்கியது. மார்பில் தவழ்ந்தது; கரத்தில் வளர்ந்தது. இடையில் அது படரும்போது அவள் கூச்சமுற்று நெளிந்தாள். அவன் கரத்தினின்று தாமரைக் கொடியை வேகமாக இழுத்தாள்.

"உன்னைக் காணவும் தான் நான் வந்தேன் என்று சொல்ல வேண்டுமா? உன் தந்தை சௌக்கியமாக இருந்தால் தானே நீ வளமுடன் வாழ்வாய். நீ நலமாக வாழத்தானே உன் தந்தை இவ்வளவு பாடுபடுகிறார்?" என்று, தாமரைக் கொடியை மீண்டும் பெற யத்தனிப்பது போல் அவள் கையைப் பற்றினான்.

சிந்தாமணியின் உடல் சிலிர்த்தது. இமயத்து வெண்பனித் துகளை எடுத்து வந்து தூவியது போல் தோன்றியது. பொதிகைச் சந்தனத்தை எடுத்துப் பூசியது போல் குளிர்ந்தது. மறுகணம் அவள் கண் எதிரே அவள் தாய் தோன்றினாள். 'பெண்ணே! ஆடவர்களிடம் மிகவும் எச்சரிக்கையுடன் பழக வேண்டும். கருமேகத்தில் மறைந்திருக்கும் மின்னல், சாம்பல் மூடிய தணல், இனிப்பாய் இருக்கும் நஞ்சு.....' என்று இப்போதும் அருகே இருந்து கூறுவது போல் தோன்றியது.

அவள் ஏன் குளக்கரைக்கு வந்தாள்? செங்கமலத்தாச்சி தேடுவாள். தந்தை பதறிப் போய் விடுவார், அவளையும் அறியாமல் அவளுடைய கள்ள மனத்தின் கட்டளையால் அவள் அங்கு வந்திருக்கிறாள். நம்பியைத் தேடிக் காலையிலேயே அவள் விழிகள் அலைந்தன. அவள் பதிகம் பாடும் போது அவள் நடராசரைத் தவிர நம்பியையும் நினைத்தாள். சக்கரவர்த்தி வந்திருக்கிறார் என்று அறிந்தபோது, அங்கே நம்பியும் வந்திருக்கக் கூடாதா என்று எதிர்பார்த்தாள்.

சிந்தாமணி அங்கிருந்து எழுந்தாள். ஆடையைச் சரிசெய்து கொண்டாள். நம்பி அவள் கரத்தை மெல்லப் பற்றினான். சில நொடிகள் அந்தப் பிடிப்பை விலக்கவில்லை. பிறகு தனது மற்றொரு கரத்தால் அவன் பிடியை வேகமாகத் தளர்த்தினாள்.

"சிந்தாமணி புறப்பட்டு விட்டாயா?" என்று நம்பி கேட்டான். அவன் முகமும், அவள் முகமும் நேருக்கு நேர் சந்தித்தன. அவன் விழிகளும் அவள் விழிகளும் ஒன்றுடன் ஒன்று பேசத் துடித்தன.

"உம்...." என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தாள் சிந்தாமணி.

"நான் துணையாக வரட்டுமா?" நம்பி கேட்டான். துணையா? என சிந்தாமணியின் உடல் சிலிர்த்தது.

"வேண்டாம். வேண்டாம். நான் போகிறேன். என் வழி எனக்குத் தெரியும். யாராவது ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்!" சிந்தாமணி மெல்ல நடந்தாள்.

"யார் என்ன சொல்வார்கள்? நான் யார் தெரியுமா?" என்று கூறி நம்பியுடன் உடன் நடந்தான்.

"தங்களுக்கு அரசரிடம் பணி இருக்கும்....."

"சிறிது நேரம் கழித்துத்தான் நான் செல்ல வேண்டும்."

"சிரமம் வேண்டாம், நான் வருகிறேன்...."

"உங்கள் சிரமத்தைக் குறைக்க வேண்டும் என்று என் உள்ளுணர்வு சொல்கிறது."

"நன்றி. என் தந்தையிடம் சொல்கிறேனே."

"நானே உன் தந்தையிடம் வந்து சொல்கிறேன். கவலைப்பட வேண்டாம் என்றும், நான் இன்று சக்கரவர்த்திகளை எப்படியும் சந்தித்து விடுவேன் என்றும் சொல்கிறேன்."

"இதை நானே சொல்லிவிடுகிறேன்."

"உன்னுடன் தொடர்ந்து நான் துணையாக வரக்கூடாதா?"

"வரவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால்...."

"ஆனால்.... சொல்ல நினைப்பதைச் சொல்லிவிடு சிந்தாமணி! ஓர் இளமங்கையும், இளைஞனும் ஒன்றாகச் சென்றால் வம்பு பேசுவர். ஆச்சிக்குத் தெரிந்தவர்கள் ஒன்றுக்கு இரண்டாகப் போய்ச் சொல்வார்கள். அம்பலவாணனுடைய ஆட்கள் யாராவது பார்த்து விடலாம். அதுதானே உன் எண்ணம்? சிந்தாமணி! உன் அச்சம் நியாயமானதே. என்றாலும் தில்லைக் காளியம்மன் கோயில் வீதிவரை இருளாக இருக்குமே என்று நினைத்தேன்."

"ஏன், சிதம்பரத்தில் வீதியில் பயம் இன்றி நடக்க முடியாதா?"

"சோழநாட்டில் அத்தகைய பயமில்லை. தனியே பெண்கள் அச்சமின்றிச் செல்லலாம்."

"அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் அம்பல வாணரைப் போன்றவர்கள் ஊருக்கு ஊர் தோன்றத் தொடங்கி விட்டால் கன்னிகளுக்கு பாதுகாப்பு கிடையாது."

"அம்பலவாணனுடைய கொட்டத்தை அடக்க நான் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டேன்" என்று நம்பி உறுதியான குரலில் கூறியவுடன், சிந்தாமணி மெல்ல நகைத்து, "எங்கே, உங்கள் கையைக் காட்டுங்கள்...." என்றாள்.

நம்பி வலக்கரத்தை நீட்டினான். "எதற்காகக் கேட்கிறாய்?"

"கங்கணம் கட்டிக் கொண்டு விட்டேன் என்றீர்களே, அதைப் பார்க்கலாமா?" என்று கூறியபோது சிந்தாமணியும் நம்பியும் சேர்ந்து சிரித்தார்கள்.

குளத்துப் படிக்கட்டுகளில் இறங்கியவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

"நம்பி" என்ற குரல் எங்கிருந்தோ கேட்டது.

"நான் போய் வருகிறேன். நாளைக் காலையில் கோயிலில் சந்திக்கிறேன்!" என்று கூறிய சிந்தாமணி மிக வேகமாக நடந்து, திருச்சுற்று கடந்து, கோபுர வாயிலில் நுழைந்து வீதியில் மிக விரைவாகப் பல நாள்கள் பழக்கப்பட்டவள் போல் நடந்து சென்றாள்.

அவள் செல்வதையே பார்த்தவாறு நம்பி நின்று கொண்டிருந்தான்.

மங்கலத்தேவன் அவன் அருகே வந்து பேச்சுக் கொடுக்கும் வரை நின்று கொண்டிருந்தான். எப்படியும் அவர்கள் வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. சந்தித்தே ஆகவேண்டும் என்ற கட்டாயமும் இருந்தது.

முதல் நாள் இரவு நம்பிக்கு உறக்கமே வரவில்லை. பார்க்குமிட மெல்லாம் சிந்தாமணி நின்றிருப்பது போலவும், கலகலவென்று நகைப்பது போலவும்,

துயரக்கதை கூறி விம்முவது போலவும் அவனுக்குத் தோன்றியது. சில நொடிகள் தான் அவளுடைய மென்மையான ஸ்பரிசத்தை உணர்ந்தான். அந்த மெல்லிய பூவிதழை மீண்டும் எப்போது தொடப் போகிறோம் என்று ஏங்கினான். நாணம் நிறைந்த அந்த விழிகளை, ஏக்கம் நிறைந்த அந்த நயனங்களை, அறிவு நிறைந்த அந்த மலர் விழிகளை, அன்பு கொஞ்சும் அந்த விழிகளைப் பார்க்க மறுநாள் காலை வரை ஆகுமே என்ற வேதனையுடன் உறங்காமலே இரவைக் கழித்தான்.

5

மறுநாள் பொழுது விடிந்தவுடனேயே குலோத்துங்க சோழ மாமன்னர் சக்கரவர்த்தி சிதம்பரத்தினின்று பரிவாரங்களுடன் கங்கை கொண்ட சோழபுரத்துக்குப் புறப்படுவதெனத் திடீரென முடிவு செய்தார். தெற்கே மதுரையினின்று மிக முக்கியமான செய்தி வந்திருப்பதை அவர் அறிந்தவுடன், புறப்படக் கட்டளையிட்டார்.

நம்பி சிதம்பரத்திலேயே சில நாள்கள் தங்க மெய்க்காவல் படைத் தலைவரிடம் அனுமதி பெற்றான். ஆனால் சக்கரவர்த்திகளைச் சந்திக்க அவனுக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. மாதேவனிடம் கொடுத்த வாக்குறுதி என்ன ஆவது என்ற கவலை அவன் நெஞ்சில் நிறைந்திருக்க, முதல் நாள் இரவு உறக்கம் இல்லாததால் கண்கள் கனத்திருக்க, இன்னும் சிந்தாமணி வரவில்லையே என்ற கவலை இதயத்தை அழுத்த அவன் உச்சிவேளை வரையில் நின்று கொண்டிருந்தான்.

இன்னும் சில நாள்களுக்கு அவன் சுதந்திரமானவன். சக்கரவர்த்தியின் அருகிலேயே இருக்கவேண்டிய கட்டாயம் அவனுக்கு இல்லை. போர்க் களத்துக்குச் சக்கரவர்த்தி செல்வதற்கான அறிகுறியும் இல்லை. இந்தச் சமயத்தில் வீரப்பட்டினம் சென்று அம்பலவாணனைச் சந்தித்து விடலாம் என்று எண்ணினான். ஆனால், இன்னும் மாதேவன் வரக்காணோமே!

நம்பி, சோர்ந்த உள்ளத்துடன் கோயிலினின்று நடந்தான். காலையி லிருந்து அவன் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. மாதேவன் தங்கியிருந்த வீட்டை நோக்கி விரைந்தான்.

தில்லைக் காளி அம்மன் வீதியில் செங்கமலத்தாச்சியின் வீட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை.

கதவு மூடப்பட்டிருந்தது. உச்சி வெயிலில் வீதியில் நடமாட்டம் இல்லை. கதவுக்கு அருகே சிறிது நேரம் நின்றான். என்ன சொல்லி அழைப்பது என்று ஒரு கணம் யோசித்தான்.

மெல்லக் கதவைத் தட்டினான். "ஐயா.... ஐயா..." என்று அழைத்தான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு கதவு திறந்தது. செங்கமலத்தாச்சி நின்று கொண்டிருந்தாள்.

ஆச்சிக்குப் பின்பும் யாராவது வருகிறார்களா என்று நம்பி ஆவலுடன் நோக்கினான்.

"யார் வேண்டும்?" என்று ஆச்சி கேட்டாள்.

"மாதேவன் இருக்கிறாரா?" என்றான் நம்பி.

ஆச்சி உடனே மறுமொழி கூறவில்லை. பிறகு. "நீங்களும் அரசாங்க அதிகாரியா?" என்று கேட்டாள்.

நம்பிக்குத் 'திக்' என்றது. தன்னை யார் என்று அறிமுகப் படுத்திக் கொள்வான்?

ஆச்சியே தொடர்ந்தாள், "அவங்க காலையிலேயே ஊருக்குப் புறப்பட்டுப் போய்ட்டாங்க..." என்றாள். அதில் ஒருவித எரிச்சல் இருந்தது.

"வீரப்பட்டினத்துக்கா?" என்று நம்பி கேட்டவுடன் தலையை மட்டும் ஆட்டிவிட்டுக் கதவை மூடிக் கொண்டாள் செங்கமலத்தாச்சி.

முதல் நாள் இரவு, குளக்கரையில் நம்பியுடன் பேசி விட்டுச் சிந்தாமணி வீட்டை அடையும் போது மாதேவன், வீட்டு வாசற் படியிலே உட்கார்ந்திருந்தார். கமலத்தாச்சி கதவைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

சிந்தாமணி பயந்துவிட்டாள். இவ்வளவு நேரமாகத் தன்னைக் காணவில்லையே என்று எண்ணியதற்கு மாறாக, சிந்தாமணி உள்ளே நுழைந்தவுடன் கதவை மூடிவிட்டு "நல்லவேளை, சற்று முன்பு நீ வரவில்லை" என்றார்.

தான் தாமதமாக வந்தது "நல்லவேளையின்" காரணமா? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தந்தையின் முகம் மிக வாடியிருப் பதையும், பேசுவதற்கு வார்த்தைகள் வராமல் தொண்டையில் சிக்கிக் கொள்வது போன்று தடுமாற்றம் இருப்பதையும் சிந்தாமணி கவனித்தாள்.

செங்கமலத்தாச்சி அறையின் நடுவே சுவரில் இடப்பட்டிருந்த வட்ட வடிவமான மஞ்சள் குங்குமத்தின் எதிரே அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு ஏதோ பிரார்த்தனை செய்து கொள்ளத் தொடங் கினாள். ஒரு சிறு அகல் விளக்கு அங்கே எரிந்து கொண்டிருந்தது.

அவள் தன் தாயை நினைத்துக் கொண்டாள். பிறகு தந்தையின் எதிரே சென்றமர்ந்து, அவரது முகத்தில் துளிர்த்திருந்த வியர்வையைத் தன் முன்றானையால் துடைத்து, "அப்பா! ஏன் வாட்டத்துடன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"குழந்தாய்...." என்று அவர் பேச்சைத் தொடங்கும் முன்பே விம்மல் ஒலி அவரிடமிருந்து எழுந்தது. தன் தந்தை முன் எப்பொழுதும் இவ்வாறு கண்ணீர் விட்டதே கிடையாது.

"அப்பா, அப்பா! என்ன நேர்ந்தது, சொல்லுங்கள். எனக்கும் அழுகை வரும் போலிருக்கிறது" என்றாள் சிந்தாமணி.

"மகளே! சற்று முன்பு அம்பலவாணன் இங்கே வந்திருந்தான்...." என்று சொல்லத் தொடங்கினார்.

சிந்தாமணி திடுக்கிட்டாள். "இங்கே வந்திருந்தாரா? நமது இருப்பிடம் அவருக்கு எப்படித் தெரிந்தது?"

"ஒரு நாட்டின் பேரரசருக்கு ஒற்றர்கள் இருப்பது போல் அவனுக்கும் இருக்கிறார்கள். உன்னைக் காணோமே என்று கவலையுடன் நான் வாயில் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். இரண்டு குதிரைகள் வந்து நின்றன. அதன் மீதிருந்து இருவர் இறங்கினர். 'நீர்தானே மாதேவன்?' என்று கேட்டனர். 'நீங்கள் யார்?' என்று நான் கேட்டேன். அவர்கள் மறுமொழி கூறாமல் சென்று விட்டனர். சிறிது நேரத்தில் இரட்டை மாட்டு வண்டி ஒன்று சதங்கைச் சப்தத்துடன் வந்து நின்றது. அம்பலவாணன் வண்டியினின்று இறங்கினான். அவனை வரவேற்க நான் வாயெடுப்பதற்குள், அவன் கடுமையான வார்த்தைகளைப் பேசத் தொடங்கி விட்டான்." அவர் மேற்கொண்டு நடந்ததை விவரித்தார்.

"மாதேவா! நீ தப்பி ஓடிவிட முடியும் என்று கனவில் கூட நினைக்காதே" என்று எடுத்த எடுப்பிலேயே தொடங்கிய அம்பல வாணன் கடுமையான குரலில் மாதேவனை வசைமாரி பொழிந்தான்.

"நான்.... நான்" என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார் மாதேவன்.

"நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். எனக்குத் தெரியும் நீ சக்கரவர்த்தியிடம் என்னைக் குறித்துப் புகார் செய்ய வந்தாய் என்று." மாதேவன் திடுக்கிட்டார்.

"நான் முன்பே உன்னைப் பற்றிச் சக்கரவர்த்தியிடம் சொல்லி விட்டேன். நிலவரி பாக்கியிருப்பவர்களை ஏன் தண்டிக்கவில்லை என்று என்னை அரசர் கோபித்தார். கோயில் நகையை நீ கையாடி யதைக் குறித்து இன்னும் நான் சொல்லவில்லை. வீரப்பட்டினத்தை விட்டு நீ வெளியேறக் கூடாது என்று நான் சொன்னதை மறந்து விட்டாயா?" என்றான் அவன்.

மாதேவன் ஏதும் பேசவில்லை.

"உன் மகள் எங்கே? இங்கு நீ செய்ய உத்தேசித்திருப்பதை வீரப்பட்டினத் திலேயே செய்திருக்கலாமே? உனக்கு நான் பல யோசனைகளைச் சொன்னேன்.... நீ கேட்கவில்லை, என்னை மதிக்கவில்லை...." என்று கூறி வந்த போது மாதேவன் சீறினார்.

"அம்பலவாணா! நாவை அடக்கிப் பேசு. என்னை எது வேண்டு மானாலும் சொல்லு. என் மகளைப் பற்றி ஏதும் மரியாதைக் குறைவாகப் பேசாதே!"

அம்பலவாணன் நகைத்தான். "இது இரவு வேளை. நீ வந்த இடத்தில் உன் மானம் பறிபோவதை நான் விரும்பவில்லை. நீ நாளைக் காலையிலே வீரப்பட்டினத்துக்குப் புறப்பட்டு விட வேண்டும். எங்கே உன் மகள்?"

மூதாட்டி பயந்து நின்று கொண்டிருந்தாள். சிறிது நேரம் கழித்து அம்பலவாணன் புறப்பட்டு விட்டான்.

நடந்த இந்தச் சம்பவத்தைக் கேட்ட சிந்தாமணி நடுநடுங்கினாள். ஆனால் உடனே அவளுக்குத் தைரியம் ஏற்பட்டது. "அப்பா! அவர் இன்று எப்படியும் சக்கரவர்த்திகளிடம் அந்தப் பாதகனைப் பற்றிக் கூறியிருப்பார். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாளைக் காலையில் கோயிலில் அவரைச் சந்தித்து இன்றைய சம்பவத்தை எடுத்துச் சொல்வோம்." என்றாள்.

"வேண்டாம், வேண்டாம், மகளே! இந்தக் காலத்தில் யாரை நம்புவது என்றே தெரியவில்லை. சக்கரவர்த்தியிடம் நாம் புகார் செய்ய வந்திருக்கும் விஷயம் அம்பலவாணனுக்கு எப்படித் தெரியும்?" என்று மாதேவன் கேட்கும் போது குரலில் சந்தேகத்தின் சாயை இருந்தது.

"அவர் சொல்லியிருப்பார் என்று சந்தேகப்படுகிறீர்களா? தவறப்பா, அவர் மிகவும் நல்லவர். அவர் நமது நலனுக்காகப் பாடுபடப் போகிறார்" என்றாள் சிந்தாமணி. மாதேவன் ஏதும் பேசவில்லை.

மறுநாள் காலையில் வீரப்பட்டினத்துக்குப் புறப்படுவதற்கான ஏற்பாட்டை மாதேவன் செய்யலானார்.

"மண்டபத்துக்குச் சென்று அவரைக் கண்டு வருவோமா அப்பா?" என்று சிந்தாமணி கேட்டாள்.

"வேண்டாம் மகளே! இனி நாம் இங்கே ஒரு கணம் கூடத் தாமதிக்கக் கூடாது. உடனே புறப்பட்டு விடுவோம்" என்று அவர் கூறி வாயை மூடுவதற்குள், வாயிலில் வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்டது.

அம்பலவாணன் வந்து நட்சத்திரையன் போல் நின்றான். "இன்னும் புறப்படவில்லையா?" என்ற அவன் கேள்வியில் அதிகாரம் ஒலித்தது.

மாதேவன் மறுமொழி கூறாமல் மூட்டை கட்டிக் கொண்டிருந்தார்.

"நடந்து தானே போகப் போகிறாய்?" என்று கேட்டான் அம்பலவாணன்.

'ஆம்' என்று தலையை அசைத்தார் மாதேவன்.

"சிந்தாமணி இங்கேயே தங்கியிருக்கட்டும். காடவராயர் இன்று மாலை வருகிறார். பிறகு நானே இரட்டைக் குதிரை பூட்டிய ரதத்தில் அவளைக் கொண்டு விடுகிறேன்" என்று கூறி சிந்தாமணியைப் பார்த்தான் அம்பலவாணன்.

"உன்னுடைய எண்ணம் ஒரு நாளும் நடவாது" என்று சீறினார் மாதேவன்.

"காடவராயர் உத்தரவு" என்றான் அம்பலவாணன்.

"எனக்கு உத்தரவிட காடவராயருக்கு என்ன உரிமை?" மாதேவன் துணிந்து பேசினார்.

"வீரப்பட்டினத்தின் சிற்றரசர் அவர்!" அம்பலவாணன் பேசியது அங்கிருப்பவருக்குப் பிடிக்கவில்லை என்று தோன்றியது.

"எனக்குக் குலோத்துங்க சோழ சக்கரவர்த்தியை மட்டுமே தெரியும். சக்கரவர்த்தியின் அடிமைகளைத் தெரியாது" என்று மாதேவன் கூறியபோது, அவர் எதற்கும் துணிந்து விட்டார் என்பது தெரிந்தது.

அம்பலவாணன் வாயைத் திறக்குமுன்பு உடன் வந்திருந்த அதிகாரிகள், "அம்பலவாணரே! எங்களுக்கு நேரமாகிறது. மாதேவன் சிதம்பரத்தை விட்டுப் புறப்படுகிறாரா என்று பார்க்கச் செல்வோம் என்றீர்கள். அவர் புறப்படாவிட்டால் தான் நகரத்தை விட்டு வெளி யேற்ற வேண்டும். அவர் புறப்படப் போகிறார்கள். அவருடைய மகளைச் சிதம்பரத்தில் நிறுத்தி வைக்குமாறு நீங்கள் கேட்பது முறையல்ல. நாம் இங்கிருந்து செல்வோம்" என்றார்கள்.

அம்பலவாணனுக்கு அவமானமாயிருந்தது. அதற்கு மேல் அவன் அங்கே நிற்க விரும்பவில்லை. அவன் பார்த்த பார்வை வீரப்பட்டினம் வந்தவுடன் கவனித்துக் கொள்கிறேன் என்று சொல்லாமல் சொல்லுவது போல் தோன்றியது. மாதேவனும், சிந்தாமணியும் சிதம்பரத்தை விட்டுப் புறப்பட்ட பத்து நாழிகைகள் கழித்துத் தான் நம்பி, செங்கமலத்தாச்சியின் வீடு வந்து சேர்ந்தான். மாதேவன் புறப்பட்டுச் சென்று விட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தான்.

வீரப்பட்டினத்துக்குத் தானும் செல்வது என்று முடிவு செய்தான்.

6

கங்கை கொண்ட சோழபுரத்து மந்திராலோசனை மண்டபத்தில் குலோத்துங்க சோழ தேவரும் படைத்தலைவர் இராசராச தேரியரும் அமர்ந்து மிக முக்கியமான பிரச்னை குறித்து விவாதித்துக் கொண்டிருந்தனர்.

"காடவராயருக்கு உடனே வருமாறு செய்தி சொல்லி அனுப்பினீர்களா?" என்று படைத்தலைவரைக் கேட்டுத் தெரிந்து கொண்ட குலோத்துங்கன் மதுரையினின்று வந்த செய்தியைக் குறித்து ஆலோசிக்கலானார்.

மதுரையில் அப்போது ஆண்டு கொண்டிருந்த குலசேகர பாண்டியன், சோழநாட்டின் பிரதிநிதியாயிருந்தவரைச் சிறையி லிட்டுவிட்ட செய்தி, சோழ சக்கரவர்த்தியைச் சினம் கொள்ளச் செய்தது. இந்தத் தடவை நடத்தும் போர் பாண்டியர்களோடு நடத்தும் கடைசிப் போராக இருக்க வேண்டும் என்று சக்கரவர்த்தி சொல்லி விட்டார். படையெடுத்துச் செல்வதற்கான நாள் குறித்தாக வேண்டும். காஞ்சி மாநகரில் சித்தன்ன தேவன் சில நாள்களாகத் தங்கியிருந்து சோழநாட்டுக்கு விரோதமாகப் படைக்கு ஆட்களைத் திரட்டுகிறான் என்ற செய்தியும் கிடைத்தது.

"வடதிசையைக் காடவராயர் பார்த்துக் கொள்வார்" என்று குலோத்துங்க சோழர் கூறினார். சேதிராயர் அதற்குச் சம்மதிக்க வில்லை.

"சக்கரவர்த்தி அவர்களே! என்னை மன்னிப்பீர்களாக. தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கும் காடவராயரைக் குறித்துச் சில செய்திகள் கூறுகிறேன். சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தலைதூக்கி வருகிறது. காஞ்சிப் படையெடுப்பை அவரிடம் ஒப்படைத்தால் தம் பலத்தை நிலை நாட்டித் தம் காலை ஊன்றிக் கொள்ள வழிதேடுவார் என்பது என் கருத்து" என்றார்.

குலோத்துங்கன் மெல்ல நகைத்தார். ''சேதியாரே! ஏழிசை மோகனின் குணங்களைக் குறித்து நான் சமீபகாலமாகக் கேள்விப்பட்டு வருகிறேன். பலநூறு ஆண்டுகள் சுதந்திரமாக ஆண்ட பல்லவ மன்னர்களின் இரத்தம் அவன் உடலிலும் ஓடுகிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. அதனால் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் அவ்வப்போது அவனிடம் தலைதூக்குகிறது. அவனது தந்தையே தம்மைக் கோப்பெருஞ்சிங்கன் என்றழைத்துக் கொண்டார். மகனும் அப்படியே அழைத்துக் கொள்கிறான் என்பது எனக்குத் தெரியும். நான் ஆட்சேபிக்கவில்லை. சோழநாட்டை எதிர்த்து ரிஷபக் கொடி உயர்த்துவது என்பது வீண் கனவு என்பதையும் நான் அறிவேன். அவனுக்கும் தெரியும். ஆனால் ஏழிசை மோகன் சிறந்த வீரன். அவன் சோழ நாட்டுடன் நண்பனாயிருப்பதையே நாம் விரும்ப வேண்டும். ஆதரிக்க வேண்டும். அவனுடைய சொந்த விஷயங்களிலும் நாம் தலையிடக் கூடாது. அவன் மாவீரன் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதனால் தான் தன்னந்தனியனாய் காஞ்சியில் சித்தன்ன தேவனுடன் போர் புரிய ஏழிசை மோகனை அனுப்ப முடிவு செய்துள்ளேன்'' என்றார்.

சக்கரவர்த்தியின் கருத்தைச் சேதிராயர் ஏற்கவில்லை. ''காடவராயரின் வீரத்தைக் குறித்து எனக்குச் சந்தேகம் தான். இளம் வயதில் காம லீலைகளில் ஈடுபட்டிருக்கும் அவரது திறமை குறித்து என் கருத்து மாறுபடுவதற்கு என்னை மன்னிக்க வேண்டும்'' என்றார் அழுத்தந்திருத்தமாக.

சேதிராயரின் கருத்தைக் கேட்டுச் சக்கரவர்த்தி கோபப்பட் வில்லை. மிக அமைதியான குரலில், ''சேதிராயரே! தங்கள் கருத்தை மறைவு இல்லாமல் கூறியதற்குப் பாராட்டுகிறேன். ஆனால் நான் காடவராயரிடம் கொண்டிருக்கும் கருத்து சரியானதென்று நிரூபிக் கிறேன். உங்கள் கருத்தே சரியானது என்று நீங்கள் நிரூபித்தால் நான் ஏற்றுக் கொள்கிறேன். திருமுனைப்பாடி நாட்டுக் காவல் அதிகாரிப் பதவியினின்று அவனை நீக்கி விடுகிறேன், சரிதானே?'' என்றார்.

சேதிராயரும் உற்சாகத்துடன் சக்கரவர்த்தியின் கருத்தை ஏற்றார்.

''மதுரைப் படையெடுப்பில் நாம் தீவிரமாக ஈடுபடுவோம். காஞ்சிப் படையெடுப்பை ஏழிசை மோகனிடம் ஒப்படைப்போம். அந்தப் படையெடுப்பில் காடவராயர் வென்றால் அவருக்குச் சிறந்த பரிசளிப்பதாக முடிவு செய்துள்ளேன்'' என்றார் சக்கரவர்த்தி.

''என்ன பரிசு என்று நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று சேதிராயர் கேட்டார்.

''என் மகள் வல்லபியை ஏழிசை மோகனுக்குத் திருமணம் செய்து வைப்பது என் திட்டம்'' என்று கூறியவுடன் சேதிராயர் திடுக்கிட்டார்.

''பிராட்டி இதற்குச் சம்மதிக்க மாட்டார் என்பதை நான் அறிவேன். ஏன், வல்லபிக்கும் விருப்பம் இல்லை என்பதும் எனக்குத் தெரியும்'' என்றார் சேதிராயர்.

''வல்லபி விரும்பவில்லை என்பதை, தாங்கள் எவ்வாறு அறிவீர்கள்?''

''காஞ்சி மாநகரில் வல்லபியை ஏழிசைமோகன் சந்தித்த பிறகு வல்லபி எடுத்த முடிவு.''

''வல்லபி நேரில் கண்ட நிகழ்ச்சியைக் குறித்துத் தானே சொல்கிறீர்கள்? நடனமாதிடம் ஏழிசை மோகன் சல்லாபித்ததால் தான் சித்தன்ன தேவனின் சதியை அவனால் அறிய முடிந்தது. வல்லபி அதைத் தவறாக நினைத்து விட்டாள். ராஜ தந்திரத்தைப் புரிந்து கொள்ளாத பெண்.''

''சக்கரவர்த்தி அவர்களே! நான் அதைக் குறிப்பிடவில்லை. வல்லபியும், ஏழிசை மோகனும் சந்தித்திருக்கிறார்கள்.''

சேதிராயர் இவ்வாறு கூறியதும் சக்கரவர்த்தி வியப்புற்றார். அதை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை.

''வல்லபி சந்தித்தாளா?'' என்று கேட்டார்.

''ஆம் அரசே! வல்லபிக்கும் ஏழிசை மோகனுக்கும் நடந்த உரையாடலின் முடிவில் சூளுரை ஏற்பட்டிருக்கிறது. 'உன்னை மணந்து ஒரு நாளாவது உன்னை அழைத்து வந்து சேந்தமங்கலம் கோட்டையில் வாழவிடாவிட்டால் நான் காடவராயர், கோப்பெருஞ் சிங்கன் என்ற பட்டத்தை உடனே துறந்து விடுகிறேன்' என்று சபதம் செய்திருக்கிறான். அந்த நாளிலிருந்து வல்லபி ஏழிசை மோகனை வெறுக்கிறாள். அவனைத் திருமணம் செய்து கொள்ள எப்படிச் சம்மதித்தாள்?''

''சேதிராயரே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர் களுடைய ஊடல் மிக எளிதில் தீர்ந்துவிடும். ஏழிசை மோகன் போரில் வெற்றிபெற்று விட்டால் அவனுக்கு வல்லபியைத் திருமணம் செய்து வைப்பது நமக்கே நல்லது. வெற்றி பெறாவிட்டாலோ அவனுடைய தலைக்கனம் குறைந்து விடும். இதுவரையில் அவன் கொண்டிருந்த மமதை யாவும் மண்ணைக் கவ்வி விடும். கோப்பெருஞ்சிங்கன் என்றோ, பல்லவர்குலத் தோன்றல் என்றோ பறை அறிவித்துக் கொள்ள முடியாது'' என்றார் சக்கரவர்த்தி.

சேதிராயர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். ''ஏழிசை மோகன் வெற்றியடைந்து விட்டால் நமக்குப் பாதகம் தான்'' என்றார்.

''அதெப்படி உறுதியாகக் கூறுகிறீர்கள்? காடவராயர் வெற்றியடையக் கூடாது என்பது தங்கள் பிரார்த்தனையா?'' குலோத்துங்கன் கேட்டார்.

''ஆகா, என்ன வார்த்தை கேட்டு விட்டீர்கள் சக்கரவர்த்திகளே? சோழநாட்டிற்குத் தோல்வி ஏற்படப் பிரார்த்தனை செய்வேனா?'' என்றார் சேதிராயர்.

''பிறகு, ஏன் அப்படிக் கூறினீர்கள்? ஏழிசை மோகன் தோல்வி யடைந்து விட்டால் அந்தத் தோல்வி நம்முடையது தானே? காஞ்சியினின்று, கங்கை கொண்ட சோழபுரத்துக்கு எதிரிப் படைகள் வர எவ்வளவு நேரமாகும்? காஞ்சியில் தோற்றுவிட்டால் மதுரைப் பாண்டியர்கள் நம்மைத் துரும்பு போல்

நினைக்க மாட்டார்களா? குலசேகரப் பாண்டியனுடைய புதல்வன் மிகத் திறமையுடையவனா மிருக்கிறானாம் மாவீரனாக விளங்குகிறானாம். ராஜ தந்திரத்தில் சிறந்து விளங்குகிறானாம். அவன் என்ன நினைப்பான்?'' என்று குலோத்துங்கன் கேட்டார்.

''நானும் அதைத் தான் சொல்ல வந்தேன் சக்கரவர்த்தி அவர்களே! காஞ்சிப் போர்க்களத்துக்கு நான் செல்கிறேன். பாண்டியர் களை நாம் தந்திரத்தால் வெல்வோம்'' என்றார் படைத்தலைவர் சேதிராயர்.

''தந்திரமா? நமது வலிமை எங்கே சென்றது?'' சக்கரவர்த்தியின் குரலில் கடுமை இருந்தது.

''வலிமையுடன் தந்திரமும் சேரவேண்டும் என்கிறேன். வல்லபியைச் சுந்தர பாண்டியனுக்கு மணம் புரிவித்து விட்டால்?''

''முடியாது. முடியாது. கனவிலும் நடவாது. மதுரைப் பாண்டியனுக்கு என் மகளையா? சேதிராயரே! தவறான கணக்குப் போடுகிறீர்'' என்றார் குலோத்துங்கன்.

''தவறான கணக்கு அன்று மாமன்னவா! காடவராயரை விடப் பாண்டியர்கள் எந்த வகையில் குறைந்தவர்கள்? பல்லவர்களை விடப் பெரும் பாரம்பரியம் அவர்களுக்கு உண்டு. அவர்கள் நாடு சின்னா பின்னமடைந்து விடவில்லை. நம்மிடம் தோற்றோடுகிறார்களே தவிர, தங்கள் அரியணையை என்றுமே விட்டுக் கொடுக்கவில்லை. நான் பலமுறை யோசித்தேன். வருங்காலத்தில் சோழநாடும் பாண்டிய நாடும் ஒற்றுமையுடன் திகழ்ந்தால் உலகுக்கே நல்லது'' என்றார் சேதிராயர்.

''சேதிராயரே! படைகளுக்குத் தலைமை வகிப்பதும் போர்க்களத்தில் வாள் சுழற்றி வேல் எறிந்து வெல்வதும் தங்களுக்கு வெறுத்து விட்டனவா?''

''இல்லை, இல்லை. இந்த உயிர் உடலில் உள்ளவரை சோழநாட்டைக் காக்க எத்தனை போர்க் களங்களிலும் எதிரிகளைச் சந்திக்க ஆயத்தமாயிருக்கிறேன்.''

''பிறகு, பாண்டியர்களுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்று ஏன் சொல்கிறீர்கள்?''

''சமாதானமன்று. பாண்டியர்களுடன் விரோதம் பாராட்டு வதைக் குறைக்கச் சொல்கிறேன்.''

''அதனால் நம் கௌரவம் குறையாதா?''

''குறையாது. காடவராயனிடந்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பல்லவ நாட்டின் பழம் பெருமையை நிலை நாட்டக் காடவராயன் திட்டமிடுகிறான். காஞ்சியில் வெற்றி பெற்றால், தன் பலத்தை மேலும் வலுவடையச் செய்வான். தோற்றாலோ, தெலுங்கு நாட்டுச் சோழர்களுடன் சேர்ந்து கொண்டு நம்மையே எதிர்க்க முயல்வான். தெலுங்கு நாட்டுச் சோழர்கள் பழைய பல்லவர்கள் தாமே!'' என்று சேதிராயர் தம் மனத்தில் பட்டதை ஏதும் ஒளிக்காமல் பேசினார்.

குலோத்துங்கன் அவருடைய சொல்லை ஏற்றுக் கொள்ள வில்லை. தலையைப் பலமாக அசைத்தார்.

''சேதிராயரே! உங்கள் கணிப்பு தவறானது. ஏதோ உங்களுக்கு அவன் மீது கோபம், வெறுப்பு. காடவராயன் ஒரு நாளும் சோழ நாட்டுக்கு விரோதியாக மாட்டான். போரில் தனது திறமையைக் காட்டினால் அதற்குப் பரிசாக வல்லபி கிடைப்பாள். வல்லபி கிடைப்பாள் என்பதற்காகவே தனது முழுத் திறமையையும் காட்டுவான். தோற்றால் சோழ நாட்டின் உதவி அவனுக்கு எப்படியும் தேவைப்படும்.''

சோழநாட்டுப் படைத்தலைவர் மௌனமாயிருந்தார். சிறிது நேரம் கழித்து, ''சக்கரவர்த்தி அவர்களே! மதுரையின் மீது படை யெடுத்துச் செல்ல நாளைக் குறிப்பிடுங்கள்'' என்றார்.

''சேதிராயரே! தாங்கள் தான் புறப்படுகிறீர்கள். ஏழிசை மோகன் வந்தவுடன் வடக்குப் படையெடுப்பிற்காகத் திட்டங்களை முடிவு செய்த பிறகு தெற்கே செல்வோம்'' என்று கூறினார். சேதிராயர் ஏதோ கூற முயலுவதற்குள், ''சேதிராயரே! சோழநாட்டுப் படைகளுக்கு உதவியாகத் தான் மலையமானும், சம்புவரையரும் படைகளை அனுப்புவது வழக்கம். முழுக்க முழுக்கப் படைகளை நடத்திச் செல்லும் பொறுப்பை நாம் சிற்றரசர்களுக்குத் தருவதில்லை. அதனால் காடவராயன் படைக்குத் தலைமை வகிக்க மாட்டான். நாம் சோழ வீரர்களுள் சிறந்த ஒருவனிடம் படைகளின் பொறுப்பை ஒப்படைப்போம்'' என்றார்.

குலோத்துங்க சக்கரவர்த்தியைச் சந்திக்க ஏழிசை மோகன் விரைந்து வந்தான். காஞ்சிப் படையெடுப்பைக் குறித்து அவனிடம் விவாதிக்கப்பட்டது.

''சோழப் படைகளுக்கு யார் தலைமை வகிக்கப் போகிறார்கள்?'' என்று ஏழிசை மோகன் கேட்டான்.

சோழச் சக்கரவர்த்தி சேதிராயரை நோக்கி, ''சோழ நாட்டுப் படைத் தலைவர், யாரைத் தோந்தெடுக்கிறாரோ அவரிடம் ஒப்படைப்போம்'' என்றார்.

ஏழிசை மோகன் சேதிராயரை நோக்கினான்.

''திருக்கோவலூர் அருகே தாங்கள் படைகளுடன் ஆயத்த மாயிருங்கள். இங்கிருந்து சோழர் படைகள் அங்கு வந்து சேரும். அவர்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள்'' என்றார் சேதிராயர்.

ஏழிசை மோகன் அதற்குச் சம்மதிக்கவில்லை. ''காஞ்சிபுரத்தை எனது படைகளுடன் சோழர் படைகளும் தனித்தனியே கிடுக்கி போல் வளைத்துத் தாக்கட்டும்!'' என்றான்.

''காடவர்கோனின் படைகள் என்று தனியே படை அணி கிடையாது என்பதை அறிவீர்களா?'' என்றார் சேதிராயர்.

''அறிவேன். இருந்தாலும் நான் வேறொரு படைத்தலைவரின் தலைமையின் கீழ் இயங்க மாட்டேன்'' என்றான் ஏழிசை மோகன்.

குலோத்துங்க சோழதேவர் எழிசை மோகனின் சுதந்தரமான எண்ணத்தைப் பெரிதும் ரசித்தார். குறிப்பாக சேதிராயரைக் கீழ்க்கண்ணால் பார்த்தார்.

''தாங்கள் படைகளின் உதவியின்றியே காஞ்சியில் சோழர் படைகள் வெற்றிமாலை சூடும்'' என்றார் சேதிராயர்.

எழிசை மோகன் திடுக்கிட்டான். அவன் மீண்டும் பேசுவதற்கு முன்பு சேதிராயர் குரலில் கடுமை ஒலிக்க, ''நான் சோழ நாட்டுப் படைகள் அனைத்துக்கும் தலைவர். என் கட்டளையின் கீழ் தான் தாங்களும் இயங்குகிறீர்கள் என்பதையும், சோழநாட்டின் சிற்றரசராகத் தான் இன்னும் இருக்கிறீர்கள் என்பதையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்'' என்றார்.

சேதிராயரின் முழக்கமும் குலோத்துங்கனுக்குப் பிடித்துத்தான் இருந்தது. இரு வீரர்கள் சொற்போரையும் ரசிப்பவர் போல் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

காடவர்கோன் இதை எதிர்பார்க்கவில்லை. சேதிராயர் விடவில்லை.

''காடவராயரே! கோப்பெருஞ்சிங்கன் என்ற புகழ்ப்பெயருடன் கூடிய தங்கள் தந்தை சோழநாட்டின் அபிமானத்தைப் பெற்றவர். தாங்கள் அதைவிட ஒரு படி மேலாகவே சக்கரவர்த்திகளின் பெருமதிப்பைப் பெற்றிருக்கிறீர்கள். அதைக் குலைத்து விடாதீர்கள்'' என்றார்.

எழிசை மோகன், சக்கரவர்த்தியை நிமிர்ந்து நோக்கினான். அவர் முகத்தில் புன்னகை நெளிந்தது.

''காடவராயரே! காஞ்சியில் தாங்கள் செய்த சபதம் நினைவிருக்கிறதா?'' என்று சேதிராயர் கேட்டவுடன் எழிசை மோகன் திடுக்கிட்டான்.

''சோழ இளவரசியிடம் தாங்கள் செய்த சூளுரை என்ன என்று நினைவுக்கு வருகிறதா? தங்கள் வீரத்தைக் காஞ்சிப் போரில் புலப்படுத்தினால் தான் தங்களுக்கு இளவரசி மாலையிடுவாள். இல்லாவிடில் தாங்கள் கோப்பெருஞ் சிங்கன் என்ற பட்டத்தையே துறந்து விடுகிறீர்கள். அப்படித்தானே? தங்கள் வீரம் நிலை நாட்டப் பட வேண்டுமெனில் காஞ்சிப் போரில் தாங்கள் கலந்து கொள்ள வேண்டும். சோழநாட்டுத் தளபதியின் தலைமையின் கீழ்க் கலந்து கொள்ள வேண்டும். நினைவிருக்கட்டும்'' என்று சேதிராயர் கூறவும் எழிசைமோகன் தலைகுனிந்து மௌனமாக இருந்தான்.

ஆனால் அந்த மௌனம் ஒரு பெரிய எரிமலையை உருவாக்கி விட்டது. 'நான் சுதந்தர பல்லவ சாம்ராஜ்யத்தை மீண்டும் நிறுவா விடில் கோப்பெருஞ் சிங்கன் அல்லன்'* என்று மனத்துக்குள் சபதம் செய்து கொண்டான்.

சோழர் படைகளைத் தலைமை தாங்கி நடத்தப்போகும் சோழ வீரனைப் பார்த்தவுடன் எழிசைமோகன் அதிர்ச்சி அடையப் போகிறானா? சீற்றங்கொள்ளப் போகிறானா?

* பிற்காலத்தில் சோழ மன்னரைச் சிறைப்படுத்திச் சோழ சாம்ராஜ்யம் அழிவதற்குப் பெருங்காரணமாயிருந்தான் என்று வரலாறு கூறுகிறது. விரக்கிரமனின் 'தெற்று வாசல் மோகினி' நாவலில் இதைக் காணலாம்.

7

நம்பி வீரப்பட்டினத்தை வந்தடைந்த போது இருட்டும் வேளை. மாதேவன் வீட்டைத் தேடிக் கண்டுபிடிப்பதில் எந்தவிதச் சிரமமும் அவனுக்கு இருக்கவில்லை. மாதேவன் வீட்டை அடையாளம் காட்டியவர்கள் அவனை ஏற இறங்கப் பார்த்தார்கள். அவன் அந்தக் கிராமத்துக்குப் புதியவன் என்றாலும் அவனைக் குறித்து ஏதும் விசாரிக்க முற்படவில்லை.

வீடு, பழங்காலத்து வீடு. புதுச் சுண்ணம் கண்டு ஆண்டுகள் பல ஆகியிருக்குமென்று தோன்றியது. வலப்புறச் சுவரின் ஓரத்தே அரசமரம் ஒன்று மெல்ல மெல்ல வளர்ந்து வேரூன்றிக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது காலத்தில் அது வீட்டையே பெயர்த்து விடும்.

வாயிற்படியருகே நின்று, ''ஐயா, ஐயா'' என்று அழைத்தான் நம்பி.

அவன் தோளிலிருந்து தொங்கிய மூட்டை கனப்பது போல் தோன்றியது. வழிநடந்த களைப்பு இப்போது தான் தெரிந்தது. அவன் சாதாரணக் குடிமகன் உடையில் தான் வந்திருந்தான். ஆடைகளில் புழுதி படிந்திருந்தது. கடும் வெயிலில் நடந்து வந்ததால் முகம் கறுத்திருந்தது.

உள்ளே விளக்கு ஏற்றப்பட்டிருக்கவில்லை. இருளோடு அமைதியும் சேர்ந்து அந்த வீட்டின் வறுமையை விளக்கிட்டுக் காட்டின. வெளவால் ஒன்று திடீரென்று உள்ளே இருந்து பறந்தோடி வந்தது.

உள்ளே யாரோ முனகும் சத்தம் மட்டும் கேட்டது. மீண்டும் குரல் கொடுத்தான் நம்பி. உள்ளே செல்லத் தோன்றவில்லை அவனுக்கு. என்ன செய்வதென்று புரியவில்லை. 'நொய்' என்ற சில்வண்டுகளின் ஒலி. பல்லியொன்று 'டொக் டொக்' என்று சப்தமிட்டது.

நம்பி வீதியை நோக்கினான். வீதியில் நடமாட்டம் இல்லை. வீதியின் கோடி வீடு அது. வீட்டின் எதிரே ஒரு சிறு தெரு. அதையும் நோக்கினான். யாரோ இருவர் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. சிந்தாமணியாக இருக்கக் கூடாதா என்று நினைத்தான்.

சிந்தாமணியும், அவள் தங்கை செண்பகமும் தான் வந்து கொண்டிருந்தனர். சிந்தாமணியின் இடையில் பானை. அதில் குடிநீர். செண்பகத்தின் கையில் சிறு பாண்டம். அதில் சோறு இருக்கலாம்.

சிந்தாமணி சற்றுத் தொலைவில் வரும்போதே அடையாளம் கண்டு கொண்டு விட்டாள்.

''நீங்களா?'' என்ற குரல் அவள் இதயத்தின் அடக்க முடியாத வேதனையின் எதிரொலியாக எழுந்தது.

''செண்பகம்! நான் சொன்னேனே, அவர் எப்படியும் உதவ வந்து விடுவார் என்று. பார்த்தாயா, வந்து விட்டார்'' என்று தன் சகோதரியை நோக்கிக் கூறியபோது அவள் குரலில் நம்பிக்கை உறுதியாக இருந்தது.

சிந்தாமணியைப் போன்ற அழகி அல்லள் செண்பகம். என்றாலும் அந்தக் குடும்பத்தின் பரம்பரை வசீகரம் முகத்தில் எழுதப்பட்டிருந்தது.

உள்ளே நுழைந்ததும் மாடத்திலுள்ள சிறு அகல் விளக்கைத் தூண்டி விட்டாள். அந்த வீட்டின் இருளை அந்த ஒளி ஓட்ட முயன்றது.

"அப்பா, அவர் வந்துவிட்டார்" என்று சிந்தாமணி கூறும்போது பரபரப்பு தென்பட்டது.

கூடத்தில் கிழிந்த பாயொன்றின் மீது விரிக்கப்பட்ட பழந் துணியின் மீது மாதேவன் படுத்திருந்தார். சில நாளுக்குள்ளாகவே அவர் துரும்பாக இளைத்துவிட்டிருந்தார். கண்களில் இருந்த நம்பிக்கை ஒளி ஆழ்கிணற்றுக்குள் ஒளிந்து கொண்டது போல் தோன்றியது.

"யார் யார்?" என்று அவர் கேட்டார்.

சிந்தாமணி, "அவர் தானப்பா.... அ....வ....ர்...." என்று சொல்லவும் முடியாமல் சொல்லாமல் இருக்கவும் முடியாமல் தவித்தாள்.

"நான் தான் நம்பி. ஐயா! தங்களுக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டு, நம்பி அவர் அருகே உட்கார்ந்து, அவருடைய கரத்தைத் தன் கரத்தோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டான். செண்பகம் தூணருகே அவர்களையே பார்த்தவாறு அசையாது நின்று கொண்டிருந்தாள். சிந்தாமணி சட்டியில் கொண்டு வந்திருந்த சோற்றில் சிறிது மோர் விட்டுக் கரைத்துக் கொண்டிருந்தாள்.

நம்பிக்குத் தாகமாக இருந்தது. குடிக்கத் தண்ணீர் கேட்க வேண்டும் போல் தோன்றியது. செண்பகத்தைப் பார்த்துச் சிறிது தண்ணீர் கேட்டான்.

"மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். தங்களுக்கு ஏதாவது ஆகாரம் தரவேண்டும். சிறிது நேரத்தில் கொண்டு வந்து விடுகிறேன்" என்று சிந்தாமணி சொன்னவுடனேயே நிலைமையைப் புரிந்து கொண்டான் நம்பி.

"வேண்டாம், வேண்டாம். என்னிடம் சிறிது உணவு இருக்கிறது. அத்துடன் பழங்கள் இருக்கின்றன. நீயும் செண்பகமும் எடுத்துக் கொண்டு தந்தைக்கும் கொடு" என்று கூறி, தோளிலிருந்து இறக்கி வைத்திருந்த மூட்டையினின்று வாழைப் பழங்களை எடுத்து வைத்தான்.

"தேன் கதலி என்று பெயர்" என்று சொல்லிக் கொண்டே வாழைப்பழச் சீப்பை நீட்டினான்.

மாதேவனுக்கு எழுந்திருக்க முடியாவிட்டாலும் புதுத்தெம்பு வந்து விட்டதால் நம்பியிடம் நடந்தவற்றைக் கூறினார். சிதம்பரத்தி லிருந்து விரட்டப்படாத குறையாகத் தாமும், சிந்தாமணியும் வந்து சேர்ந்ததை அவர் கூறி முடித்த போது விம்மி விம்மி சிறு குழந்தை போல் அழுது விட்டார்.

"நம்பி! உன்னைக் கூடத் தவறாக நினைத்துவிட்டேன். முன் பின் தெரியாத உன்னிடம் என் நிலையைக் கூறியது பெரும் தவறு என்று எண்ணினேன். நீதான் அம்பலவாணனிடம் சொல்லி விட்டாய் என்றும் நினைத்தேன். என்னை மன்னித்து விடு நம்பி! நான் இங்கு வந்து

சேர்ந்தவுடனேயே அம்பலவாணன் நிலவரிப் பாக்கிக்காக, என்னைப் பெரிதும் நிர்ப்பந்தித்துச் சொல்லால் கொடுமைப் படுத்துகிறான். அதைத் தவிர, நான் செய்யாத குற்றத்துக்குக் கோயில் நகை காணாமல் போயிருப்பதாகவும் அதற்கு நான் தான் பொறுப்பு என்றும் ஊர்ப்பஞ்சாயத்தைக் கூட்டித் தண்டனை தரப்போவதாகவும் பயமுறுத்துகிறான். ஒரு வாரம் கெடு கொடுத்திருக்கிறான்." அவர் முறையிடும் போது ஒரு குழந்தை தாயிடம் வேண்டுவது போல் தோன்றியது.

"அவ்வளவு தானே?" என்று நம்பி கேட்டான்.

"அவ்வளவுடன் முடிந்துவிட்டால் தாங்கிக் கொள்வேன். மீண்டும் சிந்தாமணியை..." என்று அவர் கூறுவதற்குள் அவரால் பேச முடியவில்லை. அவர் இதயத்தை யாரோ பிழிவது போன்ற வேதனை, "அம்மா, அம்மா" என்று முனகினார்.

சிந்தாமணி அவரருகே ஓடிவந்து அவர் மார்பைத் தடவிக் கொடுத்தாள். அவள் இப்போது நம்பியின் தோளின் மீது சாய்ந்து இருந்தாள். தந்தையிடம் ஓடிவந்த வேகத்தில் அவ்வாறு நேர்ந்ததை அவள் கவனிக்கவில்லை. நம்பி மெல்ல நகர்ந்து கொண்டான்.

"நான் இப்பொழுதே அம்பலவாணனிடம் செல்கிறேன்" என்று நம்பி புறப்பட்டான்.

சிந்தாமணி தன்னை அறியாமலேயே அவனது கரத்தைப் பிடித்து, அவனை அங்கே அமரச் சொன்னாள்.

"வேண்டாம், வேண்டாம். இரவில் அவர் வீட்டுக்குச் செல்ல வேண்டாம். மதுவின் மயக்கத்திலிருக்கும் அவர் நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்" என்றாள்.

அந்தக் கரத்தின் மென்மை சிதம்பரம் தடாகத்துத் தாமரைக் கொடியையும் வென்றது.

இரவு கழிந்து பொழுது புலர்வதற்கு அவள் எதிர்பார்த்திருந்தாள். உறக்கம் வரவில்லை. கீழ்வானம் வெளுத்த போதே நம்பி வெள்ளாற்றில் நீராடிவிட்டு அம்பலவாணன் வீட்டுக்குச் சென்றான்.

அவன் துயிலிலிருந்து எழுந்திருக்கவில்லை என்பதறிந்து மீண்டும் மாதேவன் வீட்டிற்கு வராமல் வெள்ளாற்றில் நீராடுதுறைப் படிக்கட்டுகளில் சென்றமர்ந்தான்.

சிந்தாமணி வழக்கம்போல் குளிக்க அங்கே வந்தவள் நம்பியைக் கண்டு, "ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"எனக்கு இப்போதிருக்கும் வேக உணர்ச்சியில் அம்பல வாணனைச் சந்தித்துப் பேசாமல் வர விரும்பவில்லை. அவன் உறக்கத்திலிருந்து விழித்தெழும் வரையில் ஆற்றங்கரையில் அமர்ந்திருக்க எண்ணினேன்" என்றான்.

சிந்தாமணி படிக்கட்டுகளில் அமர்ந்தாள். ''இந்த நீராடு துறைப் படிக்கட்டுகள் என் தந்தை அறங்காவலராக இருக்கும் போது கட்டப்பட்டவை'' என்றாள் சிந்தாமணி.

''இப்போது உன் தந்தை மீது அபாண்டப் பழியைச் சுமத்து கிறான் கொடியவன்'' என்று பெருமூச்சு விட்டான் நம்பி.

''சில நாள்களே அவர் தவணை கொடுத்துள்ளார். நில வரியைச் செலுத்த வேண்டும். நில வரி செலுத்தாதது பெருங்குற்றமல்லவா?'' சிந்தாமணி வேதனையுடன் பேசினாள்.

''நீ கவலைப்படாதே சிந்தாமணி! அம்பலவாணனிடம் பேசி அதற்கும் வழி காண்கிறேன்'' என்றான் நம்பி.

''தங்களுக்கு மிகுந்த தொல்லையைக் கொடுக்கிறோம்'' என்று கூறிய சிந்தாமணி அவனை நேர் விழிகளால் சந்தித்தாள்.

''நான் ஓர் அநாதை. ஆனால் சோழ சக்கரவர்த்தி என்னைப் பெற்றோர் போல் காப்பாற்றுகிறார். அவருடைய மெய்க்காப்பாளன் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். உன் தந்தையைப் போன்ற உத்தம குணமுடையவரின் தொடர்பு கிடைத்தது முற்பிறவியில் நான் செய்த புண்ணியமாக இருக்க வேண்டும். நீ கவலைப்படாதே சிந்தாமணி'' என்றான் நம்பி. இந்தச் சொற்கள் அவனுடைய இதயத்தின் அடித்தளத்திலிருந்து வந்தன. சிந்தாமணி தலையைக் குனிந்து கொண்டாள்.

''இல்லை. நான் ஒரு முடிவு செய்திருக்கிறேன். என் தந்தை படும் சிரமம் எனக்கு நன்றாகப் புரிகிறது. என்னால் அவருக்குப் பெருந்தொல்லைகள். நான் அவருக்குச் சில சங்கடங்களிலிருந்து விடுதலை வாங்கித் தரமுடியும். அம்பலவாணன் விருப்பப்படி நடந்து கொண்டால் என்ன என்று தோன்றுகிறது. அவருக்கு என் தந்தை மீதுள்ள கோபம் தணிந்து விடும்.'' என்று சிந்தாமணி கூறிய போது நம்பி, ''சிந்தாமணி! என்று உரத்த குரல் கொடுத்தான். அவளுடைய இரு கரங்களையும் பிடித்துக் கொண்டான்.

''சிந்தாமணி! நீ செய்யும் இந்த முடிவைக் கேட்பதற்காகவா நான் சிதம்பரத்திலிருந்து இங்கு வந்தேன்? ஒரு காலும் நீ அப்படிச் செய்ய நான் விடமாட்டேன். உன் மனம் எப்படியோ எனக்குத் தெரியாது. என் இதயத்தை உன்னிடம் அர்ப்பணித்து விட்டேன். நூற்றுக்கால் மண்டபத்தில் அன்று முதன் முதல் சந்தித்தபோதே நீ விழிவழியே என் இதயத்துக்குள் நுழைந்து அமர்ந்து விட்டாய். என் இதயத்தை மற்றொருவனுக்கு அடிமையாக்குவதற்குச் சமம் நீ அடிமை ஆவது'' என்று நம்பி உணர்ச்சி வயப்பட்டுக் கூறி, அவளுடைய இரு கரங்களையும் எடுத்துத் தன் கண்களில் வைத்துக் கொண்டான்.

''பிரமாதம், பிரமாதம்! நாடகம் பிரமாதம். சிந்தாமணி! எவ்வளவு நாளைகளாக இந்த நாடகம்?'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர். அம்பலவாணனின் கையாட்களில் அந்தரங்கமான ஒருவரான ஆரூரப்பன் நின்று கொண்டிருந்தான்.

நெடிய உருவம். தலையில் வட்டவடிவமான வழுக்கை. அடர்ந்த மீசை. கை கால்களில் அடர்ந்த உரோமம். வெற்றிலை பாக்குப் போட்டதால் காவி ஏறிய, ஒழுங்கற்ற பற்கள். மேல் படிக்கட்டு களில் நின்று அவன் குரல் கொடுத்தான். நம்பியும், சிந்தாமணியும் கீழ்ப்படிக்கட்டுகளில் அமர்ந்து, கால்களை ஓடும் பிரவாகத்தில் நனையவிட்டு அமர்ந்திருந்தனர்.

ஆரூரப்பனைச் சிந்தாமணி நன்கு அறிவாள். வீட்டுக்கு வந்து அம்பல வாணன் சார்பில் பணம் வசூலிப்பவன். அதட்டி மிரட்டுபவன் அவனே. சிந்தாமணியைக் காடவராயரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில் மிகவும் ஆவலுடன் இருப்பவனும் அவனே. சிந்தாமணி திடுக்கிட்டு நடுக்கத்துடன் எழ முயன்றாள். அவள் கரதலத்தைப் பற்றி, ''ஏன் பயந்து எழுந்திருக்கிறாய் சிந்தாமணி? யார் அவன்? உன்னை மரியாதையின்றி அழைக்க அவனுக்கு என்ன துணிவு?'' என்று கடுமையான குரலில் நம்பி பேசினான்.

''ஏய் என்னடா சொல்கிறாய்? வீரப்பட்டினத்துக்கு வந்து, எங்களுப்பெண்ணைத் தொட்டுப் பேசுபவன் யார் நீ?'' என்று குரல் கொடுத்துக் கொண்டு படிக்கட்டுகளில் மளமளவென்று இறங்கி வந்தான்.

நம்பியும், சிந்தாமணியும் எழுந்து கொண்டனர். சிந்தாமணி சற்று ஒதுங்கி நின்றாள்.

''முதலில் சொல்லு, நீ யார்? மரியாதையில்லாமல் ஒரு பெண்ணிடம் நடந்து கொள்ளும் நீ யார்?'' என்று நம்பி கர்ஜித்தான்.

ஆரூரப்பனுக்கு வியப்பாயிருந்தது. இதுவரையில் தன்னிடம் பயப்படாமல் எதிர்த்துப் பேசியவர்கள் ஒருவர் கூடக் கிடையாது. யாரோ ஓர் அந்நியன் இப்படிக் கேட்கிறானே என்ற ஆத்திரத்தில் தன் கைகளை ஓங்கி, ''நான் யார் என்று வாய் வார்த்தையைச் சொல்லும் பழக்கமே எனக்குக் கிடையாது. இதோ, இது தான் என் மறுமொழி'' என்று கையை உயர்த்தி, முஷ்டியை மடக்கி, நம்பியை நோக்கி வீசினான்.

நம்பி மிகவும் எளிதாகச் சிறிது நகர்ந்து, அவன் வயிற்றை நோக்கி ஒரு குத்து விட்டான். ஆரூரப்பன் அந்தக் குத்தை எதிர்பார்க்க வில்லை. வயிற்றைப் பிடித்துக் கொண்டு ஹூங்காரமிட்டு, ''பொடிப்பயலே! அவ்வளவு தைரியமா? இதை வாங்கி ருசி பார்'' என்று மீண்டும் இருகரங்களாலும் நம்பியைத் தாக்க முயன்றான். வயிற்றில் நம்பி விட்ட குத்தையும், அவன் வயிற்றைப் பிடித்துக் கொண்டதையும் பார்க்கச் சிந்தாமணிக்குச் சிரிப்பு வந்து விட்டது. சிந்தாமணியின் சிரிப்பு வேறு ஆரூரப்பனின் ஆத்திரதை அதிகப்படுத்தியது. இரு கரங்களையும் தன் பலம் கொண்ட மட்டும் பயன்படுத்த முயன்றபோது நடுநடுங்கினாள்.

ஆனால், கண்மூடித் திறப்பதற்குள் அது நேர்ந்து விட்டது. நம்பி, மீண்டும் வேறுபுறமாக நகர்ந்ததோடன்றி, வேகமாகத் தாக்க வந்த அவனது காலை இடறிவிடவே, மாமிசக் குன்று ஒன்று சரிவது போல ஓடும் ஆற்றில் ஆரூரப்பன் வீழ்ந்து விட்டான். ''ஐயோ, எனக்கு நீந்தத் தெரியாதே'' என்று அலறிக் கொண்டு அவன் வீழ்ந்தது சிந்தாமணிக்கு மட்டும் என்ன, நம்பிக்கும் சிரிப்பை அளித்தது.

ஆற்று வெள்ளத்தில் அவன் தினறினான். கையைத தூக்கிக் கொண்டு அலறினான். யார் யாரையோ பெயர் சொல்லி அழைத்தான். ஒரு முறை மூழ்கி எழுந்தான். கரை ஓரமிருந்து நடு ஆற்றை நோக்கி இப்போது அவன் சென்றான். வெள்ளத்தின் வேகம் அவனை இழுத்தது.

"ஐயோ, ஆரூரப்பன் பார்க்கப் பயங்கரமாயிருக்கிறானே தவிர, அவனுக்கு நீந்தத் தெரியாது. ஆற்றில் மூழ்கி இறந்து விட்டால் அந்தக் குற்றம் நம்மீது விழுந்து விடப்போகிறது" என்று சிந்தாமணி பயந்தாள்.

"நான் அவனைத் தள்ளவில்லையே. நான் அவனை வம்புக்கிழுக்க வில்லை" என்றான் நம்பி, பிரவாகத்தில் ஆரூரப்பன் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ரசித்தவாறு.

"ஐயோ, இருக்கும் பழி போதாதென்று இதுவேறு சேர்ந்து விடப்போகிறதே" என்று கூறிய சிந்தாமணியின் முகம் பயத்தால் கறுத்தது.

"பயப்படாதே சிந்தாமணி! இதோ இதையெல்லாம் எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்விடு" என்று மேலங்கி, தலைப்பாகை, ஆகியவற்றைக் கழற்றிக் கொடுத்தான். இமைக்கும் நேரத்தில் ஓடும் ஆற்று வெள்ளத்தில் குதித்தான். சுழன்று சுழன்று செல்லும் ஆற்று நீரில் நீந்தினான்.

நம்பி நீந்தியவாறு செல்வதை ஒரு கணம் பிரமிப்புடன் பார்த்தவாறு நின்ற சிந்தாமணி நம்பியின் உடைகளை மார்போடு அணைத்த வண்ணம் வீட்டை நோக்கி ஓடினாள்.

8

அம்பலவாணன் வீட்டில் ஒரே பரபரப்பு. அம்பலவாணனின் பணியாட்கள் அனைவரும் கூடிவிட்டனர். அம்பலவாணனின் மனைவி வைரநாயகி ஒன்றும் புரியாமல் அவர்கள் ஒருவரோ டொருவர் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டவாறு நின்று கொண்டிருந்தாள். ஆரூரப்பன் ஆற்றில் வீழ்ந்து விட்டான் என்றும், வெள்ளத்தில் அவன் அடித்துச் செல்லப்பட்டான் என்றும் வந்த செய்தி அம்பலவாணனைத் திடுக்கிடச் செய்தது. ஆரூரப்பன் அவனது வலக்கரம் போன்றவன். அவனது துணை இருப்பதால் தான் அம்பலவாணன் அந்தக் கிராமத்தில் சக்கரவர்த்தி போல் வாழ்ந்து வந்தான்.

"ஐயோ, அவனுக்கு நீந்தத் தெரியாதே?" என்று பதறினாள் வைரநாயகி.

"அவன் ஏன் ஆற்றங்கரைக்குச் சென்றான்? ஏன் இப்படி மரம்போல் இங்கே நிற்கிறீர்கள்? ஓடுங்கள், ஓடுங்கள், படகிலே செல்லுங்கள். வலைகளை எடுத்துச் செல்லுங்கள்" என்று கூச்சலிட்டான் அம்பலவாணன்.

கடலிலே வெள்ளாறு கலக்குமிடம் மிக அருகிலிருந்ததால் அனைவரும் பயந்தனர். ஆட்கள் விரைந்தனர்.

அம்பலவாணனின் ஆட்களில் ஒருவன் அவன் அருகே வந்து மெல்ல காதோடு காதாக நடந்தவற்றைக் கூறினான்.

"அப்படியா? எனக்குத் தெரியும். இந்த மாதேவன், சிதம்பரம் போய் அங்குள்ளவர்களைச் சந்தித்தபோதே தனக்கு உதவியாக ஒருவனை அழைத்து வருவான் என்று எதிர்பார்த்தேன். ஆரூரப்பனை ஆற்றில் தள்ளித் தானும் குதித்து விட்டானா? என்ன தைரியம் இருக்கும்? மாதேவன் வீட்டுக்குச் சென்று அவனை இழுத்து வாருங்கள்" என்று கூவினான்.

இரு கரங்களாலும் தலையைப் பிடித்துக் கொண்டு மாதேவன் புலம்பிக் கொண்டிருந்தார்.

"மகளே! நம்பியை நம்புவதா, நம்பாமல் இருப்பதா என்றே எனக்குப் புரியவில்லை. பெண்ணே! உன்னால் உனக்கும் துன்பம், எனக்கும் துன்பம். ஒன்றுமே அறியாத உன் தங்கைக்கும் துன்பம். என்ன செய்வதென்றே தெரியவில்லையே, சிந்தாமணி?" என்று கண்ணீர் விட்டார்.

"அம்பலவாணனின் வலக்கரமான ஆரூரப்பனை ஆற்றிலே தள்ளி விட்டால் நம்மைச் சும்மா விடமாட்டானே அம்பலவாணன்? ஆற்றங்கரையில் நீ ஏன் அவனுடன் பேசிக் கொண்டிருந்தாய்? இப்போது தான் புரிகிறது. உன் மீதுள்ள ஆசையால் தான் நம்பி இந்த ஊருக்கு உன்னைத் தேடி வந்திருக் கிறான். சிதம்பரத்திலும் நீ அவனுடன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந் திருக்கிறாய். உன் தாய் உனக்குக் கற்றுத்தந்த அடக்கம் என்ன வாகியது? உன் நாணம் எங்கே? அச்சம் எங்கே ஓடிப்போய் விட்டது? ஐயோ, மகளே! அம்பலவாணன் நம்மைச் சும்மா விடமாட்டானே. பஞ்சாயத்தைக் கூட்டி அவமானப்படுத்தி விடுவானே" என்று தலையைப் பிடித்துக் கொண்டு அழுதார்.

தந்தையின் கண்ணீர் அவளை ஒரேயடியாய் உலுக்கி விட்டது. 'என்னால் என் தந்தைக்கு இவ்வளவு துயரமா? தொல்லையா? ஆண்டவனே! என்னை ஏன் அழகுடன் படைத்தாய்? அழகை நீயே எடுத்துக் கொண்டு விடு. உன்னிடம் அழகை அர்ப்பணித்து விடுகிறேன். என் தந்தையைக் காப்பாற்று' என்று மனத்துக்குள்ளேயே அவள் வேதனைப்பட்டு உருகினாள். செண்பகம் விசும்பலுடன் நின்று கொண்டிருந்தாள்.

நம்பியின் உடையை மாதேவன் பார்த்தார். அவருக்கு எரிச்சல் அதிக மாகியது. "அந்த ஆடைகளை இங்கே ஏன் கொண்டு வந்தாய்? அவனுடன் சேர்த்து ஆடைகளையும் ஆற்றில் வீசியிருக்கக் கூடாதா? இதோ, நானே ஆற்றுவெள்ளத்தில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்கிறேன்" என்று புலம்பினார்.

சிந்தாமணி தன் தந்தையின் மடியில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு விம்மினாள்.

"அப்பா! நீங்கள் வேதனைப்பட்டு விடும் கண்ணீர் என் இதயத்தைத் துளைக்கிறது. என்னால் தங்களுக்குத் துன்பம் வேண்டாம். தொல்லை நமக்கு வேண்டாம். அம்பலவாணருடன் நாம் விரோதித்துக் கொள்ள வேண்டாம். நான் என்னை அவரிடம் ஒப்படைத்துக் கொள்கிறேன். ஆரூரப்பன் நதியில் வீழ்ந்த

விவகாரம் பெரிய பூதம்போல் வளர்ந்து விடும். அம்பலவாணன் நம்மைச் சும்மா விடமாட்டார். அவர் நம்மைத் தொல்லைப்படுத்த நம் வீட்டுக்கு வரும் முன்பு நானே அவர் வீட்டுக்குச் சென்று என்னை ஒப்படைத்துக் கொள்கிறேன்" என்று கூறி, தன் விழிநீரைத் துடைத்துக் கொண்டு கலைந்த தலையைச் சரிப்படுத்திக் கொண்டு, தலைப்பைச் சரிசெய்து கொண்டு நடுக்கூடத்துக்குச் சென்றாள்.

நடுக்கூடத்தில் தாயின் நினைவாக எழுதப்பட்டிருந்த மருள் நீங்கும்ப் பட்டை எதிரே நின்று, "அம்மா, தாயே! அன்புடையவளே! என்னை இதுவரை ஒழுக்கமுடையவளாக வளர்த்து விட்டாய். மனத்தில் எந்தவிதச் சலனமும் ஏற்படாமல் செய்து வந்திருக்கிறாய். சில நாள்களாக என் மனத்தில் தனல் ஒன்று கனல் விட்டுப் புகத் தொடங்கிற்று. அது என் நெஞ்சைச் சுடவில்லை. அந்தத் தனல் குளிர்ந்திருந்தது. அந்தத் தனல் என் உள்ளத்தில் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியது. மெல்லக் கனிற அந்தச் சுடர் எனக்குப் புது ஒளியைக் காட்டியது. அந்த ஜ்வாலை எனக்குப் புதிய பாதத்தை ஏற்படுத்தியது. அந்த ஜோதி உன்னுடைய அரவணைப்பின் சுகத்தை அளிக்க முயன்றது. நீ இருந்திருந்தால் உன்னிடம் சொல்லியிருப்பேன். நீதான் என்னை விட்டுச் சென்று விட்டாயே? அம்மா! நான் யாரிடம் சொல்வேன்? அப்பா என்னைத் தவறாக நினைக்கிறார். காதல் எனும் அந்தப் பூங்கொத்தை நான் அணிய விரும்பவில்லை. நான் உன் பாதத்தில் அதைச் சமர்ப்பித்து விடுகிறேன். நான் அம்பலவாணரிடம் அடிமையாகி விடுகிறேன் அம்மா! எனக்கு அமைதி கொடு!" என்று வாய் விட்டுக் கூவினாள், விம்மினாள், நெஞ்ச உடைய அலறினாள்.

"சிந்தாமணி!" என்று மாதேவன் கூவினார். "என்னம்மா சொல்கிறாய்? உன்னை அந்தப் பாதகளிடம் ஒப்படைப்பதற்காகவா நான் சொத்து சுகங்களைத் தியாகம் செய்தேன்? வேண்டாம் அம்மா, சிந்தாமணி! உன் முடிவை மாற்றிக் கொள். நீ அம்பலவாணனிடம் செல்ல வேண்டாம். எந்தவித இடர்வினும் நான் ஏற்றுக் கொள்கிறேன். உன்னைப் பற்றி நான் தவறாக எண்ணவேயில்லை. அப்படி ஏதாவது சொல்லியிருந்தால் என்னை மன்னித்து விடு அம்மா, மகளே!" என்று விம்மியவாறு, மாதேவன் மகள் அருகே சென்றார்.

"ஐயோ, அப்பா! என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள்? நான் தங்களை மன்னிப்பதா? இந்தப் பிறவியில் நான் தங்கள் மகளாகப் பிறந்து தங்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காகத் தாங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும்" என்று கூறி அவர் காலடியில் வீழ்ந்தாள்.

கதவு தட்டும் ஓசை கேட்டது. அம்பலவாணனின் ஆட்கள் வெளியே நின்றிருந்தார்கள்.

தந்தையும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

சென்பகம் கதவைத் திறந்தாள்.

"ஓய் மாதேவா, உம்மையும் உமது மகள்களையும் அழைத்து வருமாறு தலைவர் கட்டளையிட்டிருக்கிறார். அழைத்து வா என்று சொல்வதை விட

இழுத்து வா என்று சொல்லலாம். திரௌபதியை இழுத்து வந்த துச்சாதனனைப் போல் என்னை நடந்து கொள்ளச் சொன்னார்" என்று காறித்தான் அம்பலவாணனின் மறோ அடியார்.

அம்பலவாணன் வீட்டு நடுமுற்றத்தில், மாதேவன் உடல் கூசி, தலைகுனிந்து நின்று கொண்டிருந்தார். சிந்தாமணியும், சென்பகமும் முன் அருகே நின்று கொண்டிருந்தனர். பெரும் பீதி அவர்களிடம் நிலவியது.

"அப்பா! கவலைப்படாதீர்கள். நிலைமை மிகவும் மோசமாகும் போல் தோன்றினால் நான் சரணடைந்து விடுகிறேன். நான் ஆண்ட வலிடம் சரண் அடைவதாக நினைத்துக் கொள்கிறேன். இந்தக் கொடிய மனிதர்களுக்கு நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்" என்று சிந்தாமணி, வீதியில் வரும்போது தந்தையிடம் சமாதானமாகக் கூறி வந்தாள். மாதேவன் செவிகளில் ஏதும் விழவில்லை. வீரப்பட்டினத்து வீரதேவேகவாரா அவர் மனம் நினைத்துக் கொண்டது. அவருடைய புகழைக் கூறும் துதியை வாய் முணுமுணுத்தது.

அம்பலவாணன் ஒருமையில் மாதேவனை அழைத்தான். "ஆரூரப்பன் ஆற்றில் விழுந்ததற்கு நீ என்ன சமாதானம் சொல்லப் போகிறாய்? உன் மகளும், அவளூர்க்காரனும் சல்லாபமாக இருந்ததை ஆரூரப்பன் பார்த்து விட்டான். அதனால் உன் மகளும், அவனும் சேர்ந்து அவனை ஆற்று வெள்ளத்தில் தள்ளிவிட்டார்கள். இதற்கு என்வாறு ஈடு செய்யப் போகிறாய்?" என்று சீறினான்.

"என் மகள் மீது அபாண்டமாக ஏதும் சொல்லாதீர்கள். என்னை எது வேண்டுமானாலும் பழியுங்கள். ஆரூரப்பனை என் மகளால் நதியில் தள்ள முடியுமா?" என்று மெல்லப் பேசினார் மாதேவன்.

"கண்ணாரக் கண்டவர்கள் சொல்வது பொய்யா? அந்த இளைஞன் யார்? எதற்காக உன் வீட்டுக்கு வந்தான்? நேற்றிரவு உன் வீட்டில் தங்கினானே? வயதிற்கு வந்த பெண்களை வைத்துக் கொண்டு, அந்நியனை உன் வீட்டில் இரவு படுக்க வைத்திருக்கிறாய். உத்தமன் என்ற வேடம் வேறு. சீ" என்று அம்பலவாணன் சீறினான்.

"ஐயா! வீணே ஏதேதோ சொல்லாதீர்கள். வீரதேவேகவார் அதற்குத் தக்க கூலி கொடுப்பார். அந்த வாலிபனை எனக்கு முன்பு தெரியாது. சிதம்பரத்தில் நான் சந்தித்தேன். அவன் என் இங்கு வந்தான் என்றும் எனக்குத் தெரியாது. வீட்டுத் திண்ணையில் தான் அவன் படுத்திருந்தான். காலையில் எழுந்து குளிக்க ஆற்றங் கரைக்குச் சென்றான்...." என்று மாதேவன் சமாதானம் கூறினார். அம்பலவாணன் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"ஆற்றங்கரைக்கு உன் மகள் என் சென்றாள்? சிரித்துச் சிரித்து என்ன பேசிக் கொண்டிருந்தாள்? திருமுனைப்பாடி நாட்டுக் காவல் அதிகாரியும், கோப்பெருஞ்சிங்கனுமான காடவராயர் உன் மகளை ஆசையுடன் அழைத்த போது நீர் ஒழுக்கத்தின் குன்றுபோல் பேசினீர். உம் மகள் கற்புக்கரசி வேடம் போட்டாள். அப்போதே சம்மதித்திருந்தால், நீரும் சுகமாக வாழ்ந்திருக்கலாம். உமது மகளும் இளவரசி போல் என் அந்தப்புரத்தில் வாழலாம். எல்லாவற்றையும்

கெடுத்துக் கொண்டாய். இப்போது கொலைக் குற்றம் வேறு. இன்று மாலையே பஞ்சாயத்தைக் கூட்டுகிறேன். அவர்கள் தீர்ப்பு கூறட்டும். கோயில் நகைக்குக் கணக்குக் கூறாதது, நிலவரிப் பாக்கி செலுத்தாதது, இப்போது என் பணியாளை ஆற்றில் தள்ளியது - இவ்வளவு குற்றங்களையும் பஞ்சாயத்துப் பெருமக்கள் விசாரிக் கட்டும். அதுவரையில் அந்த அறையில் தனித்தனியே இவர்களை அடையுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

''அம்பலவாணா! உனது கொடுமைக்கும் ஓர் எல்லை கிடையாதா? என் நிலங்களை மிகக் குறைவாக விலை பேசி எடுத்துக் கொண்டாய். நில வரியை அந்தத் தொகையிலேயே சரிசெய்து கொண்டிருக்கலாம். கோயில் ஆபரணங்களை நான் எடுக்க வில்லை. கோயில் பூசை செய்வோரும் நீயும் சேர்ந்து சதி செய்துள்ளீர்கள். ஆரூரப்பனை என் மகள் ஆற்றில் தள்ளவில்லை. அவர்களைத் தாக்க அவன் முயன்றான்; தவறி விழுந்தான். வீணே பழி சுமத்தி என்னையும் என் குடும்பத்தாரையும் சித்திரவதை செய்யாதே'' என்று மாதேவன் நெஞ்சு தழுதழுக்க ஆனால் மிக அழுத்தம் திருத்தமாகப் பேசினார்.

''சித்திரவதை.... ஆகா.... கா....'' என்று பெரிதாக நகைத்த அம்பலவாணன், ''இனிதான் சித்ரவதை தொடங்கப் போகிறது. ஏன் நிற்கிறீர்கள் மடையர்களே! அந்த அறைக்குள் இவனைத் தள்ளு. இரண்டு கற்புக்கரசிகளையும் தனித்தனியே அறைகளில் அடையுங் கள்'' என்று தன் பணியாட்களை நோக்கிக் கட்டளையிட்டான்.

சிந்தாமணி அலறினாள். ''ஐயா! வேண்டாம், வேண்டாம். என் தந்தையை ஒன்றும் செய்யாதீர்கள். தாங்கள் என்ன செய்யச் சொல்கிறீர்களோ அதை நான் நிறைவேற்றுகிறேன். உங்கள் கோரிக்கைக்கு இணங்குகிறேன்'' என்ற சிந்தாமணி, அம்பலவாணன் எதிரே வந்து நின்றாள்.

''சிந்தாமணி!'' என்று கூவினார் மாதேவன். அம்பலவாணன் பெரிதாக நகைத்தான்.

அந்தச் சமயத்தில் நம்பி, தோளில் ஆரூரப்பனைச் சுமக்க முடியாமல் சுமந்து வந்து அங்கே கிடத்தினான். ஆரூரப்பன் சாகவில்லை. நெற்றியில் மட்டும் சிறு காயம். இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

''ஐயோ, அவனைக் கொன்று விட்டாயா? பாவி! ஏய் இவனைப் பிடித்துக் கட்டுங்கள்'' என்று அம்பலவாணன் கூவினான்.

நம்பி இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு கம்பீரமாக நின்றான்.

''உன்னுடைய வலக்கரம் இன்னும் சாகவில்லை. அவனுடைய ஆயுள் கெட்டி. நான் நீந்திச் சென்று காப்பாற்றியிராவிடில் கடலில் கலந்திருப்பான். உடலைத் தான் மாமிசப் பிண்டமாக வளர்த்திருக் கிறான். கோழை! ஆண்டவன் இத்தகைய கொடியவர்களின் உயிரைப் பறிக்காமல் விட்டுவிடுகிறான்'' என்று கூறிவிட்டுத் திரும்பிப் பார்த்தபோது, சிந்தாமணி அம்பலவாணன் எதிரே கைகட்டித் தலைகுனிந்து நிற்பதையும், மாதேவனை ஒருவன் பிடித்துக் கொண்டு நிற்பதையும், செண்பகம் மிகவும் பயந்து போய்த் தூணை அணைத்தவாறு நிற்பதையும் கண்டான்.

நம்பியைக் கண்ட மாதேவனுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டது. தாம் நினைத்தது போல் அவன் காமவிகாரன் அல்லன் என்று தோன்றியது.

நம்பி, மாதேவனை நோக்கி, ''ஐயா! என் இங்கு வந்திருக் கிறீர்கள்? தங்களை இந்தத் தடியர்கள் தொட்டுப் பிடித்திருப்பதன் காரணம் என்ன? சிந்தாமணி! நீ ஏன் இவனிடத்தில் தலைகுனிந்து நிற்கிறாய்?'' என்று கேட்டான்.

''கொலைக் குற்றம் சாட்டியுள்ளோம்'' என்றான் அம்பல வாணன்.

''ஓ! இந்த மாமிசக் குன்றை ஒடும் பிரவாகத்தில் அப்படியே விட்டிருக்க வேண்டும். நான் நீந்திச் சென்று காப்பற்றியதற்கு இவர்கள் மீது குற்றச்சாட்டா?'' நம்பி சீறினான்.

''அதெல்லாம் பஞ்சாயத்தில் பேசிக்கொள்'' என்றான் அம்பலவாணன்.

''பஞ்சாயத்தா? குலோத்துங்க சக்கரவர்த்தியின் ஆட்சியில் உன்னைப் போன்றவர்கள் செய்யும் குற்றங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த ஊரில் பஞ்சாயத்து வேறு இருக்கிறதா? கூப்பிடுங்கள் பஞ்சாயத்தை'' என்று கர்ஜித்தான் நம்பி.

''நீ யார், இந்த ஊரில் வந்து வம்பு செய்பவன்? சிந்தாமணியைக் கவர்ந்து செல்லப் பார்த்தாய். நீயும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது'' என்று முகம் சிவக்க அம்பலவாணன் பேசினான். தனது ஆட்களை நோக்கி, ''ஏன் நிற்கிறீர்கள்? அழைத்துச் செல்லுங்கள் இவர்களை'' என்று கூவினான்.

''அம்பலவாணரே! நீர் இந்த ஊர் அதிகாரி என்பதனால் உம்மைச் சும்மா விடுகிறேன். ஓர் அடி எடுத்து வைத்தால் தெரியுமா?'' என்று கூறித் தன் இடையில் வைத்திருந்த சிறு பையைப் பிரித்தான். பார்த்தால் சிறு தோல் பை போலிருந்த அதிலிருந்து இரண்டடி நீளமுள்ள கத்தியொன்று பிரிந்து சீறியது. கத்தி பளபளத்தது. அவன் மாதேவர் அருகே சென்றவுடன் அவரைப் பிடித்திருந்தவர்கள் அவரை விட்டு விட்டு நகர்ந்தோடினர்.

''ஐயா! நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். சிந்தாமணி! உன் சகோதரியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்'' என்று கட்டளையிட்டான் நம்பி.

அம்பலவாணனுக்கு அதிர்ச்சி தாங்கவில்லை. அதை வெளிக்குப் புலப்படுத்தாமல், ''நீ யார் என்று சொல்லவில்லை. என் சொந்த விஷயத்தில் தலையிடுகிறாய்'' என்று மிகவும் உறுதியாகப் பேசுபவன்போல் நடிக்க முயன்றான்.

''என் பெயர் நம்பி. நான் உனது சொந்த விஷயத்தில் இதுவரையில் தலையிடவில்லை. உன் வீட்டு அந்தப்புரத்தில் எவ்வளவு பெண்கள் இருக்கிறார்கள் என்றோ, காடவராயருக்கு எத்தனை அழகிய பெண்களை விருந்தாகத் தேடித் தந்திருக்கிறாய் என்றோ நான் கேட்கவில்லை. திக்கற்ற குணவானான மாதேவனுக்கு ஏன் தொல்லை கொடுக்கிறீர்கள் என்று தான் கேட்க வந்தேன்'' என்றான் நம்பி.

''ஓ! நீ என்ன சோழ சக்கரவர்த்திகளுக்கு மிக வேண்டியவனா?'' அம்பலவாணன் குரலில் கேலியிருந்தது.

"ஆம். நான் குலோத்துங்க சோழ தேவரின் மெய்க்காவல் படையைச் சேர்ந்தவன்" என்று கூறி அடையாளச் சின்னத்தை எடுத்து நீட்டினான்.

அங்கிருந்தவர்கள் அனைவரும் பிரமித்தனர். அம்பலவாணன் தன் கம்பீரத்தைக் குறைத்துக் கொண்டான்.

"இதைத் தாங்கள் முதலிலேயே சொல்லியிருக்கலாம். நான் முறை தவறி ஏதும் நடந்து கொள்ளவில்லை. நிலவரி வசூல் பாக்கியை வசூலிக்க நான் கடமைப்பட்டவன். சில நாள்களுக்கு முன்பு கூட நான் சோழச் சக்கரவர்த்தி களைச் சிதம்பரத்தில் சந்தித்தேன்" என்று அவன் கூறும்போது, "தெரியும். நான் கவனித்தேன்" என்று அழுத்தம் திருத்தமாக நம்பி கூறினான்.

அம்பலவாணன் தன் பற்களெல்லாம் தெரிய, "அப்போது சக்கரவர்த்திகள் சொன்னார்கள், நிலவரி பாக்கி இருப்பவர் சொத்துகளைப் பறிமுதல் செய்து விடவேண்டுமென்று. மாதேவனுக்குச் சொத்து ஏதுமில்லை" என்றான்.

"நீங்கள் அவருடைய சொத்து எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டீர்கள்."

"இல்லை. மாதேவன் விரும்பியே கிரய சாசனம் செய்து கொடுத்தார்."

"கிரய சாசனம் செய்யும் போதே நிலவரி பாக்கி இருப்பது தெரியும் இல்லையா? அரசாங்க பாக்கி இருக்கும் போது எப்படி நிலங்களை வாங்கினீர்கள்?"

"ஐயா! அதெல்லாம் தீர்ந்து போன விஷயம். மாதேவன் ஒப்புக் கொண்டிருக்கிறார். கோயில் கணக்கு வேறுபாக்கி. வார்த்தை தான் முக்கியம். கணக்கை நேர் செய்து விட்டால் நான் ஏன் மாதேவன் பக்கம் வருகிறேன்? நீங்களும் அரசில் மிகப் பொறுப்பான பதவி வகிப்பவர். இங்கு வந்திராவிடில் சிந்தாமணி தன்னை விற்றுக் கொண்டிருப்பாள். நீங்கள் வந்து விட்டீர்கள். எனக்குச் சேர வேண்டிய வற்றைக் கொடுத்து விடத் தாங்களே ஏற்பாடு செய்யுங்கள்" என்று அம்பலவாணன் கூறவும், நம்பி சிறிதும் யோசிக்காமல், "மாதேவன் பாக்கிக்கு அவர் மகள் அடிமையாவதா? சோழ நாட்டில் இப்படியொரு அநீதி நடக்கிறதா?" என்று கேட்டான்.

"ஐயா! நீதியை அநீதி என்றும், பஞ்சாயத்தவர்களைக் குறை கூறியும் மிக அவதூறாகப் பேசுகிறீர்கள். இராஜத் துவேஷக் குற்றத்தை நீங்கள் புரிகிறீர்கள். வார்த்தையை அளவுக்கு மீறி நீட்டாதீர்கள். தங்கள் குழந்தைகளை விற்பது பல ஊர்களில் நடந்திருக்கும் நிகழ்ச்சி. வயது வந்த பெண்களைச் சமீபத்தில் அடிமைகளாக விற்ற நிகழ்ச்சி உமக்குத் தெரியாதா? பஞ்சம் வந்த காலத்தில் தங்கள் புதல்விகளையும் விற்றிருப்பதைக் கோயிலில் சாசனம் செய்து வைத்திருப்பது நம்பிக்குத் தெரியாதுபோல் இருக்கிறது. அரசருக்குச் சேரவேண்டியவற்றைக் கொடுக்கத் தங்களால் முடியும் என்றால் மாதேவன் குடும்பத்துக்குச் சார்பாகப் பேசுங்கள். இல்லாவிடில் வந்த வழியே பார்த்துச் செல்லுங்கள்" என்று அம்பலவாணன் கூறினான். சற்றுத் தெளிவும் தைரியமும் குரலில் இருந்தன.

நம்பி வேகமாக அவன் பக்கம் திரும்பி நடந்து வந்தான். "உமக்கு எவ்வளவு ஐயா சேரவேண்டும்?"

"மூவாயிரம் வராகன்.... வட்டி உட்பட....."

"கணக்கு சரிதானா?"

"கணக்கில் பிழை செய்யமாட்டேன்."

"தெரிகிறது. அரண்மனை போன்ற தங்கள் வீட்டைப் பார்க்கும் போதே தெரிகிறது."

"வீண் பேச்சு வேண்டாம். விஷயத்துக்கு வாருங்கள். காடவராயர் இன்று வருவதாகக் கூறியிருக்கிறார். அவர் வருவதற்குள் காதும் காதும் வைத்தாற்போல் வேண்டியிருக்கும்."

"சீ! மற்றுமொரு முறை அந்தப் பேச்செல்லாம் பேசினால் நாவைத் துண்டாக்கி விடுவேன். மாதேவன் தரவேண்டிய மூவாயிரம் வராகனை நான் தருகிறேன்."

"எப்போது? இப்போதே தருவீர்களா?"

"இதென்னய்யா பேச்சு? மடியில் பொன்னைக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறேன் என்ற எண்ணமோ?"

"வீண் பேச்சு வேண்டாம். பணம் இருந்தால் மேலே பேசுவோம். இல்லாவிடில் பஞ்சாயத்துத் தீர்ப்புக்கே விட்டு விடுவோம்."

"ஏனய்யா, நான் உங்களுக்குச் சேர வேண்டிய பணத்தைத் தருவதாக வாக்களிக்கிறேனே, என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையா?"

"நம்பிக்கை இருக்கிறது. காலக் கெடு தேவை. என்று வருவீர்கள்? என்று தருவீர்கள்?"

"சோழச் சக்கரவர்த்திகளிடம் கேட்டே வாங்கித் தருகிறேன்."

"யாரிடமிருந்து வாங்குவீர்களோ எனக்குக் கவலையில்லை. நானே கூட வட்டிக்குத் தரலாம்..."

அம்பலவாணன் இவ்வாறு கூறியது கேட்டு நம்பி வியப்படைந்தான்.

"ஆமாம், ஐயா! உம்மை நான் பெரிதும் நம்புகிறேன். நாளையே நீங்கள் சோழ அரசில் பெரும் பதவி வகிக்கலாம். தங்கள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை உண்டு. தாங்களும் மாற மாட்டீர்கள் என்ற உறுதி உண்டு"

"என்ன செய்யவேண்டும்?"

"வாய் வார்த்தையை வரி வடிவமாக்குங்கள். 'மாதேவன் தரவேண்டிய பாக்கித் தொகை மூவாயிரம் வராகனையும் நான் இது நாளிலிருந்து இரண்டு பட்சத்துக்குள் தருவேனாகவும். வார்த்தையை மீறினால் தாங்கள் தங்கள் விருப்பப்படி செய்து கொள்ள உடன்படுகிறேன்' என்று எழுதுங்கள்."

"நிபந்தனை கடுமையாக இருக்கிறதே?"

"ஆமாம். அரசு வரியைச் செலுத்தாமல் குடும்பச் செலவுக்குப் பயன்படுத்தும் போது, மகளுடைய - மனைவியினுடைய சிங்காரச் செலவுக்குப்

பயன்படுத்தும்போது இப்படி நேரும் என்ற நினைவு இருப்பதில்லை. இப்படியொரு கடுமையான ஒப்பந்தம் இருந்தால தான் தாங்களும் கொண்டு தருவீர்கள். பிற்காலத்திலும் மற்றவர்கள் அரசுப் பணத்தைக் கையாடத் துணிய மாட்டார்கள்.''

அம்பலவாணன் இவ்வாறு கூறிய போது நம்பி உட்பட அனைவரும் திகைத்து நின்றனர். சிறிது நேரம் மௌனம் நிலவியது. நம்பி சிந்தாமணியை நோக்கினான். சிந்தாமணியின் முகத்தில் தனி ஒளி திகழ்ந்தது. அவள் தலையை அசைப்பது போல் தோன்றியது.

நம்பி தொண்டையைக் கனைத்துக் கொண்டான். அவனுக்குக் களைப்பு மேலிட்டது. முதல் நாள் இரவு சரிவர உணவருந்தவில்லை. காலையிலிருந்து ஆகாரம் ஏதும் இல்லை. ஆற்று வெள்ளத்தில் நீந்திய களைப்பு வேறு. மன உளைச்சல் வேறு. தலை சுற்றுவது போல் தோன்றியது.

''ஐயா, அம்பலவாணரே! தங்கள் நிபந்தனைக்கு உடன்படுகிறேன். 'தங்கள் விருப்பப்படியே செய்து கொள்ள உடன்படுகிறேன்' என்ற வாசகம் சொன்னீர்களே, தங்கள் விருப்பம் என்னவோ?'' என்று கேட்டான்.

அம்பலவாணன் 'ஓ!ஓ!' என்று சிரித்தான். ''என் விருப்பம் என்ன என்று மாதேவன் அறிவான். சிந்தாமணி அறிவாள். சற்று முன்பு அவளே அதற்கு உடன்பட்டு, நிறைவேற்ற என் எதிரே வந்து நின்று வாக்கும் தந்து விட்டாள்'' என்றான்.

''அவளை, உன் அந்தப்புரத்தில் அடிமையாக்கிக் கொள்கிறாயா? அடப்பாவி!'' என்று மாதேவன் அலறினார்.

அம்பலவாணன் மாதேவனைப் பார்க்காமல் நம்பியை நோக்கி, ''ஐயா! 'பாவி! கொடியவனே! யோக்கியமற்றவனே!' என்ற வார்த்தை களைச் சொல்வதால் ஒன்றும் பலனில்லை. நான் வீண் வார்த்தை பேச விரும்பவில்லை. நீங்கள் இடையில் வந்து மத்தியஸ்தம் செய்ய நினைப்பதால் நான் ஒப்பந்தத்துக்குச் சம்மதிக்கிறேன். தங்களை நான் வற்புறுத்தவில்லை. இதோ ஓலை இருக்கிறது. எழுத்தாணி இருக்கிறது. எழுதிக் கையெழுத்திடுவதானால் செய்யுங்கள். இல்லாவிடில் இந்த இடத்தை விட்டு உடனே அகலுங்கள். உங்கள் கருள் கத்திக்கு அஞ்சமாட்டேன். கைதட்டி அழைத்தால் நூறு பேர் வந்து நிற்பர். பத்துப் பேர் கத்திக்கு உயிர் விட்டாலும் மீதிப்பேர் உம்மை மடக்கி விடுவர். குலோத்துங்க சோழச் சக்கரவர்த்தியின் மெய்க்காவலரின் அடாத செயலைப் பற்றி நாடெங்கும் பேசிக் கொள்ளும்'' என்று கூறவும், அங்கே உள்ளவர்கள் அம்பலவாணனின் நியாயமான பேச்சைப் பாராட்டினர்.

சிந்தாமணி முகத்தில் ஒளி மேலும் அதிகமாகியது. ஒப்பந்தச் சீட்டை எழுதுங்கள் என்று தூண்டுவது போன்ற சமிக்ஞை அவளிடம் எழுவது போல் தோன்றியது.

நம்பி ஒப்பந்தத்தை எழுதிக் கையொப்பமிட்டான். மாதேவன் தலை குனிந்து நின்று கொண்டிருந்தார். நம்பியின் முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லை. அந்த ஊரின் வயது முதிர்ந்த ஒருவர் சாட்சியாகக் கையொப்பம் இட்டார்.

சிந்தாமணியும் செண்பகமும் தந்தையின் இருபுறமும் வர மாதேவன் இல்லத்தை நோக்கி நம்பி சென்றான்.

அம்பலவாணன், ''ஓகோகோ...'' என்று பலமாக நகைத்தது, அவர்களைத் தொடர்ந்து வந்து அவர்கள் செவிகளில் விழுந்தது.

9

நம்பி அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

நம்பி அந்தக் கிராமத்துக்கு வந்த அறுபது நாழிகைக்குள் நடைபெற்ற சம்பவங்கள் கனவுபோல் சிந்தாமணிக்குத் தோன்றின.

''அம்பலவாணனுக்கு அடிமையாகிவிடத் துணிந்தது ஏன் சிந்தாமணி?'' என்று நம்பி கேட்டான்.

''அம்பலவாணன் என்று நினைக்கும் போதே தில்லையம் பலத்தில் நடனம் புரிந்து அரூபமாக இருக்கும் சிற்சபேசனையே நினைக்கிறேன். அதனால் மனிதருக்கு அடிமைப்படுவதாக நான் நினைக்கவில்லை. ஆமாம், நீங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டீர்களே, இரண்டு பட்சங்களுக்குள் தாங்கள் மூவாயிரம் வராகனைத் தராவிடில் நான் அடிமையாகத் தானே வேண்டும்? நீங்களும் அதற்கு ஒப்புக் கொண்டது போல் தானே?'' என்று மெல்ல நகைத்தவாறு சிந்தாமணி கூறினாள்.

நம்பிக்குக் கோபம் பொங்கியது. ''நான் என் சொல்லை எப்படியும் காப்பாற்றி விடுவேன். எனக்காகக் காத்திருக்கலாம்'' என்றான்.

''தங்களுடைய முகத்தில் ஏற்படும் மாறுதலைக் கோபம் வரும்போது பார்த்திருக்கிறேன். வீரத்திலும் கண்டிருக்கிறேன். கருணை கொள்ளும் போதும் பார்த்திருக்கிறேன்.....''

''காதல் கொள்ளும் போது எப்படி என் முகம் இருக்கும் என்று கேட்காமல் கேட்கிறாய், அப்படித்தானே?'' என்று மெல்ல அவளது செழுமையான கன்னங்களைத் தட்டிக் கொடுக்க நெருங்கினான். மாதேவன் வரும் ஓசை கேட்டது.

''ஈரமான தங்கள் ஆடைகளைக் காயவைத்துக் கொண்டு வந்திருக் கிறேன். எங்களுக்காகத் தாங்கள் மூவாயிரம் வராகன் ஈட்ட வேண்டும் என்று நினைக்கும் போது எனக்கு வேதனையா யிருக்கிறது.'' என்று கூறி அவனது ஆடைகளை அவனிடம் அளித்தார்.

நம்பி ஏதும் மறுமொழி கூறவில்லை. சிறிது நேரம் கழித்துப் புறப்படும் போது, ''ஐயா! தாங்கள் கவலைப்படாமல் இருக்க வேண்டும். தங்களுடைய இரு புதல்விகளுக்காகவாவது உடல் நிலையைச் சரிவரப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றும் கூறினான்.

புக்கடையிலுள்ள கிணற்றருகே சிந்தாமணி கொன்றை மரத்தடியில் நின்று கொண்டிருந்தாள். போய் வருகிறேன் என்று அவன் வாய் திறந்து பேசவில்லை. இருவரும் விழிகளால் விடைபெற்று, விடை கொடுத்தனர்.

தன் கையிலிருந்த சிறு பை ஒன்றை அவளிடம் கொடுத்தாள் நம்பி.

சிந்தாமணி, ஆவலுடன் அவன் அளித்ததை வாங்கிக் கொண்டாள். ''இது என்ன?'' என்று கேட்டாள் கண்களை அகல விரித்தவாறு. முதல் முதலில் சிதம்பரத்தில், சிந்தாமணியைச் சந்தித்தபோது அவனைக் கவர்ந்தவை அந்த விழிகளே!

''இதை என் அன்பளிப்பு என்று கூறமாட்டேன். உனக்கு உற்றபோது ஏற்படும் துணையாக நீ கொள்ளலாம்'' என்றான் நம்பி.

''நீங்களே துணையாக இருக்கும் போது மற்றும் எவை எனக்குத் துணையாகும்?'' என்றாள் சிந்தாமணி. அவளுக்குப் பேச வார்த்தைகள் வரவில்லை. உள்ளம் நம்பிக்கை வெள்ளத்தில் முழுவதுமாக நனைந்திருந்தது.

''நான் வாக்களித்த பணத்துடன் வரும்வரை இது உதவும்'' என்றான் நம்பி.

''எங்களால் தங்களுக்கு எவ்வளவு சிரமம்?'' என்றான் சிந்தாமணி.

''சிந்தாமணி! உபசார வார்த்தைகளையோ நன்றி கூறும் சொற்களையோ நாம் தாண்டிவிட்டோம் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று நம்பி கேட்டான்.

சிந்தாமணி அந்தப் பையைத் திறந்து பார்த்தாள். அதில் சுருள் கத்தி இருந்தது. சிந்தாமணி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''சிந்தாமணி! உன் பெண்மைக்குப் பங்கம் வரும் போது நீ இதைப் பயன்படுத்தலாம்'' என்று கூறிய போது நம்பியின் குரலில் காதலும் பாசமும் நிறைந்திருந்தன.

நம்பிக்கை நிறைந்த உள்ளத்துடன் நம்பி சென்றான். அவன் எதிர்பார்க்கும் தொகை கிடைத்து விடும் என்ற நம்பிக்கை அவன் நடையில் இருந்தது. நடந்தான், விரைந்தான்.

சிதம்பரம் சென்றவுடன் வேறு முக்கியமான செய்தி அவனுக்காகக் காத்திருக்கிறது என்பதை அவன் எப்படி அறிவான்?

சிதம்பரம் நகருக்குள் நுழைந்தவுடனேயே வீதியில் குதிரை மீது வீரர்கள் நடமாட்டம் அதிகம் இருப்பதை அவன் கண்டான். சக்கரவர்த்திகள் மறுபடியும் சிதம்பரம் வந்திருக்கிறாரோ என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது.

கொட்டாரம் அருகே சென்றபோது எதிரே வந்த இரண்டு வீரர்கள் குதிரையினின்று இறங்கி வணங்கி நின்றனர். நம்பிக்கு ஒன்றும் புரியவில்லை.

''தங்களை இரண்டு நாள்களாகச் சேனாதிபதி தேடிக் கொண்டிருக்கிறார்'' என்றான் ஒரு வீரன்.

''என்னையா? அவரிடம் சொல்லிவிட்டுத் தானே வெளியூர் சென்றேன்'' என்ற நம்பி, சேதிராயரைக் காண விரைந்தான்.

''நம்பி! உன்னைத்தான் எதிர்பார்த்திருந்தேன். சொந்த ஊருக்குச் சென்றாயே, எல்லாம் நல்லபடியாக நடந்ததா?'' என்று அவர் கேட்டார்.

'நல்லவிதமாக நடக்க வேண்டும். தங்கள் ஆசியும் உதவியும் வேண்டும்' என்று சொல்ல நினைத்தான். வார்த்தைகள் வரவில்லை.

''உனக்கு முறைப்பெண் இருக்கிறாளா? திருமணப் பேச்சு நடக்கிறதா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

சேனாதிபதி சேதிராயர் அவ்வளவு நெருக்கமாக ஒருவரிடமும் பேசமாட்டார். அவரிடம் நெருங்கவே அஞ்சுவார்கள். அவர் பார்வையிலேயே எதிரே இருப்பவரின் உள்ளத்தை அறிந்துவிடுவார்.

முறைப்பெண் -அவன் என்ன மறுமொழி சொல்வான்? தாய் தந்தை அற்றவனான அவனுக்கு உறவினர்களும் ஒருவரும் இல்லை. முறைப் பெண்ணும் இல்லை என்று எப்படிச் சொல்வான்?

''கல்யாணத்துக்கு முன்பு, நீ புகழுடைய வாய்ப்பு ஒன்று வந்து இருக்கிறது. உன்னுடைய சேவையை நாடே பாராட்டும் ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது. நீயும் பெருமைப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது'' என்றார் சேதிராயர்.

அவருடைய நேர் பார்வையைத் தாங்க முடியாத நம்பி தலையைத் தாழ்த்திக் கொண்டு கைகளைக் கட்டிக் கொண்டு, ''தங்களுடைய தலைமையின் கீழ் தொண்டாற்றுவதே எனக்குப் பெருமை தரும் செயல்தான். என்னைத் திறமை மிகுந்த வீரனாக்கினீர்கள். குதிரையேற்றமும், வாள் வீச்சும், வேல் எறிதலும் தங்களிடம் கற்றேன் என்பதில் நான் மிகப் பெருமை அடைகிறேன்'' என்று சொல்லும் போது அவன் நா தழுதழுத்தது உணர்ச்சி மிகுதியால்.

''நம்பி! என் பெயரை மேலும் உயர்த்த ஒரு வாய்ப்பு வருகிறது'' என்றார் சேதிராயர்.

''கட்டளை இடுங்கள் ஐயா! சோழ நாட்டுக்காக உடல், பொருள் ஆவியைத் தியாகம் செய்யக் காத்திருக்கிறேன். என்னை வேளக்காரப் படையில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளுமாறு பல காலமாகச் சமூகத்திடம் விண்ணப்பித்து வருகிறேன்'' என்றான் நம்பி பணிவுடன்.

வீரப்பட்டினத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமை இப்போது அவன் உள்ளத்தில் மறைந்து விட்டது. சேதிராயர் என்ன கட்டளை இடப்போகிறாரோ என்றறியும் ஆவல் துள்ளி நின்றது.

''உன்னைப் போன்று நூறு பேர் நமது சக்கரவர்த்திகளுக்கு நம்பிக்கை மிகுந்தவர்கள் இருந்தால் சோழ நாட்டில் விரோதிகள் கை ஓங்காது'' என்றார் சேதிராயர்.

'சோழ நாட்டுக்குள்ளேயே விரோதிகள் இருக்கிறார்களா?' என்று நம்பி தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். 'என் இல்லை? அம்பலவாணர்கள் போன்றவர்கள் விரோதிகள், துரோகிகள்' என்று சொல்லிக் கொண்டான்.

"நம்பி! ஏதோ சொல்ல விரும்புகிறாய்" என்றார் சேதிராயர். நம்பியின் முகத்தில் அசட்டுச் சிரிப்புத் தான் மலர்ந்தது. "நம்பி! வடக்கே காஞ்சியில் எதிரிகளின் ஆக்கிரமிப்பு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. உடனே நமது படைகளுடன் செல்ல வேண்டும்" என்றார்.

"சோழ நாட்டின் மீது படை எடுக்கவும் ஒருவருக்குத் துணிவு இருக்கிறதா?" என்று நம்பி கேட்டான்.

"நமது கவனம் தெற்கே இருக்கிறது என்ற எண்ணத்தில் அவர்கள் தவறாகக் கணித்து விட்டார்கள்" என்றார் சேதிராயர்.

"முளையிலேயே கிள்ளி விடுவோம்" என்றான் நம்பி.

"ஆம்; நமது படைகளைக் காஞ்சிக்கு அனுப்ப உத்தர விட்டுள்ளார் சக்கரவர்த்தி."

"சக்கரவர்த்திகளும் உடன் செல்கிறாரா?" என்று நம்பி கேட்டான்.

"இல்லை. சக்கரவர்த்திகளும் நானும் மதுரைக்குச் செல்கிறோம். காடவராயர் காஞ்சிக்குச் செல்கிறார்" என்றார் சேதிராயர்.

"அந்தப் பெருமையைக் காடவராயருக்கா சக்கரவர்த்தி அளிக்க விரும்புகிறார்?" என்று கேட்டான் நம்பி.

"இல்லை. இல்லை. நமக்கு உதவுவதற்கு வருகிறார். நீதான் காஞ்சி செல்கிறாய்" என்றார் சேதிராயர்.

"நானா?" என்று நம்பி கேட்டபோது, அவன் குரலில் பெருமிதம் மிளிர்ந்தது. 'சோழர் படைகளை நடத்திச் செல்லும் பொறுப்பு என்னுடையதா?' அவனால் தன் செவிகளை நம்பவே முடியவில்லை.

"ஆம்; நீயே தான், உன் திறமையும் வீரமும் வெளியே புலப்பட வேண்டாமா?"

"நன்றி ஐயா."

"ஏழிசை மோகன் - தாமே பெரும் வீரன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். சக்கரவர்த்தி தம் மகளை அவனுக்கு மணம் புரிவிக்கப் போகிறார். நம்பி! நீ காஞ்சியில் வீர சாகசங்களைப் புரிந்து சக்கரவர்த்தியின் அபிமானத்தைப் பெற வேண்டும்."

"காத்திருக்கிறேன், ஐயா! நாட்டுக்காகப் போராடுவது என் கடமை. அதற்காகப் பிரதி பிரயோசனம் எதிர்பாராமல் நான் கடமை புரியக் காத்திருக்கிறேன்" என்றான் நம்பி.

"இன்று மாலையில் படை புறப்படுகிறது" என்று சேதிராயர் கூறியவுடன் நம்பி திடுக்கிட்டான்.

"இன்று மாலையே புறப்பட வேண்டுமா?" நம்பி மெல்லக் கேட்டான்.

"ஆம்; போருக்குப் புறப்படுவது என்று முடிவு செய்து விட்டால் உடனே புறப்பட வேண்டும். உனக்கு விடைகொடுத்து அனுப்ப இல்லாளோ, காதலியோ இருந்தால் அவளிடம் வீரத்திலகம் அணிந்து புறப்படலாம்" என்று கூறிச் சிரித்தார் சேதிராயர்.

"தங்களுக்குத் தெரியாமலா நான் திருமணம் செய்து கொண்டு விடுவேன்? ஆனால்...." என்று நம்பி தயங்கினான்.

அவரிடம் நடந்தவற்றைச் சொல்லலாமா, கூடாதா என்று தயங்கினான். மூவாயிரம் வராகன் கேட்பது, தலைமை வகிப்பதற்குக் கூலியாகி விடலாம் என்று மௌனமாயிருந்தான்.

"நம்பி! நீ ஏதோ கேட்க நினைக்கிறாய். ஆனால், நிறுத்திக் கொள்கிறாய். தைரியமாகச் சொல்லு" என்றார் சேதிராயர்.

"போர்த் திட்டங்களைக் கூறுங்கள் ஐயா!" என்றான் நம்பி.

"இன்று புறப்படுகிறாய். கருடநதிக் கரையில் பாடி வீடமைத்துத் தங்கிய பிறகு, நேரே தென் பெண்ணை ஆற்றங்கரைக்குத் தான்" என்றார் சேதிராயர்.

"காடவராயர் படைகளுடன் எங்கே வந்து சேர்ந்து கொள்கிறார்?" என்று கேட்டான் நம்பி.

"நீ காடவராயரை எதிர்பார்க்க வேண்டாம். எவ்வளவு விரைவில் உனது படைகள் காஞ்சிக்குள் நுழைகின்றவோ அவ்வளவும் உனக்குப் பெருமை" என்றார் சேதிராயர்.

"சேனாதிபதி அவர்களே! ஒரு விண்ணப்பம், ஏழு நாள்களில் படை எடுப்பை நிறைவேற்றி, எதிரியைச் சிறைப்பிடித்து விடுகிறேன். போர் முடிந்த உடனே திரும்புவதற்கு என்னை அனுமதிப்பீர்களா?" என்று கேட்டான்.

"நம்பி! ஏதோ ஒரு காரியத்தை மனத்தில் வைத்துக் கொண்டு சொல்ல முடியாமல் திண்டாடுகிறாய். நீ தைரியமாகச் சொல்லலாம்" என்று அவனை உற்சாகப்படுத்தினார் சேதிராயர்.

"திருக்குடந்தை அருகே எனது பூர்வீகச் சொத்து ஒன்று இருக்கிறது. அதை விற்க வேண்டும். நான் ஒருவருக்கு மூவாயிரம் வராகன் கொடுப்பதாக வாக்களித்து உள்ளேன். வாக்குத் தவறக் கூடாதல்லவா?" என்று மெல்லக் கூறினான் நம்பி.

"நம்பி! இதற்கா இவ்வளவு தயங்குகிறாய்? உனது மூதாதையர் வீட்டை விற்க வேண்டாம். சக்கரவர்த்திகளிடம் கூறி அந்தப் பணத்தை உனக்குத் தரச் சொல்கிறேன். வருட ஊதியத்தைக் கூட நீ பெறுவதில்லை என்று கேள்விப்பட்டேன். கவலை இல்லாமல் போய் வெற்றியுடன் திரும்பி வா" என்று அபயமளித்து ஆசி கூறினார் சேதிராயர்.

மூவாயிரம் வராகன் கையில் வந்து விட்டது போலவும் அதை அம்பலவாணனிடம் வீசி எறிந்துவிட்டுச் சிந்தாமணியுடன் கங்கை கொண்ட சோழபுரம் வந்து மகிழ்ச்சியுடன் வாழ்வது போலவும் அப்போதே உணர்ந்தான் நம்பி. அவன் புதிய சக்தியுடன் வீறு கொண்டு எழுந்தான்.

சோழர் படைகள் அணிவகுத்து வடக்கு நோக்கிப் புறப்பட்டன.

10

குலோத்துங்க சோழ தேவ மாமன்னரின் இளையராணி பிராட்டி சுறுசுறுப்பாக இயங்கினாள். காஞ்சிப் போரில் வெற்றிமாலை சூடிவரும் ஏழிசை மோகனுக்குத் தன் மகள் வல்லபியை மணம் புரிந்து கொடுப்பது என்ற உறுதியுடன் இருப்பதையும், அதற்காகவே உற்சாகப்படுத்தி ஏழிசை மோகனைக் காஞ்சிக்குச் சக்கரவர்த்தி அனுப்பியிருப்பதையும் அறிந்த பிராட்டி, மாற்றுத் திட்டம் தீட்டினாள். தனக்கு அந்தரங்கமானவர்களை அழைத்துக் காஞ்சிக்குச் செல்லுமாறு ஏற்பாடு செய்தாள்.

சக்கரவர்த்தி இதையறிந்த போது, தன் அபிமானத்துக்குரிய இளைய ராணியின் மீது அவருக்குக் கோபம் ஏற்படவில்லை.

"பிராட்டி! நீ கூட அரசியலில் இறங்கிவிட்டாய் என்று அறியும் போது எனக்கு வியப்பாயிருந்தது" என்றார்.

"ஏன், பெண்கள் அரசியலில் ஈடுபடக்கூடாதா?"

"ஆகா; நன்றாக ஈடுபடலாம். இராசராச சோழதேவரின் உடன் பிறந்த குந்தவைப் பிராட்டி என்ற மாமேதை அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தார்கள். அவர்களுடைய யோசனையின் பேரில் தான் சோழநாட்டு அரசியலே இயங்கிக் கொண்டிருந்தது என்று சொல்லுவார்கள்."

"எனக்கு அன்றாட அரசியலைப் பற்றிக் கவலையில்லை. தங்களுடைய திறமையின் எதிரே நான் சிறு துரும்பு. ஆனால் என் மகளுடைய வாழ்க்கையைப் பற்றித் தான் என் கவலை எல்லாம்."

"உன் மகள் என் மகளல்லவா?"

"ஆம்; உங்கள் மகள் தான். ஆனால் மகளையும் விட தங்களுக்கு நாடு முக்கியம். ஆனால், எனக்கு என் மகளின் நல்வாழ்வும் முக்கியம்."

"பிராட்டி! உனக்கு ஏழிசை மோகனைக் கண்டாலே ஏனோ பிடிப்பதில்லை."

"எனக்கு மட்டுமில்லை, என் மகளுக்கும் பிடிக்கவில்லை, அவளிடம் காடவராயர் ஒரு சபதம் கூடச் செய்து கொண்டாராம்."

"என்ன சபதம்? ஏழிசை மோகன், வல்லபியை எப்போது சந்தித்தான்?"

"சிறிது நாள்களுக்கு முன்பு இங்கே வந்திருந்தபோது. 'உன்னை மணம் புரிந்து, சேந்தமங்கலம் மாளிகை அந்தப்புரத்தில் ஒரு நாளாவது இருத்தாவிட்டால் என் பெயர் கோப்பெருஞ்சிங்கன் அல்லன்' என்றாராம். வல்லபி தங்களுடைய மகளல்லவா? அவருடைய சபதத்தை நிறைவேற்றாமல் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறாள்."

"ஓகோ! அதற்குப் பிராட்டியின் திட்டம் என்னவோ? நீங்கள் சபதமிட்டுக் கடைசியில் சோழ நாட்டுக்குத் தோல்வியை ஏற்படுத்தி விடப் போகிறீர்கள்."

"நமது நாட்டுக்குத் தோல்வியை ஏற்படுத்தி விடுமளவுக்கு நான் துரோகி அல்லள். காடவராயருக்குத் தோல்வி, காஞ்சிக் கோட்டையை அவர் சென்றடையுமுன்பே நமது படைகள் அடைந்து விட்டால், கோட்டையை முதலில் பிடித்த பெருமை அவரைச் சேராதல்லவா? கோட்டையை முதலில் பிடித்துத் தன் திறமையைப் புலப்படுத்தாவிடில், வல்லபியைத் தாங்கள் அவருக்குப் பரிசாக அளிக்கமாட்டீர்களல்லவா?"

பிராட்டியின் திட்டத்தைக் கேட்டு குலோத்துங்கன் திடுக்கிட்டார். விளையாட்டு வினையாகி விடப் போகிறதே என்ற கவலை அவருக்கு.

தேர்ந்தெடுத்த குதிரை வீரர்கள் பத்துப் பேர், கங்கை கொண்ட சோழபுரத்தினின்று கோப்பெருஞ்சிங்கனின் முன்னேற்றத்தைத் தடுக்கப் புறப்பட்டனர்.

அம்பலவாணனுக்கு அந்தச் செய்தி எட்டியது. நம்பி படைகளுக்குத் தலைமை வகித்துக் காஞ்சி மாநகருக்குச் சென்றிருக்கும் அந்தச் செய்தி அவனுக்கு ஒருவிதத்தில் கவலையை அளித்தாலும், முக்கியமாக மகிழ்ச்சியைத் தான் அளித்தது.

'போர் முடித்து திரும்பி வரப்பல மாதங்களாகும். அதற்குள் மூப்பது நாள் கால அளவு முடிந்து விடும். மூவாயிரம் வராகன் நம்பியின் சார்பில் யார் கொடுக்கப் போகிறார்கள்? சிந்தாமணி நமக்குத்தான்' என்று முடிவு செய்து கொண்டான். அவன் கனவுக் குதிரை வானில் பறந்தது.

இன்னும் இருபது நாள்கள், பதினைந்து நாள்கள் என்று ஒவ்வொரு நாளும் மாதேவன் வீட்டுக்குச் சென்று தவணை நாள்கள் குறைந்து வருவதைப் பற்றிச் சொல்லும் போது, மாதேவருக்கு, ஒவ்வொரு வேலாக இதயத்தில் பாய்ச்சுவதைப் போல் இருக்கும்.

சிந்தாமணி, அம்பலவாணனையோ, அவனது ஆட்களையோ லட்சியம் செய்வதில்லை. பிரார்த்தனை - பிரார்த்தனை - என்று கோயிலே கதி என்றிருந்தாள்.

11

வானம் இருண்டு வந்தது. 'வீர்வீர்' என்று காற்று அடித்தது. 'பளிச் பளிச்' என்று மின்னல் பூமியை இரண்டாகப் பிளக்க வருவது போல் வெட்டிச் சென்றது. மரங்கள் அசைந்தாடின. பெரியவர்கள் வானத்தைப் பார்த்தனர்.

சிறு சன்னக் கம்பிபோல் மழை இறங்கியது. சடசடவெனப் பெய்தது. ஒரு சமயம் வெள்ளிக்கம்பி வானினின்று இறங்குவது போல் இருக்கும். ஒரு சமயம் வானமே பொத்துக் கொண்டு ஊற்றுவதுபோல் இருக்கும். இடிஇடித்த போது வீடுகள் அதிர்ந்தன. வீதியெல்லாம் மழைத்தண்ணீர் சிறு நதிபோல் ஓடியது.

பதினான்கு நாள்கள், பதின்மூன்று நாள்கள், பன்னிரண்டு நாள்கள் என்று மாதேவன் வீட்டுக்குச் சென்று கூறிவர அம்பல வாணனால் முடியவில்லை. வெள்ளாறு இருகரைகளையும் கடந்தது. மேற்கே பலத்த மழை பெய்ததால் அந்தத் தண்ணீர் வேறு சுழன்று வந்தது. இரவு பகல் என்று பிரித்துப் பார்க்க முடியாமல் மழை பெய்தது.

கருட நதியைக் கடந்து, பெண்ணையாற்றைக் கடந்து வந்த சோழர் படைகள் பாலாற்றை நெருங்குவதற்குள் பெருமழை பெய்யத் தொடங்கியது. பாடி வீடமைத்துக் கொண்டிருந்த வீரர்கள் மழையில் மிகவும் இடர்பட்டனர். கோயில்களிலும், மேடான இடங்களிலும் அமர்ந்தனர். மழை விடவேயில்லை. நம்பி நடுங்கினான். நாள்கள் ஓடிச்சென்று மறைகின்றனவே என்று துடிதுடித்தான். சிந்தாமணி கவலைப்படுவாளே, துடிதுடித்து நிற்பாளே, எதிர்பார்த்து ஏங்குவாளே, என்று நினைத்தபோதே அவன் இதயத்தை யாரோ பிழிவதுபோல் இருந்தது. மழை எப்போது நிற்கும்? வெள்ளம் எப்போது வடியும்? காஞ்சிக் கோட்டைக்கு எப்போது செல்வோம் என்ற நினைப்பிலேயே உறங்காமல் இரவெல்லாம் விழித்திருப்பான். உணவுப் பண்டங்கள் மழையில் சேதமடைந்தன. காணுமிடமெங்கும் வெள்ளக்காடு. ஊர்கள் பல வெள்ளத்தில் மூழ்கின.

ஒருநாள் கதிரவன் கண்களுக்குப் புலப்பட்டான். வீரர்கள் மகிழ்ச்சிக் கூத்தாடினர். அணிவகுத்து விரைந்தனர்.

'கோப்பெருஞ்சிங்கன் படைகள் வந்திருக்குமா, எங்காவது வெள்ளத்தில் சிக்கியிருக்குமா?' என்று நம்பி எண்ணினான். வெயில் நன்றாகக் காய்ந்தது. இதுவரையில் காயாத நாள்களுக்கும் சேர்த்து வைத்துக் காய்ந்தது. புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தைக் கொண்டோடியது என்பார்கள். அது உண்மையாகியது. சோழர் படைகள் முன்னேறின.

காஞ்சியை நெருங்கியபோது நம்பிக்குச் செய்தி எட்டியது, கோப்பெருஞ்சிங்கன் படைகள் வந்து கொண்டிருக்கின்றன என்று. கோப்பெருஞ்சிங்கனைச் சந்திக்க நம்பி விரும்பினான். காஞ்சிக் கோட்டையை எவ்வாறு தாக்குவது என்று திட்டமிட, ஏழிசை மோகன் தங்கியிருக்கும் இடத்துக்கே போகத் திட்டமிட்டான்.

இரண்டு வீரர்களுடன் நம்பி ஏழிசை மோகன் பாடி இறங்கி இருக்குமிடம் சென்றான். தன் வருகையைத் தெரிவித்துத் தன் உதவியாளனை முதலில் அனுப்பினான்.

ஏழிசை மோகன் மிகச் சீற்றத்துடன் சோழர் படைகளை அவமதித்துப் பேசி, நம்பியைச் சந்திக்க விரும்பவில்லை என்று சொல்லியனுப்பினான். தன் ஒருவனாலேயே காஞ்சியை வெல்ல முடியுமென்றும், குலோத்துங்கன் ஒரு படையை அனுப்பித் தன்னை அவமதித்து விட்டாரென்றும் ஏசினான்.

நம்பி கோபம் கொள்ளவில்லை. திட்டமிட்டபடி மறுநாள் காலை சூரியோதயத்தின் போது காஞ்சிக் கோட்டையைத் தாக்கப் படைகளுடன் புறப்பட்டான். சிறிது தொலைவு சென்றபோது திடுக்கிட்டு நின்று விட்டான்.

நான்கு குதிரை வீரர்கள் ஏழிசை மோகனைச் சூழ்ந்திருந்தனர்.

ஏழிசை மோகனின் வாள் திருமால் கைச் சக்கரம் போலச் சுழன்றது. அவன் ஒருவனே நான்கு வீரர்களின் தாக்குதலையும் எதிர்த்து நிற்பதைக் கண்ட நம்பி பிரமித்தான். வாள் கையிலிருப்பது போலவே தோன்றவில்லை. ஒரு சமயம் வாளொடு வாள் மோதும் போது தீப்பொறி எழுந்தது. குதிரை மீதிருந்து சண்டையிட்டவர்கள் கீழே குதித்தனர். குதிரைகள் மிரண்டு ஓடின. ஏழிசை மோகன் துள்ளிக் குதித்துத் தாக்கினான். பாய்ந்து பாய்ந்து தாக்கினான். கோப்பெருஞ் சிங்கன் என்ற பெயர் ஏழிசை மோகனுக்குத் தகும் என்று முடிவு செய்த நம்பியால் அந்த யுத்தத்தைப் பார்த்துக் கொண்டு கம்மாயிருக்க முடியவில்லை.

குதிரை மீதிருந்து குதித்தான். நம்பி குதித்த அதே வேளையில், ஏழிசை மோகனின் கை வாள் உடைந்தது. நிராயுதபாணியான அவனை ஏதோ ஒரு கணத்தில் தாக்கிக் கூர்மையான கத்தியைப் பாய்ச்சியிருப்பார்கள். நம்பி ஹூங்காரம் செய்தான். தன் வாளைக் கோப்பெருஞ்சிங்கனை நோக்கி வீசினான். மிக எளிதாக வாளைப் பற்றி கோப்பெருஞ்சிங்கன் மீண்டும் பாய்ந்து தாக்கினான். நம்பியும் இப்போது சிங்கன் உதவிக்கு வந்து விட்டான். நம்பியும் சிங்கனும் சேர்ந்து தாக்குவதற்கு ஈடு கொடுக்க முடியாமல் நான்கு குதிரை வீரர்களும் ஓடினர். செத்தோம் பிழைத்தோம் என்று ஓடினர்.

நன்றி கலந்த விழிகளுடன் நம்பியை நோக்கினான் சிங்கன்.

"தங்கள் வாள் வீசும் திறமையை இப்போது தான் அறிந்தேன். இதுவரை சொல்லித்தான் கேட்டிருக்கிறேன்." என்று நம்பி புகழ்ந்து கூறிய வார்த்தைகளைக் கேட்ட ஏழிசை மோகன் நன்றி தெரிவித்தா னென்றாலும், ஒருவனே வெகு நேரம் நான்கு வீரர்களை எதிர்த்துப் போராடியதால் களைத்திருந்தான்.

"சரியான நேரத்துக்கு வந்தீர்கள். நீங்கள் யார்? உங்கள் வாள் வீசும் திறமையையும் நான் பார்த்தேன். இன்று முதல் என்னுடைய நண்பர் நீங்கள்" என்று ஏழிசை மோகன் நம்பியின் தோள் மீது கையை வைத்து அழுத்தினான்.

"என் பெயர் நம்பி" என்று கூறிய நம்பி, சோழர் படைகளுக்குத் தன்னைத் தலைவனாக்கி அனுப்பிய செய்தியைக் கூறினான்.

"ஓ! நான் வெறுத்திருக்க வேண்டிய சோழர் படைத்தலைவரா? என் வெறுப்பை மாற்றி விட்டீர்கள். உம். காஞ்சிக் கோட்டையைத் தாக்க முன்னேறுங்கள். நான் சற்றுக் களைப்பாறி விட்டு வருகிறேன்" என்றான்.

எந்தக் கோப்பெஞ்சிங்கனை நம்பி வெறுத்தானோ அந்தச் சிங்கன் இப்போது நம்பியின் நண்பனாகி விட்டான். இன்னும் இரண்டே நாள்கள், காஞ்சியில் புலிக்கொடியைப் பறக்க விட்டுவிட்டு வீரப்பட்டினம் விரைவோம் என்ற நம்பிக்கை ஒளி நம்பியின் உடலிலும் உள்ளத்திலும் புதுத்தெம்பை ஊட்டியது.

நம்பியின் தலைமையின் கீழ் சோழர் படைகள் காஞ்சிக் கோட்டையின் தெற்கு வாயிலைத் தாக்கின. கோப்பெருஞ்சிங்கன் படைகளும் ஒன்று

சேர்ந்தன. கோட்டைக் கதவுகள் தவிடு பொடியாயின. 'வீரவேல், வெற்றிவேல், என்ற முழக்கத்துடன் புலிக் கொடியை ஏந்தியவாறு குதிரை வீரர்கள் முன் செல்ல, நம்பி கம்பீரமாக அவர்கள் நடுவே வெற்றிப் புன்னகையுடன் சென்றான்.

திடீரென ஒரு கலவரம். எங்கிருந்தோ இரு புறங்களிலிருந்து எதிரிப் படைகள் பாய்ந்து தாக்கின. எதிர்பாராத இந்தத் தாக்குதலால் ஒரு கணம் நிலைகுலைந்த சோழ வீரர்கள் சிறிது நேரத்தில் ஒன்று சேர்ந்தனர். புழுதிப் படலத்தில், நம்பியின் குதிரையை ஒருவன் தாக்கியதையும், அவன் வீசிய வாள் நம்பியின் இடக் காலை வெட்டியதையும் ஒருவரும் கவனிக்கவில்லை. அதற்குள் ஏழிசை மோகனும் வந்து விட்டான்.

நம்பியின் கால் வெட்டப்பட்டதறிந்து பதறிப்போன ஏழிசை மோகன், உடனே நம்பியைத் தூக்கி வந்து தக்க சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்தான். மருத்துவ சாலையில் ரண சிகிச்சையை மருத்துவர் செய்து முடிக்கும் வரையில் கோப்பெருஞ்சிங்கன் அருகிலேயே இருந்தான்.

'ஆகா, இவரை நாம் விரோதியாகப் பார்த்தோம். சிந்தாமணியை விரும்பிய தால் தானே அவரை வெறுத்தோம்? அதுபோல், நாம் சிந்தாமணியை நேசிப்பதையும், உதவுவதற்கு ஒப்பந்தச் சீட்டு எழுதிக் கொடுத்திருப்பதையும் அவர் அறிந்திருந்தால் நம்மைக் காப்பாற்ற இரவும் பகலும் கண் விழித்திருப்பாரா?' என்று எண்ணியபோது நம்பியின் விழிகளில் கண்ணீர் தளும்பியது.

''நம்பி! ஏன் கண்கள் கலங்குகின்றன? காஞ்சிக் கோட்டையில் வெற்றிக் கொடியை நாட்டிய பிறகு தான் தங்களுக்கு இந்த ஆபத்து நேர்ந்தது?'' என்றான் ஏழிசை மோகன்.

நம்பி, ஏழிசை மோகன் கைகளைப் பலமாகப் பற்றிக் கொண்டு, ''தங்கள் அன்புக்கு நான் எதைக் காணிக்கையாக்குவேன்? நீங்கள் மகாவீரர். தங்களுடைய வாள் வீசும் திறமையைச் சோழ நாடே அறியச் செய்ய வேண்டும்''

ஏழிசை மோகன் அதைக் காதில் ஏற்றதாகவே தெரியவில்லை.

''இந்தக் காஞ்சிக் கோட்டை எங்கள் மூதாதையருடையது. அதில் நந்திக்கொடியை நான் பறக்கவிட விரும்பினேன். சோழர் படைகளுக்குத் தலைமை வகித்து வந்த நீ, வழியில் என்னைக் காப்பாற்றியிராவிட்டால், உன்னையும் சோழர் படைகளையும் காஞ்சிக் கோட்டைக்குள்ளேயே விட்டிருக்க மாட்டேன். நீ என் நண்பனாகி விட்டாய். நீ சேந்தமங்கலத்துக்கு வந்துவிடு. உனக்குப் பெரும் பதவி தருகிறேன். கால் ஊனமாகிவிட்டதே என்ற கவலையே வேண்டாம். நல்ல அழகியாகப் பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறேன். கவலைப்படாதே. நான் அரசனாயிருந்தாலும் உனது நண்பன்'' என்று ஏழிசை மோகன் கூறியது கேட்டு நம்பி திடுக்கிட்டான். இரவெல்லாம் அவனுக்கு அதே நினைவு.

''வீரப்பட்டினத்தில் சிந்தாமணி எனக்காகக் காத்திருக்கும் போது, சேந்தமங்கலத்தில் அரச போக வாழ்க்கையுடன் திருமணம் புரிந்து கொள்வதா? சோழ நாட்டிற்கு எதிராகப் பணியாற்றுவதா? முடியாது'' நம்பி கூவினான்.

மருத்துவ சாலையில் நம்பிக்குத் துணையாயிருந்தவர்கள் ஓடோடி வந்தனர்.

''ஐயா, ஐயா! என்ன வேண்டும்? ஏதோ உரக்கப் பேசினீர்களே!'' என்று கேட்டனர்.

அவன் என்னவென்று சொல்வான்?

''காஞ்சிக் கோட்டையில் புலிக்கொடி உயர்த்தி எவ்வளவு நாள்களாகின்றன?'' என்று நம்பி கேட்டான்.

''பத்து நாள்களாகின்றன. தாங்கள் நினைவு இல்லாமல் மூன்று நாள்கள் கிடந்தீர்கள். இப்போது வலி எப்படி இருக்கிறது?'' பணியாட்கள் பரிவுடன் கேட்டனர்.

வலி - இனிதான் வலி தொடங்கப் போகிறது. அந்த வலி காலில் அல்ல; இதயத்தில். வீரப்பட்டினத்தில் அம்பலவாணனிடம் நான் கொடுத்த வாக்கு, கெடு எல்லாம் மீறிப்போய் விட்டன. ஐயோ! சிந்தாமணி என்ன ஆனாளோ? கோப்பெருஞ்சிங்கனிடம், அம்பலவாணரின் அக்கிரமச் செயல் குறித்துச் சொல்ல வேண்டும் என்று எண்ணியதையும் மாற்றிக் கொண்டான்.

வீரப்பட்டினத்தையே உருமாற்றி விட்டது கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம். மாதேவன் இருந்த வீடு இடிந்து வீழ்ந்திருந்தது. இடிபாடுகளுக் கிடையே சிக்கிய மாதேவன் இரண்டு நாள்கள் உயிர் வாழ்ந்து, பிறகு கண்களை மூடினார்.

சிந்தாமணியும், செண்பகமும் அநாதைகள் ஆயினர். இருக்க இருந்த இடமும் போய்விட்டது. அணைக்க இருந்த அன்புக்கரமும் போய்விட்டது.

சிந்தாமணி, செண்பகத்தை அழைத்துக் கொண்டு வீரதேவேகவரர் ஆலயத்துக்குச் சென்றாள். துன்பத்தின் எல்லையைக் கண்டவர்கள் விரக்தி மேலீட்டால் இறைவனை வைவதுண்டு. சிந்தாமணி அப்படிச் செய்யவில்லை. ஈசனையும், அம்பிகையையும் தொழுதாள். நேரே அம்பலவாணன் வீட்டுக்கு வந்தாள். மழையால் பழுதடைந்த பகுதிகளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்த அம்பலவாணன் அவர்களை வரவேற்றான்.

''சிந்தாமணி! உன்னைத் தேடி அழைத்து வர என் ஆட்களை அனுப்ப எண்ணினேன். நீயே வந்து விட்டாய். நம்பி எழுதிக் கொடுத்த கெடு கழிந்து விட்டது என்பது உனக்குத் தெரியுமா?'' என்று அம்பலவாணன் கேட்டான்.

''தெரியும். வாக்கைக் காப்பாற்றவே வந்தேன். தங்கள் விருப்பப்படி நாங்கள் நடக்க வந்து விட்டோம்'' என்று சற்றும் கலங்காமல் அழுத்தம் திருத்தமாகச் சிந்தாமணி பேசினாள்.

வைரநாயகி, தூணருகே நின்று வியப்புடன் சிந்தாமணியையும், அவள் சகோதரியையும் சிந்தாமணி பேசுவதையும் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தாள்.

அந்தப்புரத்தில் இருந்த அடிமைப் பெண்களுள் தைரியம் மிகுந்த ஒரிருவர் அங்கு வந்து பார்த்து விட்டுச் சென்றனர்.

"சிந்தாமணி வரமாட்டாள் என்றீர்களே, வந்து விட்டாளே!" என்றாள் ஒருத்தி.

"நமது தலைவரை ஒருவரும் வெல்ல முடியாது."

"சிந்தாமணிக்கு ஆசை காட்டிய வீரன் போர்க்களத்திற்குப் போய் விட்டானாம்."

"மூவாயிரம் வராகன் என்றால் எளிதா?"

"ஆண்டவன் அம்பலவாணன் பக்கம்" என்றெல்லாம் அந்த அடிமைப் பெண்கள் - பதியிலாத பொதுப் பண்டிர் - பேசிக் கொண்டனர்.

"ஆலயத்துக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வாளா? அல்லது அம்பலவாணனின் அந்தப்புரத்தில் இருந்து விடுவாளா?" என்று மாணிக்கம் என்பவள் கேட்டாள்.

"கோப்பெருஞ்சிங்கன் இருக்கும்போது கோயிலுக்கா கொடுப்பார் அம்பலவாணர்?" என்றாள் மற்றொரு பெண்.

"ஒப்பந்தச் சீட்டுப்படி, கையெழுத்திட்ட நம்பியிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா?" அம்பலவாணன் கேட்டான்.

"தெரியாது." சிந்தாமணி ஒரே வார்த்தையில் கூறினாள்.

"மூவாயிரம் வராகன் கொடுக்கிறாயா?"

"மூவாயிரம் வராகன் இருந்திருந்தால் நாங்கள் இங்கே ஏன் வருகிறோம்?" சிந்தாமணி சலனம் ஏதுமின்றிப் பேசினாள்.

"சிந்தாமணி! இன்று முதல் நீ எங்களுக்கு - எனக்கும் என் மனைவி வைரநாயகிக்கும் - அடிமை. உன் தங்கையும் அடிமை. நினைவிருக்கட்டும். இனி நீ இந்த வீட்டை விட்டு எங்கும் எங்கள் உத்தரவின்றிச் செல்ல முடியாது. நினைவிருக்கட்டும்." - அம்பலவாணன் சற்றுக் கடுமையான குரலில் பேசுவது வைரநாயகிக்குக் கூடப் பிடிக்கவில்லை.

"தெரியும் ஐயா! தங்கள் வீட்டில் நாகு என்ற பசு இருக்கிறது. தங்களுடைய விருப்பம் இல்லாமல் அனுமதியில்லாமல் அது வெளியே செல்ல முடியாது" என்றாள் சிந்தாமணி.

"அதிகப் பிரசங்கி!" என்றான் அம்பலவாணன். வறுமையிலும், வேதனையிலுங்கூட சிந்தாமணி அழகாய்த் தான் இருக்கிறாள். இன்னும் சில நாள்கள் சத்தான உணவை உட்கொண்டால் இன்னும் எழிலுடன் விளங்குவாள். அப்போது நம் மனத்தில் என்ன தோன்றுகிறதோ அப்படி நமது விருப்பத்துக்கு இணங்க வைத்துச் சுகம் அனுபவிக்கலாம். அல்லது காடவராயரிடம் ஒப்படைத்து விடலாம். அதனால் பல சலுகைகளை அவர் கொடுப்பார். ஆஹ்ஹா' என்று தனக்குள்ளேயே பேசிக் கொண்டு மெல்ல நகைக்கவும் செய்தான்.

சிந்தாமணியையும், செண்பகத்தையும் அணைத்தவாறு வைரநாயகி, மேல்மாடத்துக்கு அழைத்துச் சென்றாள். அங்குள்ள பெண்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள். சிந்தாமணி மௌனமாயிருந்தாள். செண்பகம் மௌனக் கண்ணீர் விட்டாள்.

இரண்டு நாள்களுக்குள் சிந்தாமணி, மற்றவர்களுடன் கலகலப்பாகப் பழகத் தொடங்கினாள். காஞ்சிப் போரைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். காஞ்சியில் கோப்பெருஞ்சிங்கன் மகத்தான வெற்றியடைந்ததைப் பற்றி அனைவரும் புகழ்ந்து பேசினர். நம்பி என்ன ஆனார்? ஒருவருக்கும் அவரைப் பற்றித் தெரியாதா?"

ஒரு நாள் அம்பலவாணன் அந்தப்புரத்திற்கு வந்தான். மற்றவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். சிந்தாமணி அவனை வரவேற்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"சிந்தாமணி! இன்னும் நம்பியை நினைத்துக் கொண்டிருக்கிறாயா? நம்பி வரமாட்டான். அப்படியே வந்தாலும் தன் அதிகார பலத்தை இங்கே காட்ட முடியாது. மூவாயிரம் வராகன் - ஒன்று இரண்டல்ல - கொண்டு வரவேண்டும் தெரியுமா?" என்று பேசியவாறு அவளை நெருங்கினான்.

"மூவாயிரம் வராகன் கொடுத்தால் என்னை விடுதலை செய்து விடுவீர்களா?" சிந்தாமணி கேட்டாள், தன் உதடுகளை மெல்லக் கடித்தவாறு.

"ஆகா. மூவாயிரம் வராகனும் அதற்கு வட்டியும் யார் தந்தாலும் அவரிடம் ஒப்படைத்து விடுவேன்" என்று கூறி நகைத்த அம்பலவாணன் அவளை மெல்ல நெருங்கி, "இந்த இடத்தை விட்டுப் போக ஆசைப்படுகிறாயா? உனக்கு என்ன குறைவு இங்கே? உனது நம்பி இருக்குமிடம் தெரியவில்லை. கோப்பெருஞ்சிங்கன் பெரும் வெற்றியடைந்துவிட்டாராம். அவரும் இங்கே வருவார். நீ ஓர் இளவரசி போல் வாழலாம்" என்று கூறி அவள் கரம்பற்ற முயன்றான்.

சிந்தாமணி துள்ளி எழுந்தாள். "அப்படியே நில்லுங்கள். என்னைத் தொட்டால்...." என்று அவள் கூறிய போது அவள் விழிகளில் வீரத்தனல் ஜொலித்தது.

"அடடா, நீ கோபிப்பதும் ஓர் அழகாயிருக்கிறது சிந்தாமணி! இங்கே மாணிக்கம் என்று ஒருத்தி இருக்கிறாள். அவள் முதலில் இப்படித்தான் பிடிவாதம் பிடித்தாள். பிறகு..." என்று அவளைத் தாவிப் பிடிக்க முயன்றான்.

"அம்பலவாணரே! நெருங்காதீர்கள். இன்னும் சில நாளாவது இந்த உலகத்தில் தாங்கள் கோப்பெருஞ்சிங்கனது பரிசுகளைப் பெற்று மகிழ்வுடன் வாழ வேண்டும்" என்று சீறினாள்.

"நீ என் அடிமை." அம்பலவாணன் அதிகாரக் குரலில் பேசி அடக்க முயன்றான்.

"இருக்கலாம், என் இதயமும், உடலும் அவருக்கே... தங்களுடைய பணத்துக்கு அல்ல." - சிந்தாமணி அழுத்தந்திருத்தமாகப் பேசினாள். செண்பகம் அஞ்சியவாறு ஒரு மூலையில் நின்று முகத்தை மூடிக் கொண்டாள்.

''விலை கொடுத்து வாங்கிய அடிமை நீ. என் விருப்பத்தை நிறை வேற்றியாக வேண்டும்.'' அம்பலவாணன் அழுத்தமாகப் பேசினான்.

''இல்லை, என் கற்புக்கு நீ விலை கொடுக்கவில்லை.''

''கற்பின் விலை எவ்வளவு பொன்னோ?''

''விலை மதிக்க முடியாதது. இதோ இதைக் கேள், சொல்லும்.'' சிந்தாமணி தன் இடுப்பிலிருந்து பையை எடுத்தாள், திறந்தாள்.

கத்தி மின்னியது.

அம்பலவாணன் பின் வாங்கினான். படிக்கட்டுகளில் இறங்கினான். அந்தக் கத்தியின் பளபளப்பும் கூர்மையும் சிந்தாமணியின் காளி போன்ற தோற்றமும் அவனை இரவெல்லாம் பயமுறுத்தியது.

குலோத்துங்க சோழ தேவர் காஞ்சிக்கு விஜயம் செய்திருந்தார் தம் பரிவாரங்களோடு. காஞ்சி அரண்மனையில் வீராபிஷேகம் செய்து கொள்வதற்கென ஏற்பாடுகள் மிக விரைவாக நடைபெற்றன. காஞ்சிப் போரில் தோற்ற வீர நல்ல சித்தன்ன தேவன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, ஏராளமான பொன்னும் பொருளும் கொணர்ந்து குலோத்துங்கன் பாதத்தில் சமர்ப்பித்து வணங்கினான். வீராபிஷேகத்துக்குக் கோப்பெருஞ்சிங்கனும் வந்திருந்தான்.

குலோத்துங்கன், தன் இளையராணியை நோக்கி, ''தேவி! இப்போதாவது ஏழிசை மோகனின் வீரத்தைப் புரிந்து கொண்டாயா? காஞ்சிப் போர்க்களத்தில் காடவர்கோன் தனது வீரத்தை, வாள் கொண்டு சுழற்றி எதிரிகளை ஓட ஓட விரட்டிய தீரத்தை அனைவரும் பாராட்டுகின்றனர். நமது படைத் தலைவன் நம்பியே புகழ்ந்து கூறினானென்றால், ஏழிசை மோகன் பெருமையை எப்படி என்று கூறுவது? காடவர்கோனைப் பற்றி நான் தக்கபடி கணித்து வைத்திருப்பது பொய் ஆகாது'' என்றார்.

பிராட்டிக்குச் சற்றுத் தலைக் குனிவு தான். அவள் அனுப்பிய வீரர்களுடன் தான் ஏழிசை மோகன் வீரதீர சாகசங்களைக் காட்டிப் போர் புரிந்தான்; அவன் போர்க்களத்துக்குச் செல்லவில்லை, நம்பி தான் போரில் வென்றவன் என்பதை அவளால் வெளியே கூற முடியவில்லை. தன் சொல் அம்பலம் ஏறாது என்பதைப் புரிந்து கொண்டாள்.

''பிராட்டி! நான் வாக்களித்தபடி நடந்து கொள்ள வேண்டும். ஏழிசை மோகனுக்குப் பரிசு வழங்க வேண்டும். வல்லபியின் திருமணம் காஞ்சியில் கோலாகலமாக நடைபெற வேண்டும். மேலும், என் வீராபிஷேக நாளில் ஏழிசை மோகனுக்கு 'வாள் நிலை கண்ட பெருமாள்' என்ற பட்டப்பெயரும் வழங்கிப் பாராட்டப் போகிறேன். கோப்பெருஞ்சிங்கனுக்குக் கிடைக்கும் புகழ் நடக்குக் கிடைப்பது போலத் தானே?'' என்றார்.

12

சிந்தாமணி, வைரநாயகியின் அபிமானத்தை மெல்லப் பெற்று விட்டாள்.

''இங்கே அந்தப்புரத்தில் அடைந்து கிடப்பது எனக்கு நரக வேதனையாக இருக்கிறது. நமது வீரதேவேசுவரர் கோயிலில் திருப்பணி செய்து பொழுதைக் கழிப்பதற்கு அனுமதி தாருங்கள்'' என்று ஒருநாள் சிந்தாமணி கேட்டாள்.

''கோயிலில் நீ என்ன செய்வாய்?'' என்று வைரநாயகி கேட்டாள்.

''கோயிலில் ஏராளமான பணிகள் உள்ளன. கோயிலைப் பெருக்கி மெழுகுதல், பூப்பறித்துத் தொடுத்தல், விளக்கேற்றல், திருமஞ்சனத்துக்கு நீர் கொண்டு வரல். எல்லாவற்றுக்கும் மேலாக பூசை முடிந்தவுடன் சிவனுக்குப் பிரியமான தாண்டவத்தை, நடனத்தை ஆடி இறைவனை மகிழ்விக்கலாம் அல்லவா?'' என்றாள்.

''உனக்கு ஆடத் தெரியுமா? பாட வருமா?'' வைரநாயகி ஆவலுடன் கேட்டாள்.

''எனது தாய் எனக்கு எவ்வளவோ கற்றுத் தந்தார். அவற்றுள் நடனமும் ஒன்று. என் தங்கை பாடுவாள், நான் ஆடுவேன்'' என்றாள் சிந்தாமணி.

காலில் சதங்கை அணிந்து சிந்தாமணி ஆடினாள். செண்பகம் பாடினாள். அந்தப்புரத்து மங்கையர் அனைவரும் வியப்புடன் நாட்டியத்தை இரசித்தனர்.

மறு நாளிலிருந்து வீரப்பட்டினத்து ஈசர் கோயில் புதுப்பொலிவுடன் விளங்கியது. சகோதரிகள் இருவரும் தெய்வத் தொண்டில் இறங்கினர். கோயில், தூசு, குப்பை இன்றித் தூய்மையாக விளங்கியது, சந்நிதியில் விளக்குகள் ஒளி வீசின. இருள் விலகியது. வெளவால்கள் ஓடி வேறிடம் தேடின. பக்தர்கள் வரத் தொடங்கினர். சிந்தாமணியின் மாலை நேர நடனத்தைக் காணவே அருகிலிருந்த கிராமங்களிலிருந்து மக்கள் வந்து கூடினர்.

அம்பலவாணனுக்கு அதிலும் ஒரு பெருமை, 'அவள் என் அடிமை' என்று கூறிக் கொள்வதில். ஆனாலும், தன் இச்சைக்கு ஒரு நாள் கூட இசையாத அவளைப் பழிக்குப் பழி வாங்குவதென்ற எண்ணம் அவன் மனத்திலிருந்து மறையவில்லை.

காஞ்சிப் போரின் முடிவு குறித்து அம்பலவாணன் கேள்விப்பட்டான். ஏழிசை மோகனுக்குக் காஞ்சியில் திருமணம் என்றும் அறிந்தான். போர்க்களத்தில் ஒரு காலை இழந்த நம்பி காஞ்சியிலேயே தங்கியிருப்பதைப் பற்றியும் அறிந்தான்.

''சிந்தாமணி! உன் இதயத்தில் சிறிதளவாவது நம்பி மீது ஆசை இருந்தால் அதை மறந்து விடு. நம்பி இனித் திரும்பி வரமாட்டான்'' என்று உற்சாகமாகக் கூறுவது போல் குத்திக் காட்டினான்.

சிந்தாமணி விரக்தி மேலிடச் சிரித்தாள். ''ஐயா! என் இதயத்தில் ஏற்பட்ட நம்பிக்கையை நான் ஒருபோதும் இழக்கமாட்டேன். அதே சமயம், இதயத்தில் எங்காவது ஒரு மூலையில் என்னை அடையலாம் என்றோ, அல்லது காடவராயரிடம் ஒப்படைக்கலாமென்றோ நீங்கள் எண்ணம் வைத்திருந்தால் அதை மறந்து விடுங்கள்'' என்றாள்.

அம்பலவாணனின் சீற்றம் அதிகமாகியது. காஞ்சியில் நடைபெறும் ஏழிசைமோகன் திருமணத்தைக் காணப் புறப்பட்டான். போகும் போது, சிந்தாமணிக்குத் தக்க காவல் இட்டுவிட்டுச் சென்றான்.

காஞ்சி மாநகரமே விழாக்கோலம் பூண்டு விளங்கியது. காஞ்சி அரண்மனையில், குலோத்துங்க சோழ தேவர் வீராபிஷேகம் செய்து கொண்டார். தெலுங்கு சோழனான நல்லசித்தன்ன தேவனே மணிமகுடத்தை எடுத்து குலோத்துங்கன் சிரசில் அணிவித்தான்.

ஏழிசை மோகனுக்கு வாள் நிலை கண்ட பெருமாள் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

காஞ்சிப் போரில் கலந்து கொண்ட வீரர்களுக்கு பொன்னும் பொருளும் வழங்கப்பட்டன. படைகளுக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்ற நம்பியின் வீரத்தை ஏழிசை மோகன் மனதாரப் பாராட்டி, அவன் இல்லாவிட்டால் தான் உயிர் இழந்திருக்கக் கூடும் என்பதையும் அந்தச் சமயம் எடுத்துக் கூறினான்.

ஒரு காலை இழந்த நம்பி, வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படாதிருக்க வேண்டிய உதவிகள் செய்வதாக வாக்களித்தார் சக்கரவர்த்தி.

நம்பி அவரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

''சக்கரவர்த்தி அவர்களே! எனக்கு மணி ஆரமும் இறையிலி நிலங்களும் வேண்டாம். நாலாயிரம் வராகன் பணம் கொடுங்கள். நான் உடனே எனது சொந்த ஊருக்குப் புறப்படவும் அனுமதி தாருங்கள்'' என்று வேண்டினான்.

சோழ சேனாதிபதி சேதிராயர் அவன் கோரிக்கையை ஆமோதித்தார்.

''எனது திருமண வைபவத்துக்குப் பிறகு செல்லலாம். நானே எனது தேரில் உன்னைச் சிதம்பரத்தில் கொண்டு சேர்க்கிறேன்'' என்றான் வாள்நிலை கண்ட பெருமாள் என விருது பூண்ட ஏழிசை மோகன்.

13

வீரப்பட்டினத்துக்கு ஏழிசை மோகன் வரப்போகிறான் என்ற செய்தி கிடைத்ததும் வீதிகளை அலங்கரித்தனர். அம்பலவாணனுக்கு உற்சாகம் பிடிபடவில்லை. புதுமணத் தம்பதியை வரவேற்கச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்தான்.

ஏழிசை மோகன் மட்டுமே வந்தான். அவன் தன் சபதப்படி, வல்லபியைச் சேந்தமங்கலம் கோட்டைக்கு அனுப்பி விட்டான். அவனுடன் நம்பி

வரவில்லை. நாலாயிரம் வராகனைப் பெற்றுக் கொண்டு துணைக்கு இரண்டு வீரர்களுடன் அவன் சற்று அமைதியாகவே வீரப்பட்டினம் நோக்கி வந்தான்.

அம்பலவாணனுடைய இல்லத்தில் கோப்பெருஞ்சிங்கனுக்குத் தடபுடலான விருந்து. வெள்ளத்தால் ஊரில் பல வீடுகள் இடிந்து பாழ்பட்டிருப் பதைக் கண்ட ஏழிசை மோகன், மாதேவனைப் பற்றி விசாரித்தான்.

''அவர் காலமாகி விட்டார். அவருடைய பெண்கள் இப்போது என் அடிமை'' என்று கூறிக் கண் சிமிட்டினான் அம்பலவாணன்.

வீரதேவேசுவரர் ஆலயத்தில் ஏழிசைமோகன் பூரண கும்பத்துடன் வரவேற்கப்பட்டான். சிறப்பான பூசைகள் நடைபெற்றன. பூசை முடிந்தவுடன் சிந்தாமணி ஆடினாள்.

ஏழிசை மோகன் முன்பே சிந்தாமணியின் எழிலை மனத்தால் பருகியவன். நடனமும் அறிந்த அழகிய மங்கை தன் அரசவையில் இருக்க வேண்டும் என்று விரும்பினான். அங்கிருந்து புறப்படும்போது, ''அம்பலவாணரே! ஒரு நல்ல நாளாகப் பார்த்து, சேந்தமங்கலத்துக்கு இவர்கள் இருவரையும் கொண்டு சேர்த்து விடுங்கள்'' என்று கூறிச் சென்றான்.

அம்பலவாணனுக்குத் தன் வாழ்நாளின் இலட்சியமே நிறைவேறி விட்டது போன்ற மகிழ்ச்சி. சிந்தாமணியும் செண்பகமும் சேந்தமங்கலத்துக்குப் பயணப்படுவதற்கென ஏற்பாடுகளைச் செய்யலானான்.

ஒரு நாள் மார்கழி மாதத்துக் காலை. பனிப்போர்வையைப் போர்த்த நிலமங்கை ஆதவனின் மெல்லிய அணைப்பில் சிலிர்த்து விழித்தாள்.

வீரப்பட்டினமே மெல்லிய துயிலில் ஆழ்ந்திருந்த வேளையில், சிந்தாமணி இறைவன் சந்நிதியில் திருவெம்பாவை பாடி ஆடினாள்.

நம்பி, தன்னுடன் வந்த வீரர்களுடன் வீரப்பட்டினத்துக்குள் நுழைந்தான். பெரும் மழையால் வீரப்பட்டினமே உரு மாறியிருப்பதறிந்து திடுக்கிட்டான். மாதேவன் வீட்டுக்கும் மழைத்தேவன் கொடுமை இழைத்திருப்பானோ என்று அவன் பயந்தான்.

தொலைவில் அம்பலவாணன் மாளிகை, முன் எப்போதையும் விடப் புதுப் பொலிவுடன் திகழ்ந்தது. ஊருக்குள் நுழையும் முன்பு வீரதேவேசுவரர் ஆலயத்துக்குள் சென்று இறைவனை வணங்க நினைத்தான்.

''கோபுரம் வாயிலில் நுழையும் போதே தாளத்தின் ஓசையும் இனிய பாடலோசையும் கேட்டான். சதங்கையொலி கேட்டது''.

நம்பி தன் விழிகளை ஒருமுறை கசக்கிக் கொண்டான். தான் காண்பது கனவல்லவே?

நடனம் முடிந்தது. சிந்தாமணி திரும்பிப் பார்த்தாள் யார்? யார் - நம்பியா?

அவள் உடல் சிலிர்த்தது.

''சிந்தாமணி!'' நம்பி கூவினான். நம்பி ஊன்றுகோலுடன் நின்று கொண்டிருப்பதை அவள் கண்டாள்.

தெய்வ சந்நிதானம் என்பதையும் மறந்தாள். அங்கே சந்நிதியில் பலர் இருக்கிறார்கள் என்பதையும் மறந்தாள்.

''நீங்களா?'' என்று அலறியவாறு சிந்தாமணி அவன் அருகே ஓடிவந்தாள். நம்பி இருகரங்களையும் நீட்டினான்.

சிந்தாமணி தலையை அசைத்தாள். ''நான் அம்பலவாணனின் அடிமை'' என்றாள்.

நம்பிக்குத் தெரியும், காலக் கெடு முடிந்தவுடன் அம்பல வாணன் மாதேவனை என்ன பாடுபடுத்தியிருப்பான் என்று. நிச்சயம் சிந்தாமணியும் அவள் சகோதரியும் அடிமை ஆகியிருப்பார்கள் என்பதை அவன் அறிவான். நல்ல வேளையாக கோயிலிலேயே இருக்கிறாளே?

''இனி நீ அம்பலவாணனின் அடிமையல்லள். இதோ பணம்!'' என்று பணமுடிப்பைக் காட்டினான். சிந்தாமணியின் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை.

அம்பலவாணன் வீட்டு வாயிற்கதவு இன்னும் திறக்கப் படவில்லை. மார்கழி மாதத்து இளங்குளிரில் அவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான்.

நம்பியுடன் வந்த வீரர்கள் கதவைத் தட்டினர். கதவு திறக்கப்பட்டது. அம்பலவாணனே திறந்தான். உறக்கம் அவன் விழிகளில் இன்னும் கலையவில்லை.

''யாரது?'' என்று கண்களைக் கசக்கிக் கொண்டு கேட்டான் அதிகாரக் குரலில்.

''நான் தான்....'' என்று அழுத்தந் திருத்தமாகக் குரல் கொடுத்தான் நம்பி.

நம்பியை அடையாளங்கண்டு கொண்ட அம்பலவாணன், தன் திகைப்பைப் புலப்படுத்திக் கொள்ளாமல், புன்முறுவலுடன் வரவேற்றான்.

''வா நம்பி, வா! இப்படி உட்கார்'' என்று உபசாரம் செய்தான். ''இப்போது தான் எழுந்தேன். இன்னும் சில நாழிகைகள் கழித்துச் சந்திக்கலாமே!'' என்றும் கூறினான்.

''உங்களுக்கு உறக்கமும், விழிப்பும் ஒன்று தான். ஆனால் இனி ஒரு கணங்கூடத் தாமதிக்க முடியாது. சிந்தாமணி தங்கள் அடிமையாக ஒரு கணங்கூட இருக்க அனுமதிக்க மாட்டேன்'' என்று நம்பி அழுத்தம் திருத்தமாகக் கூறினான்.

அம்பலவாணன் அவனைக் கூர்ந்து நோக்கி விட்டு, ''எனக்கும் அடிமையாக அவளை வைத்திருக்க விருப்பமில்லை. நாளை அவள் சேந்தமங்கலம் செல்கிறாள்'' என்றான்.

''இனி அவளை எங்கே அனுப்பவும் தங்களுக்கு உரிமை இல்லை.''

''உண்டு. அவள் என் அடிமை. என் விருப்பப்படி நடக்க, என்னைத் தடுக்க ஒருவராலும் முடியாது.''

''உமது அந்த ஆணவப் பேச்சு மலையேறி விட்டது. இதோ சக்கர வர்த்தியின் கட்டளை, படியுங்கள்'' என்று கூறி நம்பி, தன் இடுப்பிலிருந்த அரச இலச்சினை பொறிக்கப்பட்ட ஓலையை எடுத்து வீசினான்.

அதில், அம்பலவாணன் உடனே தன்னிடமுள்ள அடிமை களைக் கோயிலில் சேர்ப்பித்து விடவேண்டும் என்றும், இனி அடிமைகளை விலைக்கு வாங்குவதை நிறுத்த வேண்டும் என்றும் கண்டிருந்தது.

''மற்ற அடிமைகள் விஷயம் கிடக்கட்டும். மாதேவனுடைய நிலவரிப் பாக்கிக்காக நீர் எழுதிக் கொடுத்த ஓலை என்னவாகிறது? அதற்காகத் தான் நான் மாதேவன் மகள்களை ஏற்றுக் கொண்டேன். முப்பது நாள்களுக்குள் வந்து மூவாயிரம் வராகனைத் தந்து மீட்பதாக எழுதிக் கொடுத்த தங்கள் வாக்குறுதி என்னவாகிறது? சோழ சக்கரவர்த்திகளிடம் நான் முறையிடட்டுமா?''

நம்பி மெல்ல நகைத்தான். அருகேயிருந்தவரிடமிருந்து பணமுடிப்பை வாங்கினான். அதை அவிழ்த்தான்.

அம்பலவாணன் ஒரு கணம் பிரமித்தான். பிறகு பரபரப்புடன் ஓடிச்சென்று அவற்றைப் பொறுக்கினான். ''இதற்கு வட்டி?'' என்றான் பல்லைக் காட்டியவாறு.

''எதிர்பார்த்துத் தான் நாலாயிரம் வராகனாகக் கொண்டு வந்தேன்'' என்றான் நம்பி.

சிந்தாமணிக்கு எந்த வேலையும் ஓடவில்லை. இறைவன் சந்நிதியை வெறித்துப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தையே உற்றுப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் செண்பகம்.

நம்பி கோபுர வாயிலைத் தாண்டி வந்து கொண்டிருப்பதைக் கண்ட சிந்தாமணி எழுந்து ஓடினாள்.

''சிந்தாமணி! உனக்கும் உன் சகோதரிக்கும் விடுதலை. குறிப்பிட்ட நாளில் வந்து பணத்தைக் கொடுத்திருந்தால் நீ அடிமையாக வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்காது. மனிதனை மனிதன் விற்பதா? அடிமைப்படுத்துவதா? அதற்கொரு முற்றுப்புள்ளி வைத்து விட்டேன் சிந்தாமணி! நீ என்ன பாடுபட்டிருப்பாய், எவ்வளவு மனவேதனை அடைந்திருப்பாய் என்று நினைக்கும் போது என் இதயமே கண்ணீர் வடிக்கிறது'' என்று நம்பி கூறிய போது அவன் குரல் தழுதழுத்தது.

சிந்தாமணிக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை என்பது அவள் பார்வையிலிருந்து புரிந்தது.

''சிந்தாமணி! இதோ நான் எழுதிக் கொடுத்த ஓலை. இனி நீ அடிமை இல்லை'' என்று நம்பி கூறினான்.

''ஐயோ, எனக்கு இந்தக் கோயிலை விட்டே வர மனம் இல்லை. என் இதயத்தைத் தங்களிடம் ஒப்படைத்தேன். அந்த இதயத்தை மற்றவருக்களிக்க என் மனம் சம்மதிக்கவில்லை. இறைவன் அருளினால் கோயில் பணி செய்ய

அவனே என்னை நியமித்தான். கோயிலில் கைங்கரியம் செய்ய முற்பிறவியில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இங்கேயே என் வாழ்நாளை ஓட்டிவிட முடிவு செய்தேன். தாங்கள் வந்து அடிமைத் தளையிலிருந்து மீட்பீர்கள் என்ற நம்பிக்கையை இழந்தேன். இன்று திருவாதிரை நாள். நான் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் வந்தீர்கள். இதோ தாங்கள் கொடுத்த துணை சமயத்துக்கு உதவியது'' என்று கூறிக் கத்தியை எடுத்து நீட்டினாள். அவள் விழிகளிலிருந்து நீர் உருண்டது. 42970/5877349

நம்பி சிறிது நேரம் சிந்தாமணியையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான்.

''சிந்தாமணி! நான் வருகிறேன். சிதம்பரத்தில் தங்கியிருக்க முடிவு செய்து விட்டேன். இறையருள் கூட்டுவித்தால் மீண்டும் சந்திப்போம்'' என்று கூறிக் கோபுரத்தை நோக்கி வணங்கி விட்டு நடந்தான்.

''சுவாமி.....'' என்று அலறினாள் சிந்தாமணி.

''தங்களை விட்டு விட்டு நான் இங்கேயே இருப்பதா? கால் இழந்து ஊனமுற்ற தங்களுக்கு ஊன்றுகோலாய் இருப்பதை விட வேறு கடமை எனக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது?'' என்று கூறி நம்பியின் ஊன்றுகோலைத் தான் வாங்கிக் கொண்டு அவனது இடப்புறம் நின்றாள். அவனது இடக் கரத்தை எடுத்துத் தன் தோள்களின் மீது அணைத்துக் கொண்டாள்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

நம்பி செண்பகத்தை நோக்கினான். மலர்ந்த முகத்துடன். செண்பகம் பேசினாள்.

''அக்கா! நீங்கள் இருவரும் ஒன்று சேர வேண்டும் என்றே பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். என் பிரார்த்தனை பலித்தது. அவருக்கு வாழ்நாள் எல்லாம் துணையாக இருந்து பணிபுரிவது ஒன்றே உனக்கு இறைவன் விதித்த கட்டளை'' என்று கூறியவளை நோக்கி, ''செண்பகம்!'' என்று சிந்தாமணி கூவினாள்.

''அன்புள்ள சகோதரியே! தாயின் இடத்தில் இருந்து என்னைக் காத்தவளே! நான் என் இதயத்தை ஒரே ஒருவருக்குத் தான் அர்ப்பணித் திருந்தேன்'' என்று சொல்லும் போது, சிந்தாமணி பரபரப்புடன், 'யார்..... யார் அவர்?' சொல். அவரிடம் உன்னைச் சேர்ப்பித்து விடுகிறேன். விரும்பியவரை நான் மணந்து மகிழ்வுடனிருப்பது போன்று உன் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க வேண்டாமா?'' என்றாள்.

செண்பகம், இறைவன் கருவறையை நோக்கிக் கை கூப்பினாள். ''அவனுக்கே என் இதயம்'' என்றவள், மகிழ்வுடன் சந்நிதானத்தை நோக்கி மெல்ல நடந்தாள்.

அவள் செல்வதையே சிறிது நேரம் பார்த்தவாறிருந்தாள் சிந்தாமணி. சிறிது நேரத்துக்குப் பிறகு சிந்தாமணியின் தோளில் தன் கரத்தை ஊன்றி நம்பி மெல்ல நடந்து கொண்டிருந்தான்.

முற்றும்